21

2012

புது எழுத்து

மொழிபெயர்ப்பு இணைப்பிதழ் மற்றும்
மா. அரங்கநாதன் பற்றிய குறுந்தகடு இணைப்புடன்

மா. அரங்கநாதன் 80

புது எழுத்து

21

மா. அரங்கநாதன் சிறப்பிதழ்

குழு

எஸ். சண்முகம், தேவராசன், மகாதேவன்
ரவி சுப்ரமணியன், ஞானபிரகாசம் ஸ்தபதி

ISSN 2249-5177

9 772249 517007

ஆசிரியர் • மனோன்மணி

அனைத்து தொடர்புகளுக்கும்
புது எழுத்து
2/205, அண்ணா நகர்
காவேரிப்பட்டிணம்-635 112 • கிருஷ்ணகிரி மாவட்டம்
90421 58667 • pudhuezuthu@gmail.com

முதன்மை இதழ் + மொழிபெயர்ப்பு இதழ் + குறுந்தகடு ரூ. 150

மா. அரங்கநாதன் 80

சிறப்புப் பகுதி

முன்றில்

மா. அரங்கநாதன்

முன்றில் பத்திரிகை பற்றிய நினைவுகள் என்று கூறும் அளவிற்கு முன்றில் பழம்பெரும் பத்திரிகை அல்ல. ஆனால் எனக்கு வயதாகிறது. நினைவுகள் மங்குகின்றன. அந்தப் பத்திரிகை பற்றியதல்லாமல் நினைவு சம்பந்தப்பட்டமட்டில் வேறு எதுவும் முக்கியமல்ல.

பதினாறு வயதிலேயே க.நா.க.வுன் அதாவது அவரது பொய்த்தேவு நாவலுடன் பரிச்சயம் ஏற்பட்டு விட்டபடியால் - அவரைச் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் நான் சென்னை வந்து பல ஆண்டுகள் ஆனபோதிலும் கூட நடக்கவில்லை. சாத்தியமாகாத ஒன்று அல்ல அது.

வேலையில் இருந்து ஓய்வு பெற ஒன்றிரண்டு ஆண்டுகளே இருந்தன. க.நா.சு. டெல்லியில் இருந்து சென்னை வந்துவிட்டார். கிட்டதட்ட எல்லா பத்திரிகைகளிலும் எழுதிக்கொண்டிருந்தார். அவருடைய பழைய நூல்களின் மறு பதிப்புகளும் வர ஆரம்பித்தன. செத்துப்போக நான் கடைசி காலத்தில் சென்னை வந்திருக்கிறேன் என்று ஒரு தடவை எழுதியிருந்தார். படிக்க வருத்தமாக இருந்தது. எழுத்தாளர் சு.சமுத்திரம் கூட அதைப்பற்றி வேதனையுடன் குறிப்பிட்டார். அப்படி எல்லாம் நடக்கவில்லை. டெல்லிக்கு திரும்பவும் சென்ற பின்னர்தான் அது நிகழ்ந்தது. எனது கதைகளும் கணையாழியில் நிறைய வெளியாகிக் கொண்டிருந்தன. அப்போது தோன்றியதுதான் முன்றில் பற்றிய எண்ணம்.

அவரிடம் சொன்னபோது அவர் அதை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. சித்திர தேவபாரதியின் இலக்கிய வட்ட பத்திரிக்கையின் சிறப்பாசிரியராகவும் அவர் இருந்தார். பார்க்கலாம் என்பதுபோல்தான் அவர் பதில் இருந்தது.

ஆனால் அவரிடம் கட்டுரை வாங்கி முன்றில் முதல் இதழில் வெளியிட்டு அதை அவரிடம் கொடுத்தபோது சொன்னபடி கொண்டு வந்துவிட்டீர் அல்லவா என்று வியப்பும் மகிழ்ச்சியுமாக சொல்லி அந்த இதழை புரட்டிக் கொண்டேயிருந்தார். முன்றில் இலக்கிய கூட்டங்களும் நடந்தன. ஆத்மநாம் மட்டும் வராமல் பண்ணிவிட்டார்.

முன்றிலின் மூன்றாவது இதழில் க.நா.சு. காலமானது பற்றி பட்டுரை எழுத வேண்டியதாயிற்று. அடுத்து க.நா.சு. சிறப்பிதழ் ஒன்றும் கொண்டு வரப்பட்டது.

க.நா.சு. தம்பதியினருக்கு என் மகன் மகாதேவனைப் பிடிக்கும். அவனிடமே அதிகம் பேசுவார்கள். டெல்லி சென்றபோது அவனுக்குக் கடிதம் எழுதுவதைத் தவிர்க்கவில்லை. கலை நுட்பங்கள் என்ற அவரது கட்டுரைத் தொகுப்பு முன்றில் வெளியீடாக வந்தது. அதற்கு முன்னுரை எழுதிய க.நா.சு. புத்தகம் வெளிவந்த போது இல்லை. அந்த முன்னுரையில் இந்த நூல் மகாதேவனுக்கு - என் அன்புடன் என்றும் எழுதியிருந்தார். அந்தக் கலை நுட்பங்கள் என்ற புத்தகம் பலரது மதிப்புரைகளைப் பெற்றது.

க.நா.சு என்னுடன் அதிகமாகப் பேசியது பக்தி இலக்கியம் பற்றித்தான். காரைக்கால் அம்மையார், திருமூலர், மணிவாசகர் பற்றியும் திருவள்ளுவர் பற்றியும் மகத்தான மனிதர்கள் என்று கூறி மகிழ்வார். தென்னாடுடைய சிவன் என்று மணிவாசகர் சொன்னது பற்றிய விசயத்தில் நான் தென் என்ற சொல் குறித்து சொன்னதைக் கேட்டுக் கொண்டார். தென்னாடு என்று மணிவாசகர் சொல்லும் போது, வடநாடு செல்ல முடியவில்லையே என்று வருத்தம் தொனிக்கிறது என்று ஒரு கட்டுரையில் எழுதி இருந்தார். தென்னாடு என்பது திசையைக் குறிக்கவில்லை என்று சொன்னபோது, மொழி சம்பந்தப்பட்ட மாட்டில் தமிழில் சில அதிசயங்கள் உண்டு என்று கூறி அது பற்றி எழுதவும் சொன்னார். தினமணியில் பின்னர் நான் எழுதினேன்.

இலக்கிய வட்டத்தில் என்னுடைய கதைகள் வெளிவந்த போது க.நா.சு. பலரிடம் குறிப்பாக மயிலாப்பூர் என்ற கதையைப் பற்றி சொல்லியிருக்கிறார். அந்தக் கதை வீடு பேறு சிறுகதை தொகுப்பிலும் இடம் பெற்றது.

வீடு பேறு என்ற கதையில் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரிலிருந்து சென்னை திருவல்லிக்கேணிக்கு நாற்பது வருடங்களுக்கு முன்னர் குடியிருந்த வீட்டில் தன் தாயார் காலமான அந்த மாடி அறையைப் பார்த்துப் போக வருகிறார். வந்தவர் அந்த வீட்டுக்கார பெரியவரிடம் நாள் பூராவும் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அந்த அறையைப் பார்க்காமலேயே போகிறார் - அந்த வீட்டுக்காரர் ஞாபகப்படுத்தியும் கூட.

இப்படிச் சொல்லப்பட்ட காட்சியைக் கொண்ட அந்த கதைப் பற்றிய க.நா.சு.வும் பின்னர் நகுலனும் கேட்ட கேள்வி ஒன்றுதான். அந்த அறையை ஏன் பார்க்காமல் போனார்? இதுதான் அவர்கள் இருவரும் கேட்ட கேள்வி. கேட்டுவிட்டு இதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று சொன்னார்கள். வியப்பான சங்கதி என்னவென்றால் இருவரும் கேட்டதும் வெவ்வேறு காலகட்டங்களில் - ஒருவர் கேட்டதை மற்றவர் அறியார்.

சாகித்திய அகாதமி நடத்திய மொழிபெயர்ப்பு பணியில் என்னையும் அழைத்திருந்தார்கள். அலுவலகத்தில் அனுமதி வாங்கி கலந்து கொண்டேன். அந்த கட்டத்தில் முன்றில் வர தாமதமாகியிருந்தது. அசோகமித்திரனைச் சிறப்பாசிரியராக இருக்கும்படி கேட்டுக் கொண்டோம். மொழிபெயர்ப்பு பணியில் தேவகி குருநாத், திலகவதி ஆகியோர் கலந்து கொண்டது ஞாபகம் இருக்கிறது. வல்லிக்கண்ணன், அசோகமித்திரன் ஆகியோர் மேற்பார்வையிட்டனர். ஒரு வாரம் மாக்ஸ்முல்லர் பவனில் நடந்தது. கடைசி நாளில் கவிதை பற்றி ஒரு கூட்டம். பலர் கவிதை படித்தனர். என்னை நடத்தச் சொன்னார் அசோகமித்திரன். நன்றாகத்தான் இருந்தது.

அசோகமித்திரனைச் சிறப்பாசிரியராக கொண்டு வந்து இதழ்களும் முன்றிலுக்கு நல்ல பெயரைத் தந்தது. க.நா.சுவின் கையெழுத்து நோட்டுப் புத்தகங்களை அவர் துணைவியார் தந்து உதவினார். அதுவரை பிரசுரமாகாத கவிதைகள், கட்டுரைகள் அதில் இருந்தன. அவற்றை பயன்படுத்திக் கொண்டோம். விருட்சம், கவிதாசரண் போன்ற பத்திரிகைகளுக்கும் அந்த கையெழுத்துப் பிரதிகளைக் கொடுத்தோம். அந்த பத்திரிகைகளிலும் சில படைப்புகள் வெளியாயின.

தொண்ணூறுகளில் நவம்பர் மாதம் அலுவலக பணியிலிருந்து நான் ஓய்வு பெற்றேன். கிட்டதட்ட நாற்பதாண்டு காலம் ஒரே அலுவலகத்தில் அரசாங்கப் பணியாக இருந்த போதிலும் எனக்குப் பிடித்திருந்தது.

ஓய்வு பெற்ற நாளில் பெற்றுக்கொண்டே இருக்கும் போது அலுவலகத்திற்கு எழுத்தாளர் கோபிகிருஷ்ணன் வந்தார். தொலைபேசியில் பேசியது தவிர நேரில் சந்தித்ததில்லை. எனக்கு அவரது கதைகள் மிகவும் பிடிக்கும். அதை அவரும் அறிவார். அப்போது சமூகத் துறை சார்ந்த ஒரு வேலையில் இருந்தார். ஒரு புத்தக நிலையத்திற்கும் சென்று வந்தார் மனோதத்துவம் படித்தவர்.

அன்று முதல் முதலாக என்னை பார்த்தவர் அரண்டு போய் கவலையுடன் என் பக்கமாக வந்தார். வேறு ஒன்றும் இல்லை ஓய்வு பெறும் நாளன்று அலுவலகத்தில் மாலை ஒன்று போட்டு, நாற்காலி என்னை உட்கார வைத்து இருந்தபடியால் என்னமோ ஏதோ என்று எண்ணி பதறிவிட்டார். பின்னர் நான் அதெல்லாம் ஒன்றுமில்லை என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு வெளியே மாம்பலம் வரை நடந்து சென்றோம். அங்கே ரெங்கநாதன் தெருவில் ஒரு கட்டடத்தில் முன்றில் புத்தக நிலையத்திற்கான அறை ஒன்று பார்த்திருந்தோம். அன்றே முன்றில் தொடங்கப் பெற்றது என்று சொல்லிவிடலாம்.

அவர் மறைவு என்னை மிகவும் பாதித்தது. இப்போதெல்லாம் எதை எழுதினாலும் ஹியுமர் ஆகவே முடிகிறது என்று ஒரு தடவை கூறினார். அதனால் என்ன - அதுவும் இலக்கியம் தானே என்றும் பேசிக்கொண்டோம். மரணத்தை அவர் எதிர்பார்த்து கொண்டே இருந்தாரே என்று இப்போது தோன்றுகிறது.

அமரந்தா, லதா ராமகிருஷ்ணன், வெளி ரங்கராசன் ஆகியோரின் முயற்சியால் கோபிகிருஷ்ணன் குடும்பத்திற்கு பின்னர் நிதி உதவி கிடைத்தது மனத்திற்கு கொஞ்சம் சமாதானத்தைத் தருகிறது.

முன்றில் நடத்திய மூன்று நாள் கருத்தரங்கு முக்கியமானது. இதில் நண்பர் ராம்ஜி சுவாமிநாதனின் பங்கு மிக முக்கியம் அநேகமாக எல்லா மாவட்ட எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர். நாகார்ஜுனன், ஏ.எஸ்.பன்னீர் செல்வம், சாரு நிவேதிதா, கவிஞர் பழமலய், கோணங்கி, எஸ். ராமகிருஷ்ணன் போன்றோரும் மூத்த எழுத்தாளர்கள் லா.ச. ராமாமிருதம், வல்லிக்கண்ணன், கோவை ஞானி போன்றோரும் உற்சாகத்துடன் பங்கேற்றனர். சில விவாதங்களும் நன்கு நடந்தேறின. மூன்று நாள்கள் நடந்த கூட்டங்களில் கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், சினிமா போன்றவையாக இருந்தன என்று சொல்ல வேண்டும். அவை ஒரு புத்தகமாகவும் வெளிவந்துள்ளது.

முன்றில் தொடங்கப்பெற்ற வேளை வீடுபேறு தவிர எனது மற்றொரு சிறுகதை தொகுதியான ஞானகூத்து மற்றும் நாவல் பறளியாற்று மாந்தர் இரண்டும் வெளிவந்தன. சிறுகதைத் தொகுதி, கோவை லில்லி தேவசிகாமணி அறக்கட்டளை சார்பில் ஒரு பரிசும், நாவல் தமிழக அரசின் பரிசும் பெற்றன. அந்தக் காலகட்டத்தில் நான் ஓய்வு பெற்றிருந்தேன். கோவை சென்றபோது அங்கே வல்லிக்கண்ணன், சிதம்பர ரகுநாதன், கோவை ஞானி, பாவண்ணன் எனது சித்தி கதையைப் அப்படியே கூறி என்னைப் பெருமைப்படுத்தினார். பல ஆண்டுகள் கழித்து புதுவையில் பண்பாட்டுத்துறை நடத்திய பற்றிய கருத்தரங்கு அது அந்தக் கதை அவருக்கு மிகவும் பிடித்தமானது போலும். ஆங்கிலத்தில் மேற்படி கதை ரன் என்ற தலைப்பில் ராம்ஜி சாமிநாதனால் மொழி பெயர்க்கப்பட்டு இந்தியன் எக்ஸ்பிரஸ் ஞாயிறு மலரில் வந்தது.

வீடுபேறு சிறுகதைத் தொகுதி வெளிவந்த சமயம் அசோகமித்திரன் கணையாழி பத்திரிகையின் சிறப்பாசிரியராக இருந்தார். அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அது பற்றி தலையங்கம் போல் ஒரு கட்டுரையும் அதில் எழுதியிருந்தார். அதன் தலைப்பு வீடு பேறு.

இரண்டாவது இதழில் ஞானக்கூத்தனின் கவிதை (தீவட்டிச் சிறுவர்கள்) அசோகமித்திரன் கட்டுரை (எது முக்கியம்) எனது கதை (மீதி) வெளியாயிற்று. தவிர பலருடைய கவிதைகளும் அசோகமித்திரனின் இருவர் நாவல், க.நா.சுவின் திருவள்ளுவரும் அவர்தம் திருக்குறளும் என்ற ஆங்கில நூல் ஆகியவை பற்றிய கட்டுரைகளும் வெளியாயிற்று. இந்த இதழ் பற்றி திரு. வல்லிக்கண்ணன் தினமணியில் விரிவாக எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது. திரு. தி.க.சி. இதழ் பற்றி ஒரு நீண்ட விமர்சனக் கடிதமும் எழுதி இருந்தார். இந்த இதழில் ஓர் அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

முன்றில் அன்பார்களே தாங்கள் படித்த நல்ல புத்தகங்கள் பற்றி எழுதியனுப்பலாம். அதோடு தமிழில் படித்த சிறுகதையோ - நாவலோ - நாடகமோ எதுவாயினும் சரி - அது எதிலிருந்து திருடப்பட்டது என்றும் கூறலாம். சுருக்கமாவும், தெளிவாகவும் எழுதியனுப்பினால் வாசகர் பார்வையில் இடம் பெறும். தமிழில் படைப்பிலக்கியத்திற்கு இது மிகவும் தேவை என்று நம்புகிறோம்.

ஆனால் வாசகரிடமிருந்து அவ்வளவாக குறிப்புகள் வரவில்லை. மூன்றாவது - நாலாவது இதழ்களுக்கிடையே கலை நுட்பங்கள் என்ற க.நா.சு-வின் நூல் முன்றில் வெளியீடாக வந்தது. அப்போது அவர் டெல்லியில் இருந்தார். படுத்த படுக்கைதான். புத்தகத்தின் முகப்பட்டைய மட்டுமே பார்த்தாராம். அந்த நூலின் முன்னுரைதான் அவர் எழுதிய கடைசி படைப்பாக இருந்தது. மிகுந்த சிறப்பாக இருந்ததையும் சொல்ல வேண்டும்.

டெல்லியில் குளிர் அதிகமாக இருக்கிறது. ஆனால் ரசிக்கும்படியாக உள்ளது என்று கடிதம் எழுதி இருந்தார். ஓர் இயக்கமாக இருந்த போதிலும் கூட, எந்தப் புகழுக்காகவும் நிற்கவில்லை, என்பதை நம்புவது கஷ்டம் கவலை, பணத்தாசை இவைகளெல்லாம் இல்லாமலும் இருக்க முடியும் என்பதை நம்பித்தான் ஆக வேண்டும். அதற்கு காரணம் விருப்பு வெறுப்பற்ற மனப்பக்குவமாக இருக்கக்கூடும். தன்னைப்போல் ஒருவன் மட்டுமே உலகில் இருக்க முடியும் - எனவே மற்றவனைப் போலும் ஒருவன் தான் இருக்க முடியும் என்ற பரந்த நோக்கமாகவிருக்கும். நெருங்கிய நண்பருக்கும் தனக்குமுள்ள தூரம்தான் விரோதிக்கும் தனக்குமுள்ள தூரம் என்பதை பல அவர்தம் பேச்சுகள் காட்டியிருக்கின்றன. மாறுபட்ட கருத்த கொண்ட மார்க்சீய நண்பர் மீது எத்தனை மதிப்பு - நெருங்கிப் பழக முடிந்த சிலரின் இலக்கிய சக்தி மீது தான் எத்தனை நடுநிலை தவறாத துல்லியமான கணக்கு, என்று வியந்திருக்கிறோம். தமிழிலே எழுதுவதை விட ஆனந்தம் வேறில்லை என்றார். குறுந்தொகைக் கவிஞன் இன்றைய

எழுத்தாளனை விட ஒருவகையில் சாமார்த்தியசாலி என்றார். இலக்கியம் பரிபூரணமானது - எந்த சித்தாந்தங்களும் கொள்கைகளும் அதை அடிமை கொண்டுவிட முடியாது என்ற வரையறையை சொல்கிற விதத்தில் தமிழில் முதல் முறையாக சொன்னார்.

அதிக மகிழ்ச்சியோ - கவலையோ - வியப்போ - எந்தச் சூழ்நிலையலும் மாற்றமடைந்தவராக அவர் இல்லை.

க.நா.சு ஓர் இயக்கமாக இருந்து போய்விட்டார். முன்றிலுக்கு அவர் அளித்த வாய்ப்புகள் அதிகம். சம காலம் என்று எடுத்துக் கொண்டால், படைப்புலகில் ஒரு கணியன் பூங்குன்றனாக இருந்தார் என்று சொல்லலாம். கவிதை இருக்கும் இடத்தில் வறுமையில்லை - இல்லவே இல்லை, என்ற க.நா.சுவின் வாசகமும் ஞாபகத்திற்கு வருகிறது.

க.நா.சு கடவுளைப் பற்றி பேசினால் நகைச்சுவையோடிருக்கும். அதிகமாக பேசியதில்லை. கிட்டதட்ட கடவுளிடம் அந்தக் கந்தசாமி பிள்ளை பேசியது போலிருக்கும். ஒரு தடவை தெருவில் கோவில் வாகனம் ஒன்று ஊர்வலம் வருவதை சன்னல் வழி பார்த்து இங்கே நம்ம பெரியார் இத்தனை கூறியும் எல்லாம் இருந்துகொண்டுதான் இருக்கு - இல்லையா? என்றார்.

தற்காலிக படைப்பாளிகளில் அசோகமித்திரன், நகுலன், சா.கந்தசாமி, பிரமிள், ஞானகூத்தன், நீல பத்மநாபன், பூமணி ஆகியோரின் எழுத்து பற்றி நிறைய பேசியும் எழுதியும் இருக்கிறார். கடைசியாக குறிப்பிட்டு பேசியது தமிழவன் நாவல் பற்றி. வணிகப் பத்திரிகைகளும் சில பக்கங்கள் இலக்கியத் தேடலுக்காக ஒதுக்கினால் நல்லது என்பார் - எழுதியும் இருக்கிறார். நாவல், சிறுகதை என்பதெல்லாம் அவருடைய அபிமான விஷயங்களாக இருந்த போதிலும், முக்கியமான உலகத் தத்துவங்கள் அவருடைய எழுத்துகளில் பரவலாக வெளிப்பட்டதை அறிய முடியும். எந்த கூண்டிலும் அவர் இல்லை எனுறு சொல்லலாம்.

கடைசி ஆண்டுகளில் வைதீக எதிர்ப்பைப் பல கோணங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். சங்க இலக்கியமும் வைதீக எதிர்ப்பால் தோன்றியதுதான் என்பது ஒன்று. திருவள்ளுவரும் அவரது திருக்குறளும் என்ற ஆங்கில நூலின் குறளின் வைதீக எதிர்ப்பு பற்றி விரிவான குறிப்புகள் உள்ளன. சங்க இலக்கியங்கள் பற்றி அவரது கருத்துகள் நிறைய வெளியாகவில்லையே ஒழிய கையெழுத்துப் பிரதிகளாக வேண்டியவை இருக்கின்றன. இன்று மிகவும் கஷ்டத்துடன் கையாளப்படுகிற பல இலக்கிய உத்திகளை குறுந்தொகைக் கவிஞன் மிக எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறான்

என்று சொல்லுவார். நாள்தோறும் சில பக்கங்கள் எழுதிக் கொண்டு வந்திருக்கிறார். அவை எல்லாம் வெளிவந்ததாகச் சொல்ல முடியாது. புதுமைப்பித்தன் போலவே சிவம் - சைவம் என்பதில் சில சமயம் ஆர்வம் இருந்திருக்கிறது. கடவுள் நம்பிக்கை - நம்பிக்கையில்லாமை என்பது பற்றியெல்லாம் கவலை இல்லாமலேயே இருந்திருக்கிறார். இன்றைய எழுத்தாளர் சிலரைப் பற்றி கவிதைகளும் எழுதியிருக்கிறார். சிலவற்றை முன்றில் வெளியிட்டது. எல்லாம் பிரசுமாகவில்லை. நகுலன் பற்றிய கவிதை அவற்றில் மிகவும் நன்றாக இருந்தது.

க.நா.சு போய்விட்டார். முன்றில் இதழ் தொடர்ந்து வந்தது - ஐந்தாவது இதழ் க.நா.சு நினைவு மலராக.

நினைவு மலரில் காசியபன், நீல பத்மநாபன், கோபி கிருஷ்ணன், தஞ்சை பிரகாஷ் மற்றும் நகுலன், கோவை ஞானி ஆகியோரும் எழுதி இருந்தனர். அதுவரை வெளிவராத க.நா.சு.வின் நினைவுகள் பகுதி வந்தது. புதுமைப்பித்தனையும், பி.எஸ். ராமையாவையும் மணிக்கொடி அலுவலகத்தில் சந்தித்தது பற்றி குறிப்பிட்டு அந்தக் கட்டுரையின் கடைசியில்,

இப்படியாக நானும் அன்று தேறாக கேஸாக மணிக்கொடி கோஷ்டியில் சேர்ந்து கொண்டேன். உள்ளத்தில் உள்ள வெளியே தெரியாத தழும்புகள் தேறாக கேஸ், பணமில்லாத இடைவிடாத இலக்கிய சேவை என்கிற விஷயங்கள் எல்லாம் தொடருகின்றன. மகராஜாக்கள், ராமையாவும், சொ.வியும் போய்விட்டார்கள். நான் alas! - இருக்கிறேன். சில சமயம் சொ.வி. நல்ல அதிர்ஷ்டக்காரர். சீக்கிரம் போய்வீட்டார் என்று எனக்கு தோன்றுவது உண்டு. என்ற வரிகள் மனத்தை தொட்டன. இந்த நினைவுகள் பகுதி தொடர்ந்து வெளிவந்தது. குரு பெயர்ச்சியில் என்ற க.நா.சுவின் கவிதையில் சோதிட சாத்திரத்தை எப்படி எதிர்கொண்டிருக்கிறார் என்பதை அறிய வேடிக்கையாக இருந்தது தேவகி - குருநாத்தின் ஒரு கட்டுரையும் தமிழவனின் சிறுகதையும் அதில் இடம் பெற்றன.

நகுலனின் கடைத் தெருவில் ஒரு கடவுள் என்ற கவிதைத் தொடரும், அம்பையின் சிறுகதை தொகுப்பு பற்றி லதா ராமகிருஷ்ணனின் கட்டுரையும் ஆறாவது இதழில் வந்தன. க.நா.சுவின் கவிதைகள் தொடர்ந்து வெளிவந்தாலும் அவை தொகுக்கப்படவில்லை. புத்தகமாக இப்போது வெளிவந்துள்ளதா என்றும் தெரியவில்லை.

ஆதிமூலத்தின் மிகச் சிறந்த ஓர் ஓவியம் முன்றிலில் ஏழாவது இதழ் அட்டையில் வந்தது. இந்த இதழில் The Last Temptation of Christ என்ற Nikos Kazantzakis- யின் நாவல் பற்றி பிரமிளின்

யேசுவின் வேதனை என்ற கட்டுரை குறிப்பிடத்தகுந்த ஒன்று. இந்த கட்டுரை குறித்து அசோகமித்திரனும் அடுத்த இதழில் குறிப்பிட்டு எழுதியிருந்தார். கோபிகிருஷ்ணனின் ஒரு சிறுகதை, பிரமிளின் பிரசன்னம் சிறுகதை தொகுப்பு குறித்து ஒரு கட்டுரை, ஆகியவற்றோடு நீலபத்மநாபனின் ஒரு படைப்பு பற்றி ஆத்திரமடைந்த ஒருவன் அவரது கை முறியும் அளவிற்கு வன்முறையாக நடந்து கொண்டது பற்றிய தலையங்கமும் வெளியாயிற்று.

எட்டாவது இதழிலும் பிரமிள் கட்டுரை ஒன்று பிரிவினை என்ற தலைப்பில் வெளிவந்தது. அதன் கடைசி வரிகள் கீழ்க்கண்டவாறு இருந்தன.

எப்படிப்பார்த்தாலும் மௌனியின் கூற்று முடிவில் அவரது தமிழ் மொழித்து வேஷத்தைத் தவிர வேறு எதையும் வெளிப்படுத்தவில்லை. அவரால் தொடர்ந்து எழுத முடியாமல் போனதுக்கு உண்மையான காரணம் இந்த துவேஷம்தான்.

மூன்றில் ஒன்பதாவது இதழில் இருந்து அசோகமித்திரன் அவர்கள் சிறப்பாசிரியர் ஆனார். கோவை ஞானி, கவிஞர் பலமலய், கோபி கிருஷ்ணன், சா. கந்தசாமி, பா.வெங்கடேசன், வல்லிக்கண்ணன், ராம்ஜி ஸ்வாமிநாதன் ஆகியோரின் படைப்புகளுடன் ஆதிமூலத்தின் அரூப ஓவியங்கள் பற்றி இந்திரன் எழுதியிருந்தார்.

கீரம்பூர் முத்துக்கிருஷ்ணனின் ஆதிமூலம் என்ற ஆதி என்ற அன்பர்களால் அழைக்கப்பட்ட, இந்திய நாட்டின் எந்த உயர்தர கலைஞனுக்கும் சில சமயம் மேலான ஓவியர்கள் தமிழ்நாட்டில் உண்டு என்று நிரூபித்த - ஆதிமூலம் என்ற உயரிய கலைஞனும் மறைந்துவிட்டார். என்னை பாதித்த பலவற்றில் இது ஒன்று. அவர் மறைவிற்கு ஓராண்டு முன்பு மூன்றில் கலை இலக்கிய மன்றம் சார்பில் பாராட்டு விழா ஒன்று நடத்தப்பட்டது.

அவருடன் நெருங்கிய பழகும் வாய்ப்பு கிட்டியதில்லை. சந்திப்பு கூட அதிகம் கிடையாது. எனது புத்தகங்களுக்கு முகப்பு ஓவியம் அவருடையதுதான். அப்போது கூட சந்திப்பு இல்லை. வீடு பேறு கதைத் தொகுதிக்கான ஓவியத்தை அவர் தந்தபோது அந்த புத்தகத்தின் முன்னுரையில் ஆதிமூலத்தின் இந்த படைப்பிற்கு முன் இந்த கதைகள் எல்லாம் எம்மாத்திரம் என்று எழுதியிருந்தேன். அதைப்படித்துவிட்டு நெகிழ்ந்துபோய் என் நண்பரிடம் சித்தி என்ற கதையை படித்துவிட்டு நான் அன்று தூங்கவில்லை. எல்லோரிடமும் முத்துக் கருப்பன் என்ற ஒருவன் இருக்கிறான் என்று கூறியிருக்கிறார். பின் சன் டி.வி. பேட்டியின்போது

சந்தித்தோம். அப்போதும் அதையே கூறினார். பத்தாவது இதழில் இருந்து அசோகமித்திரனின் குறிப்புகள வெளியாயின. தேவகி குருநாத்தின் ஒரியா மொழி சிறுகதையின் மொழிபெயர்ப்பு, பாவண்ணனின் சிறுகதை, அருண்மொழியின் கட்டுரை, திலகவதி, தேவதேவன் ஆகியோரின் கவிதைகள் வந்தன.

மூன்றில் பதினோராவது இதழில் ஒரு கவிதை வெளியாயிற்று. அது கீழ்க்கண்டவாறு.

கேட்டது நிஜம் - ஆனால்
சொல்லப்பட்டது பொய்.
பொய்யை நிஜமாக நம்பி - ஒரு நாள்
நம்பியது பொய் எனத் தெரிந்த போது
நிஜமாக நம்பியது பொய்த்துப்
போனது மட்டுமல்லாமல் பொய்
நிஜமெல்லாமே பொய்யாகவன்றி
வேறெதுவாயும் தெரிவதில்லை
நிஜம் சுடும் என்கிறார்கள்.
இருக்கலாம். ஆனால் பொய்
நம்பியவனை பொசுக்கியே விடுகிறது.
அப்போது இதைக் கூறலாம்
சாம்பலுக்கு நிஜமென்ன பொய்யென்ன

இது அசோகமித்திரனின் குறிப்புகளுடன் வெளிவந்தது. எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இது போன்று அவர் எதாவது எழுதி இருக்கிறாரா என்று தெரியவில்லை. ஷங்கன்னா என்ற பெயரில் எஸ்.ராமகிருஷ்ணன் இரண்டு கவிதைகளும், சார்த்தாரின் மீள முடியுமா நாடகம் பற்றி வெளி ரங்கராஜனின் கட்டுரையும் வந்தன. அழகியலுக்கு எதிரான ஒரு புரட்சி - நவ கவிதையின் தன்மை பற்றி வெளிவந்த காதம்பரியின் கட்டுரை குறித்த பலர் கடிதம் எழுதியிருந்தார்கள்.

பன்னிரெண்டாவது இதழ் வரும் சமயம் எண்பதுகளில் படைப்பிலக்கியம் பற்றிய கருத்தரங்கு பற்றிய பணிகள் தொடங்கின. மூன்று நாள்கள் நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கு பல எழுத்தாளர்களாலும் நினைவு கூறப்பெற்றது. தமிழவன், அனாமிகா, சுரேஷ்குமார் இந்திரஜித் ஆகியோர் சிறுகதைகள் எழுதியிருந்தனர். கோபி கிருஷ்ணனின் ஈடன் தோட்டம் தொட்டு என்ற சிறந்த சிறுகதையும் இந்த இதழில் இடம் பெற்றது.

பதிமூன்றாவது இதழிலிருந்து பொறுப்புகள் அதிகமாயின. புத்தகங்களாக நகுலனின் வாக்குமூலம், கோபி கிருஷ்ணனின் சமூகப்பணி, உள்ளே இருந்து சில குரல்கள், காசியபனின்

வீழ்ந்தவர்கள். பா.வெங்கடேசன், தேவரசிகன் ஆகியோரின் கவிதை தொகுப்புகள் ஆகியவை முன்றில் வெளியீடாக வந்தன. கிட்டதட்ட தமிழ் எழுத்தாளர் எல்லோருமே முன்றில் அலுவலகம் வந்து போய்க்கொண்டிருந்தனர். கோணங்கி, எஸ். இராமகிருஷ்ணன், வண்ணநிலவன், நாகர்ஜுனன், ஏ.எஸ். பன்னீர்செல்வம், சாருநிவேதிதா, பெருந்தேவி போன்றோர் முன்றில் வளர்ச்சியில் ஆர்வம் காட்டியதோடு படைப்புகளையும் தந்தனர். இந்த இதழில் கோணங்கியின் மணல் முகமூடி கதையும் அவரது நாவல் பற்றிய நாகார்ஜுனன் கட்டுரையும் கிருஷ்ணன் நம்பி பற்றிய எனது நினைவுகளும் வெளியாயிற்று.

இந்த வெளியீடுகளின் இடையே முன்றில் விமர்சன கூட்டங்களும் நடந்து கொண்டிருந்தன. பெரும்பாலும் Y.M.C.A. பட்டிமன்றத்திலும் நகராண்மைக் கழக பள்ளிகளிலும் நடந்தன. புதிய பார்வையில் எனது கதைகள் நிறைய வெளியாயிற்று. வாக்குமூலம் நாவல் வெளியீட்டு சமயம் நகுலன் சென்னை வந்திருந்தார். அசோகமித்திரன், ஞானகூத்தன் கலந்து கொண்ட அந்த கூட்டம் மயிலாப்பூரில் நடந்தது.

எஸ். ராமகிருஷ்ணனின் ராமசாமிகளின் வம்ச சரித்திரம் - மறைக்கப்பட்ட உண்மைகள் என்று பதினான்காவது இதழில் வெளியான படைப்பு சில எழுத்தாளர்களிடையே சலசலப்பை உண்டு பண்ணிற்று. சாருநிவேதிதாவின் The Book of Fuzoos. புத்தகம் பற்றிய கட்டுரையும் அதே சலசலப்பை பெற்றது. பழமலய்யின் கவிதை, சீன மொழிப்பெயர்ப்பு கவிதைகள் இவற்றோடு அந்த இதழிலிருந்து முன்றில் செய்திகள் என்ற தலைப்பில் சில குறிப்புகளை நான் தொடர்ந்து எழுதி வந்தேன். இதன் முக்கிய காரணத்தையும் சொல்ல வேண்டும். நவீன இலக்கியத்தில் நல்ல பயிற்சி பெற்ற சில எழுத்தாளர்கள் வேண்டுமென்றே பழந்தமிழ் இலக்கியத்தை கேலி செய்வதும் அதன் மதிப்பை வேண்டுமென்றே குறைத்து சொல்வதும் தான். திரு. வெங்கடசுவாமிநாதன் இதில் ஒருவர். ஓவியம், நாடகம், போன்றவற்றை விமர்சனம் செய்து வந்த இவர் எல்லாமே சமஸ்கிருதத்தில் இருந்துதான் வந்தது என்ற வைதீக மனப்பான்மையை வைத்திருந்தார். ஒரு குறிப்பிட்ட காலத்தில் சமஸ்கிருதம் அரசர்களால் ஊக்குவிக்கப்பட்ட போது தமிழ்க் கலைகளும் சமஸ்கிருதத்தில்தான் எழுதப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதையும் அவை எந்த காரணம் கொண்டும் சமஸ்கிருதத்துக்கு சொந்தம் என்று கொள்ள முடியாது என்பதையும் மறந்துவிட்டு எழுதுவது போல எழுதிக்கொண்டிருந்தனர். தில்லை நடராஜனின் நாட்டியம், இட்லி என்ற பலகாரம் - இவை பற்றி கூட

ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கக் கூடும். அந்த காரணத்தால் மட்டும் அவை ஆங்கிலத்திற்கு சொந்தமாகிவிட முடியுமா என்ற மொழி இந்தியாவில் வளர்ச்சி பெறுவதற்கு முன்பே இங்கிருந்த மொழி தமிழ் என்பதை சொல்ல வேண்டிய ஆய்வாளர்கள் சொல்லிவிட்டார்கள். வைதிகர்கள், தீர்மானிக்க வேண்டிய விஷயம் அல்ல இது. இன்று தினசரி அலுவலில பேசும்போது யாரானாலும் சரி, சிலபல ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் பேசிவிட முடியாது. இதைப் போன்ற நிர்பந்தம் ஒரு காலகட்டத்தில் ஏற்பட்டுத்தான் சமஸ்கிருத வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டது என்பதை மறந்து சமஸ்கிருந்தம் உலக மொழிகளின் தாய் என்று தமிழ்நாட்டில் சொல்லிக் கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனம்.

நார்டிக் மொழிக் கூறுகளில் ஒன்றாக ஈரான் போன்ற ஆரியப் பெயர் கொண்ட நாடுகளின் ஊடாக இந்திய உபகண்டத்தின் வடபகுதியில் வேரூன்றி இங்குள்ள கடவுளரை நிந்தித்து, பின்னர் ஏற்றுக்கொண்டு, சிறிது சிறிதாக தமிழ் போன்ற பூர்வக்குடிமக்களின் மொழிச சொற்களை உச்சரிப்புகளை மாற்றி வளர்த்த மொழி சமஸ்கிருதம் அந்த வரலாற்று உண்மையை அப்படியே ஒப்புக்கொள்வதில் என்ன கேவலம் ஏற்பட்டுவிடும்? கேவலம் என்பது உண்மையை ஏற்றுக்கொள்ளலாமல் இருப்பதாகும். பல கலைகளும் உரிய மக்களின் மொழி எது? ஆப்பிரிக்கா நாட்டில் சில பகுதிகளில் ஒரே ஊரில் ஆண்கள் ஒரு மொழியையும், பெண்கள் ஒரு மொழியையும் பேசிக் கொள்கிறார்கள். அதற்கு எழுத்துக் கிடையாது. அப்படிப்பட்ட பழங்காலத்து மக்களது மொழியிலும் பழமொழிகளும் கவிதைகளும் உண்டு. தந்தம் எவ்வளவு கனமாக இருந்தாலும் யானையால் அதை சுமக்க முடியும் - அரங்கத்தில் ஆடத் துணிந்த நபருக்கு எப்படி ஆட வேண்டும் என்று சொல்லித் தர தேவையில்லை என்பது போன்ற சொற்றொடர்கள் திருக்குறளுக்குச் சமம் என்று சொல்லலாம். இப்போது அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொண்டு படிக்கிறார்கள். இவை எல்லாம் ஆங்கிலத்தில் இருப்பதால் ஆங்கிலத்திற்கே சொந்தம் என்று சொல்வதும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட எல்லாம் அந்த மொழி சார்ந்த பிரிவினருக்கே உரியது என்று சொல்வதும் ஒன்றுதான். கல் தோன்றி மண் தோன்றா காலத்து என்ற வரிகளை சொல்லிவிட்டால் சிலரது முகம் மாறிவிடும். இப்படிப்பட்டவர்கள் காற்றிலே இருந்து சமஸ்கிருதத்தை மூக்கால் இழுத்து இந்த பூமியில் வெளியிட்ட வினோதத்தைப் படித்து பெருமை அடைவார்கள்.

இதுபோன்ற நிலைமை அதிகரித்துக் கொண்டே வருவதைச் சுட்டிக்காட்டி பல குறிப்புகள் முன்றிலில் எழுதப்பட்டன. திரு. வையாபுரி பிள்ளை அவர்களின் ஆய்வுகளையும், முடிவுகளையும் புகழ்ந்து பாடும் பலர் அவற்றை படிக்காமல் அவருடைய சமஸ்கிருத புகழ்பாடும் தன்மைக்காகவே அவர் பெயரை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். காலம் சென்ற வெ. சாமிநாதசர்மாவும் எல்லாத் தமிழ் நூல்களும் சமஸ்கிருதத்தில் இருந்துதான் தோன்றியது என்று கூறியதாக சமீபகாலத்தில் ஒரு புரளி கிளப்பிவிடப் பட்டிருக்கிறது.

யோக்கியர் வருகிறார் என்பது போன்ற கட்டுரைகளும் சில செய்திகளும் இதன் காரணமாகவே எழுதப்பட்டன. 1993இல் வெளியான குறிப்பு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

ராமன் பாலம் சாட்டிலைட் போட்டோவில் தெரிகிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ன - ஹிந்து என்ன - பிரசுரித்தாயிற்று - வேண்டியதுதானே. எந்த விஞ்ஞானம் அதிசயமும் வேத புராணங்களின் கூற்றுகளுக்குச் சான்றாகவே அமையும். இந்த லெமூரியா கண்டம் ஒன்றுதான் பாவம் செய்திருக்கிறது. கட்டுக்கதை என்று எளிதாக சொல்லிவிடலாம்.

இந்த நாட்டின் பூர்வகால மொழி அல்லது மொழிகள் ஏதோ துருவ பிரதேசத்திலிருந்து கிளம்பி வந்த வெள்ளை மனிதர்களின் கலப்பால் தோன்றியவை என்று சொல்பவனை நாட்டுப்பற்று உள்ளவன் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. குறைந்தபட்சம் தென்னக மொழிகள் அப்படி அல்ல. இதை பெருமைக்குரிய விஷயமாகவே கருத வேண்டும்.

தமிழன் சிறந்த கவிஞர் பிரமிள். அவர் விஷயம் வேறு. தமிழின் தொன்மை பற்றியோ சமஸ்கிருத இலக்கியத்தின் பெருமை பற்றியோ அவர் கூறும் பல கருத்துக்களை முன்றில் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் சிலர் மீதுள்ள பகைமையுணர்வு காரணங்களால் அவர் கடைசிகாலத்தில் முன்றிலுக்கு வருவதை நிறுத்திவிட்டார். சமீபத்தில் எஸ்.இராமகிருஷ்ணன் பிரமிளை முன்றிலில் சந்தித்தது பற்றி குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்.

ரிஷிகளின் கோத்திரம் இந்திய மக்களுக்கு பொதுவானவை, என்ற பிரமிளின் கூற்று பலரையும் கேள்விக்குள்ளாக்கியது. இதற்கு எதிராக கட்டுரைகள் முன்றிலில் எழுதப்பட்டன. வேறு வகையில் தமிழ் இலக்கியத் தொன்மை குறித்து அவரோடு கருத்து வேறுபாடு இல்லை.

கோவை சித்தர் என நாங்கள் அழைக்கும் ஞானி அவர்களை லில்லி தேவசிகாமணி சிறுகதை பரிசளிப்பு கூட்டத்தில் கலந்து கொள்ள கோவை சென்றபோது சந்தித்தேன். முன்றில்

அலுவலகத்திற்கும் அவர் வந்திருக்கிறார். பல விஷயங்கள் குறித்து பேசி இருக்கிறோம். முன்றில் நடத்திய கருத்தரங்கு கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார்.

பங்களூரிலிருந்து தமிழவன், ப.கிருஷ்ணசாமி, காவ்யா சண்முகசுந்தரம் ஆகியோரும் சென்னையிலுள்ள எழுத்தாளர்கள் ஏறக்குறைய அனைவரும் முன்றில் அலுவலகத்திற்கு வந்திருக்கிறார்கள். ஈழத்து எழுத்தாளர் செ.யோகநாதன், புதுச்சேரியிலிருந்து பா.விசாலம், விஜயா வேலாயுதம் போன்றோர் வருவதுண்டு. கோபி கிருஷ்ணன் ஒரு தடவை ஐரோப்பிய நாடுகளிலிருந்து மதுரையில் தமிழ் பயில வந்த சில மாணவர்களை அழைத்து வந்தார். கவிஞர் சமயவேல் சென்னையில் அலுவலக பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போது வருவார். இவர்தம் கவிதை பற்றி க.நா.சு. கலை நுட்பங்களில் குறிப்பிட்டிருக்கிறார். கும்பகோணத்திலிருந்து ரவி சுப்ரமணியம், தேனுகா, பொதிகை வெற்பன் ஆகியோர் முக்கிய மாணவர்கள். காசியபன் ஒரு தடவை கஷ்டப்பட்டு படியேறி வந்து சென்றார். முன்றில் அலுவலக அறையிலேயே நாகார்ஜுனன் எஸ்.இராமகிருஷ்ணன், ஏ.எஸ்.பன்னீர் செல்வம் போன்றோரின் கருத்தரங்கு நடைபெறும். அழகிய சிங்கர் விருட்சம் இதழ் தந்துவிட்டு முன்றில் இதழை எடுத்துச் செல்வார். அவர் எல்லா எழுத்தாளருடனும் நல்ல நட்பு வைத்திருந்தார். தருமு சிவராமுவிடமும். கோமல் சாமிநாதன், வண்ண நிலவன் இருவரும் வந்திருக்கிறார்கள். இத்தனை பேரும் என்னைவிட என் பையன் மகாதேவனிடம் அதிகம் பேசுவார்கள் - க.நா.சு. கோவை ஞானி உட்பட.

இதழ்கள் பதினைந்திலிருந்து பத்தொன்பது வரை கிட்டதட்ட புத்தக விமர்சன கட்டுரைகளாலேயே நிறைந்திருந்தது. ஏ.எஸ்.பன்னீர்செல்வம், தமிழவன், நகுலன், வல்லிக்கண்ணன், எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா, டாக்டர் கி.நாச்சிமுத்து, மோனிகா, லதா இராமகிருஷ்ணன் ஆகியோர் எழுதியிருந்தனர். சரித்திர நாவல் பற்றிய சிந்தனைகள் வல்லிக்கண்ணன் தொகுத்திருந்தார்.

முன்றிலில் கவிதை எழுதியவர்களாக க.நா.சு.நகுலன், பிரமிள், ஞானகூத்தன், பழமலய், ஜெயமோகன், பாவண்ணன், பிரம்மராஜன், நீல.பத்மநாபன், நா.விஸ்வநாதன், தேவதேவன், சமயவேல், நீலமணி, கலாப்பிரியா, பா.வெங்கடேசன், ஆர்.ராசகோபால், பொதிகைவெற்பன், நந்தலாலா, ஷங்கன்னா, காசியபன், கோலாகல சீனிவாஸ், நஞ்சுண்டேசுவரன், மேட்டுப்பாளையம் நிஷா, திலகவதி, வசந்தி சுப்ரமணியன், யூமா வாசுகி, பாரதிராமன், ரிஷி, புனிதன், வி.நம்பி, தேவ ரசிகன் ஆகியோரைக் குறிப்பிட வேண்டும்.

டாக்டர் பஞ்சாட்சரம் செல்வராசன் நல்ல சிறுகதை எழுத்தாளர் என்று பெயரெடுத்திருக்கிறார். சிறுநீரகம் பற்றிய கட்டுரை நூலும் மாகாலி என்னும் மகாலிங்கம் என்ற சிறுகதை தொகுப்பும் வந்துள்ளன.

பா.வெங்கடேசன் கவிதை தவிர சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். ஒரு தொகுப்பு வந்துள்ளது.

கவிஞர் சமயவேலின் டொர்ரரிசம் என்ற சிறுகதை மிகவும் நவீனமாகவும் ஆழ்ந்து படிக்க வேண்டிய ஒன்றாகவும் அமைந்திருந்தது.

ரவிக்குமாரின் நேரா கிரகித்து.. என்ற படைப்பு பலருக்கு பலவித சிந்தனைகளைத் தரக்கூடிய ஒன்று. அதுபற்றி அடுத்த இதழில் ராஜன் குறை எழுதினார்.

அக்னிபுத்திரன் முன்றிலுக்கு வருவதோடு கடிதங்கள் மூலமாக பல யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்.

டாக்டர் கி.நாச்சிமுத்து நகுலனுடன் பேட்டி கண்டு அதை எழுதியிருந்தார்.

டாக்டர் ருத்ரனின் ஒருவிமர்சனக் கட்டுரை - பெருந்தேவியின் ஒரு படைப்பு - லதா இராமகிருஷ்ணனின் பெண்ணியம் சம்பந்தப்பட்ட கட்டுரை. ஆகியவை குறிப்பிட்டு சொல்ல வேண்டியவை.

2004-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். நல்ல வெயில். வெளி ரங்கராசன், லதா ராமகிருஷ்ணன், அமரந்தா ஆகியோர் நடத்திக் கொண்டிருந்த அமைப்பு சார்பில் தக்கர் பாபா வித்யாலயா கட்டிடத்தில் எளிய முறையில் ஒரு கூட்டத்தை நடத்தி பாராட்டு தெரிவித்தார்கள். கலைஞன் மாசிலாமணி, ஞானக்கூத்தன், வைத்தீஸ்வரன், சா.கந்தசாமி, காவ்யா சண்முகசுந்தரம், ராசகோபால், டாக்டர் செல்வராஜ், ரவி சுப்ரமண்யம் போன்றோர் பேசினர். முக்கிய விஷயமாக முன்றிலைத் திரும்பவும் கொண்டு வர வேண்டும் என்ற அவர்கள் விருப்பத்தையும் தெரிவித்தனர். கணையாழி இதழில் லதா ராமகிருஷ்ணன் இது பற்றி கட்டுரையும் எழுதியிருந்தார்.

முன்றிலுக்கு என்னைப்போல வயதாகிவிடவில்லை. எனவே வருவது சாத்தியமானதுதான்.

செல்பேசிகளும், கணினிகளும் நிறைந்து ஐந்நூறு ஆண்டுகளில் காணவேண்டிய மாற்றம் ஒரு ஐம்பது ஆண்டுகளில் நம்மிடையே வந்து சேர்ந்ததை என்ன சொல்ல? நினைத்துப்பார்த்தால் வருவது வேதனையா - வியப்பா - மகிழ்ச்சியா - என் பெற்றோர் காலத்திற்கும் என் காலத்திற்கும் இந்த மாற்றம் போல, என் பிள்ளைகள் காலத்திற்கு இல்லையே - திடீரென எங்கிருந்தோ வந்து குதித்தாற்போல.

மா. அரங்கநாதன் - வெளியேறிவிட முடியாத சுழல்

பா.வெங்கடேசன்

காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ்ஸின் கதையைச் சொல்வதற்காக வாழ்தல் (லிவிங் டு டெல் த டேல்), என்கிற சுயசரிதை நூலில் ஒரு காட்சி. கிராமத்திலிருக்கும் தங்களுடைய பழைய வீட்டை விற்பதற்காக ஆசிரியருடைய தாய் நகரத்திற்குச் சென்றுவிட்ட அவருடைய உதவியை நாடுகிறாள். வேண்டா வெறுப்பாக அவரும் இதற்குச் சம்மதிக்கிறார். அதன்படி பல வருடங்களுக்குப் பிறகு அவர் தாயுடன் தன் சிறு பிராயம் கழிந்த சொந்த கிராமத்திற்கு வருகிறார். பழைய தெருக்களின் வழியே தாயும் மகனும் மெதுவாக நடந்து செல்கிறார்கள். தாய் மகனிடம் பழைய நினைவுகளின் பூரிப்போடு தெருவிலிருக்கும் வீடுகளையும் அவற்றில் இருக்கும் / இருந்த மனிதர்களையும், அவர்களோடு மகன் முன்பு கொண்டிருந்த உறவு முறைகளையும் நெருக்கத்தையும் விளக்கிச் சொல்லிக்கொண்டே வருகிறாள். நீ அங்கே அப்படி விளையாடினாய், இங்கே இப்படிக் குறும்புகள் செய்தாய், இவர்களோடு இப்படியாகப் பழகிக்கொண்டிருந்தாய், அவர்கள் உன்னை அப்படிக் கவனித்துக் கொண்டார்கள், நினைவிருக்கிறதா எல்லாம் உனக்கு? கடைசியாக அவர்கள் தங்கள் தெருவை அடையும் போது அதன் துவக்கத்திலிருந்து கை நீட்டிச் சுட்டிக் காட்டி அவள் சொல்கிறாள். இந்த வீடுகளின் வரிசையில் கடைசியில் தெரிகிறதே, அதுதான் நம்முடைய வீடு. அதற்கப்பால் ஒரு வாதாமரம், மகனே, அதோடு உலகம் முடிவடைகிறது.

மார்க்வெஸின் மாய யதார்த்தக் கதை கூறு முறையின் தொழில் நுட்பத்தைச் சரியாகக் கைப்பற்ற வேண்டுமானால் அவருடைய ஒரு நூற்றாண்டு காலத் தனிமையைப் படித்த கையோடு அதற்கு நாற்பது வருடங்களுக்குப் பின் வெளிவந்த இந்த நூலைப் படித்துப் பார்க்க வேண்டும். நூற்றாண்டு காலத் தனிமையின் கதைப் போக்கில் நாம் உணர்வதையொத்த சில, புரிந்துகொள்ள முடியாத, மர்மமான, மந்தகாச உணர்வுச் சுழல்களை அவற்றின் ஆழம் தூர்ந்துவிடாமலேயே சரியான வார்த்தைகளாக, பிம்பங்களாக நம் புரிதலின் வசப்படுத்திக்கொள்ள இது பெருமளவு உதவுகிறது. எண்பதுகளின் கடைசி அல்லது தொண்ணூறுகளின் துவக்க வருடமொன்றில் மா.அரங்கநாதனை அவருடைய நங்கநல்லூர் வீட்டின் முன்னறையில் சந்தித்தபோது எனக்குள் சுரந்த, முன்பின் பழக்கப்பட்டிராத, ஒருவிதமான மர்மமான கேவல் உணர்வு எதனால் ஏற்பட்டது என்பதைப்

புரிந்துகொள்ள அதற்குப் பத்துவருடம் கழித்து மார்க்வெஸ்ஸின் சுயசரிதையை நான் படிக்க வேண்டியிருந்தது. கண நேரத்தில் நடந்து முடிந்து மனதில் எதையெதையோ சுசடுகளாக விட்டுச் செல்லும் அனுபவங்களை, அவை இன்னதுதான் எனப் புரிந்துகொண்டு அவற்றிலிருந்து விடுபட, அல்லது அவற்றில் மேலும் மூழ்கி மனதைச் சுகமாக வதைப்படுத்திக்கொள்ள, பல வருடங்கள் தொடர்ந்து விடாமல் படித்துப் படித்து வார்த்தைகளைத் தேடிக்கொண்டேயிருக்கிறோம்.

மா.அரங்கநாதன் - நான் பார்க்க விழைந்தது அவர் முன்றில் இதழின் நிறுவனர் என்கிற முறையில். ஏப்ரல் எண்பத்தெட்டில் என் முதல் கவிதை கணையாழியில் பிரசுரம் கண்டிருந்தாலும் என்னை நான் ஒரு கவி ஆகிருதியாக இனம் கண்டது அக்டோபர் எண்பத்தெட்டில் என் கவிதைகளை ஒரு கொத்தாக முன்றில் பிரசுரித்தபோதுதான். என் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த ஸ்தாபகர் தின விழாவின் செயற்குழுவில் ஒரு அங்கத்தினனாக நிறுவன வளாகத்தினுள் என்னினைவின்றி வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது வீட்டிலிருந்து முன்றில் இதழ் வந்திருப்பதாயும் அதன் முகப்பு அட்டையிலேயே என் கவிதை வெளியிடப்பட்டிருப்பதாயும் மேலும் நான்கைந்து கவிதைகள் இதழின் உள்ளேயும் பா.வெங்கடேசன் கவிதைகள் என்கிற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருப்பதாயும் தகவல் கிடைத்தது. நான் மேலதிகாரிகளின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் வேலைகளைப் போட்டது போட்டபடி போட்டுவிட்டு இருசக்கர வாகனமொன்றை இரவல் வாங்கிக்கொண்டு பத்து கிலோ மீட்டர்

தொலைவிலிருக்கும் என் வீட்டிற்கு உடனே பறந்து வந்துவிட்டேன். ஆம், தொலைவு என்கிற என் கவிதை இதழின் முகப்பில் அச்சிடப்பட்டிருந்தது. மேலே இதழாசிரியராக என் ஆதர்ச படைப்பாளி க.நா.சு.வின் பெயர். உள்ளே என் பெயர் தலைப்பில் போடப்பட்டிருந்ததுகூட எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. அதற்கு அடுத்த பக்கத்தில் போடப்பட்டிருந்த என் அபிமான கவிஞரான விக்கிரமாதித்யன் நம்பியின் பெயருக்கு இணையான எழுத்துருவிலும் அளவிலும் அது இருந்ததுதான் என்னை உன்மத்தனாக்கிவிட்டது. அன்று நான் அடைந்ததைப் போன்ற ஆச்சரியமும் ஆனந்தமும் வேறு வேறு பெயர்களில் அநேகமாக எல்லோராலும் ஏற்கனவே வழிவழியாக எழுதப்பட்டுவிட்டதுதான் என்பதால் மேற்கொண்டு இதை விஸ்தரிக்க வேண்டியதில்லை. வருடங்கள் கழித்து யோசித்துப் பார்த்தபோது, பிரபலமான படைப்பாளியேயானாலும் அவனுடைய சிறந்த படைப்பை மட்டுமே பிரசுரம் செய்து அவனுக்கும் வாசகர்களுக்கும் தாட்சண்யமின்றி நியாயம் செய்யும் இதழ்களுக்குத் தமிழில் பஞ்சமில்லையென்றும், ஆனால் ஒரு நல்ல படைப்பாளியை அவனுடைய கன்னிப் படைப்புகளிலேயே இனம் கண்டு, (போனால் போகிறது, ஒரு படைப்பைப் பிரசுரிக்கிறோம், மேற்கொண்டு உன் தரத்தை உயர்த்திக் கொள்ளவேண்டியது உன் பொறுப்பு என்று, படைப்பாளி அதை ஒரு பாக்கியமாகக் கருதும் விதத்தில் அலட்டலோடு பிரசுரிக்காமல்) அவனுக்கு உரிய இடத்தைத் தந்து அவனை இலக்கியச் சூழலுக்குள் தன்னை தூக்கிக் காண்பிக்காமல் பெருமிதத்தோடு அனுமதிக்கும் இதழ்கள் குறைவுதானென்றும் தோன்றுகிறது (முன்றில் என்னைப் பிரசுரித்தற்காகவே நான் என்னை நல்ல படைப்பாளி என்று கூறிக்கொள்ள முடியும்தானே)

அடுத்த முறை பணி நிமித்தமாக நான் சென்னை செல்ல வேண்டியிருந்த போது முன்றில் அலுவலகத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டுமென முடிவு செய்தேன். இரண்டு காரணங்கள் அதற்கு இருந்தன. ஒன்று நான் அதுவரையில் கணையாழி அலுவலகத்தை ஒரேயொருமுறை வெளியிலிருந்து பார்த்ததைத் தவிர மற்றபடி பத்திரிகை அலுவலகங்கள் எதையும், அவை எப்படியிருக்குமென்று, பார்த்தது கிடையாது. என் ஒரு கொத்துக் கவிதைகளைப் பிரசுரித்தாலேயே அந்த அலுவலகம் ஏதோ என் சொந்த அலுவலகம் என்பதாக ஒரு எண்ணம். எனக்குள் ஏற்பட்டிருந்தது. இரண்டு, கவிதைகள் பிரசுரமாகியிருந்ததே தவிர, எல்லாரும் எழுதுவதைப்போல, அதன் ஆசிரியரோ அல்லது அவர்

சார்பாகவே யாராவதோகூட நன்றாக இருந்தது, தொடர்ந்து எழுதுங்கள் என்று தொலைபேசியிலோ கடிதம் மூலமாகவோ எனக்குச் சொல்லவில்லை. எனக்கு அவற்றை யார் படித்திருப்பார்கள், எப்படிப் படித்திருப்பார்கள், க.நா.சு. அவற்றைப் பற்றி என்ன சொல்லி முன்னட்டையில் பிரசுரிக்கக் கொடுத்திருப்பார் என்றெல்லாம் யார் வாயிலாவது சொல்லிக் கேட்டுத் தெரிந்துகொள்ளாவிட்டால் மண்டை வெடித்துவிடும் போல் இருந்தது. யார் கண்டது, ஒருவேளை என் ஆதர்சன நாயகனான க.நா.சு.வையே நேரில் பார்க்க முடிந்தாலும் முடியலாம்.

ஆனால் எனக்குச் சென்னை வாய்ப்புக் கிடைத்தபோது க.நா.சு. காலமாகிவிட்டார். ஆசிரியர் இடத்திற்கு அசோகமித்திரன். நான் அப்போது அடிப்படையில் ஒரு கவிஞன். எனவே கதையாசிரியரான அசோகமித்திரனைப் பார்ப்பதில் அத்தனை ஈடுபாடில்லை. அவர் ஒரு மயன் அல்லவே. மேலும் அவர் வருவதற்குமுன் முன்றிலில் பிரசுரமான என் படைப்புகளைப்பற்றி என்ன பேச்சு வலம் வந்தது என்பது அவருக்குத் தெரிந்திருக்கவும் வாய்ப்பில்லை. எனவே முன்றிலின் நிறுவனரான அரங்கநாதனுக்கு தொலைபேசி நான் சென்னை வரவிருப்பதாயும் அவரைப் பார்க்க விரும்புவதாயும் சொன்னேன். அவர் கவிதை எதுவும் எழுதியிருப்பதாகத் தெரியவில்லையானாலும் கவிதையைப் பற்றி எழுதியிருக்கிறார். இடைப்பட்ட காலத்தில் நான் அவருடைய பொருளின் பொருள் கவிதை மற்றும் வீடுபேறு ஆகிய இரு நூல்களையும் படித்து வைத்திருந்தேன். அவரிடம் பேசலாமென்று. தாராளமாகச் சந்திக்கலாமென்றார் அரங்கநாதன். சந்தோஷம், மெட்ராஸில் எங்கே தங்குவீர்கள்?

என் நண்பர் ஒருவர் வீட்டில், ராயப்பேட்டை.

அது ரொம்பத் தொலைவாயிற்றே நங்கநல்லூரிலிருந்து, நீங்கள் ஒன்று செய்யுங்கள், மெட்ராஸ் வந்ததும் மின்தொடர் வண்டி பிடித்து பழவந்தாங்கலுக்கு வந்துவிடுங்கள். அங்கிருந்து வீடு பக்கம், இங்கே தங்கிக் கொள்ளலாம், உங்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லையென்றால்.

ஆனால் அரங்கநாதன் அவருடைய குடும்பத்தவருடன் குடியிருந்த, ஸ்டோர் என்று அப்போது விளிக்கப்பட்ட ஐந்தாறு குடும்பங்கள் சுற்றிவர ஒரே வளாகத்திற்குள் வாழும், வீட்டையடைந்து அதன் முன்னறையில் அவருடைய மகன் மகாதேவனால் அமர்த்தி வைக்கப்பட்டபோது இந்த வீட்டில் எப்படித் தங்கிக்கொள்ள என்று எனக்குத் தோன்றிவிட்டது. நான்

வீடு முழுவதையும் சுற்றிப் பார்க்கவில்லை. ஒருபோதும் அந்த வீட்டின் உட்பகுதிக்குள் சென்றதுமில்லை. ஆனால் அதன் முன்னறையே வீட்டின் மற்ற அங்கங்களை எடுத்துச் சொல்லப் போதுமானதாயிருந்தது. (இந்த வீட்டை நீங்கள் அவருடைய சிறுகதையான அரணையில் பார்க்ககூடலாம்) இரண்டு பேர் எதிரும் புதிருமாக அமர்ந்தால் முழங்கால் இடித்துக்கொள்ளுமளவிற்கு சிறிய அந்த முன்னறையில் தலை உயரத்தில், அந்தரத்தில், பொருத்தப்பட்டிருந்த அரங்கநாதனுடைய சிறிய நூலகத்தை (இந்தத் தாக்கத்தில்தான் பின்னாளில் நானும் உன் வீட்டு நூலகத்தையும் அமைத்துக்கொண்டேன். அலமாரியாக தரையைத் தொடாமல் அந்தரத்தில் தொங்கும் நிலை ஒரு மாறுதலான வடிவத்தையும், மர்மமான கவர்ச்சியையும் கொடுக்கிறது). தொடாமல் உட்கார்ந்த நிலையிலேயே உற்றுப் பார்த்தபடி நான் அவருக்காக காத்திருந்தேன். நான் முன்னறையில் அமர்ந்திருந்த நிலை அந்த அறையையும் வீட்டின் உட்புறத்தையும் இணைக்கும் அறை வாயிலைப் பார்த்தபடி இருந்தது. ஆனால் புத்தகங்களின் மேல் ஓடிய பார்வையை அவ்வப்போது அரங்கநாதனை எதிர்பார்த்து அந்த வாயிலை நோக்கித் திருப்பி உள்ளறையை ஊடுறுவ முயற்சித்தபோது அந்த வாயிலுக்கப்பால் என்னால் எதையும் பார்க்க முடியவில்லை. ஆதிமூலத்தின் ஓவியம் போல ஒரு பெரிய சதுரமான கருப்பு வண்ணத்தால் வரைந்து வைத்திருந்த திரைச்சீலை ஓவியம் போலவே அந்த நிலைப்படி எனக்குக் காட்சியளித்தது. அதன் உள்ளிருந்து, அறையினுள்ளிருந்து வருவதைப் போலல்லாமல் சித்திரத்தினுள்ளிருந்து உயிர் பெற்று வருவதைப் போலத் திடீரென்று அரங்கநாதனும் பிறகு அவர் மகன் மகாதேவனும் மற்றும் அவர் குடும்பத்தவரும் தோன்றியபோது எனக்குள் மேலெழும்பிய மெல்லிய கேவலைத்தான் இதனாலென்று புரிந்துகொள்வதற்கு அதற்குப் பிறகு பத்து வருடங்கள் தேவைப்பட்டது என்று முதலில் சொன்னேன்.

நான் எதை என் காது குளிரக் கேட்க வேண்டுமென்று அங்கே சென்றேனோ அதை, இருளிலிருந்து வெளிப்பட்ட அந்த, கருத்த, ஆழ்ந்த அம்மைத் தழும்புகள் நிறைந்த முகத்துடன், பழைய, சிதைந்த, காலத்தின் வடுவைத் தன்னுள் பெருமிதத்தோடு ஏற்றிக்கொண்ட, கோவில் சிலையொன்றின் சாயலிலிருக்கும் (சிவன் கோவில் சிலையென்று சொன்னால் நான் அவர் கதைகளுக்குச் சற்று நெருக்கமாகக்கூடச் செல்லக்கூடும்) மனிதர் வஞ்சகமில்லாமல் எனக்களித்தார். க.நா.சு. என் கவிதைகளை

வெகுவாக சிலாகித்துப் பேசினாரென்றும் யார் இந்த வெங்கடேசன் என்று கேட்டாரென்றும் தனக்கும் அதேவிதமான அபிப்பிராயங்கள் தான் என் கவிதைகள்மேல் என்று சொன்னார். வேறென்ன போதை வேண்டும் புதிதாக எழுத வருகிறவனுக்கு? பிறகு வழக்கமான உசாவல்கள், படிப்பு பற்றிய கேள்விகள் பதில்கள், அதைப் படித்திருக்கிறீர்களா, இதைப் படித்திருக்கிறீர்களா இத்யாதி இத்யாதி. நான் அவரைச் சந்திக்கும் போது பேசுவதற்காக அவருடைய வீடுபேறு தொகுப்பை அதற்குச் சில நாட்கள் முன்புதான் வாங்கிப் படித்திருந்தேன். ஆனால் ஒன்றுமே புரிந்த மாதிரியில்லையாதலால் பேசுவதைத் தவிர்க்க வேண்டியதாயிற்று. அவர் கேட்ட போது நான் அவரை படித்திருப்பதாகச் சொல்லிவிட்டு நிறுத்திக்கொண்டேன். அவர் புரிந்து கொண்டிருப்பார் (இன்றும் அரங்கநாதன் கதைகளை முழுதாகப் புரிந்துவிட்டதென்று சொல்வதில் எனக்குத் தயக்கம் இருக்கவே செய்கிறது. புரியாத விஷயங்களை வாழ்க்கையில் நிறைய இருக்கின்றன. அப்படி இருக்கவும் வேண்டும் என்பதைப் போல் ஒரு வரி பறளியாற்று மாந்தர் புதினத்தில் வருவதாக நினைவு)

கடைசியில் நான் பயந்தபடி இல்லாது வருபவர்கள் தங்கிக்கொள்வதற்காகவும், பயன்பட்டுக் கொண்டிருந்த, அதே ஸ்டார் வளாகத்தின் மாடியிலிருந்த மகாதேவனின் வழக்குரைஞர் அலுவலக அறைக்கு மகாதேவனுடன் நான் அனுப்பி வைக்கப்பட்டேன். அங்கே குளியல் கீழே ஒரு சிறிய சிற்றுண்டி. பின் அலுவலகம். இத்தனைக்கும் நடுவில் வயிற்றில் சுரந்துகொண்டேயிருந்த அந்தக் கேவல் உணர்வு. மூன்றில் இதழுக்கு அன்று நான் கண்டுபிடித்த இந்தப் பின்னணி அதன் வசீகரத்தைப் பன்மடங்கு அதிகப்படுத்தி பின் வந்த காலங்களில் அதோடு என்னை மேலும் ஒன்ற வைத்தது. நான் அன்று மாலையே சென்ட்ரல் நிலையத்தின் எதிரே ஒசூர் பேருந்தைப் பிடிக்க வேண்டியிருந்ததால் நுங்கம்பாக்கத்திலிருந்து திரும்ப என்னால் நங்கநல்லூர்வரை வரவியலாது என்றும், மாலையிலிருந்து இரவு புறப்படும் நேரம் வரை புத்தகக் கடைகளை அலசவும் புத்தகங்கள் வாங்கவும் அவகாசம் சரியாக இருக்குமென்றும் சொல்லிவிட்டு நான் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டேன்.

அதற்குப் பிறகு நான் சென்னை வரும்போது அரங்கநாதன் வீட்டில் தங்கிக்கொள்வது வாடிக்கையாகிவிட்டது. ஒரே நாள் பணி என்பதால் ஒருபோதும் இரவு தங்கி அவருடன் அளவளாவிக் கொண்டிருக்கச் சந்தர்ப்பம் வாய்த்ததில்லை. இன்று அது ஒரு

பெரிய நஷ்டமாகவே தோன்றுகிறது. என்ன, மெதுமெதுவாக நாலை கடுக்கி விழுந்து தெரிந்துகொண்ட பல விஷயங்களைச் சற்று முன்னதாகவே அவருடனான உரையாடல்களின் மூலமாகக் தெரிந்து கொண்டிருக்கலாம். இத்தனைக்கும் அவரோடு நடக்கவும் மின்வண்டியிலும் ஆட்டோவிலும் பயணிக்கவுமான வாய்ப்புகள் வாய்க்கவும் செய்திருக்கின்றன. வீட்டிலிருந்து ரெங்கநாதன் தெருவில் துவக்கப்பட்டிருந்த முன்றில் அலுவலகத்திற்கு, திருவல்லிக்கேணியில் நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருந்த விருட்சம் கூட்டங்களுக்கு, புதிய நம்பிக்கை அலுவலகத்திற்கு (அங்கேதான் முன்றில் பதிப்பிக்கப்பட்டுக்கொண்டிருந்ததாகச் சொன்ன நினைவு தவறாகவும் இருக்கலாம்). ஆனால் அரங்கநாதன் கேட்டாலொழிய பதில் சொல்லும் பழக்கமில்லாதவராக இருந்தார். நானோ அாக்கப் பரக்க வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தாண்டி, என்ன கேட்க வேண்டுமென்றே அறிவே அற்றவனாக இருந்தேன்.

முன்றில் நிராகரித்தவை போக மீதந்த, என் கவிதைகளை அடிக்கடி வெளியிட்டது. பிற சிற்றிதழ்களிலும் வெளிவந்துக்கொண்டிருந்தன. ஒரு விஷக்காய்ச்சல்போல என்னைக் கவிதைகள் வெளியேறவிடாது பற்றிக் கொண்டிருந்த காலம் அது. அரங்கநாதன் என்னைக் கவனித்துக் கொண்டேயிருந்தார். கணிசமான கவிதைகளை நான் எழுதி வெளியிட்டு விட்டதாகத் தோன்றியபோது அவரே முன்றில் மூலமாக தொகுப்பு வெளியிடும் யோசனையையும் தெரிவித்து மகாதேவனை அதற்குப் பொறுப்பாக நியமித்து வைத்தார். மகாதேவன் அதை ஏற்றுக்கொண்ட பெருந்தன்மை தொகுப்பை அவர் வெளிக்கொண்டுவந்த விதம், வெகு பலரால் பேசப்பட்ட அந்த அற்புதமான கருப்பு வெள்ளை அட்டைப்படம், (பின்னட்டையில் இருப்பது நானே வரைந்த என் சுயவுருவப்படம். எப்படியிருந்தது) இதற்கெல்லாம் மேலாக அமைந்த நூல் வெளியீட்டு விழா நகுலனுடைய வாக்குமூலம் புதினமும் என்னுடைய இன்னும் சில வீடுகள் கவிதைத் தொகுப்பும் ஒரே மேடையில். அரங்கநாதன், ஞானக்கூத்தன், நகுலன், அசோகமித்திரன் இவர்களோடு ஒரே மேடையில் நான். தலைகால் புரியவில்லை எனக்கு. பிறகு ஒரு காலம் முன்றில் நடத்திய, பிரசித்திப் பெற்ற இலக்கியமாநாடு ஒரு குடும்பவிழா போலவே தோன்றுமளவிற்கு அதனுடன் மானசீகமாகப் பிணைந்திருந்தேன் நான். இத்தனை நெருக்கத்திற்குப் பிறகும் என்னுடைய ஓட்டை உடைசல்களை தாட்சண்யத்திற்காகவேனும் பிரசுரிக்க முன்றில் தயாராக இருந்ததில்லை. வெளிப்படும் ஒவ்வொரு பக்கத்திலும்

நான் நல்ல கவிஞனாகவே அடையாளப்பட வேண்டுமென்பதில் அரங்கநாதனுக்கும் மகாதேவனுக்கும் அக்கறை இருந்தது. என்னுடைய இரண்டொரு கதைகளும் முன்றிலில் வெளிவந்ததாக நினைவு.

ஒரிஜினல் நியூஸ் ரீல் சிறுகதைகள் வெளிவருவது வரை (1995) முன்றிலுடன் இருந்த என் பிணைப்பு பிறகு நெருடல்கள் ஏதுமின்றி வெகு இயல்பாக, என்னுடைய தேடல்களின் திசைமாற்றம் சார்ந்து, இளகத் தொடங்கியது. தொண்ணூற்று மூன்றில் நடந்த குற்றாலம் பதிவுகள் சந்திப்பிற்குப் பிறகு நஞ்சுண்டனின் புதிய தீவிரமான நட்பின் மூலமாக என் வாசிப்பு, எழுத்து அனைத்தும் முன்றிலைத் தாண்டி இன்னும் பரந்த வெளிகளில் சஞ்சரிக்க அவாவிக் கொண்டிருந்தது. சென்னைத் தங்கல்கள் வேறிடம் திரும்பி நட்புகள் கிளைத்துப் பரவி நான் அரங்கநாதனின் அணைப்பிலிருந்து விலகி வெகுதூரம் தள்ளி வந்துவிட்டதாக நினைத்துக் கொண்டேன். எனினும் அரங்கநாதன் விலகவில்லை. விலகவில்லையென்பது அவருடைய மகள் திருமணத்தின்போது மிக வலி தரும் விதத்தில் தெரிய வந்தது. நிறைய படைப்பாளிகளின் சேகரத்தில் நிரம்பி வழிந்த அந்தக் கூட்டத்தின் நடுவே என்னைப் பார்த்ததும் அந்தப் பெண்ணின் தகப்பனார் என்னை அழைத்து தன்னருகே நிறுத்திக்கொண்டு பெண்ணையும் மாப்பிள்ளையையும் வாழ்த்த வருகிறவர்களிடம் எனக்கு மகாதேவனைப் போல இவனும் இன்னொரு மகன் என்று அறிமுகம் செய்யவாரம்பித்து விட்டார். மனிதனின் மிகப் பெரிய பலவீனம் அவனுக்குத் தங்கு தடையற்றத் தன்மீது பொழியும் அன்பைத் தாங்கிக் கொள்ளும் திராணி கிடையாது. நாகரீகமான, மேம்போக்கான, பொறுப்புகளையோ குற்றவுணர்வுகளையோ தன்மீது சுமத்தாத நாசூக்கான அன்புதான் அவனுக்கு ஒத்துக்கொள்கிறது. என்னால் அரங்கநாதன் அருகே பத்து நிமிடத்திற்கு மேல் தைரியமாக நிற்க முடியவில்லை. மூச்சுத் திணறியது. அன்பு உலர்ந்த ஒரு வெளியில் மொழியைப் பற்றியும் கட்டற்றுத் திரியக்கூடிய கதைமொழியைப் பற்றியும் மட்டுமே மணிக்கணக்காகப் பேசும் பின் நவீனத்துவப் படைப்பாளி ஒருவருடைய தோளைப்பற்றிக் கொண்டு மண்டபத்தைவிட்டு வெளியேறி என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். தொடர்பு நிரந்தரமாகவே நின்றுபோனது.

பல வருடங்களுக்குப் பிறகு, நான் முதல் பத்தியில் குறிப்பிட்டிருக்கும், மார்க்வெஸ்ஸின் சுயசரிதைப் பகுதியை ஒரு இரவு நேரத்தில் படித்துக் கொண்டிருந்த போது, திடீரென்று

அரங்கநாதனை முதன்முதலில் சந்தித்த போது அவருடைய பழைய நங்கநல்லூர் வீட்டில் நான் உணர்ந்த அந்தத் தேம்பல் உணர்வு மீண்டும் என்னை ஆட்கொண்டது. மார்க்வெஸ் நடந்த அந்த லத்தீன் அமெரிக்கத் தெருவை அரங்கநாதன் வாழ்ந்த வீடாயும், மார்க்வெஸ்ஸின் தாயாரால் சுட்டிக்காட்டப்பட்ட மரத்தை அந்த வீட்டின் முன்னறையையும் உள்ளறைகளையும் இணைக்கும் இருண்ட வாயிலாகவும் நான் உணர்ந்தேன். மார்க்வெஸ் தன் சரியான வார்த்தைப்படுத்தலால் என்னை அந்தப் பழைய அனுபவத்திற்குள் முற்றான புதுமையுடன் அமிழ்த்தி அதிலிருந்து மீட்கிறார். அந்த நிலைப்படிக்கு அப்பால் எதுவுமில்லை. அதோடு உலகம் முடிகிறது. அதே கணம் அரங்கநாதனுடைய மகளின் திருமணம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மண்டபத்திலிருந்து நான் இன்னும் வெளியேறவில்லையென்பதையும் திடுக்கிடும்படி நான் தெரிந்துகொண்டேன். எழுதிக்கொண்டிருக்கும் தாண்டவராயன் கதையின் முதல் பிரதியைத் தந்திரமாக அவரைப் பெற்றுக்கொள்ளும்படி செய்துவிட்டால் ஒருவேளை நான் வெளியேறுவது சாத்தியமாகாலம் என்று தோன்றியது. (மேலும் மாய யதார்த்தக் கதை சொல்லலின் முக்கிய அம்சங்களாக நான் கருதும் அங்கதம் மற்றும் பூடகம் ஆகிய இரண்டு அம்சங்களைப் படைப்பாக்கத்தில் பயன்படுத்தும் உத்தியை அப்போது தமிழ் இலக்கியச் சூழலில் புழக்கத்தில் விடப்பட்டிருந்த கோட்பாடுகளைவிட அதிகமாக எனக்குக் கற்றுக்கொடுத்ததில் அரங்கநாதனுடைய பறளியாற்று மாந்தருக்குப் பிரதான இடம் உண்டு. (பிற சில க.நா.சுவின் **அவதூதர்**, கி.ராவின் **கோபல்ல கிராமம்**) இரண்டு வருடங்களுக்குப்பின் அதைச் செயல்படுத்தினேன். அரங்கநாதன் வரவியலவில்லை. அவருக்குப் பதிலாக நண்பர் மகாதேவன் வந்து அதைப் பெற்றுக் கொண்டார். பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லைதான். ஆனால் வெளியேறிவிட்டேனா தெரியவில்லை.

முத்துக் கறுப்பன் என்னும் வாசகன்

ராணி திலக்

தமிழில் மிகச் சிறந்த கதையாசிரியரும் சிறுபத்திரிகையாளருமான மா. அரங்கநாதனின் இரண்டாவது கட்டுரைத் தொகுப்பு இது. இந்தத் தொகுதியில் மொத்தம் 21 கட்டுரைகள். பெரும்பாலானவை கவிதைத்தொகுதி அல்லது கவிதைகளைக் குறித்த கட்டுரைகள். பேட்டி, கதை, நினைவுகள் என்ற அமைப்பில் சில கட்டுரைகள். கவிதை, சிறுகதை, நினைவுகள் என்ற மூன்றாகப் பிரித்துப் பேசலாம். இந்தப் பிரிப்பு இப்புத்தகத்தில் இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கவிதைகள் பற்றி கட்டுரைகளில், இளையபாரதி, வஸந்த் செந்தில், கனிமொழி, ஸ்ரீநேசன், ரிஷி என்கிற அனாமிகா, ரவிசுப்ரமணியன், பழமலய், தமிழச்சி, புதுவை இளவேனில், ம.தவசி ஆகியோரின் கவிதைத் தொகுதிகளில் உள்ள கவிதை ஒன்றினை எடுத்து விளம்புகிறார். தான் மேற்கோள் காட்டும் கவிதையைச் சொல்வதற்கான காரணம் முதல் அது தந்த அனுபவம் வரை விரிவாகப் பேசுகிறார். இதை வியாக்யானம் என்று சொல்வதற்குப் பதிலாக, வாசிப்பின் அனுபவம் என்று எடுத்துக்கொள்ளலாம். ஏதாவது ஒரு கவிதையை எடுத்துப் பேசும் போது அக்கவிதையைப் பொதுவாழ்வனுபவத்திலிருநது பேசுகிறார். சில கவிதைகளின் தன்மையைச் சுருக்கமாகத் தெளிவாக்குகிறார். உதாரணத்திற்கு இந்தக் கவிதை பெரியதொரு இழப்பை அனுபவித்து ஒருவனின் கூப்பாடு, என்று இளையபாரதியின் அனுபவத்தைக் கூறுவது போதுமானது. ஒரு கவிதையைப் பற்றிச் சொல்வதற்குமுன், அக்கவிஞரைப் பற்றிய அறிமுகத்திலிருந்து தொடங்குகிறார். கவிஞர் வஸந்த் செந்தில் பற்றிக் கூறும்போது, அவரின் லௌகிக வாழ்க்கைப் பணி, அவர் எழுதிய கவிதைத் தொகுதிகள், விமர்சனங்கள், மொழிபெயர்ப்புகள் பற்றிக் கூறிவிட்டு, அக்கவிதை விதந்தோதுகிறார். வஸந்த் செந்திலின் மிருகபாலிகை கவிதைத் தொகுதியின் மையத்தைக் கூறவிட்டு, ஒரு கவிதையை எடுத்துப் பகுதி பகுதியாகப் பிரித்து விளக்குகிறார். விளக்குதல் என்பது அவர் கவிதைகளை ரசித்த முறைமையே. ஸ்ரீநேசனின் கவிதையை ஒன்றின் மையம் அன்பு குறித்தது என்று சொல்லிவிட்டு, ஏசு, ஜே.கிருஷ்ணமூர்த்தி, வள்ளுவர் அன்பைப் பற்றிச் சொன்னதிலிருந்து கவிஞர் எவ்வாறு மாறுபடுகிறார் என்பதை விளக்குகிறார். அக்கவிதையை வாசித்தபின், தன் கடவுளை

அழைக்கத் தகுதியானதைச் சொல்கிறார் மா. அரங்கநாதன். மேலும் ஜம்ப் கட் என்ற சினிமா உத்தியை இக்கவிதை எழுதுதல் தொழில் நுட்பத்துடன் இணைத்து மெருகேற்றுகிறார். ரிஷியின் கவிதை ஒன்றினைப் பற்றிப் பேசும்போது, உண்மையான விடுதலை உணர்வு அவர் கவிதையில் மிளிர்வதைக் கூறுகிறார். அவர் கவிதைகளில் சொல் ஒரு மாயாஜாலம் நிகழ்த்துவதைக் கூறுகிறார். ரிஷியின் கவிதையை வாய்விட்டு வாசிக்கும்போது சப்தநயத்துடன், கவிதையில் ஒளிந்துள்ள பகடித்தன்மை பற்றிப் பேசுகிறார். த.பழமலய்யின் கவிதைத் தொகுதியைப் பற்றிப் பேசும்போது, அவருடைய முன் தொகுதியில் உள்ள கோபம், தற்போது பரிகாசமாக மாறியுள்ளதைக் குறிப்பிடுகிறார். மின்காந்தசக்தி மிக்க பாம்படங்கள் கலாச்சாரம் தற்போது அழிந்துவிட்டதைத் தமிழச்சியின் கவிதையான பாம்படங்கள் பற்றிக் கவிதையொன்றில் குறிப்பிடுவது மட்டுமல்லாது, பாம்படத்தின் வரலாற்றைச் சுருக்கமாக விவரித்துவிடுகிறார் கட்டுரையாளர். தன் அனுபவத்தைப் பற்றி விவரித்துக் கொண்டிருக்கும் போது புதுவை இளவேனில் ம.தவசி கவிதைகளை மேற்கொள்கிறார்.

அடுத்ததாக, மூன்று கதைகள். பிரபஞ்சனின் மீன் கதையைப் பற்றிப் பேசும்போது, புதுமைப்பித்தனின் கடவுளும், கந்தசாமிப் பிள்ளையும் என்ற கதையை எத்தனை முறை வாசித்தேன் என்பது நினைவில்லை என்பதுபோலவே மீன் கதையும் என்கிறார் ஆசிரியர். இக்கதையைப் பற்றி நூறு பக்கத்தில் எழுதவேண்டியது என்றவர் மூன்று பக்கத்தில் அதைச் சுருக்கிச் சொல்லிவிட்டார். மீன் கதைப்பற்றிக் கூறும்போது, வெளிச்சத்தை இருட்டைக்கொண்டு விளக்குவது போல அல்லது இருட்டை வெளிச்சம் கொண்டு விளக்குவதுபோல இருப்பதாகக் குறிப்பிடுகிறார். நகுலனின் வாக்குமூலம் நாவல் பதிப்புப் பற்றிக் கூறத் தொடங்கியவர், அவரின் படைப்பு மையம், சொல்லும் முறைமைகளைப் பாராட்டுகிறார். பூனையும், மனிதரும் ஒன்றுதான் நகுலனுக்கு என்று கூறிவிட்டு, அவர் கதைகள் பற்றி விமர்சனம் செய்ய குறுகிய காலம் போதாது என்கிறார். பிரமிளின் பிரசன்னம் கதையை எவ்வாறு வைதீக எதிர்ப்பாக இருக்கிறது என்று கூறிவிட்டு, அக்கதையில் வரும் அழகிய நம்பியை, புற்றுநோயால் இறந்த தன் நண்பன் எழுத்தாளர் கிருஷ்ணன்நம்பியாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று பரிதவிக்கிறார். ஐம்பது வருடத்திற்கு முன் வந்த வெளிநாட்டுப்படம் [illegible] டிராப். மனித இயந்திரம் பற்றிய கதை இது. இப்படத்தில் வரும் பாத்திரத்திற்கும், மௌனியின் மனித

இயந்திரத்திற்கும் வேறுபாடு இல்லை என்று மா. அரங்கநாதன், ஆங்கிலேயனுக்கு முன்பாகவே தமிழன் முன்னேறிவிட்டான் என்று பெருமைப்படுகிறார் இவர்.

பிறகு இன்னொரு பகுதி, நினைவுகள். முன்றில் இதழின் தொடக்கம் முதல் இறுதி இதழ் வரையில் பங்கேற்ற படைப்பாளர்கள் பற்றியும், இதழ்களில் வெளியிட்டவை பற்றியும் விவரித்துள்ளார். இதை நாம் முன்றில் ஒரு வரலாற்று சுருக்கம் என்றே கொள்ளவேண்டும். ஓவியர் ஆதிமூலத்தைப் பற்றிய நினைவில் அவருடன் அதிகமாகப் பேசியதில்லை என்றபோதிலும், அவருக்கு ஒருவித நட்பு நிலவுவதைக் குறிப்பிடுகிறார். ஆதிமூலத்தின் கோடுகளும், வண்ணங்களும், எழுத்துக்களைவிட ஆயிரம் மடங்கு அதிகமாகச் சொல்லி நிற்கும் என்று கட்டுரையை முடிக்கிறார்.

கடைசியாக, ஒரு பேட்டி. இனிய உதயம் இதழில் 2008ல் வெளியானது. அவர் எழுத்தை மையமிட்டுக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதிலில் சில செய்திகள் கிடைக்கின்றன. அவருடைய சைவ சித்தாந்தம், சினிமா ஈடுபாடு, முன்றில் இதழின் செயல்பாடு, உடல் அரசியல் பேசும் பெண் கவிஞர்களை ஆதரிப்பதற்கான காரணங்கள், ஜோதிட ஈடுபாடு, முத்துக்கறுப்பன் என்பவன் யார்? என்பதுதாம் இவை.

இக்கட்டுரைத் தொகுதியை வாசித்தபோது, சித்தாந்த அடிப்படையிலும், வாழ்வின் அனுபவத்திலும் படைப்பை உள்வாங்கும் மா.அரங்கநாதனின் மனம் தெரிகிறது. உண்மையோடு உறவு வைத்துக்கொள்ளாத எதுவும் படைப்பு ஆவதில்லை என்ற மா. அரங்கநாதன் கட்டுரைகள், பொய்மை அறியாதவை. அல்லது தன் அனுபவத்தின் வழியே அல்லது படைப்பின் அனுபவத்தில் தன்னைக் காண்பது என்கிற தன்மை வெளிப்படுகிறது. மா. அரங்கநாதனின் உண்மை என்பது சித்தாந்தம் எனலாமோ? ஆனால் முத்துக்கறுப்பன் என்கிற மா.அரங்கநாதன் வெளியே சொல்லமுடியாத உணர்வுகளை, மற்ற எழுத்தில் பார்த்தவர், பார்ப்பவர்.

தமிழ் நவீன கவிதையைப் பற்றி பேசுபவர் சிலரே. கவிதையை எவ்வாறு ரசிப்பது என்பதை நாம் விக்ரமாதித்தியனிடம் கற்றுக்கொண்டால், கவிதையின் சித்தாந்தத்தை எவ்வாறு உணரவேண்டும் என்பதை நாம் ஆசிரியரிடம் கற்றுக் கொள்ளலாம். கற்றுக்கொள்ள இருக்கிறது.

(கடவுளுக்கு இடங்கேட்ட கவிஞன்.
மா.அரங்கநாதன் / காவ்யா / 2008)

ரவிசுப்பிரமணியனின் ஆவணப்படத்தில் நுட்பமாய் துலங்கும் குறியீடுகள்

ம. செந்தமிழன்

பாடு பொருளே கவிதையின் வடிவத்தைத் தீர்மானிப்பது போல, உள்ளடக்கமே ஆவணப்படத்தின் அழகியலை வகுக்கிறது. இது பொதுவிதி. தமிழ் ஆவணப்படவுலகில் பல விபத்துகளுக்கு இந்த விதி குறித்த தவறான புரிதலே காரணமாகியிருக்கிறது.

ஆவணப்படத்தின் நோக்கம் ஆவணப்படுத்தலே என்ற எளிமைப்படுத்தலால், அதன் வடிவம் கற்பனை வறுமையில் தள்ளப்பட்டுவிட்டது. வரலாற்றைச் செய்தித்தாள் துண்டுகளாலும் சம்பவங்களை நேர்காணல்களாலும் தொகுக்கும் பெரும் பணியே ஆவணப்படமாக்கலாய் இங்கு.

ஆளுமைகள் குறித்த ஆவணப்படங்களோ, ஆளற்ற பொட்டலில் மேடைப் பேச்சு போல் பரிதாபத்துக்குரியவை. இந்த அவலங்களின் சிக்காத மிக மிகச் சில விதிவிலக்குகளில் ரவிசுப்பிரமணியனின் மா.அரங்கநாதனும் கொஞ்சம் கவிதைகளும் ஒன்று.

ஆளுமை குறித்த அறிமுகம் தான் உள்ளடக்கம். இது ஒரு கட்டுரைக்கான தன்மையுடையதே. ஆயினும், ரவி ஒரு கவிதையைத்தான் தீட்டியிருக்கிறார். நாடறிந்த ஆளுமையைப் படமாக்குதல் எளிது. இயக்குனரின் உரையாடலில் பார்வையாளர்கள் உடனடியாகப் பங்கு பெறுவார்கள். ரஜினி படம் பார்ப்பது போல. ரவியின் இந்த முயற்சியோ, புதுமுகத்தைப் படமெடுத்தல் போன்றது.

மா. அரங்கநாதனைப் பெரும்பான்மைச் சமூகத்துக்கும், அறிவு ஜீவி சமூகத்தின் சரி பாதியினருக்கும் தெரியாது. இதுவே உள்ளடக்கத்தின் எதிர்மறைக் காரணி. உள்ளடக்கத்தின் நேர்மறைகளும், சாதகங்களும் ஒரு காட்சி மொழி வடிவத்துக்கானவை அல்ல. இத்தனை தடைகளையும் அழகாகவே மீறி, ஒரு நதியைப் போல் நம் கற்பனை வெளிகளில் பாய்கிறது இந்தப் படம்.

ரவிசுப்ரமணியன் இரண்டு இணை கோடுகளில் (ஒன்றோடொன்று சேராத) பயணித்திருக்கிறார். மா.அரங்கநாதன் என்னும் ஆளுமை குறித்த பிரமிப்பை ஏற்படுத்தல் ஒன்று. மா. அரங்கநாதன் எனும் ஆளுமையின் கருத்தியல்களைப் பதிவு செய்தல் மற்றொன்று. மா.அரங்கநாதனை ஏற்கனவே அறிந்தவர்களுக்கு அவரது ' வாழ்க்கை அறிமுகம் துணைத்தளமாகிவிடும். கருத்தியல்கள் முதன்மைத் தளமாகிவிடும். காட்சிகளின் தொகுப்பு (திரைக்கதைக்கு நிகரான பொருளில்) மேற்கண்ட இரு வேறு சாத்தியங்களுக்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. மா.அரங்கநாதனின் வாழ்க்கைக் குறிப்புகளை ஒரு கட்டம் வரை சொல்லி, பிறகு அவரது நேர்காணலில் அவருடைய

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ம.அரங்கநாதன் இப்போது சென்னையில் வசிக்கிறார் என்று நம்பின பின்னரும் அறிவிக்க பிறகு, ம. அரங்கநாதன் வீட்டுக்குள்ளிலிருந்து வெளியே வெறித்துப் பார்க்கும் துணைக் காட்சிகள் வருகின்றன. சென்னையின் வெறுமையிலிருந்து தப்ப விழையும் ஒரு பிரயாண வாசிப்பனுபவம் அவருக்கு கொண்டிருக்கிறது இந்த நாட்டம் அப்படி.

இறுதிக் காலக் குறைந்த, நண்பர்களையும் ம.அரங்கநாதனை தன் வாக்கில் அழைத்துச் செல்கிறார். இந்த எளிமையானதகைமைப் போல் தனையால் ம. அரங்கநாதனைக் குறித்து என்று தன்பால் என்னும். இதை பயணமே தன் அனுபவத்தை மனிதரின் ஒரு சக்தியும் கண்டு போன்ற மனநிலையை ம. அரங்கநாதனுடைய தம் கதைகளிலிருந்து பகுதிகளைப் போல கொண்டு ம. இரு எளிமைகள் இணைந்த ஒரு அகராதியைக் கொடுக்கிறார்கள்.

கல்வி அவனுக்குள் அடங்கியிருக்க அவனே மிஞ்சி நின்றான்

[illegible]

[illegible]

[illegible]

[illegible] (Sensory Perceptions) [illegible]

[illegible]

டவுள் வழிபாட்டின் இயல்பாக பெரியவர் செய்வதைக் காணக்கூடும் இரண்டாக்கப்பட்ட பாண்டிப்பட்டுகூடான. சின்ன பழக்கவழக்க வகைக்க இருத்தலை அரசியலை, திருமாநாத்தத்தை ஒரு பெரிக்க மேக எதிர்ப்பிரார்கள். புரட்சி அமைதிக்கு வைதிக கிடைக்கும்போதெல்லாம் தான் வாராவிகொள்கிறார்கள்.

கருவறையில் கடவுள் சிலை மட்டுமிருக்காமல் குளத்து இக்கரையில் தான் ஆழ்வாரும் இருக்க வேண்டும்

போட்டோ என்ற கதையில்

தமிழ் பத்திரிகைக்கு விருந்து. அதனால் தான் நல்ல மனிதர்கள் அதைக் கடவுளுடன் சேர்க்கிறோ

காலைக்கு இல் வெறுத்த விருந்தாளி. தமிழை செய்ய படைப்பதிகின்றன் ஒரு குறிப்பிட்ட நேரம் வருவெண்டு கேட்கிறன்?

அதனால் தான் ஏக்கா தமிழை சேர்த்துக்கொள்ளவில்லை. விருந்தாளி பானைகள் வைப்பதற்கு.

போன்ற சொல்கிறார்கள்.

பிற வர்ணத்தை சேர்க்கவே, தினைப்பானையை என்றால் அவர்கள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை எழுதுக்கிறும் முன்வைக்கப்படுகிறது.

முத்தாரம்மன் கோயிலின் வாசல் குளியாக் கட்டிக்கொண்டு மேளையாக பூசை செய்வதை பார்த்தால் இந்துமத பிரதிநிதியை.

மேசாபல் இருட்டுகை வெளிவேண்டும் இரு என்று தான் சொல்லது வழக்கம். வேளைம் தான் பக்தியும் என்று முத்துக்கருப்பன், தெருப்பக்த சமையற்பான பூசை முறையை சொல்லி அவரை எதிர்கொள்கிறான்.

கப்பா இரு சொல்லை வைதுமே அப்பா பெருமன் என அறிந்திலயே என்று அருளிச்செய்தவன்.

நட்டகல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணுமுணுவென்று சொல்லு மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ

என்று சிவவாக்கியரும் காலம் காலமாக போர்த்தி வளர்க்க மெய்யறிவை, தமிழர் தம் அர்த்தமுள்ள ஆதிக்கத்திற்கணை ஆக்கிரமித்து மாற்ற முயலும் இந்துத்துவ அரசியலை, சிக்கலையாக எதிர்க்கும் ஒரு கவிஞனின் கோபம் இங்கே வெளிப்படுகிறது.

ஐன்ஸ்டீனின் சார்பியல் (Theory of Relativity) மற்றும் (Physics) சார்ந்த கருத்துகள் அரங்கநாதனின் சில படைப்புகளில் விசேடமாக கையாளப்பட்டு பல உருவகங்களாகி பிரமிப்பூட்டுகிறது. உதாரணத்திற்கு அழல்குட்டம், காலக்கோடு, ஒருவழி பாதை போன்ற கதைகளை சொல்லலாம்.

அழல்குட்டம் என்ற கதையில் வரும் முத்துகறுப்பனுக்கு அவன் கிராமத்தில் விண்மீன்கள் நண்பர்களை போல் நெருக்கமானவை. சென்னை வந்த பிறகு சோதிடம் பயிலும் அவன் அடுத்தவாரம் தனக்கு மரணம் என்பதையும் அதன் நேரத்தையும், கார்த்திகை புறம் 229 எனக் கணிக்கிறான். நட்சத்திரங்களையும் மலைகளையும் காண ஊருக்கு செல்லும் அவன் தனது நட்சத்திரங்களைக் காணாமல் தான் ஏற்கனவே இறந்துப்போனதை உணர்கிறான்.

பத்ததி கற்ற முத்துக்கறுப்பன், தனது நட்சத்திரங்களை பார்க்க இயலாதது வேறு கதை. தான் ஏற்கனவே செத்துப் போய்விட்டதாக அவன் உணர்ந்திருப்பான். அந்த நட்சத்திரங்கள் அவனிடம் பேசியிருக்காது. அவனை பார்க்கவே மறுத்து அவனை விட்டு நெடுந்தொலைவிற்கு சென்றிருக்கும். அவற்றின் டிகிரிகள் அவனுக்கு தெரிந்தன. அந்த சித்திரை மாத காலகதியின் கோட்சாரம் புரிந்தது.

இப்பொழுது நாம் வான்வெளியில் பார்ப்பது இறந்தகாலத்தையே என்று பூடகமாக விவரித்திருப்பார். இயற்கையோடுஇணைந்து வாழ்ந்தவன் சோதிடம் கற்று, இரண்டுக்கும் வித்தியாசம் உணர்ந்த கதை.

காலக்கோடு கதையில் ஐன்ஸ்டீனின் சார்பியலை ஒத்த கருத்துக்களை தத்துவங்களுடனும், ஆன்மீகத்துடனும் மிக அழகாக இணைத்திருப்பார்.

வயல்வெளியில் முத்துக்கறுப்பனுடன், முக்காடிட்ட ஒரு உருவம் பேசிக்கொண்டிருக்கிறது.

கடியாரத்தை கழட்டிப்போட்டுட்டு போன பையன் ஒரு பொஸ்தகத்தையும் போட்டுட்டு போயிருக்கான. ஒரு பிசிக்ஸ் பொஸ்தகம் அது.

அந்த பொஸ்தகத்துல என்ன இருந்த்துன்னு பார்த்தேன். அதுவும் ஒருவகை ஆட்டந்தான். தொடர்ந்து வரக்கூடிய ஆட்டம் - எப்பவும் இருந்து கொண்டேயிருக்கக்கூடிய ஆட்டம் - யார் போனாலும் வந்தாலும் நடக்கற ஆட்டம்.

எட்டாம் திருவிழாவுல தில்லையம்பல வாகனம் வரப்ப நாங்க ஆடுவோம் பாத்திருக்கேரா.

உனக்கெப்படி தெரியும் - அந்த புஸ்தகத்தில் நடராசர் படமும் போட்டிருந்தது - பிஸிக்ஸ் புத்தகம்.

இந்த பிரபஞ்சத்தில் தூரத்தை பொறுத்து காலம் மாறும் விதத்தில், காலம் ஒரு போதும் ஒரே மாதிரியாகவும், சரியானதாகவும் இருப்பதில்லை என்றார் விஞ்ஞானி ஐன்ஸ்டின். இதன் அடிப்படையில் காலத்தையும் வெளியையும் இணைத்து வெளி - நேரம் (Spare - Time) என்ற கணித தொடரியாக (Mathematical Continuum) கணித அறிவியலார் உருவாக்கினர். மேலும் இந்த கணிப்பு நான்காவது பரிணாமமுமாகவும் (4th Dimension) உருபெற்றது. நான்காவது பரிணாமத்தில், காலமும் இடமும் மாறிக்கொண்டே இருக்கும். இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையுமே தனித்தனி நிகழ்வாக மட்டுமே கணிக்க முடியும் என்ற கருத்துருவாகி அதுவரை உருவான இயற்பியல் கோட்பாடுகளை பின்னுக்குத் தள்ளியது.

இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் இயற்பியலார் கண்டுபிடித்தது, முன்னதாகவே தமிழரால் தத்துவமாக்கப்பட்டு பின் பூடகமாக வாழ்வியல் முறையில் இணைக்கப்பட்ட இரகசியத்தை திரு. அரங்கநாதன் இங்கே பகிர்கிறார். இந்த கதையின் மூலம் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து ஆட்டங்கள் (இயக்கங்கள்) மட்டுமே உண்மை, காலம் உண்மையாக முடியாது என்கிறார். இந்த பிரபஞ்ச இயக்கத்தின் தத்துவமே, நடராசர் குறியீடு என்றும் சொல்கிறார். இங்கு இயற்பியலும், ஆன்மீகமும், தத்துவமும் ஒரு புள்ளியில் இணைவதை தரிசிக்கிறோம்.

ஒருவழிப்பாதை என்ற கதையில், முத்துகறுப்பன் முத்துவாகவும், கறுப்பனாகவும் இரண்டாக பிரிந்திருக்கிறார்கள். பின்பு திட்டம் நாளைக்கு போட்டால் அது பயணமாகாது என்று மனம் போன போக்கில் பயணம் போகிறார்கள். மாமல்லபுரம் போவதற்கு முன் கறுப்பன், தாம் பயணப்படுவது பயணமாகாது என்கிறான். இந்த பிரபஞ்சத்திலிருக்கும் எல்லாவற்றின் பயணமும் அறியப்படவேண்டும் என்கிறான்.

இங்கு திரும்பவும் ஆசிரியர் காலத்தை நம்பாமல் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும், தோன்றி முடியும் அசைவுகளாகவே கணிக்கின்றார். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தினுசாக மிக அருமையான கதை இது, லேசாக சார்பியலை தொட்டுச்செல்லும் ஒரு படைப்பு.

சில கதைகள் காலச்சுழலுக்குள் சிக்கிக்கொள்ளாமல் எந்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான கருத்துகளை

கொண்டிருக்கின்றன. சிக்கி என்ற சிறுகதையை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இங்கு விடுதலையுணர்வே எல்லாவற்றையும் விட சிறந்த முறைமை என்கிறார். எந்த கட்டுப்பாடும், லட்சியமும் திட்டமும் இல்லாத விடுதலையுணர்வுடன் கூடிய விருப்பமான செயல்கள், மகத்தான எல்லைகளை காட்டுமென்பதை சிறிதளவும் சந்தேகமின்றி உணரவைக்கிறார். இன்றைய கல்வி முறையையும், விளையாட்டு முறையையும், எவற்றையுமே ஒப்பிட்டு நோக்கும் தற்போதைய வாழ்க்கை முறையையும் கேள்விக்குள்ளாக்கும் எழுத்துக்கள் பலபுதிய வாசல்களை திறக்கின்றன.

மகத்தான ஜலதாரை என்கிறது கதை. ஆற்றை நம்பி ஆற்றின் இருகரையிலும் வாழ்ந்த மனிதர்கள், ஆற்றை சாக்கடையாக்கிவிட்டு, தலைவன் ஒருவனை உருவாக்கி, கோவில்களை சுற்றி ஊர் அமைத்து வாழும் நாகரீகத்திற்கு எப்படி மாறினார்கள் என்பதே இதன் சாராம்சம். காலமில்லை, ஆனால் வரலாறு இருக்கிறது. எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய வரலாறு.

திரு. அரங்கநாதனின் முப்பதாண்டு கால சிறுகதைகளிலும், முத்துக்கறுப்பன் என்ற பெயரே முக்கிய கதாபாத்திரத்தின் பெயராக இருப்பது, தன்னை முதலில் ஒரு தமிழனாக முன்னிறுத்திக்கொண்டே ஆக வேண்டும் என்ற பிடிவாதமாக வெளிப்படுகிறது. கிடைக்கும் தரிசனமும் தமிழனுக்கே என்ற கர்வமாகவும் எடுத்துக்கொள்ளலாம். மேலும் அவரே சொல்வது போல், கறுப்பு என்றால் கோபம் என்ற ஒரு பொருளுடன், தன்னை ஒரு கோபக்காரனாகவும், வெளிப்படுத்துகிறார்.

அரணை என்ற கதையில் மனிதனின் மனதை ஒரு அரணையோடு ஒப்பிடுகிறார். சில கண நேர தரிசனங்கள் மனித மனதை நல்ல எண்ணங்களை நோக்கி திருப்பினாலும் மனித மனம் அரணை போல திரும்பவும் செய்ததையே செய்கிறது. நினைத்ததையே நினைக்கிறது என்கிறார். இந்த படைப்பில் மிக நுட்பமான உளவியலையும் தொட்டு செல்கிறார்.

இந்த கதைகளைப் போல தரிசனம் வெள்ளைக்கண்ணாடி தோற்றம், வீடுபேறு, போன்ற கதைகளை குறிப்பிட்டுசொல்லப்பட வேண்டியவை. தரிசனத்தில் கதாநாயகன் முத்துக்கறுப்பனுக்குள், தன்னைத் தவிர மற்றவர்கள் அறிவில் குறைந்தவர்கள் என்ற எண்ணம் வியாபித்து இருக்கிறது. அந்த எண்ணம் அவனை அடுத்த கட்டத்திற்கு நகராமல் தடுத்துக்கொண்டிருக்கிறது. இதை அவன் அறியும் போது தன்மேலேயே வெறுப்புக்கொள்கிறான் இதை -ஆசிரியர்

முத்துக்கறுப்பனுக்கு தன் மீது வெறுப்பும், அதனால் ஏனோ ஒருவகை நிம்மதியும் பிறந்ததாக தோன்றியது.

என்று கதையை முடித்திருப்பார். இதை உளவியல் கண்கொண்டு பார்க்க அவசியமில்லை. இங்கு தன் என்பதை நான் என எடுத்துக்கொள்ளவேண்டும். நான், எனது, என், தன் போன்றவை நம்மை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்லாது என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஞானத்தின் ஞானாதி நான்கும் மா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நான் எனது என்று எண்ணாமல்
ஞானத்தில் யோகமே நாத அந்த நல் ஒளி
ஞானக் கிரியையே நல் முத்தி நாடலே

என்ற திருமூலரின் பாடல் வழி நெறிமுறை, இங்கு வாழ்வியல் முறைகளுடன் ஒன்று கலந்து கதையாகி இருக்கின்றது.

வெள்ளைக்கண்ணாடியில் இரண்டு கண்களும் சரியாக தெரியாத நிலையில், புதுக்கண்ணாடியை நாடாது; தனக்கு பழைய கண்ணாடியே போதும் என்று முத்துக்கறுப்பன் முடிவெடுக்கிறார். புலன்களை சாராத மூன்றாவது கண் அவருக்கு சரியான பார்வையை தருகிறது. முத்துக்கறுப்பன் தன் எண்ணத்திலேயே பிடிவாதமாய் இருக்கும் கண் டாக்டரிடம் சொல்கிறார்.

பாருங்க நான் உங்களைவிட வயசானவன். இந்த நேரத்துல எனக்கு தோணறதெல்லாம் இந்த ப்ரிஸ்கிரிப்ஷனை கிழிச்சு உங்க தலைமேல போட்டுட்டு போகணுங்கிறதுதான்.

ஆனா அதை செய்யப்போறதில்லே, செய்தா இந்த கண்ணாடி ரொம்பவும் மாறிடும். எனக்கு தெரிய வேண்டியதை இது காட்டாது, என்னை திண்டாட வைக்கும்.

இதையே மனத்துக்கண் என்ற கதையில் இவ்வாறு விளக்குகிறார்.

பார்ப்பது கண்ணாக இருந்தாலும் அதில் தோன்றும் எண்ணம் மனதை சார்ந்தது.

மனத்துக்கண் மாசிலன் என்று இங்கே ஒரு கிழவன் சொன்னானே...

இங்கே மிக முக்கியமாக கதாசிரியர் முன்வைப்பது.

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்

என்ற வள்ளுவர் உணர்ந்ததை,

தோற்றம் என்ற கதையில் தன்னால் மட்டுமே பணம் சம்பாதித்து தன் குடும்பத்தை கரையேற்ற முடிந்தது என கர்வம் கொள்ளும் முத்துக்கறுப்பனை,

நான் இல்லாட்டா நீ என்ன செய்வே நாயே என்று ஒரு குரல் அவனுள் இருந்து கேட்கிறது. அந்த குரல் அவனது பாரம்பரியத்திலிருந்து வந்ததாகவும் இருந்திருக்கலாம். முத்துக்கறுப்பனை, அவனது மாமா மாறக் கற்பொலையை காம்புனாகவோ எடுத்துக்கொள்ளவேண்டும்.

சொப்பனம் என்ற கதையில் கல் பிறந்த செல்லையாவை விட தகர்வத்துடன் முத்துக்கறுப்பன் தன் சகபிரயாணி, கருவாட்டு கூடையுடன் தன்னுடன் பிரயாணம் செய்வதை, ஒருவித அருவெறுப்புடன் கண்டிக்கிறான். அவன் மறுநாள் சந்திக்கும் மாக்குசாமியார் அவன் அவருக்காக வாங்கி வந்த முறுக்கை வாயில் போட்டுக் கொண்டு

நல்லாயிருக்கு. ஆனா கொஞ்சம் மீன்வாடை அடிக்குது என்கிறார்.

அரங்கநாதனின் பூசலார், தேங்காய், ஆகல், உலகுபூக்கல், ஒரு கன்றுக்குட்டியின் மரணம், ஒரு பிற்பகல் நேரம் போன்ற சில கதைகளில் மிக ஆழ்ந்த உளவியல் வெளிப்படுகிறது.

பூசலார் கதை என்னவோ பூசலார் நடையதுதான். ஆனால் அது தொட்டுச் செல்லும் ஆழ்ந்த உளவியல் சிந்திக்க நிர்பந்திக்கின்றது. பூசலார் என்ற கதையில் முத்துக்கறுப்பனுக்கு, மாமன் மகளுடன் நடக்கவிருந்த திருமணம், நின்றுவிடுகிறது. மாமனை நோக மனமில்லாத முத்துகறுப்பன் அவன் திருமணத்தை பற்றிய கற்பனையின் நீட்சியில் எந்த குற்ற உணர்வுமின்றி அமைதியாக வாழ்கிறான். அவன் அமைதி, அவன் மாமனின் தவறை உணரவைக்கிறது. துரோகம் செய்தவர் திருந்தும் நேரம் இவனது தவம் கலைகிறது. இங்கு பொய் என்றும் உண்மையென்றும் ஆசிரியர் எதையும் இனம் பிரிக்கவில்லை. அவனது ஆழ்ந்த கற்பனையே ஒரு தவமாகவே கொள்கிறார்.

ஒரு பிற்பகல் நேரத்தில் முத்துக்கறுப்பனுக்கு தனக்கு துரோகம் இழைத்தவர்களுக்கு நேரும் துன்பம் தன்னால் தான் நேருகிறது, என ஆழமாக நம்புகிறான். அவன் நம்பிக்கை கடைசியில் அவனுக்கு எதிராக திரும்பவந்த ஆச்சரியம்.

உலகு பூக்கலில் தன்னை நல்லவன் என்றும், பெருந்தன்மையானவன் என்றும் எண்ணிக்கொண்டிருக்கும் முத்துக்கறுப்பன் சந்திக்கும் எதிராளி, உண்மையாக எந்த கபடமும் அற்றிருப்பது இவன் பெருந்தன்மை என்று எண்ணிக்கொண்டிருப்பதை விழ்க்கி இவனை, தன் தவறை உணர வைக்கிறது.

மேலும் ஆசிரியரின் அழகான நடையில், பழமையான தென்தமிழ்நாட்டு கலாச்சாரமும், மக்களும், கோயில்களும், தளங்களும், கண்முன் உயிரோட்டத்துடன் வந்து போகின்றன.

மூன்றில் கதை அவ்வளவு அழகு. அந்த வீடும் தொழுவமும் முற்றமும், தாத்தாவும், ஆச்சியும் எல்லாவற்றுக்கும் மேலான அந்த அழகான குழந்தையும், நம்மை அந்த சூழ்நிலைக்கு வாழவே அழைக்கின்றன. உதட்டில் புன்சிரிப்பில்லாமல் அந்த கதையை படிக்கவே முடியாது.

தேங்காய் என்ற கதையில் இழவு வீட்டில் பாடும் ஒப்பாரி பாடலொன்று

கத்திரிக்காய் எங்களுக்கு
கைலாயம் உங்களுக்கு
வாழைக்காய் எங்களுக்கு
வைகுந்தம் உங்களுக்கு,

பதினாறு நாள் சடங்கும் அதன் அழகுடன் விவரிக்கப்படுகின்றன.

அசலும் கதையில் வர்ணிக்கப்படும் ஆறும், அதன் கரைக்கோயிலும், மண்டபமும், மௌனி கதையின் திருமண சடங்குகள், காலக்கோடு கதையின் அம்மன் கோவிலிலும், கோபுரத்தடியும், சென்பகராமன்புதூர் மக்கள் சினிமாவுக்கு செல்லுதல், ஏடு தொடங்கலில் மக்களின் அப்பாவித்தனமும், நகைச்சுவையும், அழல்கூட்டத்தில் மலைகளும் நட்சத்திரங்களும், ஏடு கதையில் வரும் அந்த அற்புதமான நாவல் மரமும், மாந்தோட்டமும் சொல்லிக்கொண்டே போகலாம். எந்தவொரு மிகைப்படுத்தப்பட்ட வார்த்தையும் இல்லாத அவ்வளவு நேர்த்தியான வர்ணிப்பு. மேலும் தென் தமிழ்நாட்டில் வழக்குப் பேச்சு அவ்வளவு இயற்கையாய், இனிமையாக எடுத்தாளப்பட்டிருக்கிறது.

இதைத் தவிர எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய மிகச்சிறப்பான ஆழ்ந்த அர்த்தம் தொனிக்கும் வரிகள், ஒவ்வொரு கதையிலும் நுட்பமாக கையாளப்படுகின்றது.

ஆயிரம் வருஷமா அன்பு தான் ஜெயிச்சதுன்னு சொல்லிட்டு சோறை சொமக்க பின்வாங்கினா நாகரீகம் என்னான்னு தெரியல, இந்த பிரபஞ்சத்திலே நாம இருந்ததுக்கான நாகரீகம் அந்த சுமை தான்.

வாழ்க்கை என்று நீங்கள் சொல்வது, எதையென்று தெரிந்துக்கொள்ளலாமா?

பிறந்ததிலிருந்து இறக்கும் வரைக்கும், நடமாடிக்கொண்டிருக்கின்றோமே அதைத்தான் கூறுகிறேன்.

அப்படியென்றால், அதற்கு முறைகள் தேவையில்லை என்கிறேன். முறைகள் ஏற்படுத்தப்படவில்லை, சௌகர்யமாக

இருந்தது. வசதியாக இருந்தது இருப்பது அப்படியே முறையாகிவிடுகிறது.

ஆக, ஒரே முறைதான் இருக்கும் - வசதியான முறை - அது மாறாது என்கிறீர்களா?

அது கவிதை, அதற்கு விளக்கமில்லை

இலக்கிய நெடுங்கணக்கிலே அன்பு குறித்து வள்ளுவன்போல சொன்னவர் யாருமில்லை.

இதுதான் கஷ்டமுன்னு முதலிலேயே தெரியும்னா, அது கஷ்டமில்லாமேலேயே போயிடும். என்னையே கண்டுவிட்ட பிறகு, அதைப்பத்தி பேச வேண்டி வருகிற இந்த மாதிரி சந்தர்ப்பம் தான் கஷ்டமான காலம் - வேறு எதுவுமில்லை கஷ்டம்.

சாவிலே இயற்கை - செயற்கை என்றெல்லாம் இருக்கிறதாவென்று ஒரு தடவை முத்துக்கறுப்பன் கேட்டான்.

இந்தப் பக்கத்தில் பேசாமல் இரு என்பதற்கு சிவனேன்னு இரு, என்று தான் சொல்வது வழக்கம் - மௌனம்தான் மந்திரம்.

பறவை இல்லாமல் மனிதன் உயிர் வாழ்ந்ததில்லை - மரங்கள் இல்லாமலும் அவன் வாழ்ந்துவிட முடியாது.

எதையெல்லாம் விட்டு விடுகிறாயோ, அதிலிருந்து துன்பமில்லை என்றவரும் இங்கே உள்ளவர் தான்.

சாதாரண நிகழ்ச்சியாக ஒன்றை கருதாமலிருப்பதே, அது அசாதாரணப்பொருளை தோற்றுவிப்பதற்கு வழி வகுக்கிறது.

புரியவில்லை என்ற காரணத்தால் பேசிப்பார்க்கிறார்கள், எழுதிப்பார்க்கிறார்கள்.

இறுதியாக திரு. அரங்கநாதனின் படைப்புகளை படித்த அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறேன்.

முதன்முறை படித்தபோது, கதை ஒரு சம்பவமாக விரிந்து சட்டென்று முடிந்துவிட்டது. சற்று ஏமாற்றம்தான். ஆனால் ஒரு உள்ளுணர்வு இவரது கதைகளை வேகமாக கடக்க முடியாது என்று கூறியது. மீண்டும் படிக்க, படித்த சம்பவங்களையும், நடமாடிய பாத்திரங்களையும் உதிர்த்துவிட்டு காலச்சூழலில் அகப்படாத ஒரு புதிய நுட்ப உணர்வு, நுண்ணியதாக தூண்டப்பட்டதை உணர்ந்தேன். அது மிகப்பெரியதாய் விரிந்து அதை சார்ந்து, இதுவரை உணரப்படாத நிறைய அனுபவங்கள் உணரப்பட்டன.

திரு. அரங்கநாதனை எழுத்தாளர் என்று சொல்லுவதைவிட எழுத்தாற்றல் உள்ள ஒரு மெய்யியல் அறிஞர் என்றுதான் சொல்ல வேண்டும்.

திரு. அரங்கநாதனது கதைகள் சமூக மாற்றத்திற்கான விதைகள். கட்டாயமாக அனைவரும் படிக்க வேண்டிய ஒன்று.

நுணிகி அறிந்த மனம்
மா. அரங்கநாதன் சிறுகதைகள்

பாலசுப்ரமணியம் பொன்ராஜ்

மரபைக் குறித்த பலவகையான கேள்விகளை கோட்பாடுகள் உருவாக்கிவிட்டன. யாருடைய மரபு? என்கிற கேள்வி எது மரபு என்பதை விடவும் முக்கியமானது. தமிழ்ச்சிறுகதைகளுக்கு வ.வே.சு. ஐயர், பாரதி துவங்கி வரலாறு உண்டு. அந்த வரலாற்றில் சில மரபுகள். புதுமைப்பித்தன், மௌனி, அசோகமித்திரன், சுந்தர ராமசாமி, கி.ரா. என கிளைகள் பிரித்து நிற்கிற மரபு. சி.சு. செல்லப்பாவும், க.நா.சுவும் ஓர் ஒழுங்கில் மரபை தரம்பிரித்து ஒழுகச் செய்தவர்கள்.

சமூக வாழ்வை, தனிமனித சிக்கல்களைச் சொல்லுதல், மனச்சித்திரங்கள், தொன்மங்கள் இதிகாசங்களை மீளுருவாக்கம் செய்தல், மொழியின் ஓசைகளைக் கொண்டு சித்திரங்களை உருவாக்குதல் பின்னெழுந்து வந்த தலித் எழுத்து என சிறுகதைகள் புழங்கும் மொழியில் மா. அரங்கநாதனின் எண்பது கதைகள்.

வடிவத்தின் முக்கியத்துவத்தை பலகாலம் இலக்கிய ஆசான்கள் சொல்லிச் சென்றுள்ளனர். சிறுகதை வடிவத்திற்கு இலக்கணமே உருவாகிவிட்டது. மா. அரங்கநாதனின் சிறுகதைகளின் வடிவம் சிக்கலற்றதும், பெரிய அளவில் பரிட்சார்த்த முயற்சிகளும் இல்லாமல் இருக்கின்றன.

தத்துவம்

எண்பது கதைகளில் குமரி வட்டாரத்திலிருந்து நேரடியாக சென்னைக்கு வருபவர்கள் அதிகம். இந்த எல்லையை உலக அளவில் விரிவாக்க வேண்டுமானால் பெரும்பாலும் அமெரிக்கா, ஒரு கதையில் இலண்டனும் கதைகள் நடக்கும் புவிப்பிராந்தியங்கள், தமிழ்கூறும் நல்லுலகின் நிலவியல் எல்லை.

பெருநெறிகள் சமணத்திலும் பௌத்தத்திலும் துவங்கி, சைவமாகவும், வைணவமாகவும் விளங்குகிற தமிழச்சமூகம். சிறுமரபுகள் குறித்த பேச்சு இதுவரையிலும் அரசியல் தொடர்புடையதாக இருக்கிறது தத்துவ பின்பலமின்றி. தமிழ்ச்சமூகம் சிறுகதைகளை நவீனத்துவக் கூறுகள் சமூகத்தில் மாற்றங்களை உண்டுபண்ணிய காலத்தில் எழுதியது. பெரும் மாற்றங்கள் இச்சமூகத்தில் நிகழ்ந்த காலமும் அதுதான். அதுவரையிலும் நிலைபெற்றிருந்த சிந்தனை மரபுகள், வாழ்வியல் ஒழுங்குகளில் மாற்றங்கள் கடந்த நூற்றாண்டின் நம்ப முடியாத வேகத்தோடே நிகழ்ந்தன.

சைவம், வைணவ பெருநெறிகள் குறிப்பிடத்தக்க வரலாற்றுக் காலம் வரையிலும் (இன்றும் கூட பொதுப்புலத்தில், நெகிழ்ந்த அளவில்) தத்துவக் களத்தில் ஆதிக்கம் செலுத்தியவை. இவ்விரண்டும் தத்துவச் சிந்தனைகளில் இருந்து கிறித்துவம், நவீனத்துவம், காலனியாதிக்கம் உருவாக்கிய நிறுவனங்களால் தமிழ்ச்சமூகம் பலவித மாற்றங்களை உளவாக்கிக் கொண்டது. புராட்டஸ்டண்ட் கிறித்துவம், இயந்திரமயமாதல், காலனிய நிறுவனங்கள், (கல்லூரிப் படிப்பு, நீதிமன்றம், போலீஸ்துறை, அரசு அலுவல் படிநிலைகள், மாவட்ட நிர்வாகம்) ஆகியவை பெருமளவில் தமிழர்களை நவீனத்துவத்திற்குத் தள்ளிய காலத்தில் ஏறக்குறைய ரொமாண்டிசிச அல்லது மறுமலர்ச்சிகால சிந்தனை அளவிற்கு திராவிட இயக்கம், பிராமணியச் சிந்தனை நீக்கம் முதலாக சாதி ஒழிப்பு, தனிமனிதனை அளவாகக் கொண்ட சுயமரியாதை, பெண்விடுதலைபோன்ற இலட்சியவாதங்களை முன்வைத்து முற்றாக மாபு நீக்கம் செய்தே உருப்பெற்றது. அதன்பிறகு தமிழ்ச்சமூகம் பல்வேறு சிந்தனைகளின் வண்ணங்களால் தீற்றப்பட்ட ஓவியமானது.

மா. அரங்கநாதனின் கதைகள் சைவத்தை அதன் வாழ்வியில் ஒழுங்குகளோடு மாத்திரமல்லாமல் தத்துவத்தளத்திலும் அணுகிப்பார்ப்பவை. வீடு பேற்றில் முத்துக்கறுப்பனிடமிருந்து சிவா என்கிற பழகிப்போன சொல்லாக வெளிப்படுவதிலிருந்து, விடுதலைப் போரில் அப்பரின் பங்கி ல் சிவம்னா புதுசா வர்ற வெளிச்சம் மாமா - அது தானா வரதால எப்படியிருக்கும்னு சொல்ல முடியாது. சொல்ல முடிஞ்சா அது புதுசு ஆகாது என்கிற வாக்கியத்தில் சைவத்தத்துவ விசாரணை அழுத்தமாகப் புலப்பட்டு பின்பு துக்கிரி கதையில் முதலும் முடிவும் அற்ற ஒளியாக திருவண்ணாமலை கிரியில் திடமாக நிற்கிறது.

காலக்கோடு கதையில் கடிகாரம், ஆடைகளோடு நடராசர் படம்போட்ட பிசிக்ஸ் புத்தகத்தை கரையில் விட்டு கடல் நோக்கி கண்டுபிடித்துவிட்டேன் என ஓடும் அவன் செய்கைக்கு வாகனம் கோயில் சேரும்வரை ஆட்டம்தான் தில்லையம்பலம் சிவசிதம்பரோம் அப்படின்னு சைவ விளக்கம் கிடைக்கும். இப்பிரபஞ்சத்தின் அசைவுகள் அனைத்துமே நடராசனின் ஆட்டம்தான் என்பது சைவத்தில் தோய்ந்தவர்கள் அறிவியலுக்குள்ளும் காண்பதே.

பார்த்தல், வெளியேறுதல், இரண்டும் மா. அரங்கநாதன் கதைகளில் இடம் தொடர்புடைய உருக்கள். இவற்றிற்கும் சைவ நெறிக்கும் உள்ள தொடர்பை பார்த்தல், தெளிதல், அதுவாகவே ஆதல் என்பதோடுச் சேர்த்துப் பேசமுடியுமெனத் தோன்றுகிறது.

வெளியேறுதல் இடம்பெயர்தல் மட்டுமல்ல, இடத்தினால் நிலைபெற்றுவிட்ட பண்பாட்டில் நிலவும் மாறுதல்களும்தான். சிறுகதைகளில் கிராமங்களைப் பேசும் கதைகள் கோயிலின்றி இருப்பதில்லை. நகரங்களில் சினிமா, இரண்டுமே பார்த்தல்தான்.

பீதி கதையில் மாமியார் ஆக்ரமித்துக் கொண்ட வீட்டிலிருந்து தற்காலிக வெளியேற்றத்திற்கு முத்துக்கறுப்பன் பயன்படுத்தும் இடம் சினிமா அரங்கு. அசலம் கதையில் மருமகளிடமிருந்து கிடைக்கும் முணுமுணுப்பை மதிக்காத முத்துக்கறுப்பன் என்பது வயதில் இரண்டு மைல் நடையையும் பொருட்படுத்தாது அணுகும் இடம் ஆவுடையார் கோயில். நல்லது கெட்டது என்ற நோக்கில் அல்லாமல் அவ்வாறாகவே எடுத்துக்கொள்ளப்பட்டது. என சினிமாப் பார்த்தல் குறித்து சொல்லப்படுவது அது சினிமாவைப் பார்த்தல் தாண்டியும் பொருள் நீட்சி உடையதெனவும் கொள்ள இடமுண்டு. மெய்காணுதல் கூட ஏதாவது தோன்றாதோவென எதுவுமில்லாததைப் பார்த்தல் தான் (மெய்கண்டார் நிலையம், தாங்கல்)

கற்பதென்பதே பார்ப்பதுதான். பார்ப்பது படிப்பது போலத் தெரியும். ஒருவேளை பார்த்ததைத்தான் அந்தப்புத்தகத்தில் படிக்கிறார் போலும். (பக் 149) இந்தப் பார்த்தல்தான் மகத்தான ஜலதாரை கதையில் யானைகளின் களியாட்டைப் பார்த்த ஒரு கிழவன் பட்டினத்து சாமி கதையில் திருவையாற்றில் இரண்டு யானைகளைப் பார்த்து கண்டறியாதன கண்டேன் என்று அப்பராக வெளிப்படுகிறார். வெளியேறுதல் குறித்த சித்திரம் விடுபேறு கதையில் முத்துக்கறுப்பன் சொல்லும் எல்லாம் நல்லாத்தான் இருக்கு. எங்கே போனாலும் நல்லாவேயிருக்கும். எங்காவது போய் அப்படியே எங்க போனோம்னு தெரியாமலேயே போயி திரும்பி வராமலேயிருந்துட்டா இன்னும் நல்லாயிருக்கும் வாசகத்தில் கச்சிதமாகத் துலங்கும்.

ஒரு பார்வையில் வேதங்களைக் குறித்து ஒவ்வாமையை வெளிப்படுத்துவதாக ஒரு பிற்பகல் நேரம் கதையில் நடேச சாஸ்திரியைக் குறித்து வேதங்கள் காற்றிலிருந்து ஊக்கால் இழுக்கப்படுவதன் முன்னர், தென்னாட்டிலே மனிதனே கிடையாது என்ற நம்பிக்கையுடன் வாழ்பவர் எனவும் இன்னொரு கதையில் வேதம் என்பது கரியமிலவாயு எனவும் சொல்லப்பட்டிருக்கும். இது ஒரு வகையில் சைவத்திற்கு வெளியே வேதக் கலாச்சாரத்தை வைக்க மா. அரங்கநாதன் முயற்சித்துள்ளார் என்பது வரை யோசிக்க முடிகிற வாய்ப்பைத் தருகிறது.

சைவத்திற்கு அடுத்த அளவில் பேசப்பட்டிருக்கும் நெறிகள் கௌமாரம் மற்றும் அம்மன் வழிபாடு. தமிழ்ச்சமூகத்தின் ஆதிக்கடவுள் ஒரு இனக்குழுத் தலைவனான முருகன். முருக வழிபாடு இந்தச் சமூகத்தின் பழமைக்கு இன்னுமொரு சான்றாக விளங்குவது. வேதச் சாயலோ, பிராமணக் கலாச்சார பின்புலமோ இல்லாத கடவுள் என்றாலும் சைவத்தோடு கொண்டு சேர்த்ததும் நிகழவே செய்தது. கச்சிப்பேடு, செட்டி வளாகம் கதைகள் முருக வழிபாட்டை மையமாகக் கொண்டு கிட்டத்தட்ட முருகன் நிகழ்த்தும் அதிசயங்களின் கதைகளாக இருக்கின்றன. அதுவும் கச்சிப்பேட்டு முருகன் ஒரு முக்கோண உறவின் இழப்பையும், ஏமாற்றத்தையும் ஆற்றுப்படுத்த வந்தவன். செட்டி வளாகத்தில் மயில்வேறு முருகன் வேறாக இல்லாததுபோதல் விவாதிக்கப்படுகிறது.

மரங்கள், பறவைகள், வழிபாட்டோட தொடர்புடையவையாகவும் இருக்கின்றன. ரோபோ கதையில் வேப்ப மரத்தடியிலும், நாகமரத்தடியிலும் அமைியாக நின்ற தெய்வங்களைப் பேணுவோர் எத்தனை குடும்பங்களாக இருந்தனரோ அத்தனை மரத்தடி தெய்வங்களுமாக இருந்த இடங்களில் திரிசூலம் கதையின் டாக்டர் ஐராவதம், மரங்களையெல்லாம் காணல்லே. நீலமலையில் கூட காணமுடியல்லே. இந்த மரங்களையெல்லாம் எங்கே? எங்கே போச்சு? எனத் தேடுகிறார். தென்னை பல கதைகளில் பேசப்படுகிறது. பனை என்கிற தலைப்புடைய கதை பனைமரம் குறித்த பல்வேறு தோற்றங்களை நம்பிக்கைகளின் சாயல்களோடு குறியீடாக்குகிறது. மரங்கள் பல்லுயிர்க்கு மட்டுமின்றி பேய்களுக்கும் அவையே இருப்பிடம் (பாதைத் தருப்பத்தில் வேப்பமரம் நிற்பதால் மாலை நேரம் வந்துவிட்டால் ஆள் நடமாட்டமும் குறைவு (பக் 250) மரங்களும், பறவைகளும் இல்லாமல் மனிதன் உயிர்வாழ்ந்ததில்லை (செட்டி வளாகம்) எனச் சொல்லும் தாத்தாவிடம் இக்காலம் மரங்களையும், பறவைகளும் நீங்கிய இடங்களில் கான்கிரீட்டுகளால் பதிலளிக்கும். மரபும் அதனோடு நீங்கும்.

அனைத்தையும் சிவமாகவே பார்த்தல் என்பதே சைவத்தின் அடிநாதம் என்றால் உணவு கதையில் டீக்கடையை சந்தோசமாப் பாத்து அங்கேயிருக்க முடியலைன்ன இம்மலையை நான் ரொம்ப நிம்மதியாய் பாத்து எல்லாம் உண்மையா இருக்க முடியுமா. இருக்கிற நாலு சுவத்தைப் பார்க்க முடியாதவன் கைலாசத்தையா சரியாப் பாக்கமுடியம் என முத்துக்கறுப்பனிடம் சொல்லும்

பெரியவர் வழி மா. அரங்கநாதன் அதை சிறப்பாகவே சொல்லியிருக்கிறார்.

சாதியம்

பாரதியாரின் (பு.பி) கோபாலய்யங்காரின் மனைவி துவங்கி இன்றுவரையிலும் சமூகம் குறித்து எழுதுவதே தமிழில் சிறுகதை எழுதுபவர்களுக்கு பிரதானமாக சாதியம் குறித்து எழுதுதல்தான். முத்துக்கறுப்பன் என்பது தொகுப்பில் சாதி குறித்த கதைகளில் சிறப்பானவையாக சுட்ட முடிபவை.

1. அசலம்
2. மண்டேலாவை நேசிக்கிறேன்
3. மனத்துக்கண்
4. பெருநகர்த்தடம்
5. மீட்சி
6. மூடு

ஆவுடையப்பர் கோயிலில் இராமனோடு நடக்கும் உரையாடல் சைவமும், வைணவமும் சேரியில் இருத்தியிருக்கும் மக்களுக்கு நெடுங்காலமாகச் செய்ததென்ன என வினவுகிறது. அசலம் சாதிய அமைப்பில் தத்துவம் சக்தியற்றுப் போகும் இடத்தைப் பேசுகிறது. மூவாயிரம் வருசமா அன்பு சைந்துன்னு சொல்லிக்கிட்டு சொமை மொமைக்க பின்வாங்கினா நாகரீகம் என்னான்னு எனக்குத் தெரியலை என்கிற இராமன் இருக்கும் இடத்திற்கு (வைணவம்) ஆவுடையப்பர் வருவதில்லை (சைவம்) இருவரும் ஒரு நாளும் சேரிப்பக்கம் போனதில்லை. தத்துவங்களும், சித்தாந்தங்களும் படித்தாலும் ஜே.கே. புத்தகத்தில் மறைந்திருக்கும் செய்தித்தாள் துண்டில் அரிஜன சங்கத் தலைவரான தனது அப்பாவின் புகைப்படத்தைப் பார்த்ததும், அதற்கு முந்தின பத்தியில் டியர், டேக் மீ டு பெட் என்று சொல்லவும் தயாராகவிருந்த பெண், தன் மனத்தில் இன்னுமே சாதியம் ஒட்டியிருக்கிறதென்று மனத்துக்கண் பாசோடு வெளியேறுகிறாள்.

மீட்சியில் சிவாண்டி படும் அவமானம் தாங்காமல் கிராமத்திலிருந்து வெளியேறும் முத்துக்கறுப்பன் மனத்துக்கண் கதையில் அவரது மகனுடைய தத்துவப் புத்தகத்தில் செய்தித்தாள் புகைப்படமாக மாறியிருப்பது மா. அரங்கநாதன் கதைகளின் விசேஷங்களில் ஒன்று. ஒரு சிந்தனையின் அமைப்பின் தொடர்ச்சியை பல கதைகளுக்கு ஊடாக இழையவிடுவதன் மூலம் நாவல் வாசிக்கும் அனுபவத்தை சிறுகதை தொகுப்பில் ஏற்படுத்திவிடுகிறார்.

சாதி [illegible] எப்படி கிராமத்திலிருந்து நகரிய அமைப்பிலிருந்து வெளிநாட்டவர்களுக்கு சேர்கிறது. பெருநகரக்கட்டத்து முத்துக்கருப்பன் வெள்ளையாக இருந்தாலும் கறுப்பு இழிப்பறையாக. அவன் அருகில் இரவைக் கழித்து கொடுக்காட்ட செருப்புக்கை வழங்குகிறான். அவன் மனைவி செய்த பெண்ணிடம் முட்டு ஒரு நகை என்ன சாதியெனக் கேட்காமலேயே வாழ்ந்து வருகிறான். அவன் தெரிந்தெல்லா விருப்பாக போகக் கூடிய அவள் வாழ்ந்த சாதியென்று தெரிந்துவிடுகிறது. பாமனின் பெண்ணை முத்துக்கருப்பனை குலத்தில் கள்ளிவிடுகிறார். அவருடைய போன் காத்தான் தேடி வருகையில் பாமனின் அப்பா உடைக்கும் இக்கியத்தில் ஜைடுக ஜைவாவிட்டு வெளிநேரியே முத்துக்கருப்பனின் கதை பாமாகிறார் (கதை முடி)

கிரான் இயக்க அரசியல் சிக்காந்தப்படி சாதி ஒழிப்பை விரித்து (ஒருவகையில் சிக்கர்களுடைந்தும்) வருகி. பாரதி போன்றோர் சாதி வேற்றுமைகள் நீக்கிய ஒரு அமைப்பை மக்கள் பக்கத்திருக்கலாக உருவாக்க முனைந்தனர். மா. அரங்கநாதனின் கதைகளிலும் இவர்களின் கருத்தியல் போக்கோ சாதியம் குறித்த கேள்விக்கு விடையாகக் கிடைக்கிறது எனலாம். மேலும் தெரியாது மக்களின் மீதான அன்பே அக்கதைகள் பலவற்றிலும். அவர் மீது அன்பைச் செலுத்துவதே மாற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பேயவும் வலியுறுத்துவதாக கதைகளின் வழி அறிய முடிகிறது.

வரி மற்றும் ஒர் இணைப் கூட்டம் கதைகளில் திருவல்லிக்கேணி பகுதியில் வாழும் கதுர்க்கி ஒட்டு சேர்ந்த இந்துக்கள் மற்றும் முகம்மதியர்களுக்கு இடையிலான பகைமை தோசப்படுத்தும். அதிலும் குறிப்பாக வரி என்கிற கதையில் ஒவ்வ பெற்றவர் வீட்டு வரியாக வீழ்வும். சிக்கலைகள் என்றுமை குறித்து பீர்களை திருவல்லிக்கேணியில் அடையும் காழ்ச்சுகளின் மக்கள்வாங்கள் குறித்து மனவகாக எழுதப்பட்ட வரிகள் இவை. மா.அரங்கநாதன் கதைகளில் வெளிப்படுத்தும் அர்த்தங்களை விடவும் அவற்றின் உள்ளே ஒளிந்திருக்கும் விஷயங்களில் வெளிப்படையான அர்த்தங்களுக்கு வேறொரு காட்சிக்கோணத்தை உண்டாக்கிவிடுகிறார். இதுவரையில் வலியுறுத்தப்பட்ட சிறுகதை இலக்கணத்திற்கு ஒப்புமே இவை அமைகின்றன.

சினிமா

தமிழ்ச்சமூகம் தொழில் மயமாவதற்கு முன்னே சினிமாமயமாகிவிட்டது. மா. அரங்கநாதனின் முத்துக்கறுப்பன் - அதுவும் தமிழ்த் திரைப்படங்கள் அல்லாமல் ஹாலிவுட் மற்றும் பெர்க்மென் போன்றவர்களின் படங்களால் ஈர்க்கப்பட்டவன்.

அனுப்பு, மீதி ஆகிய கதைகள் சினிமாப் பார்த்தலை தப்பித்தலுக்கு உரிய விசயமாகப் பேசுவதோடு கதையின் காலத்தைக் குறிக்கவும் சினிமாவைப் பயன்படுத்துகிறார் மா. அரங்கநாதன் (வீடுபேறு). சினிமாக் கதாபாத்திரங்கள், கதைகள், அவற்றின் போக்குகளின் வழி சமூகத்தில் உருவாக்கப்படும் அறமதிப்பீடுகள் குறித்து ஆழமாகப் பேசும் கதை மாறுதல் முத்துக்கறுப்பனுக்கு சீட்டாட்டமும், குடிப்பழக்கமும் இல்லை அவன் பெற்றோரைக் காத்தல், பெரியோரை மதித்தல் போன்ற விழுமியங்களை சினிமாவிலிருந்தே உருவாக்கிக் கொள்கிறான். கல்வி பெறமுடியாதவர்களிடையே புத்தகங்கள் உருவாக்க முடியாத அறவுணர்ச்சிகளை, மதிப்பீடுகளை சினிமா உருவாக்கிவிடுகிறது என்பதற்கு இக்கதை உதாரணம்.

மர்லின் மன்றோ, கிரிகோரி பெக் போன்ற ஹாலிவுட் நடிகர்களும், பெர்க்மன் போன்ற இயக்குநர்களும் முத்துக்கறுப்பன்கள் மற்றும் பிறரின் சினிமாப் பார்த்தலை வடிவமைத்ததால் தமிழ்த்திரைப்படங்கள் குறித்த குறிப்புகள் ரஞ்சனோடும், பிறிதொரு கதையில் நடனமங்கையின் [illegible] விமர்சனத்தோடும் தமிழ் சினிமாவை நிராகரிக்கிற தொனியில் தெரிகின்றன.

கோவிலோடு தவிர்க்கமுடியாமல் ஆகிவிட்ட சினிமாவும் தமிழ்ச்சமூகத்தில் பெரும் ஆதிக்கத்தை செலுத்துகிறது. மா.அரங்கநாதன் அவரது கதைகளில் சினிமாவின் தாக்கத்தை தனித்துப் பேச வேண்டிய அளவில் எழுதிச் செல்கிறார்.

மேலும் சில கதைகள்

எண்பது கதைகளில் சிறுவர்கள் எவற்றில் எல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கே இருக்கும் இடத்தை விட்டு குடும்பங்களை விட்டு ஓடிப்போய் விடுகின்றனர். தொலைவிலுணர்தல், மீட்சி, பெருநகர்த்தடம் போன்ற கதைகளில் வெளியேறும் சிறுவர்கள் வழியாக கதைகள் நகர்கின்றன. வீட்டையும், குடும்பத்தையும் நீங்கும் சிறுவர்கள் பலகதைகளில் எழுதப்பட்டுள்ளது மா. அரங்கநாதன் கதைகளுக்கே உரிய Attributeகளில் ஒன்று. இடம் நீங்குதல் இங்கும் தனியாகக் குறிப்பிட வேண்டியதாகிறது.

மூன்றில் இதழின் இலக்கியப் பங்களிப்பு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

களிப்புகளில் ஈடுபடுகிறார். அதனுடைய புதுமைகளில் ஈடுபடுகிறார். விடுபடுவதற்கான ஒரு ஆர்வம் அங்கு ஒலிக்கிறது. பின் வரும் காலங்களில் அக்கறையான போதும். வன்மை பெற்றது புதிய கருத்தாக்கங்களை வெளிப்படுத்தவான நிறுவனம். அறிவியலின் மரபைப் கலைகளின் சாலு போலவே கருத்தாக்கங்களின் காலகட்டமாக பின்வரும். காலங்கள அமைத்ததை புதிய கருத்தாங்கள். ஒருவிதமான உருவாகியிருக்கிறது. அக்கருத்தாங்களைத் தொடர்ந்து வந்த இருப்புகளும், அக்காலகட்ட படைப்பாளிகளும். தங்கள நிலைப்பாடுகளை உறுதிப்படுத்தும் கொள்வதற்கான ஒரு வடிவம் அதன் பிரதிநிதியாக உருவானது.

தற்போது வருகிற இலக்கிய இதழ்கள் ஒரு நிச்சயமான stereo type வடிவத்துள் கட்டுக்குள் அடைபட்டுள்ளன. கொண்டுள்ள நிலையில் புதிய ஒரு நிச்சயமற்ற தேடலுக்கான விழைவை பிரதிபலிக்கிறது. பத்திரிகை இயக்கத்தின் போக்கு அதன் அறுவடைகள் இலக்கியத்தின் சந்திப்புக்கும், உரையாடலுக்குமான களமாக விளங்குகிறது.

சூரியகாந்தி சூரியனானது

சா. தேவதாஸ்

கவலையும் குழப்பத்தையும் சுமந்தாச்சு.
உங்க பாரந்தான் அது. நல்லது கெட்டது -
நாகரீகம் - அறிவு - மடத்தனம் அப்படியெல்லாம்
வெவ்வேறா சொல்லி ஏமாத்தியாச்சு. ஒலகத்து
நடவடிக்கைக்கு எல்லாரும் பொறுப்புத்தான்னு
யாருமே எடுத்துக்கல்லே.

-பக் 102/அசலம், சிறுகதையில்.

1986 தொடங்கி 2011 வரையிலான 25 ஆண்டுகளின் சேகரமாக முத்துக்கறுப்பன் என்பது சிறுகதைகளுடன் வெளியாகியிருக்கிறது. கதைகளின் பிரசுர வரலாறு 25 ஆண்டுகள் என்று கணித்தாலும், மா. அரங்கநாதனின் எழுத்து ஈடுபாடு 50 ஆண்டுகால வரலாற்றினை உடையது என்பதை அவரது கூற்றிலிருந்து அறியலாம். அக்கதைகள் சொல்லும் உலகத்திற்கு ஆயிரமாண்டுகள் இருக்கும் என்கிறார் தமிழவன்.

காஃப்கா போன்றவர்கள் செய்துள்ளபடி நாயகனின் பாத்திரங்களின் பெயர்களில் அவ்வளவாக கவனம் காட்டாமல் (அ) ஓரெழுத்துப் பெயர்களாக உள்ளவர்களைக் கொண்டு எடுத்துரைப்பு நிகழ்ந்துயிருக்கிறது. மா. அரங்கநாதன் கதைகளின் பிரதான பாத்திரம் முத்துக்கறுப்பன். மற்ற பாத்திரங்கள் நடராசன், தட்சணாமூர்த்தி என்பது போல. அவ்வளவுதான். பிரதான பாத்திரம் முத்துக்கறுப்பனாகவே அமைவதற்கு ஆழமான காரணங்களும் இருக்கலாம். ஒரு சில குணாதிசயங்களைக் கொண்ட ஒருவனை மையமாக வைத்துக் கதைகள் புனைவது இசைவாக இருந்திருக்கலாம். சுயசரிதத்தன்மையான விவரிப்புகளுக்கு இடந்தரலாம்.

முத்துக்கறுப்பன என்பவன் தென்தமிழகத்து நபர். சைவ வெள்ளாளர் சமூகத்தினன். அரசாங்க குமாஸ்தா. நடுத்தர குடும்பத்தினன். சென்னை வந்து குடியேறி வேலைப்பார்த்து ஓய்வு பெற்றவன். இடையே காஞ்சிபுரம், மதுரை போன்ற இடங்களில் வேலை. தேவாரம், திருவாசகம், திருக்குறள் என்றால் உயிர். இந்தப் பின்புலம் கொண்ட முத்துக்கறுப்பனைக் கொண்டுதான் அரங்கநாதனின் சிறுகதைகள் விவரிக்கப்படுகின்றன. முடிந்தவரை தனித்தமிழை வைத்து எடுத்துரைப்பை நிகழ்த்திட என்னும் உத்தேசம்.

ஒரு வகையில் இவை எழுத்தாளன் போட்டுக் கொள்ளும் தளைகள் / வரம்புகள்.

இந்தப் பின்னணியில் மட்டும் இயங்கும் கதைகள் தட்டையாகிப் போகின்றன. உப்புச்சப்பின்றி இருக்கின்றன. அமையாது உலகு, திருநீர்மலை, மௌனி என்னும் கதைகளைச் சுட்டிக்காட்டலாம். இதிலிருந்து விலகி, ஒரடி எடுத்து வைக்கும் கதையைச் சொல்லவேண்டுமானால் அது தாங்கல் அக்கதையில் வரும் ரிக்ஷாக்காரன் நல்லியல்பு வாய்ந்தவனாகவும் அபூர்வ நினைவுகளுக்கு இட்டுச் செல்பவனாகவும் இருப்பதுதான் இக்கதையின் வலு.

அரங்கநாதனின் கதைகளின் சிறப்பு, காலவாரியான மாறுதல் / வளர்ச்சி என்று பார்த்தால் அதில் தனிச்சிறப்பாக ஒன்றுமில்லை. சிறந்த கதைகளை ஆரம்ப கட்டத்திலேயே எழுதியிருக்கிறார். சாதாரண / தட்டையான கதைகள் பிற்காலத்திலும் இடம் பெறுகின்றன.

ஆக அவரது கதைகளின் சிறப்பு காலகட்டம் சார்ந்ததல்ல. இப்பின்புலத்தைக் கொண்டு விவரிக்கும் போது, இதனைத் தாண்டியதாக நீட்சிக் கொள்ளும்போதும் விரிவடையும் போதும் வளம் கொண்ட கதைகள் கிடைக்கின்றன.

மனோரதம் கதையில், ஏற்கனவே மணமாகிவிட்ட சுந்தரர், இன்னொரு பெண்ணை அடைவதற்கு சிவன் தந்திரங்கள் கற்றுக் கொடுத்துள்ளான் என்பதை உணரும் தருணத்தில் கதாகாலட்சேபம் செய்வதையே நிறுத்த முடிவு செய்துவிடுகிறார் ஒரு பிரசங்கியார். தலைமுறை தலைமுறையாக சைவமாக இருந்து வரும் ஒரு குடும்பத்தின் தந்தை, அசைவ ஈடுபாடுள்ள தன் மகனுக்கு இன்னொரு சைவக்குடும்பத்தில் மணமுடிக்க ஏற்பாடு செய்வது சரியாகுமா? என்னும் குழப்பம். அசைவம் ஒன்றும் பாவமில்லை. வேளாண்மைச் சமூகங்கள் ஏற்பட்ட பின்னரே சைவ உணவுப் பழக்க வழக்கங்கள். அதற்கு முன் வேட்டைச் சமூகத்தில் மனிதன் சர்வபட்சணி தானே என்னும் தெளிவு உண்டாகும் போது அத்திருமணத்திற்கு இசைகின்றார். இது விடுதலைப் போரில் அப்பரின் பங்கு கதையில்

மெய்கண்டபுரத்தின் நூலகத் திறப்பு விழாவில், காந்தியைப் பற்றிப் பேசுவான் என்று காந்திய வழியில் ஆதிதிராவிடர் மீது அக்கறை காட்டும் நபர்கள் எதிர்ப்பார்த்திருக்க, நான் நெல்சன் மண்டேலாவை நேசிக்கிறேன் என்று பிரகடனம் செய்து அதிர்ச்சியை உண்டுபண்ணிவிடுகிறான் சாம்பான். காந்தி வேண்டாம், மண்டேலா போதும் என்கிறாயா? என்று அவர்கள்

கேட்கவா போகுது. இப்போ இன்னாருக்குக் காப்புறு பிரேமாக்குமாரை நக எல்லாருக்கும் கல்வி பகவின் அடையாள அடைவது சொல்ற ஒரு ஆலோசனை கூட எனக்குப் புரியுது புரிந்ததைச் சொல்வேன் என்கிறான்.

இரு காப்பியான முனைந்தவை மனைப் பலவை பெரிக்கிறேன் கலையில் இட... இருக்க... நோக்கிய மனைப் அகலம் கலையில் சொல்லப்படுகிறது. காலில் கால இராமன் முக்குக்குறுப்புடன் உரையாடல் நிகழ்த்துகிறான். கைகட்டாயில் வந்த முக்குக்குறுப்பன் உரையாக சில நட்டங்களை வைகைக்கின் இராமன் எடுத்துரைப்பதாகவும் இது அமைந்திருக்கிறது. புதுமைப்பித்தன் கொள்கையில் உள்ள இக்கதை நகரிலேயே பிரவேசிக்குச் செல்லும் நாகரீகத்தினை எப்படி வாசித்திருக்கவேண்டும் என்று காட்டிக்காட்டுகிறது.

இப்படி மாதிரி அந்தக் குறிப்புக்களைப் பார்த்து பரிசோதிப்பது மட்டுமாக. சொல்லப்போனா நாகரீகம் - நாகரீகம்னு சொல்றோமே அது இதுதான். நீங்க கண்டு கொள்கிறதா கதைக்கிறோம். அது யாராலும் உண்டாக்கப்படலே. எல்லாருக்கும், எல்லாரும் தான் காரணம். மூவாயிரம் வருசமா அன்புதான் சொத்துன்னு சொல்லிட்டு சொந்த சொமக்க பின்வாங்கினா நாகரீகம் என்னான்னு எனக்குத் தெரியலே.

கன்னியாகுமரியிலிருந்து கிளம்பி வரும் பேருந்து உவரி என்னும் ஊரில் சிறிய விபத்தால் நின்றுவிடுகிறது. உட்பகங்களும் ஒரு கோவிலும் உள்ள அந்த ஊர் டையிலில் இட்டம் பெறும் கரை துறைமுகமாக இருந்திருக்க முடியும் என்று சயானங்கள் என்னும் பாதிரியார் சொல்கிறார். பேருந்தில் வந்தவர்கள் பேருந்து - விபத்து - தாமதம் என்று உலகியல் கவலைகளில் மனதைச் செலுத்த, பக்கத்திலிருப்பவர்களின் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கடற்கரையை நோக்கி செல்கிறான் முக்குக்குறுப்பன். கடலில் தன் கவனத்தை முக்குக்குறுப்பன் பதிக்க, குழந்தையோ தொலைவில் தென்படும் பெற்றோர் உருவங்களைக் கண்டு குதிப்பட்டம் போடுகிறது.

சாலமன் என்ன - அவன் முப்பாட்டன் காலத்திற்கு முன்போ இந்த இடத்திற்கு வா எல்லாரும் விரும்பிக்கொண் இருப்பார்கள் என்று ஓர் எண்ணம் அவனிடம் தோன்றியது.

கணப்பொழுதில் அந்த சூழல் மாறிவிடுகிறது. இந்த மாற்றத்திற்கான வித்து எது? அது அக்குழந்தையாயிருக்கலாம். அக்கடலின் அலையாயிருக்கலாம். அவர்களுக்கு முன்னிருந்த சாலமனாகவும் இருக்கலாம். அத்தகைய தருணங்களை வாசேர்க்க பெற்றுக்கொள்ள மனிதன் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

அப்பே - நாராயணன் கதையில் வரும் அந்த பார்வையில் கம்பளிப் பூச்சும், மனைக்கட்டில் பிடிபட்டிருந்து தப்ப முடியாமல், தடே சரணமென கிடக்கிறான் முத்துக்கறுப்பனை

பல ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போன அப்பாவின் குரல் கேட்டு, வருத்தம் முத்துக்கறுப்பன் மருத்துவ ஆலோசனைக்கு வருகிறான். அகாலமரணமடைந்த தந்தையின் நினைவாக அவன் மனநிலை சிதைந்தில் இவை சிகிச்சை தரும் மருத்துவர், ஒரு தடவையும் பார்க்குமாறு அனுப்பி வைக்கிறார். மனம் இல்லாமல் போனதுதான் இருந்திய மருத்து என்றுணர்ந்து இதனை சில ஆவணிகளாகில் செய்ய முடிந்துள்ளது என்று காட்டிக்காட்டுவதாயிருக்கிறது. இம்மருத்துவரின் ஆலோசனை (இராப்பன்னர்)

வெற்றோரு கதையில் இன்னொரு விதமான குறிப்பு. சில காரியங்கள் நினைவை நீக்கு மென்றால் அது மகோன்னதமானது தான். கடவுள் இருந்த பாற்றாலால், அந்த நம்பிக்கை இருந்துவிட்டுப் போகட்டுமே. (திரிசூலம்)

சொந்தத்தில் ஒருவரது ஆயுள் முடிவது கணிக்கப்படுகிறது. சிலருக்கு உள்ளுணர்வு ரீதியில் மரணத்தின் அருகாமை / அண்மை புரிந்துவிடுகிறது. எல்லோருக்கும் கிடைக்காது. அது அந்தரத்தக்கதாகவே பொதுவாக பார்க்கப்படும். ஆனால் முதிர்ந்த காடு வில் குறிப்பிடப்படும் மரணம் பரிபூரணமடைந்ததாக, பரிசுத்தமானதாக அமைதி நிறைந்ததாக இருக்கிறது. நினைவை இழந்து, தன் பெயரே மறந்துவிட்டாலும், மறக்கவே கொள்ளாத காட்சி. காட்சியும் அல்ல அது - ஒரு வெளி - வெளிச்சமான நிலை. அப்போது சாயும் இல்லை, எதுவும் இல்லை. துன்பமும், வெறுப்பும் அழுக்காறும் அச்சமுமில்லாத ஒர் இருத்தலில் எத்தனை நேரமோ - அதுவும் மறந்தாயிற்று. விழிப்பு ஏற்பட்ட கண முதல் நினைவுள்ளதெல்லாம் கேட்ட ஒலி மட்டும்தான். அல்லது கண்ட ஞானம் என்று கூறுதல் சரியாமோ - போ - முதிர்ந்த ஒரு வேலரின் நிறைவு பெறு - கழல்தொட்டம் - திங்கள் - முன்பனியில் நிற்க - எரித்த பல்நூறு விலங்குகள் அடையும் சாந்தி. விண்ணின் ஒலி - ஓசை - சத்தம் - ஜப்பம் - எல்லாம் ஆக.

அமெரிக்கப் பெண்ணை மணந்து அங்கேயே வாழ்ந்து வரும் பாலகிருஷ்ணன் தன் தாய் தற்கொலை செய்து கொண்ட அறையை பார்க்கும் பொருட்டு இந்தியா வருகிறார் மனைவியுடன். வயதான பெண்களுக்கு உதவ முற்பட்டு காலில் அடிப்பட்டவர் அவர் மனைவி.

அவர் பார்க்க வரும் அறையுள்ள வீட்டு உரிமையாளரான முத்துக்கறுப்பனின் அப்பா, ஒரு நாள் திருச்செந்தூர் சென்றவர்

திரும்பி வரவில்லை. முத்துக்கறுப்பனின் மகன் ஒரு சமயம் விரக்தியில் தற்கொலை செய்து கொண்டான். இருவரும் பழைய சம்பவங்களை ஞாபகப்படுத்திப் பேசிக்கொள்ளும் போது பால்யப் நிறைய புகல்கள் வருகின்றன. இறுதியில் அந்த அறையைப் பார்க்க வேண்டிய அவசியத்தை உணராததால், பார்க்காமலேயே கிளம்பி விடுகிறார் பாலகிருஷ்ணன் நிறைவுடன்.

எந்த வகையான வருத்தமும் இல்லாது எந்த மாதிரியான கொள்கையைப் பின்பற்றியுமில்லாது அமைபலைகள் மௌனத்தில்தான் முடியும் போதும் என்று ஒரு வாசகம் இக்கதையில் வருகின்றது.

இந்தியா வரும் பாலகிருஷ்ணன் முதலில் திண்டிவனம் சென்று பழைய நினைவுகளை மீட்டிப் பார்க்கிறார். தன் மடியில் உயிர்விட்ட தந்தை, குளத்தில் மூழ்கிப்போன நண்பன் ஆகியோர் தொடர்பான ஞாபகங்கள் அவை. அதன் பின்னர்தான் முத்துக்கறுப்பனின் வீட்டிலுள்ள அறைக்கு அவர் வருவது.

இதற்கிடையே முத்துக்கறுப்பனின் வீட்டின் எதிரில் உள்ள ஒரு கடைக்கு வந்து பழிக்கிடையாய் கிடக்கும் ஒரு பிச்சைக்காரி. வெட்டவெளி மைதானத்தில் நான்கு கள்ளிப் பெட்டிகளையே வீடாகக் கொண்டு உடை மாற்றும் பெண் - என இவர்கள் பார்வையில் காட்சிகள் பதிகின்றன.

முத்துக்கறுப்பனின் காணாது போன அப்பா ஒரு முறை குறிப்பிட்டிருந்தார். எல்லாம் நல்லாத்தான் இருக்கு. எங்க போனாலும் நல்லாவேயிருக்கும். எங்காவது போய், அப்படியே எங்க போனோம்னு தெரியாமலேயே போயி திரும்பி வராமலேயிருந்துட்டா இன்னும் நல்லாயிருக்கும் (விடுபேறு)

ஜேம்ஸ் பீன் என்னும் அமெரிக்க நடிகருக்கு செல்வாக்கின் உச்சத்தில் படங்களில் நடிக்க ஆர்வமில்லாது போய்விடுகிறது. சதா நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர் அவர். இந்த ஜேம்ஸ் டீன் வானவெளியில் மிதந்து கொண்டிருக்கிற மனிதன். இனி நடிக்க வேண்டியது கிடையாது.

பூசலார் கதையில் நடக்கவிருந்த திருமணம் நின்று போய்விட்ட பின்னும், திருமணம் நடந்து விட்டதாக பொய் சொல்லி, வாடகை வீடும் அமர்த்தி, அலுவலகம் சென்று வருகின்றான் முத்துக்கறுப்பன். தற்செயலாக வரும் இடமாறுதல் ஆணை அவனது பிரச்சனைகளுக்கு தீர்வாகிவிடுகிறது. ஆனால் அவன் பொய் சொன்னதிலும் உள்நோக்கம் இல்லை. விஷயங்களை அவற்றின் போக்கில் அணுகிவிடுபவன் அவன்.

சைவ அடையாளத்துடன், தமிழ் நாட்டு மரபிலிருந்து உருவாகி, தமிழ்ச் சிந்தனையில் ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஜென்

அணுகுமுறை போன்றவற்றின் தாக்கங்களை ஏற்று, ஆரோக்கியமற்றவற்றை விலக்கி, சீரியதை மட்டும் துலங்கச் செய்துள்ள ஒரு வாழ்க்கை முறையை அரங்கநாதன் முன்வைக்கின்றார் என்று சொல்லலாம். ஆக, மரபின் அடையாளங்கள் அழிக்கப்பட்டுவிடுகின்றன. விடுதலைப் போரில் அப்பரின் பங்கு கதையில் சைவர் என்று கூடக் குறிப்பிடாமல் காய்கறி உணவுபாதி எனப்படுவதை ஒரு குறிப்பாகச் சுட்டலாம்.

எழுதுதல் என்கிற வினை எழுத்தாளனின் நான் என்ற சுயத்துக்கும் வார்த்தைக்கும் இடையிலான பிணைப்பைத் துண்டித்துவிடுகின்றன. இதனால் எழுத்தாளன் மற்றவர்கள் பேசாத ஒரு மொழியைப் பேச வேண்டியதாகிறது. அந்த மொழி யாரையும் நோக்கியதல்ல. அது எதையும் வெளிப்படுத்திக் காட்டுவதுமில்லை. அது படைப்பாளியானவன் தன்னை தனது அடையாளத்தைத் தொடர்ந்து அழித்துக் கொள்ளும் செயல்பாட்டின் விளைபொருளாகத் தோற்றம் கொள்வது.

சைவ உணவால் கொள்ளும் அகங்காரம், சிவனை வணங்குவதால் உண்டாகும் உபருமை சமூகப்படித்தரத்தில் உள்ள உயர்வு என்றெல்லாம் முகமூடிகளை மாட்டிக் கொள்ளும் மரபிலிருந்து வரும் முத்துக்கறுப்பன், பனையுடனும் நட்சத்திரங்களுடனும் செம்பருத்திப் பூக்களுடனும் அடையாளப்படுத்தியும், பிற சிந்தனைப் போக்குகளை ஆன்மீகத் தேடல்களை அணுகியும், ஜே. கிருஷ்ணமூர்த்தியின் விழிப்புணர்வு, புரிந்துணர்வு தத்துவத்தைக் கேட்டும், ஸென் பௌத்த முறையுடன் உரையாடக் கூடியவனாக உருவாகிவிடுகின்றான். அதனால்தான் வாய்மூடி மௌனியாகும் அளவுக்குப் போய்விடுகிறான். தாழ்த்தப்பட்டவர் பால் வெறுமனே கரிசனம் கொண்டால் போதாது என்று அதிருப்தியடைகிறான். ஓட்டப்பந்தயத்தில் சாதனை புரிந்து பதக்கம் பெறுவதல்ல, ஓடிக்களைப்பதுதான் நோக்கம் என்கிறான், இலக்கு முக்கியமல்ல பயணமே முக்கியம் என்கிறான்.

உலகியல் சூழலுக்குள் இருந்தபடியே ஆன்மீகத் தளங்களில் உலவக்கூடிய அபூர்வமான பக்குவம் நிரம்பிய ஒரு வாழ்வு முறையைப் பதிவு செய்துள்ள மாபெரும் கலைஞராக அரங்கநாதன் உயர்ந்து நிற்கிறார். இந்தப் பெருங்கனவை நனவாக்குவதில் உத்திரீதியாக எந்த அக்கறையும் கொள்ளாததுதான் சில கதைகள் கூடிவராமல் போய்விடக் காரணமாகின்றன.

சிறுகதைகள்தான் எழுத முற்பட்டார். தமிழனின் வாழ்க்கை முறையை சிந்தனை வளத்தை ஆன்மீக நட்பைப் பதிவாக்கும் பனுவலைத் தந்திருக்கிறார். சிரிக்கும் சூரிய

காந்தியைத் தீட்ட முற்பட்டவன், தகிக்கும் சூரியனை தீட்டிவிட்டது போல.

தமிழரது நாகரிகத்தின் மிகச்சிறந்த மலர்ச்சியாக நடராஜர் சிற்பத்தைக் குறிப்பிடுவதுண்டு. புதுமைப்பித்தன், அல்ஃபோன்ஸா உள்ளிட்ட ஆளுமைகள் வரை இப்படிமத்தைப் போற்றியுள்ளனர். தனது கோட்டுருவங்களில் நடராஜனைத் தீட்டிக்காட்ட முற்படும் தன்ராஜ் பகத், ஒரு மனித உருவம் இரத்தமும் சதையுமான உருவில் பூமியிலிருந்து நடனமாடுவதினையும் தவிர்த்து, முற்றிலும் அருபநிலையில் இசையின் பிரவாகத்தை முன்வைப்பதாக நடனத்தின் அழகினைக் கற்பிப்பதாகச் செய்துவிடுவார். அதுபோலவே சிதார் இசைக்கும் கலைஞரைத் தீட்டும் போது சிதாரும் கலைஞனும் இல்லாது போய் இசை மட்டுமே பெருகி ஓடுவதை கற்பித்துவிடுவார். அசைவு - இயக்கம், சமிக்ஞை - பாய்ச்சல் என்பவற்றை ஆற்றல்மிக்க கோடுகள் தொட்டிக்காட்டிவிடும்.

விவரணங்களை விட்டுவிட்டு, கதைப் பின்னலைத் தவிர்த்து விட்டு, சில சந்தர்ப்பங்களை மட்டும் உருவாக்கி ஆளுமைகள் மோதி முரண்படுவதையும், அணுகுமுறைகளில் உள்ள பலவீனங்களும் முரண்பாடுகளும் பரிசீலிக்கப்படுவதையே நோக்கமாகக் கொண்டு அரங்கநாதன் சாதித்துள்ளவையே இக்கதைகள்.

இந்த எண்பது கதைகளில் பூசலார், தரிசனம், அசலம், வீடுபேறு, முதற்தீ எரிந்த காடு, ஜேம்ஸ் டீனும் செண்பகராமன் புதூர்காரரும் என்னும் ஆறுகதைகளை உலக இலக்கியத்திற்கு அரங்கநாதன் வழங்கியுள்ள கொடைகளாகக் கொண்டாடலாம்.

ஆதாரங்கள்

1. படைப்பின் தனிமை : புதுமைப்பித்தன் சிறுகதைகள் பற்றி சில குறிப்புகள் / ரவிக்குமார் / தமிழரசு இலக்கிய மலர் 1997.

2. **Dhanraj Bhagat / Charles Fabri / Lalit Kala Akademi, 1964**

மனோமோகன் கவிதைகள்

பெருநகரம் பல்லிகளுக்கானது

ஜூராசிக் பார்க் படத்திற்கு
தொண்ணூற்று மூன்றாம் முறை நீயழைத்து
நான் மறுதலித்த பிற்பகலில்
பல்லியாக மாறும் உனது விருப்பத்தைச் சொன்னாய்
இந்த நகரில் எந்த விலங்கை விடவும் பல்லிகள் அதிகம்
பெருநகரம் பல்லிகளுக்கானது
என்னை அச்சுறுத்தும் கொடூரமான வனவிலங்கு
பல்லிதான் தெரியுமா
தியான புத்தனென நடிக்கும் அதுவொரு
ஈவிரக்கமற்ற வேட்டையாடி
ஸ்டீபன் ஸ்பீல்பெர்க்கிடமிருந்து தப்பித்த
பெரிய உருவம் கொண்ட அமெரிக்கப் பல்லிகள் சில
உலகின் பெரும்பகுதியை ஏற்கனவே விழுங்கிவிட்டிருந்தன
இப்பொழுது நீயும் பல்லியாகிவிட்டாய்
கரப்பான் பூச்சியின் குடல் கறியை ருசிக்கப் பழகிவிட்டாய்
வெகுநேர வசியப் பார்வைக்குப் பிறகே வேட்டையாடுகிறாய்
அதிருக்கட்டும்
இரண்டு மணிநேரமாக என்னை ஏன்
வெறித்துக் கொண்டிருக்கிறாய்
என்னைக் கொல்வது மிக எளிது
அதற்கென ஒரேயொரு சொல்லும்
கொஞ்சம் ஏளனமும் போதுமானது
நல்லவேளையாக சுவரில் ஒட்டப்பட்ட
பிளாஸ்டிக் பட்டாம்பூச்சி ஏற்கனவே பறந்துவிட்டது

சிறுநீர் கழித்தல்

துயரமென்பது வேறொன்றுமில்லை
அதுவொரு பீர் பாட்டில் அவ்வளவுதான்
நாவில் கசப்பேற அதைப் பருக நேரும்போது
இரண்டுமுறை சிறுநீர் கழிப்பது நல்லதென
கிளிப்பாணி ஜோதிடன் சொல்லியிருந்தான்
சிறுநீர் கழித்ததற்காக பதிமூன்று லட்சத்து முப்பத்து
ஒராயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்திரண்டாவது முறையாக
நீ என்னைக் கடிந்து கொண்டபோது
உன்னைக் கொல்ல வழியறியாது துயருற்றேன்
என் ஆகச்சிறந்த துயரம் நீதான் தெரியுமா
அதனால்தான் உன்னை முத்தமிட்டு இதழ் பருகும்
ஒவ்வொரு தடவையும் சிறுநீர் கழிக்கிறேன்
துயருறும் போது வாடிக்கையாகிவிடுகிறது
நீ கவிதை எழுதுவதும் நான் சிறுநீர் கழிப்பதும்
இரண்டிற்கும் பெரிதாய் வேறுபாடில்லை
துயர்மிகு வரிகளை இன்றிரவு நீ எழுது*
உனது புலம்பலை ஊறுகாயாகத் தொட்டுக் கொண்டு
இரண்டு பாட்டில் பீர் குடிக்கிறேன்
அப்படியே நான்கு முறை சிறுநீர் கழிக்கிறேன்
துயருறும் பொழுதில் கவிதை எழுதுவதை விடவும்
ஆகச்சிறந்த வழி சிறுநீர் கழிப்பது
பேருந்தின் நெடும்பயணத்தில் மூத்திரப்பை கணக்கையில்
சிறுநீர் கழிப்பதே கூட துயரமாகிவிடுகிறது
அப்பொழுது மட்டும் என்மீதே சிறுநீர் கழிப்பேன்.

* நெரூடாவிடமிருந்து எடுத்தாளப்பட்டது

நிராயுதபாணிகளின் கூட்டுக் கனவு

மின்கம்பி அறுந்து கிடக்கும்
மழை இரவின் கனவு இது

மாட்டின் மண்டை ஓடுகளாலான
மாலையணிந்த பனையுயர சூன்யக்காரி
குனிந்து மந்திரவாதியின் தலையில் முளைத்த
எலுமிச்சைகளைப் பறித்துக் கொண்டிருக்கிறாள்
அவளது கூடை நிறைய மஞ்சள் நிற சாபங்கள்

அவளைச் சுற்றிலும்
அகதிகளின் கூடாரங்கள்
அவற்றுள் நீ நான்
மற்றும் நம் நிழல்கள்

தப்பிக்க சாத்தியமில்லை
நாம் சபிக்கப்பட்டவர்கள்
நம்மைச் சுற்றி வளைத்த நீர்வெளி
நீந்தித் தப்பிக்கும் திட்டம்
வெகுசிலருக்கே இருக்கிறது

ஆழத்தில் திரியும் முதலைகள்
நாள் கணக்கில் பசியாறாத முதலைகள்
எப்படியும் தப்பித்தாக வேண்டும்
இந்த மழை இரவு நீண்டுகொண்டேயிருக்கிறது.

பீர்பாட்டில்

உனது ஆளுமைக்குட்பட்ட
அகதி முகாமொன்றில்
அடைமாக்கப்பட்ட நான்
இருவரை
திறக்கப்படாத பீர் பாட்டிலை
அமைதியாயிருந்தேன்

ஒருமொரு பாணன் நான்
இப்பொழுது என் முறை
எனது முகாமைப் பாடலின்
முதல் வரியைத் தொடங்குகிறேன்

கவனமாகத் திறக்கப்படும்
பீர் பாட்டிலை எனது கபாலம் பிளந்து
மூளைக்குள் ஒரு கண்ணாடி டம்ளரில்
ஊற்றிக் குடிக்கிறாய்

இதற்குமேல் நான் செய்ய
என்ன இருக்கிறது
எனது மரணம் உனது போதை.

நிலா ஊறுகாய்

மின் விளக்கிலிருந்து வழியும்
ஒளியின் கடைசிச் சொட்டு வரை
மதுக் கோப்பையில் ஊற்றியபடியே
உனக்கென்ன வேண்டுமென்கிறேன்
ஒரு டம்ளர் இரவும்
தொட்டுக்கொள்ள நிலவுமென்கிறாய்
என்னிடமிருந்த
ஒளி நிறைந்த கோப்பையை
கவிழ்த்து வைத்துவிட்டு
இரவையும் நிலவையும் கலக்கிறோம்
சரிந்துகொண்டேயிருக்கிறது
இந்த இரவு

நம்பமுடியாததுபோலும் கூட
அது அப்படித்தான் நடந்தது
அப்பழுக்கற்ற உனது வெள்ளங்கியின் மீது
குருதியின் சரம் பரவிக் கொண்டிருந்தது
சற்றுமுன் கூடப்பாட்டுத் தோட்டமா
இடதுபுற மார்பில் சற்று மேலே
சரியாக மார்புக் காம்பின் மேலே பட்டிருக்க வேண்டும்
முடிப்பதாவது விளையாடிப் போ உனது உயிர் பிரிந்தது
கட்டவனுக்கு அசலாக எனது முகம்
ஆனாலும் அது நானில்லை
என்பதை எப்படி உன்னிடம் சொல்வது
அதுவும் இறந்துவிட்ட உன்னிடம்
இனி அந்த சிலுவைக்கு
நீ உபயோகப்பட மாட்டாய்
அந்த ஆணிகளுக்கும் கூடத்தான்
கொண்டு வந்த சிலுவையையும் ஆணியையும்
திரும்ப எடுத்துப் போவதில்
சரத் பொன்சேகாவுக்கு உடன்பாடில்லை
கிடத்தப்பட்ட சிலுவையில்
உனக்குப் பதிலாக என்னைக் கிடத்தினான்
ஆணியடித்து நிமிர்த்தப்பட்ட எனக்கு
அசலாக உனது முகம்

மாட்டுக்கால் சூப்பும் மந்திரப் புன்னகையும்

ஆட்டுக்கால் சூப் எனக்கு மிகவும் பிடிக்கும்
இரவு உணவுக்கு ஒரு மணிநேரம் முன்
தினம் ஒரு சூப் சாப்பிடுவது வழக்கம்
மாலையா இரவா என சொல்லத் தெரியவில்லை
சலீம் பாய் கடைக்குள் நுழைகிறேன்
கூட்டமில்லாத நேரம்
கடையில் என்னைத் தவிர
நீ மட்டுமே அமர்ந்திருக்கிறாய்
சூடாக ஒரு சூப் வாங்குகிறேன்
சூடாக அருந்தும் சூப் தான் அதீத சுவை
ஆனாலும் இது அதிக சூடு
கொஞ்சம் ஆறட்டுமென்று மேசை மீது வைக்கிறேன்
அதற்குள் பால்கோவாவின் பதத்தில் வேகவைக்கப்பட்ட கால்
சூப் கிண்ணத்திலிருந்து குதித்து ஓட ஆரம்பிக்கிறது
ஏமாற்றத்தோடு உன்னைப் பார்க்கிறேன்
நீயும் ஒரு ஆட்டுக்காலை ஓடவிட்டிருக்கிறாய்
உனது ஆட்டுக்கால் ஓடுவது முதல் முறையல்ல என்கிறாய்
எனக்கு இதுதான் முதல்முறை
முப்பது ரூபாய் சூப்பைத் தவறவிட்டிருக்கிறேன்
அதே சமயம் இது பார்த்தறியாத அதிசயம்
இப்பொழுது எனது முகம் லியனார்டோ டாவின்சியின்
ஓவியப் பெண்களில் ஒருத்தியைப் போல இருக்க வேண்டும்
மாட்டுக்கால் சூப் சாப்பிடலாமா என்கிறாய்
புதுச்சேரியை ஒட்டியுள்ள அரிக்க மேட்டில்
சங்கராபரணி ஆற்றங்கரையோரமாக
ஒரேயொரு மாட்டுக்கால் சூப் கடையிருக்கிறது
இதுவரை நான் அங்கு சென்றதில்லை
எனது மோட்டார் சைக்கிளிலேயே இருவருமாய்ப் போகிறோம்
சீர்வரிசைத் தட்டின் அகலமுள்ள
கிண்ணத்தில் சூப் பரிமாறுகிறார்கள்
ஒரு சூப் பத்து பேருக்கானது
ஐம்பது ரூபாய் விலையில் மூங்கில் கழியென மாட்டுக்கால்
அதன் மணிக்கட்டிற்கு கீழே குளம்பு வெட்டப்பட்டிருக்கிறது
ஏனென்று கேட்கிறேன்
அந்தக் கடையில் அது வாடிக்கை என்கிறாய்
சூப்புக்குள் இருந்து ஜீராவில் ஊறிய க்ளோப் ஜாமின் பதத்தில்
நகம் பிடுக்கப்படாத
கட்டை விரலொன்றை எடுக்கிறேன்
இதுவும் வாடிக்கை தான் என்கிறாய்
உனது புன்னகையில் ஏதோ மர்மமிருக்கிறது

எனக்கும் உனக்கும் குறுக்கே பாயும் நதியில் கால்நனைத்தபடி மீன்களை நோட்டமிடுகிறேன். பன்னிரெண்டங்குல நீளமுடைய எனது அலகால் உறுமீன்களை மட்டுமே கவ்வ முடியும். நெட்டிமுறித்துத திமிறும் அவை எப்படியும் தப்பித்துவிடுகின்றன. அலகிடுக்கில் புகுந்து ஓடிவிடுகின்றன சிறுமீன்கள்.

முள் உறுத்தாத பொரித்த சிறுமீன் உனக்கு மிகவும் பிடிக்கும். அதனால் எனக்கும் பிடிக்கும். சிறுமீன்களென நினைத்துப் பாலித்தீன் பைநிறைய தலைப்பிரட்டைகளோடு உன்னைச் சந்தித்த காலம் ஞாபகமிருக்கிறதா? நீ மறந்திருப்பாய். உனது முதல் வெட்கத்தை. எனது முதல் முத்தத்தை நமது முதல் கூட்டுக் கனவை. எல்லாவற்றையும் மறந்திருப்பாய் நீ செய்த ஒரே ஒரு கொலையைத் தவிர. அந்த இரவில் நீயும் கொல்லப்பட்டிருந்தாய். உல்லாசச் சுற்றுலாவின் முடிவில் கவியும் வெறுமை நமது பிரிவிலும் இருக்கிறது.

மனநல மருத்தவரின் கனவில் ஏற்கனவே நான் கொல்லப்பட்டிருந்தேன். நீ கொல்வது இரண்டாவது முறை. இந்த முறை என்னை எரிப்பதென பேசிக்கொள்கிறார்கள். உன்னைப் புதைத்துவிடலாம். சவப்பெட்டியில் ஆணியடிக்க வேண்டாம். மூச்சு முட்டும்போது வெளியே வா. கண்ணாடி சவப்பெட்டிக்குள் நீந்தும் மீன்கள் நாம். கவ்வும் அலகுகளும் நாமே.

புத்தனின் சிரசில் ஊற்றெடுத்து விளைநிலங்களுக்குக் குறுக்கே பாய்கிறது பேராறு. சாம் தளும்பும் தம்மப் பேராறு. அதன் கரையில் நண்டின் உருவில் நாகார்ஜுனன். சிலுவையில் தொங்கிய புத்தனின் நெற்றியிலிருந்து பிடுங்கப்பட்ட ஆணி அவன் கையிலிருக்கிறது. அதை அரைக்கோள வடிவில் வளைத்து மழுங்கிய சுரில் சாணைப் பிடிக்கிறான். தனது முப்புரிநூலின் ஒரு முனையை அந்த ஆணியில் பிணைத்து மறு முனையைச் சரிக்கப்பட்ட பனை மரத்தில் கட்டுகிறான். ஆணிக்குக் கொஞ்சம் தள்ளி ஒரு ஓலைச்சுவடியை முடிச்சிடுகிறான். இப்பொழுது அது சுவடியல்ல. தக்கை, நீங்கள் நினைப்பதுபோல் அவன் செய்வது தூண்டில்தான்.

தூண்டிலிட்டு உறுமீன்களைப் பிடிப்பதல்ல அவனது ஆசை. ஓடும் நதிமொத்தத்தையும் பிடிப்பது, தலையில் அடித்துக்கொல்லப்பட்ட இளம் பன்றியின் கறியைப் போல் நதியைச் சமைத்துச் சாப்பிடுவது. ஆசை விபரீதமானது. அதன் விந்தனைச் சுவைத்து சூள்கொள்கிறது துயரம்.

தூண்டிலிட்டவனின் நெடிய காத்திருப்பு அத்தனையும் பாழாகிவிடுகிறது. நூறுநூறு ஆண்டுகளாகக் கழிந்தும் தக்கையில் அசைவில்லை. தாளாத ஏமாற்றம். ஒன்றுதான் நதியைக் கொல்லவேண்டும் இல்லையேல் நதி தன்னைக் கொல்லவேண்டும் என்று சொல்லியபடியே நதியில் குதிக்கிறான்.

மைத்ரியாறு மரணத்திற்கானதா என்ன, அது ஓடும் ஜீவநதி. பிணத்தைக்கூட வாழ்தலின் இயங்கு விதிகளுக்குள் பிணைத்து ஓட வைக்கும் நதி. விரக்தியில் கரை திரும்பி ஒரு குவளை நதியைத் தனது கமண்டலத்தில் பிடித்துக் கொண்டு வீடு திரும்புகிறான். ஒரு மிடறுதான் இருக்கும் அது. இருக்கட்டுமே, அதுவும் நதிதான்.

அவனது குளிர்ச்சாதனப் பெட்டியில் உயர்குடிகளுக்கான நாட்பட்ட மதுவும் குடைமிளகாய் வெங்காயம் போட்டு செந்நிறத்தில் வறுக்கப்பட்ட புத்தனின் கறியும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. தம்மத்தில் மதுவை ஊற்றி சித்தார்த்தனின் கறியைத் தொட்டுக் கொண்டு குடித்து முடிக்கிறான் நாகார்ஜுனன். முடிவில் கமண்டலத்தின் கடைசிச் சொட்டு நதியும் மிச்சமில்லை புத்தனின் கடைசித் துண்டு கறியும் மிச்சமில்லை. எதுவும் மிச்சமில்லை. சர்வமே சூன்யதா:

தானியம் சலிக்கும் இயந்திரம்

அதுவொரு
முல்லைப் பெரும்பொழுதின் அதிகாலை
மதுவினூடாக நடைபாதையில்
கிள்ளிச்செல்லும் சாலையோரச் செடியின்
ஒற்றையிலை நிறமிழக்கத் தொடங்குகிறது
வரலாற்றிலிருந்து பெண்களை
தவறவிட்ட நாம்தான் சிலசமயம்
மொழிகளுக்குள் புதையுண்ட
பழஞ்சொற்களை தேடுபவராகவும் இருக்கின்றோம்.
ஐந்து நிலங்களோடு அதன் அற்புதங்களையும்
புணர்ச்சியினூடாக அவளிடம்
அதீத முத்தங்களையும் நிகழ்த்தும் பொழுது
தானியம் சலிக்கும் இயந்திரமென
ஒவ்வொரு புணர்ச்சியையும்
சலித்துக்கொண்டிருந்தாள்
இப்படித்தான்
வெண்ணீர் ஊற்றுகளுக்கிடையே
ஆரோக்கியமாக வளரும்
பசும்நீலப் பாசிகளைக் கண்டு
ஞானமுற்றவனாய் வாழ்வின் இயல்பை
அர்த்தப்படுத்தினோம் நாம்
கடைசியாக
ஒருமுறையும் கூடாத இவ்விரவில்
நிறமிழந்த இலையென திரியும் நாம்
எத்தனையாவது புத்தர்கள் நண்பா

(வெயிலுக்கு)

ச. பாலமுருகன்

கூரை மேல் பயணம்

கல்வாரை என்பது அந்த மேற்கு மலைத் தொடரிலிருந்த கிராமத்தின் பெயர். அப்பெயர் வர காரணம் எதுவும் அங்கிருக்கவில்லை. அது மலையிலிருந்த போதும் சாதாரண கிராமத்தைப் போன்ற சமவெளியாகவே இருந்தது. வயல்கள் சில மைல்கள் தள்ளியே இருந்தது. அங்கு விவசாயம் நடைபெற்று வந்தது. அதில் பலர் தங்களின் மூதாதையர் காலத்திலிருந்து அங்கு விவசாயம் பார்த்து வந்திருந்தனர். சிலரோ புதிதாக பூமிவாங்கியவர்கள். இம்மலைத்தொடரின் வேறுபகுதியிலிருந்து இம்மலையை பார்க்கும் போது பல முக்கோணங்களை நீல வர்ணத்தில் தோய்த்து கவிழ்த்து வைத்திருப்பது போல உள்ள நீண்ட தொடரில் தட்டையாக இந்த கிராமம் மட்டுமே தெரியும். இரவிலோ கரிய வானத்தில் மின்னும் நட்சத்திரங்களுக்கும் கல்வாரையில் எரியும் மின்விளக்குகளுக்கும் இடையே வேறுபாடு காண்பது அறிதாகவே இருக்கும். அன்று கல்வாரையின் கிளையிலிருந்து ஒரு விண்மீன் வெளிர் மஞ்சள் நிறமாய் மின்னியது. பின் சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விண்மீன் அளவு அதிகரித்து அவ்வெளிச்சம் அசைந்தது. அது வெகு அடர்த்தியாக பரவி எரியும் ஒரு நெருப்பு என்பதனை அப்பொழுதுதான் வேறு மலைப்பகுதியினர் உணர்ந்தனர். அந்த மஞ்சள் வர்ண ஒளிப்புள்ளி பரந்த காட்டுத்தீவைப் போல அன்று ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே விடியும் வரை எரிந்து அணைந்தது.

கல்வாரையிலிருந்து கீழே அந்தியூர் வர தேவர்மலையிலிருந்து பேருந்து பிடிக்க வேண்டும். முதல் பேருந்து காலை ஆறரை மணிக்கு புறப்படும். இரவு தேவர்மலை வரும் பேருந்து அங்கேயே நிறுத்தப்பட்டு எடுக்கப்படுகிறது. இன்னமும் விடிய நாளியிருந்த சமயம், மூன்று மைல் கல்வாரையிலிருந்து நடந்து தேவர்மலை வந்து பேருந்தை பிடிப்பதற்காக இருள் சூழ்ந்த காலையில் அப்புசாமியும் அவன் மனைவி வேம்பியும் தங்களின் இரண்டு மகன்களுடன் வந்து கொண்டிருந்தனர். வேம்பின் தலையிலிருந்த சாக்கு மூட்டையில் கணம் அதிகமில்லை. அலுமினிய சமையல் பாத்திரங்களும், தனது குடும்பத்திற்கு வேண்டிய சில துணிகளும் மட்டுமே அதிலிருந்தது. அப்புசாமியின் கையில் அவனின் இரண்டரை வயது இளையமகனை மாரோடு அணைத்து மற்றொரு கையில் மூத்தமகனின் கைகளை பிடித்து நடந்து வந்திருந்தான். அவன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த

பையில் மூத்தமகன் மணிகண்டனின் ஐந்தாம் வகுப்பு பாடப்புத்தகங்கள் பத்திரமாக உள்ளதை அவன் இரண்டு முறை கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டிருந்தான்.

ஊரைத்தாண்டி சாலையின் மேட்டுப்பகுதியின் திருப்பத்தில் அரப்புலீஸ்வரன் கோயில் வந்ததும், வேம்பி தனது ஒரு கையால் கன்னத்தில் போட்டுக்கொண்டாள். அவள் கண்கள் கலங்கின. ஏன் சாமி எங்களை உன்னோடு வைத்துக் கொள்ள மனசில்லை என்று கேட்டாள். அப்புசாமி திரும்பி தனது ஊரைப்பார்த்தான். அவன் கண்கள் சிவந்திருந்தது. முகம் வீங்கியிருந்தது. கல்வாரையில் ஒரு சிறுவயல் பகுதியிலிருந்து புகை எழுந்து காற்றில் கலந்து கொண்டிருந்தது. அவன் வேம்பியைப் பார்த்து வேகமாக நட என்று மீண்டும் திரும்பி பார்க்காமல் நடக்கத் துவங்கினான்.

இருளில் சில செம்பூத்து பறவைகள் கீச்சிட்டன. இது சகுனம் பார்க்க நேரமில்லை என்பதை வேம்பி உணர்ந்து அதனை அலட்சியம் செய்து நடந்தாள்.

தேவர்மலை மாதேஸ்வரன் கோயில் அருகிலேயே பேருந்து நிறுத்தப்பட்டிருந்தது. அந்நேரம் ஒருசிலர் மட்டுமே பேருந்தில் இருந்தனர். அவள் கொண்டு வந்த மூட்டையை பேருந்தின் இருக்கை நீக்கப்பட்டிருந்த காலி இடத்தில் வைத்து அதற்கு முன்பிருந்த இருக்கையில் உட்கார்ந்து கொண்டாள். அப்புசாமியின் கையிலிருந்த குழந்தையை வாங்கி மடியில் வைத்துக் கொண்டு தனது அருகில் மணிகண்டனை உட்காரவைத்து அப்புசாமியை அடுத்து உட்கார வைத்துக் கொண்டாள். அன்று திங்கட்கிழமை மலையிலிருந்து அந்தியூர் சந்தைக்கு கூட்டம் அதிகம் வரும். அச்சமயம் நடத்துனர் உள்ளே வந்து டிக்கெட் கொடுக்கத் துவங்கினார்.

அவன் அப்புசாமியிடம் மூட்டையை தூக்கி வண்டியின் மேலே போடலாமே. இன்னிக்கு கூட்டம் அதிகம் வருமல்ல என்றான். அப்புசாமி அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் மூட்டைக்கான கட்டணம் வாங்க வேண்டும் என்று ஒரு டிக்கட்டை கிழித்து கையில் கொடுத்தான். அப்புசாமிக்கு வாக்குவாதம் செய்யும் மனமில்லாத போது அப்புசாமிக்கு ஆதரவாக பின் இருக்கையிலிருந்து ஒரு குரல் வந்தது. அது தண்டல்க்காரன் பர்கூர் மணியகாரனின் உதவியாளன். அப்புசாமியின் பூமிக்கு பட்டாவிலிருந்து பலவற்றிக்கு அவனின் ஆலோசனைகளைப் பெற்றிருக்கின்றான். சென்ற வருடம் அவனின் பூமியிலிருந்த பழைய குட்டை போன்ற ஆழமற்ற கிணற்றின்

தண்ணீர் முற்றிலும் வறண்டு போன போது மஞ்சள் பயிரை காப்பாற்ற தண்டல்காரனிடம்தான் ஆலோசனைக்கு வந்துநின்றான். தண்டல்காரனுக்கு ஐம்பத்தைந்து வயதுக்கு மேலிருக்கும். முழுவதும் நரை நிரம்பியிருந்தது. அவன் கண்களின் ஓரத்தில் இருபுறமும் திருநீரை வைத்திருந்தான். அவன் பேருந்து ஏறுவதற்கு முன் கோயிலுக்கு சென்று வந்திருந்தான்.

எங்கே போற அப்புசாமி? அவனின் குரலில்

அவன் நினைப்பு சரியானததுதான் என்று தோணியிருந்தது.

'நாமக்கல் பக்கம்'

'ஏதாவது சோளியா'

கோழிப்பண்ணைக்கு வேலைக்கு இரண்டு வருஷம் பண்ணையத்துக்கு அவன் குரல் உள்வாங்கியது தண்டல்காரனின் முகத்தில் சற்று கவலை படர்ந்து பேருந்திலிருந்து முகத்தை திருப்பி கோயிலைப்பார்த்து 'அடமாதேஸ்வரா.....' என்று முணுமுணுத்தான்.

அந்நேரம் பேருந்தின் உள்ளே கூட்டம் அதிகரித்துவிட்டிருந்தது. பேருந்தின் ஏணியில் ஏறி மேற்கூரையில் பலர் அமர்ந்து கொண்டிருந்தனர். இந்தப் மலைப் பேருந்தில்

மட்டும் மேல்கூரை பயணம் அனுமதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பேருந்து புறப்பட்டு ஓடத்துவங்கியது. தேவர் மலையையின் வளைவான திருப்பத்தில் அது திரும்பும் போது பேருந்தின் மேலே இருப்பவர்கள் ஓய் என்று சப்தம் எழுப்பினர். அவர்கள் கீழே விழுவது போன்ற உணர்வை அந்த திருப்பம் எப்போதும் ஏற்படுத்தும். அவன் தனது மகன் மணிகண்டனைப் போல் சிறுவனாயிருந்த போது அவன் தனது சித்தப்பாவுடன் இதே போல பேருந்தின் மேற்கூரையில் உட்கார்ந்து சென்றான் இந்த திருப்பத்தில். அவன் பறரைப் போல ஓய் என்று சப்தமிட்டான். அவனின் குதூகலத்திற்கு அன்று பஞ்சமில்லை. சித்தப்பாவோ பூந்துறைக்கு பக்கத்திலுள்ள குடியானவனின் தோட்டத்தில் அவனை விட்டுவிட்டு வந்தான். அவன் சித்தப்பாவுடன் மீண்டும் ஊர் திருப்ப அவன் கத்தினான். அவன் அப்பனுக்கு முடக்குவாதம் தீர்ந்ததும் உன்னை கூட்டிப் போகிறேன். குடியானவர் உன்னை கவனித்துக்குவார் என்று சமாதானம் செய்தான். அவனின் அழுகை ஓயாத போது குடியானவன் மாட்டுச் சாட்டையை எடுத்து அடிக்கவந்தான். அவன் வாயடைத்து நின்றான். அது அவனுக்கு முற்றிலும் புதியது. அவன் ஊரில் அதனை அவன் எதிர்கொண்டதேயில்லை. அதன் பின்பு மாட்டுக் கொட்டகையே அவனின் வீடு. கிழிந்த கால் சராயுடன் காலை முதல் மாலை வரை மாடுகளை மேய்த்து, பண்ணை வேலை செய்து அவன் வளர்ந்தான். ஒரே ஒரு நாள் விடிந்த பின்பு தூக்கத்திலிருந்து எழ வேண்டும் என்ற தீராத ஆசை மட்டுமே அவனுக்குள்ளிலிருந்தது. குடியானவனின் சாட்டையை கண்டால் அவன் நடுங்குவான். அதன் அத்தாட்சியாக பல வரித்தழும்புகள் அவன் உடலில் ஏறின. விவசாயத்தின் எல்லா நுணுக்கங்களையும் அவன் கற்றிருந்தான். அவனின் அப்பனுக்கு மிகவும் நிலை தப்பிய தருணத்தில் அவன ஊர் திரும்பினான். அப்பொழுதும் அந்தியூரிலிருந்து இதே மேற்கூரை பயணத்தில்.

அவனின் அப்பனை அவன் விளக்கை உயர்த்தி அருகில் சென்று பார்த்த போது அவன் கண்களை மூடியிருந்தான். உடல் மெலிந்து கோவணம் மட்டுமே கட்டிக் கொண்டு கவிச்சையும் ஈரத்தின் நாற்றமும் சூழ்ந்த அந்த இரவில் அவன் அப்பனைப் பார்க்கவே அவனுக்கு பிடிக்கவில்லை. கண்களை திறந்த அப்பனுக்கு பேச்சில்லை. அழுத்தமாக அப்பா பார்த்தான். அப்புசாமி கைகளை நடுக்கியபிடி பிடித்தான். தனது வாயின் அருகில் இழுத்து சென்று முத்தமிட்டான். கண்களில் கண்ணீர் மட்டும் வழிந்தது. அவன் அப்பனை அப்போது மன்னித்துவிட்டான். எட்டாண்டுகளைமறந்து போனான். அப்பா

உலகத் தெருவொன்றுக்கு நாள் வந்துவிட்டன என்னவோ. அவனின் கண்களிலிருந்து இரண்டு துளிகள் கெட்டி கொழு கின் வெறுப்பில் கழிந்து மெல்ல கன்னத்தில் இறங்கியது. . . . நாள் அவன் அப்பனை வயலில் அவன் அடக்கம் செய்து வெள்ளிக்கிழமையாகத் அதன்பின் அவன் அந்த வயலோடு ஒரு சொந்தமானவன் போல வைத்தான். அவனின் செல்லைப் பக்கத்து பரியத்திருக்கு. வயலில் பக்கத்தில் கிழவின் பட்டிருந்து தவிர் சொல்லும் வேறு வேலை அவனுக்கு சொல்ல வந்தனர். அப்பாவின் பக்கம் அவன் எச்சில் காரி அவன் எல்லோரையும் அப்படியே விட்டான். தென்னை வளர்ந்தது. வயலின் நடுவே வட்ட வரம்பில் வளர்ந்த பருதியில் தென்னை நிமிர்ந்திருந்தது. அது காய்க்கத் தொடங்கி முதல் குலை போடும்போது அவனின் அப்பாவின் கொலையின் இருக்கு நினைக்கு புதுக்குலை எடுத்துக் கொடுத்து. பக்கத்து வீடுகளுக்கு கொண்டுபோய்.

புதுச் சேலையணிந்து அவள் பொருக்கெட்டி இரண்டு முன்னறை வைத்து படையல் போட்டு போது அவன் தன் கண்களை மூடி குடும்பத்திலிருந்தவர்களை அன்புடன் நினைந்தான். நீதானே சாமி, என தென்னை மரத்தைக் கொட்டி கண்களில் ஒத்திக் கொண்டான். அவனின் ஒவ்வொரு தேர்தலை தென்னை மரத்தில் கிடுகுகட்டுகளைப் போட்டு வாந்து கழித்து வைத்தான்.

கடம்பூர் மலையிலிருந்து மண்டகளாக பெண்ணை அழைத்து வந்த போது அவன் தென்னை மரத்திலேறி ஒரு இளநீர் வெட்டிக் கொடுத்தான். அவளைக் குடிக்க முடியாத அளவு இளநீர் அதில் நிரம்பியிருந்தது. அவளுக்கு அதன் இனிப்பு சுவை பிடித்திருந்தது. நல்ல இனிப்பு என்று அவள் அவனிடம் வாயால் பொங்க சொன்ன போது அவன்

மாமனாரின் இரக்கம் என்று சிரித்தான். அச்சமயம் அவளின் கண்களில் வெசான பனி ஆடி கொண்டது.

வெம்பியின் இரண்டாவது பிரசவ சமயம் அவள் தென்னைமரத்தின் அடியிலேயே கயிற்று கட்டிலில் அமர்ந்திருந்தாள். முதலில் வலி வந்த சமயம் அதனை பொய்வலி என தாங்கிக் கொண்டாள். கால்களில் இடையே காய் கசிந்த போதே அவளுக்கு நிலைமை புரிந்தது. எழுந்து அவள் நிற்க சிரமப்பட்டாள். கத்த முடியவில்லை. மெல்ல அவள் நடந்து தென்னை மரத்தினை வலிக்க பிடித்து நின்றாள். சற்று தூரத்திலேயே கேழ்வரகு வயலில் அவளின் மாமியாரிருந்தாள். அவளின் கண்கள் இருண்டது போல வலி மண்டையிட்டு எட்டாத்து மரத்தைப் பிடித்துக் கொண்டாள். அடுத்த சில கணமே அவள்

கசாம்புகளும் கண்டாள். அவளின் மார்பால் ஒழுகியது. போது பேசாமல் அவளின் குழந்தையை தன் கரங்களில் தொட்டுள் கொடு போட்டு தாங்கி நின்றிருந்தாள்.

பேருந்து ஒத்தக்கடை பிரிவு வளைவில் நின்றது. அங்கே குதிரைக்காரக்காட்டில் கொய்திருந்து சிறு குதிரையிரன் கழித்தும் மக்களது குழுமம் புழுமாய் இருந்தது. குரளமான குரங்குகள் அங்கிருந்தன. வழிப்போக்கர்கள் படிப்புகளையும் கொய்துக்கு உள படும் தேங்காய் எழுதுகளையும் அவை நோக்கின்று படிக்கிருந்தன. பேருந்து ஓட்டுநர் வண்டி நின்றதும் ஒரு சிறு பழத்தை எடுத்து வந்து குரங்குகளுக்கு போட்டான். அந்த பகுதியில் சாலையின் இருபுற மரங்களின் கிளைகள் கீழ புழுக்காய் இருந்தது. சாலையில் பாலைகளின் காய்ந்த இலைகள் சிதறியிருந்தது. சாலையில் அதன் சிறுநீர் வழிந்து மண் சாலையில் வழிந்திருந்த தடங்களிலிருந்து கொல்லை அருகில் ஒரு கலையிலிருந்து தண்ணீர் வழிந்து ஓடிக் கொண்டிருந்தது. வற்றாத கலை. இரவுகளில் பாலைகள் இங்கே வழக்கமாக தண்ணீர் குடிக்க வருவதுண்டு.

அந்த கலைகளைப் போலவே அவளின் வயலிருந்த குட்டையிலும் தண்ணீர் வழிந்திருந்தது. ஆனால் கடந்த ஆண்டு வறட்சியாக அது வற்றிப் போய்விட்டது. மரங்களின் கூரான பாறைகள் மண்ணில் புதைந்தாலே சரியாகவிடும். அவன் அப்பன் பெரிய பொருளைகள் காணாமல் போயின. ஒருமுறை அடிக்கடி மேல் ஆழ்துளைக் கிணறுகள் வரத்துவங்கியது. குளம், குட்டைகளின் நீராதாரங்கள் ஆழ்துளைக் கிணறுகளின் நீர் ஓட்டங்களுக்குள் சிக்கிக்கொள்ள அப்புறம் பொன்னேரின் குட்டைகள் காய்ந்து போயின. அவனும் ஆழ்த்துளை கிணற்றை தோண்டி வெள்ளாமை செய்ய வேண்டிய போதே முதல்முறையாக கிட்டுச்சாமியிடம் கை ஏந்த வேண்டியிருந்தது. கிட்டுச்சாமி அந்தியூரில் விறகு மண்டி வைத்திருந்தான். மலைவாசிகளுக்கு மாலைக்கு மேல் பேருந்து இல்லாத நிலையில் இரவில் அவனின் விறகு மண்டியில் தங்கியே காலை பேருந்து பிடிக்க வேண்டியிருந்தது. மலைக்காரர்களை நம்பி அவசரமாக கடன் தருவான். முதலில் அவனிடமிருந்து கடன் பெற்றுக் தொகையில் தண்ணீர் தேடுபவனை கூட்டி அவனின் வயலில் பூமியின் நீர் ஓட்டத்தைத் தேடச் சொன்னான். அவனோ ஒரு தேங்காயினை தனது உள்ளங்கையில் வைத்துக்கொண்டு வயலினைச் சுற்றி வந்தான். இறுதியில் தென்னை மரங்களின் வேர்கள் நீண்டிருந்த திசைகளில் அவன் தண்ணீர் கண்டதாகவும், அங்கு வரும் போது தேங்காய் சுற்றுவதையும் காட்டினான்.

அப்புசாமியின் தாய் அங்குதான் கட்டிலில் படுத்திருப்பாள். அடுத்த நாளே ஆழ்த்துளை இயந்திரத்தின் சப்தத்தினூடே ஆழ்த்துளைக் கிணறு அங்கு போடப்பட்டது. அறுநூறு அடிக்கு பின் தண்ணீர் பீய்ச்சியடித்தது. கிணற்றுக் கடனை அடைக்க அவன் மஞ்சளை விதைத்தான். மஞ்சள் அன்று நல்ல விலைக்கு விற்று வந்தது. மஞ்சள் அறுவடையில் கிணற்றுக் கடன் அடைந்து கையில் காசு மிஞ்சும் வேம்பி தனக்கு ஒரு தங்கசங்கிலியை கேட்டு நச்சரித்து வந்தாள். அதற்காக நாள் முழுவதும் வயலிலேயே வேலை பார்த்து வந்தாள். அப்புசாமியின் பூமியை கிட்டுசாமியின் அக்காள் மகன் வாங்கியிருந்தான் அவன்

மின்சார வேலிகளைப் போட்டு விவசாயம் செய்து வந்தான். சூரிய சக்தி மின்வேலியில் மெல்லிய அதிர்வு உண்டாக்கும். இரவிலோ நேரிடையாக மின்சாரம் கம்பத்தில் கொக்கிபோட்டு எடுத்துப் பாய்ச்சப்பட்டது. அந்த வயலில் கரும்பை பயிரிட்டிருந்தான். அன்று அம்மாவாசை இரவு கரிய மேகத்தைப் போல ஒரு யானைக் கூட்டம் வனத்திலிருநது வயல்களுக்குள் புகுந்து வந்திருந்தது. கரும்பு பயிருக்குள் போக முயன்ற போது ஒரு யானை மின்சாரம் தாக்கியதால் பிளிரி நகர்ந்து நின்றது யானைகள். யானைகளின் பிளிரல் இரவை மதித்தது. மின்சார அடி வாங்கிய யானை துதிக்கையை சுருட்டியபடி கால்களை நொண்டியபடி முன்னும் பின்னும் காதுகளை விரித்து கத்தியது. அவை பக்கத்திலிருந்த அப்புசாமியின் வயலின் கிளுவை குச்சிகளால் ஆன சிறு சிறு பசிய இலைகள் துளிர்த்திருந்த உயிர்வேலிகளை மிதித்து அவனின் மஞ்சள் வயலில் புகுந்தது. அவை ஆக்ரோஷம் கண்டு பிளிறியது. அதன் கால்களில் மஞ்சள் பயிர்கள் மிதிகண்டு நசுங்கிக் கொண்டிருந்தது.

அப்புசாமியை வேம்பு வெளியே விடாமல் பிடித்துக் கொண்டாள். அன்று அவள் செய்த புத்திசாலித்தனமான செயலாகவும் அது இருந்தது. பக்கத்திலிருந்து சில வேட்டுக்களை சிலர் கொளுத்தி எறிய போதும் யானையை அது [illegible] யானை தொடர்ந்து தனது துதிக்கையை மேலே உயர்த்தியபடியே இருந்தது. அது விடிந்த பின்னரே அங்கிருந்து சென்றது. வயலில் பயிர்கள் பெரும்பாலும் நசுங்கி கிடந்தது. யானையின் இரத்திகளோ பல இடங்களில் இறைந்திருந்தது. தென்னை மரத்தினருகேயிருந்த மின்சார பம்புசெட் யானையின் வளைந்து நசுங்கி கிடந்தது. யானையின் கோபத்தில் வெளிப்பாட்டுக்கு அவன் வயல் ஒரு சாட்சியமாயிருந்தது. அடுத்த நாள் தட்டக்கரையிலிருந்து வனத்துறையினர் வந்திருந்தனர். உனக்கும் உன் குடும்பத்திற்கும் எதுவுமாகவில்லை என்பதே அதிசயம் என்று கூறினார். அப்புசாமி அவன் பக்கத்து பூமிக்காரனை மின்சார வேலி போடாதே என்றான். வேண்டுமானால் நீயும் போட்டுக் கொள்... என்னை சொல்ல நீ யார்? என்று அவன் பதிலளித்தான். எப்படி விவசாயம் செய்வது என்று அப்புசாமி கேட்க வேண்டுமானால் எனக்கு விற்றுவிடு என்றான் அமைதியாக.

அப்புசாமி மௌனமானான். அவனுக்கு அவனின் சிறு வயது ஞாபகங்கள் வந்து போயின. தன்னைப்போல தனது மகன் மகேஷ்கண்டனும் ஆடு மேய்ப்பது போன்று ஒரு கணம் நினைத்தான். அவன் உடலில் சாட்டையடி வலி வந்து மறைந்தது. கண்களில் அச்சத்தின் நிழல் படர்ந்தது. அரப்புலீஸ்வரன் என்னோடு போட்டியிட தயாரா? என்று விஸ்வரூபமெடுத்து அவன் முன் நின்று கேட்பதை போன்று உணர்ந்தான். நான் விவசாயி, அதைத் தவிர எனக்கு என்ன சாமி தெரியும் என்று கண்கலங்கி மௌனமானான். அடுத்த பட்டம் வேம்பியின் தகப்பனார் கடம்பூரிலிருந்து மரவள்ளி கிழங்கு குச்சிகளை வாங்கி வந்திருந்தான். அந்த வருடம் அது மூட்டை இருநூறு ரூபாய்க்கு பக்கம் போகிறது. பத்து மாத வெள்ளாமையில் நல்ல லாபம் வரும் என்றான். வேம்பியும் அப்பாவின் வார்த்தையை ஆமோதித்தாள். அப்புசாமியோ மஞ்சள் விதைக்க தீர்மானித்திருந்தான். ஆனால் பல இரவுகளில் அவனுக்கு யானையின் மிதிபாடு சப்தங்களை கேட்டு வழித்து வந்ததால் வேம்பி மஞ்சள் பயிரிடுவதால் அப்புசாமிக்கு பைத்தியம் பிடித்து விடுமென்று கருதினாள். அப்புசாமியும் மரவள்ளி கிழங்கு குச்சியை பயிரிட்டான்.

அந்த விதைப்பில் அவனின் மாமனார் நான்கு நாள் கல்வாரையில் தங்கி உதவினான். அப்போது அந்தியூரில்

கிட்டுசாமியிடம் அவன் பட்ட கடன் ஒரு லட்சமாக மாறியிருந்தது. அவன் பூமியின் பட்டாவை கிட்டுசாமி கேட்டு வாங்கியிருந்தான். மாவள்ளிக் கிழங்கு பத்து மாதங்களுக்கு பின் வளர்ந்து அறுவடைக்கு தயாராயிருந்தது. கிட்டுசாமி கடன் கேட்டு நச்சரித்து வந்தான். அறுவடை பின் தருவதாக அப்புசாமி கூறி வந்தான். அன்று கிட்டுசாமி அப்புசாமியின் தோட்டத்திற்கே வந்துவிட்டான்.

ஒரு வாரத்துள் பணம் வேண்டும் என்றான். அதற்கு காரணம் இல்லாமலில்லை. மாவள்ளிக்கிழங்கு அப்போது மூட்டை வெறும் முப்பதுக்கு விற்பனையாகிக் கொண்டிருந்தது. வயலில் அறுவடை செய்யும் செலவு மூட்டைக்கு ஐம்பது ரூபாய்க்கு மேல் போகும். என்ன செய்யப்போகிறாய். பேசாமல் இன்னொரு லட்சம் பணம் தருகிறேன் எனக்கே வயலை எழுதி வைத்து விடு. அவன் முடிவெடுத்துவிட்டான். அப்புசாமி அவனின் கைகளை பார்த்தான் அந்நேரம் மணிகண்டன் பள்ளிக்கூடத்திலிருந்து தோளில் பையை மாட்டிக் கொண்டு வந்திருந்தான். செல நாட்கள் அவனுக்குள்ளிருந்த நடுக்கம் அதிகமானது. அவன் அம்மா தென்னை மரத்தின் அருகில் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தான். வெம்பி கிட்டுசாமியிடம் உங்கள் பணம் சீக்கிரம் வரும் என்று சொல்லி தாட்டிவிட்டான் அப்புசாமியின் உடல் நடுக்கம் சற்று குறைந்தது. வெம்பி ஒரு சில நாட்களில் அவன் அப்பாவை காண கடம்பர் போய் வந்தான். பின் சில நாட்களிலேயே வெம்பியின் அப்பா ஒரு லட்ச ரூபாய் பணத்துடன் கல்லாறா வந்திருந்தார். அப்புசாமியை அழைத்துக்கொண்டு கிட்டுசாமியிடம் போய் பணத்தை கொடுத்து நிலத்தின் அசல் பட்டாவையும் எழுதி கொடுத்த பத்திரங்களையும் திரும்ப பெற்று வந்தனர். மணிகண்டனின் பள்ளிக்கு போய் மாற்றுச்சான்றிதழ் வாங்கியாகிவிட்டது. இன்னும் இரண்டு வருடம்தானே மாப்பிளே திரும்ப வந்திடலாம் என்று மாமனார் நம்பிக்கை கொடுத்தான். அப்புசாமியின் தாய் மண்ணைவிட்டு விட்டு எங்கும் வரத்தயாராயில்லை. அவளின் உடல் நலிவுற்றிருந்தது. அவள் அவனிடம் அழுத்தமாகச் சொன்னாள். உங்கப்பனுக்கு நீ தென்னை மரம் வைத்தாய். எனக்கு பக்கத்திலேயே ஒரு பலா மரம் வைத்திடு. அப்புசாமி வெகுநேரம் அவன் அம்மாவை உற்றுப்பார்த்தான். காற்றில் அசைந்த தென்னையில் புதியதாய் ஒரு பாளை பிடித்திருந்தது. அங்கு குத்தகைக்கு விவசாயம் செய்பவனை பிடிப்பது அவனுக்கு சிரமமாகவே இருந்தது. அவனின் சித்தப்பனின் மகனையே இரண்டு வருடத்திற்கு வயலை பார்த்துக் கொள்ள சொன்னான். அவனின் தாயையும், தென்னை மரத்தையும் பத்திரமாக பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே

அவனின் முக்கிய கட்டளை. குத்தகைக்காரன் கேழ்வரகு பயிரிடுவதே தனது நோக்கம். எனவே வயலை சுத்தம் செய்து கொடுத்திடு அண்ணா என்றான். அப்புசாமி வயலையே பார்த்துக் கொண்டிருந்தான். [illegible]
கட்டிக் கொண்டிருந்தாள். அவளின் அப்பா நேற்றே மாப்பிள்ளையை தனது வேலை செய்யும் கவுண்டருக்கு அறிமுகமானவரின் கோழிப்பண்ணைக்கு பண்ணை வேலைக்கு இரண்டு வருடத்திற்கு ஒரு இலட்சத்து இருபதாயிரத்துக்கு பேசி பணம் வாங்கி கொடுத்து ஒழுங்கு செய்து விட்டு போய்விட்டிருந்தான். அப்புசாமி காய்ந்த வைக்கப்புல்லை வளர்ந்த மரவள்ளிக்கிழங்கு செடிகளை சுற்றி சுற்றினான். வேம்பியோ அவனுக்கு இதில் உதவாது பிற வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். தூரத்திலிருந்து தனது கணவனை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தாள். இருண்ட சமயம் அவன் செய்த வேலை முடிந்திருந்தது. அவன் பைத்தியத்தைப் போல மாறியிருந்தான். அச்சமயம் இருள் கடுமையாக சூழ்ந்திருந்தது. கூகை ஒன்று தொடர்ந்து கூவிக்கொண்டேயிருந்தது. அவன் மண்ணெண்ணெய் நனைத்த ஒரு துணியை ஒரு குச்சியில் சுற்றும் போது கடுமையான கெட்ட வார்த்தைகளால் அப்படி ஒரு வசவை பேசி வேம்பி கேட்டதில்லை. நான் தோற்று போறேண்டா.. திரும்ப வரேன்... என்றான். தனது கணவனுக்கு பைத்தியம் பிடிக்க வைத்துவிடாதே அரப்புலீஸ்வரா அவன் உன்னைத் திட்டவில்லை என்று வேம்பி மனதுக்குள் வேண்டிக்கொண்டாள். தீயை பக்கத்தில் பற்ற வைக்கும் போது அவன் கண்களில் அச்சம் நிறைந்திருந்தது. நடுங்கும் விரல்களில் அவன் மரவள்ளிக் குச்சிகளுக்கு தீவைக்கும் போது பச்சை இலைகள் சடசடத்தது. அவன் உடலில் நூற்றுக்கணக்கான மாட்டுச் சாட்டைகளின் விளாசல்கள் விழுந்து அவன் தசையை காயப்படுத்தியது. அவன் வலியை தாங்காது கத்தினான். வரப்பில் உட்கார்ந்து ஒப்பாரி வைத்தான். தீயின் சுவாலைகள் உயர்ந்த போது வேம்பி அவனை கட்டிப்பிடித்துக் கொண்டாள். அவன் தீயில் விழுந்திடக்கூடாது என்பதே அவளின் கவலை. ஒரு முழுவயலும் தீயில் எரிவதை வெகுத்தொலைவிலிருந்தும் பலர் பார்த்தனர். அவனின் கதறல் வெகுதூரம் எதிரொலித்தது. அது அதிகாலை வரை தொடர்ந்தது. இப்போது பேருந்து அந்தியுரை தொடங்கிக் கொண்டிருக்கும். அங்கிருந்து அவர்கள் வேறு பேருந்து பிடித்து இன்னும் ஈரோடு போய் நாமக்கல் போக வெகுதூரம் போக வேண்டும்.

உயிரெழுத்து ஊ

மெய்யெழுத்து ழ்

இவற்றின் மேற்பார்வையில் உயிர்மெய்

அ, ஆ, இ, ஈ,

உ, எ, ஏ, ஐ,

ஒ, ஓ, ஔ,

க், ங், ச், ஞ்,

ட், ண், த், ந்,

ப், ம், ய், ர்,

ல், வ், ள், ற், ன்

உளவியல் சோதனை

, 2, 3, 5, , , 8, , 0
மேற்காணும் இலக்கங்கள்
எதையேனும் தூண்டுகிறதா?
பயம், பதட்டம், பிரமை,
பீதி, கோபம், எரிச்சல்
போன்ற உணர்வுகளை
எதையேனும் நினைவுறுத்துகின்றனவா?
விடுபட்ட எண் வரிசையை
நிரப்ப வேண்டிய வெற்றிடங்களை
இயன்ற எண் இணைவுகளை
விரல்கள் காற்றில் எழுதிப் பார்ப்பவற்றை.
மேலும் எதையாவது
குறிப்பால் உணர்த்துவதாக?
பிறந்த தினத்தை
இயந்திரமாய் இயங்கும்
வாழ்க்கையின் நாட்களை
உடல் எலும்புகளின் எண்ணிக்கையை
சம்பந்தமேயில்லாத ஏதோ ஒன்றை
தலைவலியை
வயதாவதை எதிர்க்கும் கிரீம்
செயலிழந்து விட்டதை
எல்லாம் சரியாக இருப்பதை
அதை ஏற்றுக்கொள்ள வியலாததை
எல்லாம் சரியாக இல்லாததை
அதை ஏற்றுக் கொண்டு
தொடர்வதை

ஒலி மீட்புப் பறவை

கோடை வாழிடம்
ஒன்றிலிருந்து கீழிறங்கும் வாகனம்
அதிலிருக்கும் உங்களின்
மல/மூத்திர அவசரத்திற்காக
ஒரு வளைவில்
நிறுத்தப்படுகிறது
காடாயிருக்கும்
அப்பகுதியின்
செடி, கொடிகளினூடே
மறைவிடம் விரைகிறீர்கள்
இப்போது உங்கள் அருகாமையில்
பெயர் அறியப்படாத
பறவையொன்று
தாவர வகைப்பாட்டியலில்
இல்லாத மரத்திலிருந்து
குரலெழுப்புகின்றது.
அந்த ஓசையினிமை
காட்டுத் தாவரங்களை
ஒலி மாசுக்களிலிருந்து
விடுவிக்கிறது.
மனிதக்கழிவு
ப்ளாஸ்டிக் நச்சு
காலி மதுப்புட்டி
சிரின்ஜ்
ஆகியவைகளிலிருந்து
கானகத்தை சொஸ்தமாக்கி
மீண்டும்
கானகத்திடமே வழங்கும்
அதன் ஒலியை மீண்டும்
தன் வசம் மீட்டுக்கொண்டு
பிறிதொரு
காட்டை தேடிப்பறக்கிறது
உயிர்க்கோளத்தை
இழக்கத் தயாரற்ற பறவை
இன்னமும் நீங்கள்
நிகழ்ந்தது எதையும் பார்க்காத
ஒரு பார்வையாளர்

மேல்நிலை பௌதிகம் - மாதிரி வார்த்தைத் தேற்றம்

கருப்பு மனிதர்களாலும் ஆனது
நம் உலகம்
அன்றாட வாழ்வில் இவர்கள்
தம்மிடையே அதிர்வுகளாகத் துவங்கி
அலைகளாகப் பரவும்
அன்பு, வெறுப்பு, காமம்
இன்ன பிறவற்றை
உள்வாங்குவது பிறகு
உமிழ்வது
போன்ற பணிகளை செய்பவர்கள்
இதற்கான
பெரும மற்றும் சிறும மதிப்புகள்
முடிவிலி எனக்கொள்வோம்
ஒவ்வொரு அலைக்கும்
ஒரு அலைநீளம்,
ஒவ்வொரு அலைநீளத்திற்கும்
ஒரு நிறத்தொடர்பு
எல்லா அலைநீளங்களிலும்
நிகழும் இப்பணிகளால்
ஒரு நிறமாலை
ஒவ்வொரு கருப்பு மனிதரிடமிருந்தும்
தோன்றுகின்றது
நிறமாறமாலைக்கும்
கருப்பு மனிதருக்குமான
தொடர்பை நிரூபிக்கும் இத்தேற்றம்
இப்போது செவ்வாய் கிரகத்தில்
இல்லாத சிவப்பு மயிர்க்கற்றைவாசிகளைத் தேடும்
ஆராய்ச்சியை விட முக்கியத்துவம் வாய்ந்தது
இறுதியாக நீங்கள் எதிர்பார்த்த வார்த்தை
'வெள்ளை மனிதர்கள்'
அவர்கள்தான் தேடல் ஆராய்ச்சியில் பணம், காலம், உழைப்பை
முதலீடு செய்திருப்பது

(தமிழில் மேல்நிலை அறிவியல் பயிலும்
மாணவ-மாணவியருக்கு)

மூடாத கதவு

யாசகம் மேற்கொண்டு
ஈட்டிய பணத்தால் வாங்கிய
அன்றைய உணவோடு
மாதா கோவிலின்
அருகிலிருக்கும்
கல்லறைத் தோட்டத்தை
அடைகிறாள் அம்முதியவள்
நீண்ட காலமாக
அங்குதான் வசிக்கிறாள்
அதிலிருக்கும் கடைசி கல்லறையில்
மறுவழியில்
அதுதான் முதலாவது கல்லறை
அதன் கதவு எப்போதும்
திறந்ததே உள்ளது
கல்லறையினுள்
நுழைவதும் திரும்புவதும்
அவள்தான்
இன்னும் மேலாக
அவளுக்குள்ளிருக்கும்
மூடாத கதவின் வழியே
நுழைவதும் திரும்புவதும் அவளே
யாரும் பார்த்திராத ஒருவன்
எப்போதோ, எங்கோ
மீண்டும் உயிர்த்தெழப் போவதாக
பெருங்கூட்டம்
அறைகூவல் விடுக்கிறது
இசை கோஷங்களை முழக்குகிறது
அனுதினம்
தனது கல்லறையிலிருந்து
உயிர்த்தெழும் அவளுக்கு
அது குறித்து ஏதுமில்லை
இன்னிசையின் இரைச்சல்
அதிகமாவதையுணர்ந்து
மூடாத கதவை மூடுகிறாள்

(தேவதச்சனுக்கு)

பொய்யும் உண்மையும்

பொய்யே பேசாதவர்
பேசிய முதல் பொய்
மரணத்தை
தேடிக் கொணர்ந்தது
பொய் மாத்திரமே
பேசுபவர் பேசிய
முதல் உண்மை
சந்தேகத்தை
வரவழைத்தது
மரணமும் சந்தேகமும்
சந்தித்துக் கொண்டன
மரணம் தான்
இறுதி விடுதலையெனவும்
சந்தேகம் தான்
நம்பிக்கையின்மை எனவும்
அறிமுகப்படுத்திக் கொண்டன
ஆனால், மரணம் சொன்னதை
சந்தேகம் சந்தேகித்தது
அதையுணர்ந்த மரணம்
நம்பிக்கையில்லாவிடில்
எனைத் தழுவி
மரணித்துப்பார் என்றது
சந்தேகமும் அவ்வாறே செய்தது
அதற்கு மரணம் குறித்திருந்த
எல்லாத சந்தேகங்களும் தீர்ந்தன
கூடுதலாக
உண்மை பேசுபவர்
பேசிய முதல்பொய்
மரணத்தையும்
உண்மையே பேசாதவர்
பேசிய முதல் உண்மை
சந்தேகத்தையும்
ஏன் கொண்டு வந்தது
என்பதற்கான விடையையும்
தெரிந்து கொண்டது.

கவிதையின் கண்களை
பார்க்காதீர்
மூர்க்கமான மிருகமாக
வழிக்கு வராமல்
உம்மீது பாயத்தயாராக
இருப்பதை உணர்கையில்
ஓடவிட்டு விடுங்கள்

பெண்கள் நீர் சுமக்கும் தெருக்களில்
காய்த்துப் போன நெற்றியும்
சிராய்ப்புகளாலான உடலும்
அரைகுறையாடைகளுமாய்
ஒவ்வொரு கிராமத்திற்கும்
ஒரு பைத்தியம் அலைய
விதிக்கப்பட்ட சாபத்தை...
புதுமணத் தம்பதியரில்
தலைக்கவச மணியாத
கணவன் மரிக்க
உயிர்பிழைத்த அவன் மனைவி
மூர்ச்சையாகி, நீர் தெளிப்புக்கு
மீண்டும் கண்விழித்து
அவரு வந்துட்டாரா? வென
மனம் பேதலிக்க எழுப்பும்
கேள்வியுலாவும் வீட்டுத் தாழ்வாரத்தை...

விதவைப் பூக்காரி
கொண்டு வரும் பூக்கூடைகளை
நகர்த்த உதவும்
அவளின் தனயன்
(பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவன்)
நிற்கும் பேருந்து நிறுத்தத்தை...

பேருந்திலிருந்து துளை வழியே
விழுந்த பச்சிளம் சிறுமி
தலை நசுங்கி சாவதைக் கண்டு
திடுக்கிடும் சாலையை...

திக்பிரமை பிடித்து மீண்டும்
உம்வசம் திரும்பிய
கவிதை
தான் சந்தித்த நிகழ்வுகளில்
மெய்‘ஞான மடை...யா’மல்
உளநோய்க்கு ஆட்பட்டிருக்கிறது
இனி மருந்துகளின்றி

அதன் மனதை சொஸ்தமாக்கி
கவிதையிலிருந்து கவிதையை
பிரிக்கவேண்டும்

(சிறுமி ஸ்ருதிக்கு)

பதிலீட்டு வினை

ஓர் உயிர் இன்னோர் உயிரை
ஒரு துயரம் வேறொன்றை
ஒரு வலி மற்றொன்றை
ஒரு கண்ணீர்த்துளி
வேறொரு கண்ணீர்த்துளியை
ஒரு தனிமம் இன்னொன்றை
பதிலீடு செய்வதைக் குறித்து
நாம்
இன்னம் கூட அதிகமாக
பேசித் தொலைக்கலாம்.

எச்.பீர்முஹம்மது

தேசியம் என்ற சொல்லாடல் குறித்து

தேசியம் என்ற சொல்லாடல் குறித்து இன்று உலகம் முழுவதுமே சாத்தியமான உரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. அது குறிப்பிட்ட அல்லது தீர்மானகரமான வரையறைக்கு உட்பட்டதா என்பது குறித்து எவருமே தெளிவான முடிவுக்கு வர முடியவில்லை. காரணம் அது பிரதேசம் மற்றும் எல்லை தாண்டும் போது அங்குள்ள சமூகத்தைப் பாதிக்கிறது. இந்திய சமூகத்தின் அடிப்படை சார்ந்தும் வரலாற்று ரீதியாக இப்பிரச்சினை எழுந்தது. அம்பேத்கார் போன்ற புரட்சியாளர்கள் இந்திய சமூகத்தின் அடிப்படை முரண்பாடு சாதிய கட்டுமானத்தில் இருக்கிறது என்றார்கள். அதே நேரத்தில் இந்துத்துவ வாதிகள் அடிப்படை முரண் என்பது சாதியல்ல மதம் தான் என்று மறுத்தார்கள். மேலும் மொழிவழி தேசியவாதிகள் அந்த முரண் சாதி மதத்தை தாண்டி இந்தியாவின் பிளவுபட்ட மொழி அமைப்பில் இருக்கிறது என்றார்கள். மாறாக இந்திய இடதுசாரிகள் அதை வர்க்கங்களின் முரணாக பார்த்தார்கள். இவ்வாறாக எல்லா பிரதேசங்களிலும் தேசியம் என்ற கருத்துரு பற்றிய வரலாற்றுச் சிக்கல்கள் இருப்பதால் எரிக் புரோம் தேசியத்தை ஒரு கற்பிதமாக பார்த்தார். அதற்கென தெளிவான பருண்மைத்தன்மை என்று எதுவுமில்லை என்றார். ஆக தேசியம் என்பது எல்லா பிரதேசங்களிலும் திட்டவட்டமான வரையறுக்குள் வந்ததில்லை. இந்த அடிப்படைச் சிக்கலே இன்றைய உலகில் நிலவும் பல இனப்பிரச்சனைகளுக்கு பெரும் சவாலாக இருக்கிறது.

தேசிய உணர்வினி தீவிரத்தையும், பரப்பையும் அறிவியல் ரீதியாக அளவிட ஒப்புக்கொள்ளப்பட்ட தொழில் நுட்பம் எதுவுமில்லை. ஆனால் கொள்கை வகுப்பாளர்களுக்கு சில சமயம் அத்தகைய அளவீட்டின் அவசியம் தேவைப்படுகிறது. அந்த அவசியம் தேவைப்படுகிறது. அந்த அவசியம் கூட குறிப்பிட்ட வகைப்பாட்டில் தான் அடங்கிக் கொள்கிறது. வரலாற்று நிகழ்வுகளில் தேசியம் ஆற்றிய பங்கினையும் அத்தகைய தேசியத்திற்கான நோக்கங்கள் பற்றியும் மதிப்பீடு செய்ததில் பெரும் தவறுகள் உள்ளன. உதாரணத்திற்கு ஸ்பானிய - அமெரிக்க யுத்தத்தினை எடுத்துக் கொள்வோம், ஸ்பானிய அமெரிக்க யுத்தமானது கியூபா தேசியத்திற்கு ஆதரவு தெரிவிப்பதற்காக நடத்தப்பட்டது என்று கூறப்பட்டது. ஆனால் அது அமெரிக்காவின் வர்க்க நலனின் பிரதிபலிப்பே. 1971 ஆம் ஆண்டு

யூகோஸ்லேவியா பொருளாதார நெருக்கடியில் இருந்த போது பிரான்சு மற்றும் ஜெர்மானிய மாணவர்களை பின்பற்றி குரோசியன் மாணவர்கள் அராஜகவாத சர்வதேசிய தீர்வுகளை முன்வைத்த போது, அத்தகைய சர்வதேசியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என விசுவாசமிக்க குரோசியன் மாணவர்களுக்கு அந்நாட்டின் தலைவர் டிட்டோ அழைப்பு விடுத்தார். டிட்டோவின் இந்த உரை குரோசியின் தேசியவாதத்தின் மீட்புக்கு காட்டப்பட்ட பச்சைக்கொடி என மாணவர்கள் மற்றும் இடதுசாரிகளால் கருதப்பட்டது. சமீக ஆண்டுகளில் இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற போர் என்பது ஏகாதிபத்திய, இன மேன்மை நலன் சார்ந்த வெளிப்பாடு. இவ்வாறாக தேசியம் சில சமயங்களில் வர்க்க நலனை முன்னிறுத்தும் ஒன்றாக மாறிவிடுகின்றது. இன்னும் சிலர் தேசியத்தை நடுத்தர வர்க்கத்தினருக்கும், கீழ் தட்டுப்பகுதியினருக்கும் நில உடைமையை கொண்டுள்ள விவசாயிகளுக்கும் உரியது என்றும் கூறுகின்றார்கள். சால்மர்ஸ் ஜான்சன் இரு முக்கியமான நாடுகளில் உள்ள விவசாய வர்க்கத்திற்கு இந்த கருதுகோளை பயன்படுத்தினார். ஒன்று ஜெர்மனி மற்றொன்று பிரான்சு. ஜெர்மனியில் 1932ல் நடந்த இடைத்தேர்தலில் ஹிட்லரின் நாஜி கட்சியானது குறிப்பிடத்தக்க வெற்றியை பெற்றது. குறிப்பாக ஜெர்மனியின் கிராமப்புறங்களில் அதன் வெற்றி ஹிட்லரை குறிப்பிட்ட ரீதியில் நிலைக்க செய்தது. இதற்கு விவசாயிகளிடத்தில் ஏற்பட்ட தேசிய உணர்வு தான் காரணம் என்று சொல்லப்பட்டது. ஆனால் அங்கு எதார்த்தமானது அதனை தாண்டியே இருந்தது. ஜெர்மன் விவசாயிகளின் நாஜிக்கள் மீதான சாய்வு என்பது முதலாளித்துவத்தின் பொருளாதார பிரச்சினையே தவிர தேசிய பிரச்சினை அல்ல என்று பிற்கால வரலாறு நிரூபித்தது.

தேசியம் பற்றிய வரையறையும், அனுபவமும் காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம் மாறுபடுகின்றன. தேசியம் பற்றிய அனைத்து வரையறைகளையும் ஒன்று சேர்க்க முயற்சிப்பது சில நேரங்களில் இயலாத ஒன்றாக இருக்கிறது. ரோசா லக்சம்பர்க் தேசியம், தேசிய அரசு ஆகியவை வெறும் மேல் கூடுகள் தான் என்றார். அதற்குள் அனைத்து வரலாற்று சகாப்தங்களும், வர்க்க உறவுகளும் தமது சிறப்பான உள்ளீடுகளை இட்டு நிரப்புகின்றன என்றார். இந்நிலையிலும் தேசியம் என்பது ஒரு சாரத்தை உள்ளடக்கி இருக்கிறது. அதன் குறிப்பான இயல்பை நாம் கண்டறிய முயலவேண்டும். அந்நிய ஆதிக்கத்திற்கு எதிரான எதிர்ப்புகள் அனைத்தையும் நாம் தேசியம் என்ற கருத்துருவத்திற்குள் அடக்குவோமானால் தேசியம் எப்போதும்

நம்மிடம் இருக்கிறது என்பதை முடிவு செய்ய வேண்டும். ஏனெனில் அத்தகைய எதிர்ப்புகள் எழுதப்பட்ட வரலாறு தோன்றுவதற்கு முன்பிருந்தே இருந்து வருகின்றன. அந்நிய ஆதிக்கத்திற்கு எதிரான வெற்றிகரமான போராட்டங்கள் நவீன கால ஐரோப்பாவில் சில அரசுகளை உருவாக்கின. இந்நிலையில் நாம் தேசியம் என்ற கருத்துருவத்தை நான்கு வேறுபட்ட முதன்மை வடிவங்களாக வகைப்படுத்த முடியும்.

1. அரசு அதிகாரம் மற்றும் தேசிய உணர்வு நிலை ஆகியவற்றின் தொடர்ந்த வளர்ச்சியின் நீண்ட அனுபவத்துடன் கூடிய மக்களின் தேசியத்துடன், தேசியத்தை நிர்ணயிக்கும் குடி உரிமை (மேற்கு ஐரோப்பா)
2. நீண்டகால அரசியல் அனுபவம் இல்லாத நாடுகளின் தேசியம். ஆனால் ஒரு பொதுமொழியையும் ஒரு பொதுவான சுய அடையாளத்தையும் கொண்டது. (இத்தாலி, ஜெர்மனி)
3. தென்கிழக்கு ஐரோப்பாவை சார்ந்த நாடுகளின் தேசியம் போன்றது, நீண்டகால பொதுவான அரசியல் அனுபவம் கிடையாது. இனக்குழு அடிப்படையிலான தொடர்ச்சியான நிலப்பரப்பும் கிடையாது. இங்கு வரலாற்று ரீதியான மத இணைப்பு தான் தேசிய உணர்வு நிலையை நிர்ணயிக்கும் முக்கியகாரணி.
4. காலனிய எதிர்ப்பு மற்றும் நவீனத்துவ இயக்கத்திற்கான தேசியம், பொதுவாக மூன்றாம் உலகோடு இணைந்தது. தென்கிழக்கு ஐரோப்பாவிலும் வெளிப்படுகிறது.

இவ்வாறான நிலையில் ஒரு தேசம் எப்பொழுதும் ஓர் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பு, குறிப்பிட்ட குறைந்த பட்ச நிலப்பரப்பு, சில ஒருங்கிணைப்புகள் (மையப்படுத்தல் மற்றும் பரஸ்பர சார்பு நிலை) தான் ஒரு தேசம் என்ற உணர்வு நிலை ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். தேசங்களின் உருவாக்கத்தில் பொருளாதாரம் அதிக அளவு தொடர்பு உள்ளதாக இருக்கும் அதே நேரத்தில் அத்தகைய உருவாக்கத்திற்கு முதன்மையான காரணிகளாக இருப்பது அரசியலே. இன்றைய சூழலில் தேசம் உருவாக்கத்தில் அரசியல் வாழ்வை ஒழுங்கமைப்பதற்கும், அந்நிய ஆக்கிரமிப்பை, ஒடுக்குமுறையை எதிர்ப்பதற்கும், கலாசார ரீதியாக ஒன்றிணைவதற்கும் குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களும் தேச - தேசிய அரசு என்பது முக்கியமான ஒன்றாக இருக்கிறது. இதன் தொடர்ச்சியில் தேசங்களின் உருவாக்கம் என்பது மூன்று விதங்களில் இருக்கின்றன.

முதலாவது அரசுகளிலிருந்து அவை உருவாக்கப்படலாம். நவீன சகாப்தத்தின் ஆரம்பத்தில் நிலவிய பிரெஞ்சு, ஆங்கில, டச்சு, ஸ்பானிஷ் மற்றும் பிற ஐரோப்பிய அரசுகள் தேசங்களாக வளர்ச்சி அடைந்தன. ஸ்பெயினிடமிருந்து டச்சு மக்கள் தங்கள் சுதந்திரத்தை வென்றெடுத்த போதோ அல்லது எலிசபெத் அரசியின் காலத்திய இங்கிலாந்தையோ தேசம் என குறிப்பது தவறான ஒன்றாகும். ஆனால் அங்கு தேசம் என்பது கருநிலையாக இருந்தது. நெப்போலியனின் யுத்தங்களின் போதுதான் ஐரோப்பாவில் பெரும்பாலான நாடுகளில் தேசம் முழுமையான வடிவில் உருக்கொண்டது.

இரண்டாவது அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களிலிருநது தேசங்கள் உருவாகின்றன. பல காலனிய நாடுகளில் தேசம் பற்றிய உணர்வு நிலை இல்லாத போதும் ஐரோப்பிய ஆதிக்கத்தை எதிர்த்து போராடிய போது பல தேசங்கள் உருவாயின. இந்தியாவை பொறுத்தவரை சுதந்திர போராட்ட ஆளுமைகளுக்கு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி வரை பிரிட்டிஷ் அதிகாரத்துடன் கூடிய சுயாட்சியே அதன் பிரதான நோக்கமாக இருந்தது. அதன் பிந்தைய கட்டத்தில்தான் பரிபூரண இந்திய விடுதலை அதன் நோக்கமாக இருந்தது. இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் உருவாக்கம் என்பதே பிரிட்டிஷ் ஆட்சியின் நிர்வாக பதவிகளுக்கு இந்தியர்களை தயார்படுத்துவது தான். மேலும் போலந்து மக்களின் வரலாறு ஆர்வத்திற்குரிய ஒன்றாகும். காரணம் அவர்கள் ஓர் அரசைக் கொண்டு இருந்தார்கள். 1792ல் நடந்த மூன்றாவது பிரிவினையின் போது அவர்கள் ஒரு தேசமாக உருவாகும் நிலையில் இருந்தார்கள். அதன் பிந்தைய கட்டத்தில் பல்வேறு எழுச்சிக்குப் பிறகு போராட்டத்தில் போலந்து தேசமாக உருக்கொண்டது. இறுதியாக 1919ல் தான் அங்கீகரிக்கப்பட்ட அரசாக அமைந்தது.

மூன்றாவது அந்த தேசிய இனங்கள் கலாச்சார ஒருமைப்பாட்டை அடைந்து அதன் பிறகு அந்த ஒருமைப்பாட்டின் அரசியல் வெளிப்பாடாக தேசங்களை உருவாக்குகின்றன. ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி ஆகியவற்றிற்கு கீழ்ப்பட்டிருக்கும் நிலையில் அதிலிருந்து அடுத்தடுத்து உருவான அரசுகள் தேசிய உணர்வு என்னும் நிலைக்கு உயர்ந்தன. அரசியல் ஒருமைப்பாட்டுக்கு முன்பாக கலாசார ஒருமைப்பாடு உருவாகிய நாடுகளின் செவ்வியல் உதாரணமாக இத்தாலியும், ஜெர்மனியும் இருக்கின்றன. மேலும் தேசங்களின் தோற்றத்தை அரசுகளின் தோற்றதோடு சேர்த்து பலர் குழப்பிக்கொள்கிறார்கள். இவை ஒரே சார்பு நிலையை குறிப்பதால் இந்த குழப்பம் எற்படுகிறது.

பொதுவாக தேசிய இயக்கங்கள் எழும் சூழல்கள் வேறுபட்டவை. சரேக்கத் இஸ்லாம் அல்லது இஸ்லாமிய ஒற்றுமை என்ற பெயரில் மத சீர்திருத்திற்காக உருவாகிய இயக்கத்தில் இருந்து தான் இந்தோனேசியாவில் முதல் மக்கள் திரள் தேசிய இயக்கம் தோன்றியது. 17-ஆம் நூற்றாண்டில் தூய்மைவாதிகள் இங்கிலாந்து தேவாலயத்தைத் தூய்மைப்படுத்த விரும்பியது போல முதல் உலக யுத்தத்திற்கு முன்பு சும்பாரி தூய்மை இயக்கம் முஸ்லிம் மதத்தை தூய்மைப்படுத்த முயன்றது. இந்த இயக்கம் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியது. முதல் உலக யுத்தத்திற்கு பின்பு அது அரசியல் மற்றும் பொருளாதாரப் புரட்சிகரமான இயக்கமாக வளர்ச்சி அடைந்தது. அது கம்யூனிச அகிலத்தால் முன்மொழியப்பட்ட ஒரு பொருளாதாரத்திட்டத்தை பின்பற்றியது. அதன் பிறகு 1921ல் அது மத அடிப்படையில் ஒரு பிரிவாகவும், மாக்சிய அடிப்படையில் மற்றொரு பிரிவாகவும் பிளவுப்பட்டது. மார்க்சிய பிரிவு விரைவிலேயே இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சியாக வளர்ச்சி பெற்றது. பிந்தைய சட்டத்தில் இது மாதிரியான நிகழ்வுகள் மொராக்கோ மற்றும் அல்ஜீரியாவில் நடைபெற்றன. இவ்வாறாக வரலாற்றின் குறிப்பிட்ட காலத்தில் அடித்தளத்தில் இருந்த மக்கள் அரசியல் அமைப்புக்காக ஒன்று திரட்டப்படுகின்றனர். அநீதிக்கும், பாகுபாட்டிற்கும், சுரண்டலுக்கும் எதிரான போராட்டத்திலிருந்து தான் தேசியம் பிறக்கிறது என்றால் கார்ல் டெச்சுஎன்ற சமூகவியலாளர். இதைப்பற்றி தெளிவாக அவர் குறிப்பிடுகிறார். வருமானத்திலும் வாழ்க்கை தரத்திலும் கூர்மையான வேறுபாடுகளைக் கொண்டுள்ள ஒரு உலகில் தேசியத்தின் தீவிரமும் கூர்ப்பும் தேசங்களுக்கும் வர்க்கங்களுக்கும் இடையில் ஏற்படும் இடப்பெயர்ச்சி மீதான தடைகளுக்கு எதிர்விகிதத்திலும், கலாசார ஒன்றிணைவுக்கு எதிரான தடைகள் மற்றும் வர்க்கங்கள், கலாச்சாரங்கள் மற்றும் பகுதிகளுக்கு இடையிலான பொருளாதாரம் மற்றும் சலுகைகளில் உள்ள வேறுபாடுகளின் அளவு ஆகியவற்றிற்கு நேர்விகிதத்திலும் இருக்கும். இவ்வாறாக டெச்சு போராட்டத்தை எதிர்கொள்ளும் அதிகாரத்தில் உள்ள மேல்தட்டு வர்க்கத்தினர் தங்கள் போராட்டம் மூலம் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளலாம் என்கிறார்.

நவீனச் சூழலில் மக்களுக்கிடையில் கலாச்சார அல்லது இனவேறுபாடுகள் இருந்தாலே அது தேசியத்திற்கான முன்னெடுப்பை கொண்டுள்ளதாக அறியப்படுகிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் தற்போது நிலவும் இனக்குழு மோதல்கள் இதனை உறுதிப்படுத்துமாறு இருக்கின்றன. 19-ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் ஏற்பட்ட கருப்பின இயக்கம் மற்றும் பிரிட்டனில்

இயங்கும் ஸ்காட்லாந்து, அயர்லாந்து போராட்டக்குழுக்கள் ஆகியவை இதன் உதாரணங்கள். மேலும் சிறிய இனக்குழுக்கள், பண்பாட்டு ரீதியான தன்னுணர்வைக் கொண்டிருந்த போதும் நீடித்து நிலைக்கக்கூடிய தேசிய உணர்வை உருவாக்க எல்லா சமயங்களிலும் அவற்றால் முடிவதில்லை. ஒரு பெரிய, ஆக்கிரமிப்பு மிக்க தேசத்துடன் தொடர்பு கொண்ட ஒரு சிறிய இனக்குழு எவ்வித அடையாளமும் இல்லாமல் படிப்படியாக உள்வாங்கிக் கொள்ளப்படலாம். உண்மையில் இதை வகை மாதிரியான அனுபவம் எனலாம். இது நடக்கும் பொழுது மனித இனம் இழப்புக்கு உள்ளாகிறதா? ஒரு இனக்குழுவின் மறைவு ஒரு குழுவின் உறுப்பினராக உள்ள தனிமனிதரின் மறைவு போன்றதல்ல. அவர்கள் தொடர்ந்து மறு உற்பத்தி செய்து கொண்டும் மற்றவர்கள் வழங்கும் அளவுக்கு தாங்களும், தம்மை உள்வாங்கிக் கொள்ள பெரிய குழுவிற்கு பங்களித்து வருகிறார்கள். ஆனால் சிறுபான்மைக்குழுவை சேர்ந்த உறுப்பினர்கள் தம்முடைய தனி அடையாளத்தை இழப்பதற்கு முன்பாகவும், பின்பாகவும் சுரண்டலுக்கும், ஆதிக்கத்திற்கும் உட்படுகிறார்கள். இதற்கான தீவிர போராட்டத்தை முன்னெடுப்பதே தேசிய இயக்கங்களின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும்.

தேசியம் என்ற சொல்லாடலை, அதன் அர்த்த தளத்தை சரியாக வரையறுப்பது குறித்த சிக்கல் ஆரம்பம் முதலே இருந்து வருகின்றது. சில சமயங்களில் அரசு மீதான விசுவாசமாக தேசியம் அறியப்படுகிறது. சில சமயங்களில் ஓர் இனத்தின் சொந்த கலாச்சாரம் மற்றும் நாகரீகம் மற்றவர்களை விட மேன்மையான என்று நிறுவுவதன் மூலமாக அறியப்படுகிறது. இன்னொரு நிலையில் தேசிய அடையாளங்களை முன்னெடுப்பதன் வழியாக அறியப்படுகிறது. இதன் தொடர்ச்சியில் ஸ்காட்லாந்தை சேர்ந்தவர்கள் கில்ட் என்னும் ஸ்காட் கலாச்சார உடையை அணிந்து கொண்டதன் காரணமாக ஸ்காட் தேசியவாதிகள் என அறியப்பட்டார்கள். இவ்வகையில் தேசியம் அதன் சரியான திசை வழியில் செல்லும் போது அரசியல் கோட்பாடாக தான் பயணத்தைத் தொடர முடியும். அதை முன்னெடுப்பவர்களும் அரசியல் ரீதியாகத்தான் அதை வெளிப்படுத்துகிறார்கள். ஜெர்மனியின் பிக்டேயும் பாலஸ்தீனின் யாசர் அரபாத்தும் இதன் உதாரணங்கள். பிக்டே ஜெர்மன் மொழியின் தனித்தன்மை மற்றும் ஜெர்மானிய கலாசாரத்தை முன்னெடுத்தார். யாசர் அரபாத் பாலஸ்தீனை முன்னெடுத்தார். மேலும் தேசியம் அதன் குணாம்ச ரீதியாக மூன்றுவிதமான கருத்து நிலைகளில் வெளிப்படுகிறது. ஒன்று சமூகவியல் இரண்டாவது கலாசாரம் மூன்றாவதாக நிறுவனங்கள்.

சமூகவியல் கருத்துரு	கலாசார கருத்துரு	நிறுவனக் கருத்துரு
குடும்பம்	மதம்,	நகராட்சி
	மொழி	நாடு
கோத்திரம்	நாகரீகம்	
	கலாசாரம்	அரசு
இனம்	இலக்கியம்	நிர்வாகம்
சமூகம்		

மேற்கண்ட மூன்று கருத்துருக்கள் தேசியம் பற்றிய புறவயப்பார்வையை நமக்கு கொடுக்கின்றன. பல அரசியல் கோட்பாட்டாளர்கள் தேசியத்தை பொதுவான வரையறுத்தார்கள். ஆனால் வரலாற்று நிகழ்வுகள் சில சமயங்களில் அதை உறுதிப்படுத்தவும், சில சமயங்களில் மீறவும் செய்தன. சோவியத் யூனியனுடன் இணைந்திருந்த லாத்வியாவை எடுத்துக் கொள்வோம். அங்கு ஒரு காலத்தில் ரஷ்ய மொழி மட்டுமே ஆதிக்கம் செலுத்தியது. சோவித் யூனியனின் தகர்வுக்கு பிந்தைய கட்டத்தில் லாத்வியா சுயநிர்ணயம் பெற்று தனிநாடாக மாறியது. அதன் பிறகு லாத்விய மொழி மட்டுமே அங்கு அதிகாரம் செலுத்தும் ஒன்றாக மாறியது. இந்நிலையில் தேசிய கண்ணோட்டத்தில் ஒரே நிலப்பரப்பில் பொதுமொழி என்பதும் சிக்கலான ஒன்றே. பிரெஞ்சுகோட்பாட்டாளரான எர்னெஸ்ட் ரெனான் தேசியம் என்பதை தேசியமாக தன்னை உணர்ந்து கொள்கிற அல்லது நம்புகி மக்கள் தொகுதியாக பார்த்தார். அவரின் தன்னிலை பார்வை கூட ஒரு கட்டத்தில் பொருந்தாத ஒன்றாக மாறியது. தேசியம் குறித்து அறிவார்த்தமான சிக்கல்களும் சில நேரங்களில் ஏற்படுகின்றன. தேசியவாதிகளில் தாராளச்சிந்தனையாளர்கள், சோஷலிஸ்ட்கள் மற்றும கன்சர்வேட்கள் ஆகியோர் இந்த சிக்கலுக்கு உள்ளாகிறார்கள். தேசிய கோட்பாடு என்பது வரலாற்றடிப்படையில் மேற்கின் தோற்றமாகும். மேற்கில் தோற்றம் கொண்டு உலகின் மற்ற பகுதிகளுக்கு பரவிய நிலையில் தேசியம் அதற்கான அர்த்த பிரதிகளை, முறையியலை பிராந்தி அடிப்படையில் வித்தியாசப்படுத்தியது. எல்லா பகுதிகளிலும், எல்லா காலகட்டங்களிலும் தேசியம் முழுமுதலான ஒன்றாக இருக்கவில்லை. உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக் கொள்வோம். அது அடிப்படையில் பல வேறுபட்ட இனங்களை, கலாச்சார கூறுகளை உள்ளடக்கிய பிரதேசமாகும். மேலும் அதன் தேசிய கட்டமைப்பு ஜெர்மனி, பிரான்சு, போலந்து ஆகியவற்றிலிருந்து முற்றிலுமாக வித்தியாசப்படுகிறது. அது மாதிரியே ஆப்ரிக்காவின் தேசிய இன கட்டமைப்பு அங்கும் அது வெறும் தன்னிலையாக மட்டுமே இல்லை. புறவயமாகவும் இருக்கிறது.

தேசியம் என்ற சொல்லாடல் உலக வரலாற்றின் பக்கங்களில் சிறு சிறு கோடுகளை வரைந்து கொண்டு தன்னளவில் முன்னகர்ந்திருக்கிறது. இன்றைய தேசியம் பற்றிய கோட்பாடுகளின் முன்தொகுதிகள் 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளின் தத்துவவியலாளர்களால் முன்னெடுக்கப்பட்டவை. 19ஆம் நூற்றாண்டில் தான் உலக இனங்களிடையே தேசியம் பற்றிய உணர்வு முன்னெழும்பத் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளை மட்டுமல்லாமல் அமெரிக்காவையும் இது பாதிக்கத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டு என்பது இதன் மிகச்சரியான வடிவம். இதன் தொடக்கத்தில் தேசிய உணர்வானது அரசியல் பரிணாமமாக மாறத் தொடங்கியது. அந்த அரசியல் பரிணாமத்தின் தர்க்கரீதியான வடிவங்கள் தான் காலனியமாக, இறுதிகட்டத்தில் காமன்வெல்த் ஆக மாறின. இவை எல்லாம் கடந்த நூற்றாண்டின் இடைக்கட்டத்தில் அதன் முதிர்ந்த வடிவத்தை அடைந்தன. இதில் பிரிட்டனே மிகப்பெரும் வெற்றி பெற்றது. பூகோளத்தின் பத்து சதவீதத்திற்கும் அதிகமாக நிலப்பகுதிகள் அதன் காலனிகளாக இருந்தன. ஒருமுறை பிரிட்டன் பாராளுமன்றத்தில் வின்சன்ட் சர்ச்சில் கூட இதை குறிப்பிட்டார். நாம் முந்தைய வரலாற்றில் காலனிகளை நம் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் உலகவரலாற்றில் எப்போதுமே குவியமாக நிற்போம். என்றார். மனிதன் சமூக விலங்கு என்ற அடிப்படையிலிருந்து தர்க்க ரீதியான தொடர்ச்சியாக தேசியம் முன் நிற்கிறது. அவனின் எல்லா அடையாளங்களும் ஒன்றை ஒன்று வெட்டிக் கொண்டும், உருமாற்றிக் கொண்டும் தேசிய இன எல்லைக்கோட்டை உருவாக்குகின்றன. இங்கு ஒற்றைத்தன்மை என்பதே இல்லை. எல்லாம் பன்முக அடையாள தளங்கள் தான். அரசுகள் மற்றும் நிலவியல் கூறுகள் என்பவை அதனை உள்ளடக்கிய மக்கள் தொகுதிக்கு நேர்விகிதத்தில் இருக்கின்றன. ஆக தேசியம் என்பது இருபத்தோரம் நூற்றாண்டில் பிரபஞ்சம் முழுவதும் குவிமயமான சொல்லாடலாக மாறி இருக்கிறது. இதன் தொடர்ச்சியே தற்போது உலகெங்கும் தீவிரமாக கிளர்ந்திருக்கும் தேசிய இனப்போராட்டங்கள். ஆக தேசிய இனங்களைப் பற்றிய புரிதலே அரசியல், அதிகாரம், சமூகம், கலாச்சாரம் இவைகளை பற்றிய தெளிவான புறவய பார்வையை நமக்குள் ஏற்படுத்தும்.

மற்றொரு வாய்ப்பிற்கு ஏங்குபவர்கள்
குடும்பம் என்றொரு
சொல்லைப் பிரயோகிக்காமல்
நூறு வார்த்தைகள் ஒப்பிக்க வேண்டும்
கவலை நிம்மதி துயரம், வாழ்க்கை, வெற்றி, தோல்வி
போன்றவை குடுமபத்தையே பிரதிபலிப்பதால்
அச்சொற்களையும் தவிர்க்க வேண்டும்
நாய், கரடி பூனை நட்டுவாக்காலி
இலை, எறும்பு ஈக்கள் ஒட்டகம்
என அடுக்குபவர்கள் கல்விச்சாலையைவிட்டு
பூரிக்கட்டை இலுப்ப எண்ணெய் புளிக்காடி
முன்பனிக்காலம் வெல்லக்கட்டி புண்ணாக்கு
குரியான் பழம் என்று தொகுத்தால்
சுவராசியத்தைத் தொடரலாம்
காதல் ஆன்மா கனிவு பிறவி, கனவு, பித்து
ரோகம் கபம் நாடி எனத் தொடங்குபவர்கள்
குடும்பத்திற்கு வெளியே இரகசியமாக
மற்றொரு வாய்ப்பிற்கு ஏங்குபவர்கள்
எனச் சந்தேகத்திற்கு உள்ளாக வேண்டி வரும்.
பாமே பனைக்குடும்பம்
இண்டிகா ரெஸ்டாரியா
நெபுலாக்கள்
தஸ்யூக்கள்
என இனரீதியாக வரையறுப்பவர்கள் தொன்மத்தில்
தோல் மாமிசம் வேட்டை காததூரம்
கூப்பிடு தூரம் கல்லெறி தொலைவு
என ஒலிகளை நம்பி களிமண்
வீடுகளில் இருந்தவர்களை
யுத்தங்களுக்காக அள்ளிச் சேமித்தவர்கள்
என வரிசையில் அமரவைக்கலாம்
வளர்ச்சி வரலாறு அழகியல்
உளவியல், வணிகம், ஊடகம், உணவு, பாலியல்
பல்கலைக் கழகம், பார்லிமெண்ட், பெண்கள்
பயணம், நாட்குறிப்பு, திசைகாட்டி, நகரம், தீவு
கடல் கட்டாயக் கருக்கலைப்பு... கூடங்குளம்
ஈமுக்கோழி... அசாமி........பீகாரி.....தேசியம்.

நட்சை வீதிப் பெண்கள்

வீதிகளில் கவிதைகளின் வாசனை
இழுத்துக்கொண்டு சாலைகளையும்
வீடுகளுட்டைகளை
நகரில் கூட்டங்கள், நீர்க்காகங்கள்
கொக்கு மண் கொட்டிடப்படும்
பருவநிலையில் உலாவருபவள்
மேலும் சில குழந்தைப் பாலைகள்
புழுதியுடன் வழிதெருப்பதில்லை
காலத்தில் இடையறு மேகங்களில்லையுமில்
வரி வாயோர அலைச்சாலைக் அகத்தப்பாக
வீண்மீன்மல்
ஆகாயமாயிரம் பாலை, நகரில் உலவு வேழம்
கொடுக்க இடைக்காளி வீட்டது நடக்கிறபள்
குளை ஒருவரில் நீர்ப்பாசிகள் படிதல்
மழைக்காலத்தில் கூழாங்கற்களைப்போலக்
பொருக்கலைகள்
காட்டுப்புயில் சந்திக்கவை
காண்கிறீ, வீதிகளில் முன்பு அல்லது உருக்குக் கடற்களில்
மீசகி உருக்க குரலில் கட்டுடக
வைகைப்புதியது
என்ன முட்டாள்களோன கூகள்
வாகனங்களில் நகர்ந்தும் சாலை
இங்கு கூடைத்திரகள்
பட்டைப் பொலிவோ
'என்ன நாட்டினைப் நாங்கள் அவைபாகி வீட்டோடு
தகவ செய்து இருப்பீர்கள்'
வேளில் கால் வழும் போது எங்கும் இருக்கிறது பாறுக்கள்
உதைத்து அருவமான இரைக்கப்பேர் பரிதாபமாக
முடிவிற்கு வந்துவிடுகிறது. மேலும் என்ன
ஒரு கவிதையை இந்த காகத்தின் குரலில் உங்களுடன்
எங்கே அழைத்துப் போக முடியும்?
அந்தச் சோம்பேறியோ
குளிர்ந்த சதில் பெண்கள் ஒருவேளை
முட்டைமீனொகளை எனக் காத்திருக்கிறான.



நான் வியர் ஸ்டிக்குகளில்
எலும்பில்லாத கோழித் துண்டுகளை
வதக்கும் இல்லத்தரசிக்கு
கோரைப் பற்கள் மறைந்து
சீரான வரிசையில் சிவந்த ஈறுகள்
பளிச்சிடுகின்றன
அவ்வாறே மிகச்சமதளமாக
வழுக்கும் ஓடுகள் பரவியிருக்கிறது அவள் வீடு
வாசலில் மஞ்சளாய் வரவேற்கும்
தொட்டிகளில் மலர்கள் அசைகின்றன
குழந்தைகளின் வண்ணமயமான
சிறிய உள்ளாடைகளை கிளிப்புகள் பொருத்தி
உலர்த்துகிறாள்
அந்நேரத்தில் அவளது இளம் மார்பகங்கள்

ஒன்றுடன் ஒன்று அழுந்தி மோதிக் கொள்கின்றன
வெளியில் இருந்து அவளே
வேறொருத்தி போல அதை உற்றுப்பார்த்து
கைகளால் இருபுறம் நிமிர்த்தி விலக்கி வைக்கிறாள்
மிக அடக்கமான ஒரு பெண்ணின் செய்கை இது
மேலும் அவள் தன் கடைவாய்ப் பற்களைக்
காணும் பொருட்டு
உதடுகள் கிழியும் அளவிற்கு வாயைத் திறந்து
தனது தொண்டைக் குழியையும் ஒருசேர கவனிக்கிறாள்
தன் யோனியை கண்ணாடி வைத்துப் பார்த்த
பிராயத்தில் இருந்து அது நைச்சியமாக
இந்நாளில் உடலுறவிற்கு அதனளவில்
பழக்கப்பட்டுவிட்டதை சோம்பலாக அபிநயிக்கிறாள்
இளம் குழந்தைகளின் பொருட்டு
அடிக்கடி திடுக்கிட்டு விழித்தெழும் அவள்
கூடைகளில் நாப்கின்கள் நிரம்பி விடுவதை சம்சயிக்கிறாள்
குழந்தைகளுக்கான உறையிலிடப்பட்ட
தின்பண்டங்களை மேசைகளில் அடுக்கியபின்பு
உடலை இளமையாக வைத்திருக்க உதவும்
பெண்களுக்கான பளபளக்கும் பத்திரிக்கைக்குறிப்புகளை
வாசிக்கத் துவங்குகிறாள்
போட்டி நிறைந்த யுகத்தில்
எப்போதும் கிரியேட்டிவிட்டியாக
யோசிப்பதை ஆமோதிக்கும்
ஒரு நீளமான கட்டுரையை படிக்கக் துவங்கும்
போது சீரற்ற மெல்லிய குறட்டையுடன்
அவளது உடல் விறைப்பு குறைந்து ஆடைக்குள் நுழையும்
வாசல் காற்றுடன்
உறக்கத்தில் துவண்டு அயர்ந்துவிடுகிறது.

கணேசகுமாரன்

பாதரசப் பூனைகளின் நடனம்

1959 டிசம்பர் வெள்ளிக்கிழமை மாலை.

ஜப்பானின் மினிமாடா தீவு

சென் எனப் பெயரிட்டிருந்தான் அந்தப் பூனைக்கு அச்சிறுவன். உடல் முழுவதும் சாம்பல் விரவியிருக்கும் சென்னின் வால் மட்டும் அடர் கருப்பில் அசையும் காற்றில் அவ்வப்போது ஓவியம் எழுதியபடி. அன்று சென்னுக்கு நல்லவேட்டை. கரையோரமாய் மரண போதையில் துள்ளிக்கொண்டிருந்தன மினமாட்டா ஆற்றில் ரகசிய வசிப்பிடத்திலிருந்த பல பெரிய வகை மீன்கள். தன் மென் சாகசங்களை பிரயோகிக்காமல் மிக எளிதாய் அம்மீன்களை கவ்வி இழுத்து நிலத்தில் அறைந்து நின்றது சென். அதன் பசிக்கு இசைந்து கொடுத்தன விடுதலை விரும்பிய மீன்களும், பெரிதாகிக்கொண்டே வந்தது சென்னின் வயிறு. ஒருமுறைதன் உடம்பை சிலிர்த்துக் கொண்டது பசியின் வேட்கை தீர்ந்ததில் நீண்ட பெருமூச்சு விட்ட சென். முன்னிரு கால்களை நிலத்தில் அழுத்தி புட்டத்தைப் பின் தள்ளி ஒரு ஸ்பிரிங் பலகையென உடலை நெளித்தது. புளோரசன்ட் பச்சை படர்ந்த விழிகளை உருட்டி நிதானித்த சென்னின் மூளைப்பாதையில் மின்னல் வெட்டி நிலப்பிறழ்வை உண்டாக்கியது அதன் முதுகுத்தண்டில் விரைந்த திரவம். இமைகளை மூடித்திறந்த சென்னின் எதிரில் நதி நிறம் மாற்றி நெளிந்தது. நிலம் மோதியது சென்னின் தலை. பூமி மிதித்து எழுந்தன கால்கள். சட்டென்று உமிழ்நீர் வற்றிப்போக நாவினால்

மேலுதட்டை தடவிக் கொண்டது. பாய்ச்சலாய் அவ்விடத்தைக் கடந்தது மியாவ்.

ஒருவித ரிதம் சேர்ந்திருந்தது சென்னின் உடம்பில். பெரிதான வயிறு மேலும் பெதிதாக பின்னிரு கால்களை இடவலமாய் வளைத்து நடந்த சென்னின் அசைவில் சாவின் நடனம். அச்சுவரின் மேல் ஏறி நின்றது ஓர் அனாயாசத் தாவலில். மீண்டும் ஒரு முறை நாவினால் மேலுதட்டை. சதுரப்பாறைக் கற்களினால் கட்டப்பட்டிருந்த அந்த வீடு உறுதியானது. கடும் குளிரைத் தாங்கும் வண்ணம் படுதா துணி அதன் உச்சியிலிருந்து விரிந்து மூடியிருந்தது. முன்னிரு கால்களை சமச்சுவரில் அழுந்தப் பதித்த சென் தலை உயர்த்தி அந்த உச்சியினைப் பார்த்தது. காற்றில் தன் உடலைப் பயணித்து அக்கூரையின் உச்சியை அடைந்தது. உடல் லேசான தள்ளாட்டத்தில் இருக்க சென்னின் கண்கள் நிலம் கண்டு கிறங்கின. மிகக் கூர்மையான நுனியினை உடைய மரக்குச்சி ஒன்று அவ்வீட்டு வாசலில் நிறுத்தப்பட்டிருந்தது. மிருகங்கள் ஏதேனும் வீட்டுப்பக்கம் வந்தால் விரட்டுவதற்கென்று. குச்சியின் அடிப்பாகம் பூமியில புதைந்திருக்க அதன் கூர்முனை சென்னின் நினைவை வசீகரித்தது. அதன் கண்களில் வழிந்த இறுதிப் புன்னகையில் அத்தனை காதல். தன் வாழ்நாளில் இனி நிகழ்த்தவே முடியாத காரியத்தை செய்தது சென். ஆகாயம் நோக்கியிருந்த கூர்முனை நோக்கி உச்சியிலிருந்து தன் உடம்பை வீசிப் பாய்ந்தது. வயிற்றைக் கிழித்து வெளிவந்து வானத்திற்கு தான் பூசிக்கொண்ட புதிய நிறத்தினை அக்கூர்முனை காட்டியபோது மூடியிருந்த சென்னின் கண்களில் நிம்மதி. அதன் சாம்பல் நிற உடம்பிலிருந்து பெருகிய குருதி கறுப்பு வாலின் வழியே வழிந்து சொட்டுச் சொட்டாய் நிலத்தில் விழுந்து கொண்டிருந்தது. அமைகளற்ற இடுங்கிய விழிகளில் நிரந்தரமாய் திகிலைத் தடவிக் கொண்டிருந்தான் சிறிது தூரத்தில் அமர்ந்து கொண்டு சென்னின் தற்கொலையினை மனம் அதிரப் பார்த்தப்படி அச்சிறுவன்.

அன்றிலிருந்து ஒரு வாரத்திற்குள் மினிமாட்டா தீவில் நூற்றுக்கும் மேற்பட்ட பூனைகள் இறந்து போயின. இயல்பான மரணங்களின்றி உயரம் சென்று வீழ்ந்து சிதறிய பூனைச்சதைகள். இணையினை இழந்து பூனைகளின் பாடலில் அமானுஷ்யம் அலைந்து திரிந்தது தீவெங்கும். அமைதி கலைந்தனர் மக்கள். நிராதரவாய் கைவிடப்பட்டிருந்தது அன்பின் பகிர்தலின்றி கலங்கிய அவர்களின் கருணை. அவர்களும் தங்கள் நிம்மதியினைத் தேடிக் கொண்டனர் சில நாட்களில். உயரங்களிலிருந்து வீழ்ந்தனர். பாறைச்சுவற்றில் தலை மோதிச் சிதறின. அத்தனையும் கவனித்தபடி மினமாட்டா ஆறு நகர்ந்து கொண்டிருந்தது தன் குரூரத்தினை ஒளித்து வைத்து.

1999ன் ஜனவரி ஞாயிறு அதிகாலை
கொடைக்கானல்

சபரிநாதனுக்கு மனம் மரத்திருந்தது. பிரசவித்து முடித்த சில நிமிடங்களிலேயே மாலினி இறந்து போயிருந்தாள். நினைவிலிருந்து அகர மறுத்தது பிறந்த குழந்தை என்று டாக்டர் தன்னிடம் காண்பித்த பிண்டத்தின் பிம்பம். இங்குபேட்டரில் வைக்கப்பட்டிருந்த இதற்கு விரல்களின்றி கைகள் வளைந்து முடிந்திருந்தன. தலை மிகப்பெரியதாயிருக்க வாய் திறப்பிற்கான துவாரம் இன்றி தொப்புளுக்கு கீழே ஒரே கால் ஒரு பக்கமாய் வளைந்திருந்ததது. எல்லாவற்றையும் மீறி அதன் முதுகு பக்கம் முளைத்திருந்த பெரிய கட்டி. ஊறிய தந்தைமையின் அழுகப் சட்டென உள்சுருங்கி அருவருப்புடன் அவனைப் பின் நகர்த்தியது. பூமிக்கு வந்து பத்தே நிமிடங்களில் தன் உயிரை உதறித் தொலைந்து போகும் அச்சிசு தன் தந்தைக்கு காட்டிய கடைசி தரிசனம் கடவுளின் தரிசனம்.

டாக்டர் நித்ரனின் அறையில் அமர்ந்திருந்தான் சபரிநாதன். கண்ணாடி மேஜையின் மேல் ரிப்போர்ட் விரிந்திருந்தது. அவனின் செமன் ரிப்போர்ட். டாக்டர் நித்ரன் நிதானமாய் அணுகுண்டுகளை வீசினார்.

பிரச்சனை உங்ககிட்டேர்ந்துதான் தொடங்கியிருக்கு மிஸ்டர் சபரிநாதன். நான் சில விசயங்களைப் பேசுறதுக்கு முன்னால நீங்க எங்க ஒர்க் பண்றீங்கன்னு தெரிஞ்சிக்கலாமா? நித்ரன் கண்களில் தீவிரம். புருவம் உயர்த்தி மெதுவாய்ப் புன்னகைத்தார் சபரிநாதன் தன் வேலையைப் பற்றிய விபரம் சொன்னதும். ஸோ இந்த ஹாஸ்பிடல்ல யூஸ் பண்ற கெர்மாமீட்டர் நீங்க இல்லேன்னா வேலை செய்யாது. அப்படித்தானே. ஒகே மிஸ்டர் சபரி. ஒரு கரு உருவாவதற்கான அத்தனை பாசிபிலிடீசும் உங்க விந்தணுக்கள்ல இருக்கு. அதே சமயம் எங்க டெஸ்டில தெரிஞ்ச ஒரு அதிர்ச்சிகரமான விஷயம் கதிர் வீச்சுடைய சில துகள்களும் அதில் கலந்திருந்துதான். ட்ரிட்டியம். அர்கான்னு நான் விளக்க விரும்பல. பயோ கெமிஸ்ட்ரி முடிச்ச உங்களுக்கே அது தெரியும். மேலும் என்ன விதமான கதிரியக்க மிச்சங்கள்னு தெரிஞ்சிக்கிற வசதி இந்த ஹாஸ்பிட்டல்ல இல்ல . வாழ்வாதாரத்துக்காக நீங்க பாக்குற வேலைதான் உங்க மனைவியையும் குழந்தையையும் கொன்னுருக்கு. ஏன்.... நாளைக்கு அதேதான் உங்களையும் கொல்லப்போகுது. இப்ப இருக்கிறதைவிட கொஞ்சம் பர்சண்டேஜ் அதிகமானாலும் உங்களுக்கு கான்சர் வர வாய்ப்பிருக்கு சபரி. தற்கொலைக்கு நம்ம நாட்ல அனுமதி கிடையாது சபரிநாதன். இந்த உலகத்தில உங்க உயிரைப் போக்கிக்கிறதுக்கு உங்களுக்கே உரிமை இல்லாதப்ப நீங்க எப்படி மத்தவங்க உயிரை எடுக்க முடியும்.

சபரிநாதனுக்கு கண்கள் கலங்கின. உண்மைய கட்டுவிரல் நீட்டி நெஞ்சைச் சுட எனக்கு எந்த கெட்ட பழக்கமும் கிடையாது சார் என்றான் தொண்டையடைக்க. ஸோ வாட்.. எங்கப் பூனையாவது சிகரெட் குடிச்சி கேள்விப்பட்டிருக்கீங்களா. ட்ரிங்க்ஸ் பண்ணி பாத்துருக்கீங்களா... ஆனா அந்தப் பூனைகள்லாம் கூட்டமா தற்கொலை பண்ணிக்கிட்டது என்று உங்களுக்குத் தெரியுமா சபரிநாதன் நித்ரனின் குரலில் வேகம் கூடியது. புரியாமல் விரக்தியாய் தலையசைத்தான் சபரிநாதன். 1950கள்ல ஜப்பான்ல நடந்தது அந்தக் கொடூரம். என்ன காரணம். இதோ நீங்க வேலை பாக்குறீங்களே எம்.பி.சி. மெர்குரி பிளான்ட் சென்டர். அது மாதிரி ஒரு பாதரசத் தொழிற்சாலையில் ருந்து வந்த கழிவுகளால... ஸாரி அது கழிவு இல்ல. பாதரசமேதான் வெளியானது. ஆற்றில் கலந்த பாதரசம் மெத்தில் மெர்குரிங்கிற உயிரிப் பொருளா மாறி வேகமாக பரவ ஆரம்பிச்சது. தாவரங்கள்ல பாவின மெர்குரியை சாப்பிட்ட சின்ன மீன்கள் அந்த மீன்களைச் சாப்பிட்ட பெரிய மீன்கள். அதை சாப்பிட்ட பூனைகளும் மனிதர்களும் மூளை நரம்பு பாதிக்கப்பட்டு தற்கொலை பண்ணிக்கிட்டாங்க. கொஞ்சம் தாமதமா உணர்ந்தாலும் ஜப்பான் அரசாங்கம் இந்த தொழிற்சாலையை மூடிடிச்சு. ஆனா பத்து வருஷமா இங்க இயங்கிக்கிட்டிருக்கிற நீங்க வேலை பாக்குற தொழிற்சாலையில உபயோகப்படுத்தப்படுற கெமிக்கல் எந்த அரசாங்கம் அனுமதி தந்தது சபரிநாதன்? நாம் எத்தனை அபாயகரமான காலகட்டத்துல வாழ்ந்துகிட்டிருக்கோம்னு தெரியுமா உங்களுக்கு?

உள்ளுக்குள் அனல் பொங்கிட கண்ணீர் வழிய அமர்ந்திருந்தான் சபரிநாதன். ஸாரி மிஸ்டர் சபரிநாதன். நான் உங்களைக் குறை சொல்லல. என்னையும் சேர்த்துதான். படிச்ச நாமெல்லாம் கொஞ்சம் விஷயம் தெரிஞ்சும் இதக் கண்டும் காணாம இருக்கிறதால தான் எத்தனையோ ஏழைகள் பலியாடுகளா இந்த அரசாங்கத்து கண்ணுக்கு ஆகிறார்கள். மக்கள்கிட்ட தீவிரமான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி இந்த அராஜகத்தை தடுத்து நிறுத்தனும்னு நான் விரும்புறேன். பாதிக்கப்பட்ட நீங்களும் இதுக்கு கோ ஆப்பரேட் பண்ணனும் சபரிநாதன். நித்ரன் சபரிநாதனின் கையை ஆறுதலாய் அழுத்தினார். நிச்சயமா சார் என்றான் தலையாட்டி. அன்றிலிருந்து ஒரு வாரம் கழித்து தன் வீட்டு மாடியிலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்துகொண்டான் சபரிநாதன்.

2101 டிசம்பர் 26 ஞாயிறு கிறிஸ்துமஸ் நள்ளிரவு
வேடங்கலம் கடலோரப்பகுதி.

9.6 ரிக்டர் அளவில் காத்திருந்தது இறுதி. விபரீதம் உணர்ந்த பறவைகள் அந்த நள்ளிரவில் அவசர அவசரமாய் இடம் பெயர்ந்ததை பீதியுறைந்த கண்களுடன் பார்த்தவாறு படுத்துக்கிடந்தார் கந்தசாமி தன் வீட்டு வாசலில். கிட்டத்தட்ட ஒரு மாதமாய் தொடர் இருமல். தொண்டை ரணமாயிருந்தது இருமி இருமி. பக்கத்தில் படுத்திருந்த பேரனைப் பார்த்தார். நெஞ்சின் அத்தனை எலும்புகளும் விரிந்து தெரிய பெரிதான மூச்சு விட்டபடி படுத்திருந்தான். பிறந்ததிலிருந்தே இப்படித்தான். இவனையேப் படாதபாடு பட்டுத்தான் பெற்றெடுத்தாள் இவன் அம்மா. உயிர்கொடி அறுந்து இவன் பூமியில் விழுந்ததுமே சற்றும் தாமதமின்றி போய்ச் சேர்ந்துவிட்டாள் புண்ணியவதி. தாய்ப்பாலுக்கு வழியற்றுப் போனவன் உடலில் தெம்பின்றியே வளர்ந்தான். இவனைப் போல இவ்விடத்தில் நிறைய குழந்தைகள். என்ன சாப்பிட்டாலும் உடம்பு ஏற்றுக் கொள்ளாது. எவருக்குமே வாழ்க்கையில் எவ்வித பிடிப்புமின்றியே நிலையற்ற சித்தத்துடன் வளர்ந்தார்கள். உண்ணும் அத்தனை உணவிலும் சிறிய துளியாவது விஷம் இருந்தது. நெஞ்சு எரிந்து உள்சென்ற உணவு குடல்களைத் துளையிட உணவு செரிக்காமல் குமட்டி எடுத்த வாந்தியில் இரத்தம் சிதறுவதைக் கண்ட வேடங்கலத்து மக்கள் தங்கள் உடம்பில் ஓடும் விஷ இரத்தத்தினை வெறுத்து வெளியேற்றினர். தற்கொலைகள் அதிகம் நிகழும் இடமாக தமிழகத்தில் முதலிடம் வேடங்கலத்துக்கு. தன் மருமகனின் தற்கொலைக்கு இன்னும் காரணம் தேடிக் கொண்டிருக்கிறார் கந்தசாமி. காரணமின்றி நிகழும் தற்கொலைகள் குறித்து ஆய்வு செய்ய மனிதர்கள் எவருமின்றிப் போனது கலியின் கடைசி.

அந்த சிறு எரிமலைப் பாறைக் குழம்பு கண்விழித்தது. வெடிக்கத் துடித்தது. பல்லாயிரக்கணக்கான வருட அழுத்தம் மீறி. காத்திருந்தது ஒரு சமிக்ஞைக்கென. அணு உலை மிகப்பெரும் சத்தத்துடன் கனவுகளுடன் இயங்கிக் கொண்டிருந்தது நிகழப்போகும் விபரீதம் புரியாமல். இரு நாட்களுக்கு முன் கடல் சற்று உள் வாங்கியிருந்தது. காணாமல் போன கடல் நீரினைப் பற்றிய கவலையின்றி உலை தன் வீரியத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அந்தப் பகுதி மக்கள் நிறையப் பேருக்கு கேட்கும் திறனை கேட்டுப் பெற்றிருந்தது நிரந்தரமாய் காற்றில் உறைந்துவிட்ட உலைச்சத்தம். சாடையில் பேசியே புதிதாய் ஒரு மொழியை உருவாக்கியிருந்தனர் வேடங்கலத்து மக்கள். நூறு வருடத்துக்கு மேலான சாபம் தங்கள் வாழ்விடத்தின் மீது தன் ராட்சத வலையை விரித்தபடி காவல் புரிந்து வருவதை அம்மக்கள்

பற்றுக்கொண்டுவிட்டனர். பிணங்களுக்கு பேசும் சக்தி கிடையாது என்பதைப் புரிந்து வைத்திருந்தனர். வாழ்வு குறித்த தீவிரமோ மரணம் குறித்த அச்சமோ இல்லையெனினும் தினம் தினம் அவர்கள் சாவினை சந்தித்து மீண்டனர். அருகில் ஆற்றில் கலந்த அணுக்கழிவுகள் பின் கடல் சேர மீன்கள் நீருக்குள்ளே தற்கொலை செய்து கொண்டன.

திடீரென்று கந்தசாமியின் செவித்துளையிலிருந்து இரத்தம் பிதுங்கி வழிய அதிர்ந்து திரும்பியவர் பிரதேசமெங்கும் பரவிய வெளிச்சத்தைக் கண்டு புருவம் சுருக்கினார். பேரனை இறுக்க அணைத்துக் கொண்டார். கடலோரமாய்த்தான் அவர் வீடு இருந்தது என்றாலும் அணு உலை அவர் பார்வையில் படும் தூரத்தில்தான் இயங்கிக் கொண்டிருந்தது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே அணு உலை மீதிருந்து நெருப்பு பந்து குப்பென்று எழுந்து இரவின் நிறம் மாற்றி வானம் நோக்கி உயர்ந்து விண்மீன்களை கருக்கியது. உலையின் சுற்றுச் சுவர் படீரென வெடித்து தெறிக்க பெரும் நெருப்புக்கோளம் கந்தசாமியை நோக்கி வந்தது. இரு நாட்களாய் மௌனமாயிருந்த கடலில் பெரும் இரைச்சல் எழுந்தது. சீற்றத்துடன் பேரலை உலைகளின் மீது மோதியது. கந்தசாமி தலைக்கு மேலே நிலப்பாறை பெயர்ந்து கண்ணிமைக்கும் நேரத்தில் பறந்து காணாமல் போனது. தன் பேரனை அணைத்தபடி வாய் பிளந்த பூமிக்குள் புதைந்தார். நெருப்பில் அவிந்து நீரில் மூழ்கியது வேடங்கலம். பிரதேசமெங்கும் வீசிய விஷக்காற்று உறைந்து நின்றது. அங்கிருந்து 3000 கிலோமீட்டருக்கு அப்பால் வரை பரவிய விஷக் கதிர் வீச்சு மிருகங்கள், மரங்கள், செடிகொடிகள், ஆடுகள், மாடுகள், மிச்சமிருந்த மனிதர்கள் எவற்றையும் விட்டு வைக்காமல் பரவிப் படிந்தது .லட்சம் வருடங்களானாலும் உயிர்கள் தோன்ற வழியின்றி மலடான நிலத்தை வரமளித்தப்படி.

பனிப்பாலை

.... பின்
27 வெள்ளை குதிரைகளும்
பனிப்பாலைக்குள் ஓடி ஒளிந்துகொண்டன.

ஓலமாய் வீசும் கொடும் பனிக்காற்றில்
கணைக்கின்றன அவை
இதுவரை உண்டறியா
வெள்ளை புற்கள்
பாலை உருகி வழிகையில்
ஜலம் கழித்து, எச்சில் ஒழுக்கி...

பெருங்கோடையது
குதிரைகள் உருகி உருகி
உருவழிந்து பிரம்மபுத்திராவிற்குள் வழிய
கரையில் 24×7=108 துருப்பிடத்த லாடங்கள்

மேஜிக்ரியலிசம்

பிளந்த முந்திரி கொட்டை யோனி யென்றானது.
பொரிந்த சீனியவரை
வற்றலில்
முதலியின் முதுகுத்தொலி.

மேஜிக்ரியலிசம்
குளக்கரையில் கரங்களை இழக்கத்தான் வேண்டுமவன்
முதலையின் வாயில் கரமொன்று பிறக்க
மரத்தடியில் விரிந்து நிலையிலிருந்த புத்தகத்திலிருக்கும்
புலியென்ற சொல்
இவ்வயலில் மேயும் ரிஷபங்களைக் கொன்றிருக்காது.

டொப்
அம்மானின் மேல் மேலுமொரு புள்ளியொன்று பிறக்கிறது.
நாட்டுத்துப்பாக்கியின் 303 (7.7 மி.மீ) ரவையது
இத்தாது வருடத்தில் உன் மரக்குதிரையை லாயத்தில் கட்டு
விதைக்காத வயலின் அறுவடையை உண்டு கொழுக்கிறது
மாயநிலமிது எருதுகளின் 37 நாக்குகளில் ஒன்றும் தீண்டவில்லை
அப்பச்சைவலை
மேலெழும்பி பறக்கின்றது ஆயிரமாயிரம் பச்சை வெட்டுக்கிளிகள்.

தீபச்செல்வன் கவிதைகள்

அகதியின் பள்ளிக்கூடம்

அகதி முகாமாக்கப்பட்ட பள்ளியின்
கதிரை மேசைகள் அள்ளியேற்றப்பட்ட.
ஒருநாள் புத்தகங்கள் தொலைந்துபோயின
யாரும் திரும்பாத காலத்தில் போர்க்களத்தில் நிற்கையில்
காயங்களை மிகுந்த பள்ளியின் மணியை அசைத்திருப்பாயா?
நொந்த உள்ளத்தோடு கிழிந்து சீருடைகளுடன்
நான் அகதியான பொழுது
நிமிர்ந்திருந்த என் பள்ளியும் அகதியானது
ரொட்டிகள் பரிசளிக்கும் பசியாறும் கதைகளை படித்த
மரநிழலின்
இலைகளை பொழியும் சேலைகள் கட்டப்பட்ட மரங்களாலான
வீடுகளில் என்னிடம் புத்தகங்கள் இருக்கவில்லை
அகதி முத்திரை குத்தப்பட்ட பள்ளிக்கு
உன்னைப்போலவே எந்தத் தோழர்களும் திரும்பவிலலை
யாரும் திரும்பாத வகுப்பறையில் பாடல்கள் ஒலிக்கவேயில்லை
பேரீட்சைப் பழங்களில்லை
ஒட்டகங்களில்லை
எண்ணெய் கிணறுகளில்லை
சிறுவர்கள் சாகடிக்கப்படும் யுகத்தில்
ஒரு பாலஸ்தீனச் சிறுவனைப்போல நான் ரொட்டிக்கு
அலைந்தேன்
கிழிந்த என் அகதிப் புத்தகப் பைகளுக்குள்
இறுதிவரை உனக்காக சில ரொட்டித் துண்டுகளிருந்தன.

துயரக்கடலில் மூழ்கியவர்கள்

இறுதி நிலத்தில் கொல்லப்பட்ட மக்களின்
கொய்யப்பட்ட தலைகள் முளைக்குமோலை
துயரக் கடற்கரையில் யாரோ காத்திருக்க பொழுது
துயரக்கடலினுள் மூழ்கிய யாரேனும் வரக்கூடும்
இவள் காத்திருக்கிறாள்
விழுந்திருந்த மரங்கள் மிதக்க
வெட்டப்பட்ட சனங்களின் முகங்கள்
துயரக்கடலின் ஆழத்தில் படிந்திருக்கின
இறுதிநாள் பதுக்கத்தில் எல்லைப்பு வார்த்தைகள்
பாசியில் சிக்குண்டு போயின
அழிவில் வெடித்தும் போர் விமானமும்
மூழ்கடிக்கப்பட்ட சனங்கள்
கடலினடியால் நுழைந்து எங்கோ சென்றனர்
அறுக்கப்பட்ட தலைகள் காழ்ந்து போயின
குற்றத்தில் கதைகள் கரைந்து போயின
யாரும் கரைக்குத் திரும்பவில்லை
கடலினுள் படிந்த சனங்கள்
எப்பொழுது வெளியில் வருவார்கள்?
இறுதி நிலத்தில் மூடிய
அகா நிழல் எப்பொழுது அகலும்?
துயரக்கடலினுள் இறுதிநிலம் படிந்திருக்கிறது
இறுதியில் எல்லாம் அக்கடலினுள் கரைக்கப்படுகையில்
கரையாத இறுதிநிலம் கடலினடியில் பொறுத்துப் போனது
துயரக்கடல் எப்பொழுது பேசப்போகிறது?
இறுதிநிலம் எப்பொழுது வெளியில் வரப்போகிறது?
துயரக்கடலினுள் மூழ்கிய யாரேனும் மீண்டு வரக்கூடுமா?
இறுதியில் இவள் துயரக்கடலினுள் மூழ்கிப்போனாள்

நீ படையெடுத்துள்ள காலத்தில்
நான் செய்யும் பிரகடனம்

எனது நிலத்தின் மீது படையெடுத்து
அதன் பரப்புக்கள் முழுவதையும்
மூடியிருக்கும் இக்கொடும் காலத்தில்

நாம் தூர தேசங்களுக்கு தூக்கி வீசப்படுகிறோம்
வீட்டின் நடுவில்
வாய்களையும் கண்களையும்
இறுக மூடும்படி நடப்பட்டுள்ள
துப்பாக்கியின் நிழல் பூதமாய் கிளம்புகிறது
நாம் தாய் நிலத்தை இழந்திருக்கிறோமென்பதை
நிலத்தை அதிரப் பண்ணும்
கொடும் சிரிப்பு அறிவிக்கையில்
நமது கொடிகள் வீழ்த்தப்பட்டன
அங்கும் இங்குமாக நிலத்தை விழுங்கும் வாய்கள்
அகலத் திறக்கும் காலத்தில்
இழப்புகளுக்கு உள்ளாக்கப்பட்ட
எனது கனவு நிலம்
தன்னை இழக்காமல் இருப்பதை
நான் மீண்டும் பிரகடனம் செய்கிறேன்
சூரியன் மீண்டும் உதிக்கத் தொடங்குகிறது
உன் துப்பாக்கிகளுடைய படை முகாங்களும்
அசைய காற்று வீசுகிறது
வெறும் நிலத்தில் புற்கள் அரும்புகின்றன
கொல்லப்பட்டவர்கள் முளைக்கிறார்கள்
கொல்லப்பட முடியாத ஞாபகங்களும் கனவும்
நிகழத் தொடங்குகின்றன
அழிக்கப்பட்ட நாடு மீண்டும் துளிர்க்கிறது
கொல்ல முடியாத உணர்வோடு
அழிக்கப்பட முடியாத நாமிருக்கிறோம்
ஆக்கிரமிப்புப் படையிருக்கும் காலத்தில்
உன்னை எதிர்த்து வாழ்வுக்கான
பிரகடனத்தை செய்கிறேன்
எனது பிரகடனம் உன்னை சுற்றி வளைத்து
நமது நிலப்பரப்பிலிருந்து
ஆக்கிரமிப்பை விரட்டி அடரும் பொழுது
துப்பாக்கிகளும் படைமுகாங்களின்
கொடிய சுவர்களும் உக்கியழிய
நமது நிலம் மீண்டும் உயிர்க்கும்
குழந்தைகள் விடுதலை நிலத்தைக் காண்பார்கள்.

இருண்ட யுகத்தின் சித்திரங்கள்

வெளிச்சம் இல்லாத சுவர்த்துண்டுகளில்
குழந்தைகள் வரைந்த சித்திரங்களில்
சிவப்புக்கண்கள் விழித்திருக்கின்றன
வார்த்தைகள் இல்லாத காலத்தில்
சுவர் இடுக்கைகளில் ஒளித்த
பழம் பொருட்களில்
குறை வார்த்தைகள் ஒலிக்கின்றன
குழந்தைகள் தம் காலம் முழுவதையும்
துண்டு துண்டுகளாய்
வரைந்து குழப்பிப் போட்டுள்ளனர்
சித்திரவதைகளும் இரத்தமும் பலிகளும்
நிறைந்த பல்லாயிரம் கொடும் இரவுகளை
ஒரு பெட்டியில் அடைத்து வரைந்தனர்
அழிக்கப்பட்ட வண்ணப் பூக்களை
நீல வானத்தை பச்சைப் புற்களை
மூலைகளில் வரைந்து ஒளித்து வைத்தனர்
இருண்ட யுகத்தில் பிறந்து வளர்ந்த குழந்தைகள்
தாம் கண்டவை எல்லாவற்றையும்
கைகளினால் வரைந்துள்ளனர்.

மூட மறுக்கும் பாலகர்களின் கண்களில்
குற்றங்களின் முடிவற்ற காட்சிகள் அசைகின்றன
இறுதியில் எதையோ சொல்ல முயன்றபடி இருக்கும்
மூடாத வாய்களில்
மறைக்கப்பட்ட வாக்குமூலங்கள் ஒலிக்கின்றன
இரத்தத்தில் பிறந்து
இறுதிவரையில் இரத்தம் காயாமல்
பிசுபிசுத்தபடி உடல் எங்கும் வழிய
குண்டுகளால் சிதைக்கப்பட்ட பாகங்கள் உதிர
எனது நிலத்து பாலகர்கள் திரிகையில்
இலையான்கள் காயங்களை அரித்து

அவர்களைத் தின்று முடிக்கன
எல்லோருடைய கண்களின் முன்பாகவும்
எனது தேசத்திற்கெதிரான போரில்
பாலகர்களை பலியிடும் பொழுது
தாய்மார்களை நோக்கி அவர்கள் அழுகையில்
தாய்மடிகளில் இரத்தம் பெருகியிருந்தது
பெண்குறியிலிருந்து குழந்தைகள் வா சிதைக்கப்பட
பாலகர்களின் பூமியின் வேர் கருகியது
போர் ஆயுதங்கள் மிகுந்த ரசனையொடு
பாலகர்களை சிதைத்துக் கொன்று தின்றன
எங்கும் குழந்தைகளின் கண்களை பிடுங்கி
வார்த்தைகளை அழித்து அவர்கள் இல்லாமல்
செய்யப்பட்டனர்
பாலகர்களுக்கு எதிரான போரில்
வேருடன் அவர்கள் அழித்தொழிக்கப்பட்ட பொழுது
பூமி வெளித்துப் போனது
அழிக்கப்படும் தேசத்தில் பிறந்த
ஏதும் அறியாத பாலகர்களைக் கொன்று
இரத்தத்தை உறிஞ்சிப் பருகும் போர்ப்படைகள்
பூமியின் கடைசிப் பாலகனின்
நெஞ்சில் துப்பாக்கிகளால் துளைகளையிட்டு
இரத்தத்தை உறிஞ்சிக் குடித்த பொழுது
எல்லாக் குழந்தைகளும் நிலத்தில் வீழ்ந்து கிடந்தனர்.

-பாலச்சந்திரனுக்கு

மா. கணேசன்

உலகம் அழியாது என்பது அசட்டுத்தனமானது
மனித இனத்தில் சேருங்கள்!

உலகம் அழியும், அழியாது எனும் இவ்விரண்டு நிலைப்பாடுகளுக்கிடையே சிக்கிக் கொள்வது அல்லது இரண்டில் ஏதாவதொன்றின் பக்கம் ஒதுங்கி விடுவது என்பதைவிட எதிலும் சிக்கிக் கொள்ளாமல் தம் வழியே போய்க்கொண்டிருப்பது தான் மிகவும் அபாயகரமானதாகும். மனிதகுலத்தின் பெரும் பகுதியினர் இவ்வாறு தான் போய்க்கொண்டிருக்கின்றனர். ஆகவே தான் உலகின் அழிவு பற்றி பேச்சு எழுந்துள்ளது.

பூகம்பம், புயல்காற்று, பெருமழை, வெள்ளம், எரிமலை வெடிப்பு, சுனாமி, கொள்ளைநோய், பஞ்சம், வறட்சி, வறுமை போன்றவற்றினால் அவ்வப்போது பெருமளவு உயிரிழப்பும், பொருட்சேதமும் ஏற்படுகின்றன. ஆனால் இவையெதுவும் இல்லாமலேயே ஏற்படுகின்ற அன்றாடம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற "பேரிழப்பு" பற்றியே இக்கட்டுரை பேசுகிறது.

அன்றாடம், ஒவ்வொரு கணமும் நிகழ்கின்ற இந்த பேரிழப்பு, பேரழிவு, மனிதர்களின் உணர்வற்ற தன்மையினால் விளைகின்ற ஆன்மாவின் இழப்பு அல்லது மரணம் பற்றியது.

இத்தகைய நிலைமையை நாம் தவிர்க்க வேண்டுமானால், உடனடியாக நாம் ஒவ்வொருவரும் உணர்வுக்கு வருதல் அவசியமாகும். முதலாவதாக, வாழ்க்கை என்றால் என்னவென்று உணர்ந்தறிதல் வேண்டும்.

மேலும், வாழ்க்கை என்றால் என்னவென்று தெரியாமல், மனிதனுக்கும் உலகிற்கும் உள்ள தொடர்பை அறியாமல் உலகம் அழிவது பற்றியும், அழியாதிருப்பது பற்றியும் வெறுமனே விவாதிப்பதில் ஒரு அர்த்தமும் இல்லை.

முக்கியமாக, 21.12.2012ல் உலகம் அழிப்போகிறது எனும் அறிவிப்பை மாயன்களின் பெயரைச் சொல்லி எங்கோ, எவரோ ஒலிபரப்பியிருந்தாலும் நம்மை நாமே கிள்ளிப் பார்த்துக் கொள்வதற்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பமாக இதைக் கொள்வோம். அதே வேளையில், இம்மாதிரியான பேச்சுகளில் விவாதங்களில் தமக்கு விருப்பமோ, ஆர்வமோ இல்லை என்று சொல்லி அல்லது சொல்லாமலே நழுவிச் சென்றிடும் எலிகளையும் தவளைகளையும் வேறொரு சந்தர்ப்பத்தில் பிடிப்போம் (உலகம் இருந்தால்)

மா. கணேசன்
29.02.2012, நெய்வேலி.

உலகம் அழியாது என்பது ஆசட் டுக்கமானது
ஒரு நாள் நீங்கள் இறக்கப் போகிறீர்கள்
என்பதைப் போலத்தான், உலகம்
ஒரு நாள் அழியப் போகிறது
என்கிற செய்தியும்!
அந்த ஒரு நாள் 50 ஆண்டுகளுக்குப் பிறகு
என்றாலும், 5000 மில்லியன்
ஆண்டுகளுக்குப் பிறகு என்றாலும்
அழிவு என்பது அழிவு தான்
ஆனால் "அழிவு" என்கிற சொல்லுக்கும்
முடிவு என்கிற சொல்லுக்கும்
பெரும் வித்தியாசம் உள்ளது
ஆக "முடிவிற்கு வருதல்" என்பது குறித்து
முன்கூட்டியே யோசித்திடாது
வாழ்க்கையை முழுமையாகப்
புரிந்து கொள்ளவும் வாழ்ந்திடவும் உதவிடும்!

இக்கட்டுரை எழுதுவதற்குக் காரணமாய் அமைந்தது "உலக அழிவு மிக அண்மையானது" எனும் கலையாடல் கண்டே. இந்தியன் (22, ஜனவரி 2012) இதழில் வெளிவந்த டைம்ஸ் ஆஃப் இண்டியா செய்தியில், முன்னாள் கலைஞர் இன்றோர் அறிக்கையை எழுதிக் கொடுத்திருந்தனர். இக்கட்டுரையின் கலை கண்டுபிடிக்கக்கிடைக்கின்றது.

"உலகம் அழியப்போகிறது!" என்று சொன்னவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான அடிப்படையைக் கொண்டிருப்பதில்லை. இந்த உலக வாழ்க்கையில் திடமான அர்த்தமில்லை எனக் கண்டவர்கள் உலகம் உடனே அழிந்து போனால் நல்லது என்றுகூட எண்ணலாம். எப்படியோ போராடி உயிர் வாழ்வது தான் வாழ்க்கை. அதில் அர்த்தம் தேட என்ன இருக்கிறது எனக் கண்டவர்கள், உலகம் அழியாது - அப்படியே அழிந்தாலும் நாம் என்ன செய்ய முடியும்? எனக் கேட்கலாம்.

அழிவு பற்றிப் பேசுபவர்கள் எல்லோரையும் எதிர்மறையாளர்கள் என்றோ, மூடர்கள் அஞ்ஞானிகள் என்றோ சொல்லிவிட முடியாது. வெகுபலர் அப்படியும் இருக்கிறார்கள். அந்த வேளையில் உலகம் அழியாது என்று சொன்னவர்கள் நேர்மறையாளர்களைப் போலத் தெரிந்தாலும், அவர்கள் தங்களை விஞ்ஞானிகள் என்று சொல்லிக் கொண்டாலும் அவர்கள் யாரொருவரும் இறுதி உண்மையைச் சொல்லிவிடவில்லை.

வாழ்க்கையின் மிக ஆழமான அம்சங்களான அர்த்தம், உண்மை, குறிக்கோள், இலக்கு மற்றும் முழுமை ஆகியவற்றை குறித்த விஷயத்தில் விஞ்ஞானிகள், அஞ்ஞானிகள், பாமரர்கள், மதத்தவர்கள், மதக்காதலர்கள்... என எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளனர்.

விஞ்ஞானிகளில் எல்லோரும் ஒரே மாதிரியான விஞ்ஞானப் பார்வையைக் கொண்டிருப்பதில்லை. ஒரு சிலரால் முடிவு செய்யப்பட்டு, அதிகாரப்பூர்வமாக வெளிப்படுத்தப்படுகிற விஞ்ஞானப் பார்வை பெரிதும் எந்திரத்தனமானதாயும், மட்டுப்பாடானதாயும் வாழ்க்கை பற்றிய மிக மேலோட்டமான பார்வையைக் கொண்டதாயும் உள்ளது என்பது மிகவும் வருத்தத் தக்கதாகும்.

இத்தகையதொரு பார்வையைப் பகிர்ந்து கொள்ளும் ஒருவராகத்தான் பேராசிரியர் ப.ஆர். ராம் தனது கருத்துக்களை த சண்டே இந்தியன் (22, டிசம்பர் 2012) இதழில் தெரிவித்துள்ளார். இங்கு நாம் திரு. ராம் அவர்களை விமர்சித்து எதுவும் கூறவில்லை. மாறாக, அவர் சொல்லியுள்ள கருத்துகளின் அடிப்படையாகவுள்ள விஞ்ஞானப் பார்வையின் மட்டுப்பாட்டைப் பற்றித்தான் இங்கு பேசுகிறோம்.

"ஜோதிடர்கள், சில ஜோதிடர்கள் மற்றும் போலி விஞ்ஞானிகள் ஆகியோர் டிசம்பர் 21-ம் தேதி உலகம் கடுமையான அழிவைச் சந்திக்கும் என கணித்துள்ளனர் எனவும். இது போல எத்தனையோ முறை இப்படியான கணிப்புகள் உலகைப்

ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அவை பலிக்கவில்லை என்பதும் போலியானவை எனக் கூறுகின்றனர்.

உண்மையாக. சில கிறுக்கர்களும், போலி விஞ்ஞானிகளும், சோதிடர்களும், சில சோதிடர்களும் அறிவிக்கப்பட்ட இதுவரை எதுவும் நிகழக்கவில்லை பலிக்கவில்லை. ஆனால், எந்த சில சோதிடரும், போலி விஞ்ஞானி கணிக்கும் சொல்லாத 26.12.2004 போல வரலாறு முழுவதும் பாரமான சேதங்களில் அழிவு ஏற்பட வில்லை என்பதல்ல விஷயம். மாறாக அறிவிக்கப்படாத பல சேதங்களில் நிலைகொண்டும், பாதிக்காத முன்னறிவிப்பும் இன்றி இயற்கை சீற்றம் கொண்டு தாக்குகிறது. தாக்கியுள்ளது. இனியும் தாக்கக்கூடும் என்பதுதான் நம் கவலைக்கும் சிக்கலுக்கும் உரிய விஷயமாகும்.

அடுத்ததாக, பேராசிரியர் ராவ் அவர்கள் கருந்துளை குரியவொன்று மோதுவது பற்றி குறிப்பிட்டு அதற்கான சாத்தியம் அரிதேயில்லை எனச் சொல்லியுள்ளார். ஆனால், அதே வேளையில் இயற்பியல் விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகிற உயர் சக்தி இயற்பியல் (அணுக்கருத்துகள்கள் பற்றிய) பரிசோதனைகள் விபரீதமாய்ப் போய்விடும் பட்சத்தில் சிறு அளவிலான கருந்துளை போன்ற நிகழ்வு ஆய்வுக் கூடத்திலேயே உருவாகிவிடக்கூடிய அபாயம் உள்ளது என்பதை அவர் சுட்டிக்காட்டவில்லை.

அடுத்து, விண்கற்கள், விண்மீன்கள் அல்லது பூமிக்கு அருகில் உள்ள வான்பொருட்கள் பூமியை மோதுவதற்கும் வாய்ப்பிருக்கிறதா என்று பார்த்தால் அதற்கும் வழியில்லை என சொல்லிவிட்டு உடனே அப்படியான நிகழ்ச்சி ஏதாவது நடந்துள்ளதாக என்று பின்னோக்கிப் பார்த்தால் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் நடந்துள்ளது. இதில் பூமியில் உள்ள 60 உயிர்கள் காலியாயின. அவற்றில் டினோசர்களும் அடங்கும் என்கிற தகவலை பேராசிரியர் ராவ் தருகிறார். அதாவது உலக அழிவு மிக அபத்தமானது என தனது கட்டுரைக்கு தலைப்பிட்டுவிட்டு அவரே அழிவிற்கான உதாரணமாக டினோசர்கள் உட்பட 60 உயிர்கள் காலியாயின எனும் தகவலை சொல்கிறார். இதற்குக் காரணம் வான்பொருள்களின் பெரிய அளவு தாக்குதல் நிகழ்வதற்கான வாய்ப்பு 100 மில்லியன் ஆண்டுகளுக்கு ஒருமுறையே உள்ளது. மேலும் பூமியை எதேனும் வான்பொருள் மோத வந்தால் அதை முன்கூட்டியே அழிக்க முடிகிற அல்லது தவிர்த்து விடக்கூடிய நிலைமை அதாவது தொழில்நுட்பம் தற்போது உள்ளது என்கிறது அவருடைய அதி நம்பிக்கையாக இருக்கலாம்.

ஆனால் பேராசிரியர் ராவ் கூறுகிற தொழில் நுட்பம் இன்னும் கோட்பாட்டளவில் மட்டுமே உள்ளது. அதோ, ஒரு விண்கல் பூமியைத் தாக்குவதற்கு முன் அதை திசை திருப்பி விடுவது அல்லது அணு - ஏவுகணை கொண்டு தகர்த்து விடுவது குறித்த ஆலோசனைகள் விஞ்ஞானிகளுக்குள் சர்ச்சையாக உள்ளது. விண்கல் அல்லது வால் நட்சத்திரம் போன்ற வான் பொருள்களின் தன்மைகளை முழுவதுமாக அறியாமல் அவைகளை தகர்ப்பது என்பது எடாகொடமான விளைவுகளை ஏற்படுத்திடலாம் என சில விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

சிறிய அளவிலான, அதாவது லண்டன், நியூயார்க் போன்ற நகரத்தை தரைமட்டமாக்கக் கூடிய விண்கள் சென்ற நூற்றாண்டில் மூன்று முறை பூமியைத் தாக்கியுள்ளன. ஆனால் நல்லவேளையாக அவை உயிரிழப்பை ஏற்படுத்தாமல் ஒதுக்குப்புறமான இடங்களில் விழுந்துள்ளன. மிகவும் சமீபத்திய நிகழ்வு 1997ல் கிரீன்லாந்தில் நிகழ்ந்துள்ளது.

பூமியின் மீது விண்கல் தாக்குதலினால் ஏற்பட்ட வடுக்கள் (பெரும் பள்ளங்கள்) 165 இடங்களில் கண்டறியபபட்டுள்ளன. படிவ குறிப்பேடுகளின் வழியே அறியப்பட்ட 25 மாபெரும் உயிரின அழிவுச் சம்பவங்களில் 7 சம்பவங்கள் வான்பொருள் மோதல்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன.

இங்கே கீழே கொடுக்கப்பட்டுள்ளவை 4 பேரழிவுச்
சம்பவங்கள் நிகழ்ந்த காலக்கட்டங்கள்

1. 65 மில்லியன் ஆண்டுகளுக்குமுன்
   கிரேட்டேஷியன் காலக்கட்டம்
   60 உயிரினங்கள் (டைனோசர்கள் உட்பட)
   அழிந்து போயின
2. 250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்
   டிரையாசிக் காலக்கட்டம்
   90 உயிரினங்கள் அழிந்து போயின
3. 360 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்
   தேவோனியன் காலக்கட்டம்
4. 435 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்
   ஆர்டோவிசியன் காலக்கட்டம்

தனது கட்டுரையில், இறுதியாக, திரு. யு.ஆர். ராவ் அவர்கள் கூறியுள்ள விஷயம் தான் அவர் சார்ந்திருக்கும் விஞ்ஞானப் பார்வையின் மட்டுப்பாட்டையும், பெரும் ஓட்டையையும் வெளிப்படுத்துவதாயுள்ளது.

[illegible]

[illegible]

[illegible]

ஆனால், மனித இனம் தொடர்ந்து பல மில்லியன் ஆண்டுகள் நிலைத்திருக்கும் என்று சொல்வதற்கு யாதொரு விஞ்ஞான அடிப்படையும் இல்லை. அது ஏன்? மனித இனம் இன்னும் ஒரு ஆயிரம் ஆண்டுகளாவது நிலைத்திருக்குமா என்றும் சொல்ல முடியாது.

இப்போது நாம் ஒரு சிந்தனைப் பரிசோதனை செய்து பார்ப்போம். அதாவது நாம் கிட்டத்தட்ட 5000 மில்லியன் ஆண்டுகள் எப்படியோ சமாளித்து வாழ்ந்துவிட்டோம் என்று வைத்துக் கொள்வோம். இப்போது சூரியன் தனது எரிபொருளை முழுமையாக எரித்துவிட்டு வெறும் சிவப்புக் கோளமாக ஆகிக்கொண்டிருக்கிறது. அடுத்து அது ஒரு கருந்துளையாக மாறும் கட்டத்தை நெருங்கிக் கொண்டு இருக்கிறது என வைத்துக் கொள்வோம். சூரியன் முற்றுமாக அணைந்து போகின்ற இறுதிக்கட்டமாயினும் அது மிக உக்கிரமாக வெப்பத்தை உமிழ்கிறது. பூமியில் உள்ள புல் பூண்டு தாவரங்கள் கருகிக் கொண்டிருக்கின்றன. நமது உடலில் உள்ள நீரும், இரத்தமும் கொதிக்கத் தொடங்கிவிட்டது எனும் நிலையில் வாழ்க்கையின் இந்த கோரமான அழிவை நாம் எப்படி எதிர்கொள்வது? இன்னும் 50 ஆண்டுகளாயினும் அல்லது 5000 மில்லியன் ஆண்டுகளாயினும் எப்படியும் வாழ்க்கை என்பது தவிர்க்க இயலாமல் முடிவிற்கு வந்துவிடும் என்றால் அது என்ன வாழ்க்கை? அதற்கு அர்த்தம் ஏதும் இருக்க முடியுமா? குறுகிய காலமோ அல்லது நெடிய காலமோ வாழ்க்கையின் குறிக்கோள், இலக்கு தான் என்ன? வெறுமனே உயிர்வாழ்தல் தான் வாழ்க்கையா? அழிவு அல்லது மரணம் வரும்வரை உயிரோடிருப்பதற்குப் பெயர் தான் வாழ்க்கையா?

அப்படியானால், வாழ்க்கை என்பது வலுக்கட்டாயமாக மனித ஜீவிகளுள் திணிக்கப்பட்ட ஒன்றா? நமது விருப்பமும் இசைவுமின்றி வாழ்க்கைக்குள் கொண்டு வரப்படுவதும், பிறகு திடீரென நமது விருப்பமும் இசைவுமின்றி வாழ்க்கை நம்மிடமிருந்து பறிக்கப்படுவதும் என்ன வகையான விளையாட்டு?

மேலோட்டமாகப் பார்க்கும் போது பேராசிரியர் ராவ் கூறியுள்ள விபரங்களும், இப்போதைக்கு உலகம் அழிவைச் சந்திக்காது எனும் வைமச் செய்தியும் நேர்மறையானதாகவும், விஞ்ஞானப்பூர்வமானது என்கிற மாயையானதொரு தோற்றத்தைக் கொண்டதாகவும் தோன்றக் கூடும். ஆழமாகப் பார்க்கும் போது விஞ்ஞானமானது ஒரு போலியான மிகவும் மெலியதும் அர்த்தமற்றதுமானதொரு நம்பிக்கையூட்டலை மட்டுமே அளிப்பதாயுள்ளது.

ஆக, இன்னும் 5000 மில்லியன் ஆண்டுகளுக்கு உலகம் அழியாது என்றால், எதிர்காலத்தில் நாம் அருமையாகவும் நீடித்து வழக்கமான வழிகளில் வாழ இருக்கிறோம். எதற்காக இருக்கிறோம்? வாழ்க்கை என் நோக்கு தெரிக்கிறது இன்னது. அது எந்த கோட்பாட்டிற்கு, எந்த முடிவிற்கு என்பதை எவரும் அறியார். உயிர்ப்பு விலங்குகளைப் போல நாம் உயிர் வாழ்ந்து செல்லலாம் ஏனெனில் இப்போதைக்கு உலகம் அழியாது.

மேலும், உலக அழிவு பற்றி வரும் அனைத்தான கணிப்புகளை மக்கள் நம்புவது ஆபத்தானது. இது போன்ற கணிப்புகளுக்கு முழுமையாக விஞ்ஞான அடிப்படையே இல்லை என்பதாக பேராசிரியர் ராவ் கூறுகிறார்.

நல்லது, அழிவு விருப்பிகளின் கணிப்புகளையும் அறிவிப்புகளையும் நாம் புறக்கணித்திடுவோம். ஆனால் இன்று வரை புவியின் வரலாற்றில் அறிவிப்பு, கணிப்பு எதுவின்றி நிகழ்ந்திட்ட பேரழிவு விளைவித்திட்ட சம்பவங்கள் எந்த விஞ்ஞான அடிப்படையைக் கொண்டு நிகழ்ந்திட்டன? உலக அழிவு பற்றிய (சில ஜோதிடர்களின்) கணிப்புகள் எவ்வளவு அபத்தமானதோ அவ்வளவிற்கு உலகம் இப்போதைக்கு அழியாது என போலியான நம்பிக்கையூட்டக்கூடிய (அசலான விஞ்ஞானிகளின்) அறிவிப்பும் அபத்தமானதே. அபத்தமானது மட்டுமல்ல மிகவும் அசட்டுத்தனமானதும் கூட.

ஏனெனில், உலகம் அழியாது என்பதற்கு யாதொரு விஞ்ஞான அடிப்படையும் இல்லை. இன்னும் உலகம் ஏன் தோன்றியது என்பதற்கும் 5000 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு சூரியன் மடிந்து போவதற்கும் யாதொரு விஞ்ஞான அடிப்படையும் இல்லை. என்றாலும் மேலோட்டமான விஷயங்களைப் பற்றி மிக ஆழமாகவும், ஆழமான அதிமுக்கியமான விஷயங்களைப் பற்றி மிக மேலோட்டமாகவும் ஒரு விளக்கத்தை விஞ்ஞானம் அளிக்கத் தவறுவதில்லை.

ஆம், வாழ்க்கையைப் பற்றியும், அதன் அர்த்தம், குறிக்கோள், இலக்கு மற்றும் முழுமை குறித்தும் விஞ்ஞானம் எதுவும் சொல்வதில்லை. ஆனால் உயிர்-வாழ்தல் எனும் விவகாரத்திற்கு அது ஏராளமாய் உதவியுள்ளது. விஞ்ஞானப் பார்வையின்படி வாழ்க்கை என்பது உயிர் வாழ்தல் மட்டுமே. மாறுகின்ற சுற்றுச் சூழல்களுக்கு தகவமைந்து, இரை தேடி, இரையுண்ணிகளுக்கு இரையாகாமல் தப்பித்து, மனித ஜீவிகளைப் பொறுத்த வரையில் சமூக, பொருளாதார அரசியல் சூழலுக்கும் தகவமைந்து உயிர் பிழைத்து இருப்பது தான் வாழ்க்கை.

இன்றைய அளவில் விஞ்ஞானம் என்பதும் ஒரு வகையான மதமாக மாறிவிட்டிருக்கிறது. விஞ்ஞானிகள் என்போர் அந்த மதத்தின் அதிகாரப் பூர்வமான பூசாரிகளாக விளங்குகின்றனர். ஆகவே தான் அவர்கள் சொல்கிறார்கள். உலகம் (அல்லது சூரியன்) உள்ளவரை உயிர்வாழ்ந்திருங்கள்.

பரவலாக பலரும் நினைப்பது போல விஞ்ஞானம் என்பது எல்லாவற்றுக்குமான தீர்வோ, அருமருந்தோ அல்ல. உலகையும் அதில் மனிதனையும், அவனது வாழ்க்கையையும் புரிந்து கொள்வதற்கான பல வகைப்பட்ட புராணங்கள், கலை, இலக்கியம், சமயம், தத்துவம், ஆன்மீகம்.... போன்ற அணுகுமுறைகளுள் அதுவும் ஒன்று. அவ்வளவுதான். பொதுவாகவே உலகைப் பற்றிய ஆய்வு என்கிற அளவில் விஞ்ஞானம் தன்னைச் சுருக்கிக் கொண்டுவிட்டது. இதன் விளைவாக விஞ்ஞானத்தினால் பொருள் தன்மையைக் கடந்த உலகின் வளர்ச்சி நிலைகளைப் புரிந்து கொள்ளவும் உலகைப் பற்றிய ஒருங்கிணைக்கப்பட்ட முழுமையான பார்வையைப் பெறவும் இயலாத தேக்க நிலையில் சிறைப்பட்டுள்ளது. விஞ்ஞானம் தனது சுயகட்டுப்பாட்டை உடைத்துக் கொண்டு வெளிவராவிடில் இறுதியில் அது மனித குலத்தை புதியதொரு இருண்ட காலத்திற்கு இட்டுச் சென்றிடும். ஆக, விஞ்ஞானத்திடமிருந்து அதிகம் எதிர்ப்பார்ப்பது விஞ்ஞானப்பூர்வமானதன்று.

போலி விஞ்ஞானிகள் உலகம் அழியப்போகிறது என பீதியூட்டுகின்றனர் என்றால், அசல் விஞ்ஞானிகள் உலகம் அழியாது என்று சொல்லி போலியான நம்பிக்கையை ஊட்டுகின்றனர் என்பதுதான் உண்மை.

பேராசிரியர் ராவ் கூறியது போல 5000 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு சூரியன் தனது எரிபொருளைத் தீர்த்துவிட்டு தனது முடிவைத் தழுவிக்கொள்ளும் என்பது தவிர்க்க இயலாத விஷயம் மட்டுமே. தவிர திரு. ராவ் அஞ்சுவது போல, அது ஒரு அபாயம் அல்ல. எவ்வாறு ஒரு மனிதன் வளர்ந்து, முதிர்ந்து வயோதிகப் பருவத்தை அடைந்து மரணத்தில் முடிந்து போகிறானோ அவ்வாறே சூரியனும் பிற அண்ட வெளிப்பொருட்களும், ஏன், ஒட்டுமொத்த பிரபஞ்சமும் அவற்றிற்குரிய ஆயுட்காலத்தை வாழ்ந்து முடித்து முடிவிற்கு வந்திடுவது இயற்கை நியதியாகும். அது எவ்வகையிலும் அபாயகரமானதல்ல. ஒரு மனிதன் இயற்கையாக மரணமடைவது என்பது அபாயகரமான விஷயமல்ல. வாழ்க்கை என்றால் என்ன என்பதை நாம் சரியாகப் புரிந்து கொண்டிருந்தால் மரணம் குறித்து

அழுது மாண்டு ஆர்ப்பாட்டம் செய்யலாம் போடா. மனிதன் பிரமையை வைத்து, சூரியன் மறைந்து போவதும், பிரபஞ்சம் முழுவதும் ஒரு பாயிண்டுக்குள் உள்ளடங்கலில் சுருங்கி மறைந்து போவதும் அழிவு அல்ல. அது இயல்பான முடிவு.

சுருக்கமாகச் சொன்னால், சூரியன், நட்சத்திரங்கள், கிரகங்கள், கேலக்ஸிகள், ஆகியவைகளின் கொண்ட பிரபஞ்சம் எனும் மாபெரும் பௌதீக எந்திர அமைப்பின் இயக்கமானது, பிரபஞ்சத்தின் (இன்னொரு) உள்ளார்ந்த பரிணாம இயக்கத்திற்கு உதவும் வகையிலமைந்த ஒரு கருவி அல்லது ஒரு ஏற்பாடு மாத்திரமே ஆகும். அதாவது பிரபஞ்சத்தின் (உலகின்) பரிணாம இலக்கு அடையப்பட்டதும் பிரபஞ்சத்தின் பௌதீக இயக்கமும் பௌதீகப் பொருட்களும் முடிவிற்கு வந்துவிடும். ஆகவே உலகம் அல்லது பிரபஞ்சத்திற்கு அழிவு என்பது இல்லை. மாறாக, ஆரம்பம் போல முடிவு என்பது உண்டு.

ஆம், பிரபஞ்சத்தைப் பற்றிய (நமது புதிய பார்வையில் அமைந்த) முதல் விதி என்னவெனில், உலகின் ஆரம்பம் என்பது ஒரு படைப்புப்பூர்வமாகவே இருக்க முடியும். இதன் விளக்கம் உலகிற்கு அழிவு இல்லை என்பது தான்.

ஆனால், இரண்டாவது விதி என்ன சொல்கிறதென்றால், உலகம் தோன்றுவதற்கு ஒரு குறிக்கோள், இலக்கு இருக்குமெனில் அக்குறிக்கோள் அல்லது இலக்கு அடையப்பட்டதும், உலகம் முடிவிற்கு வந்திடும். முடிவு என்பது இங்கு அழிவு அல்ல, மாறாக முழுமையைக் குறிப்பதாகும்.

உலகின் உள்ளார்ந்த பரிணாம இயக்கம் பற்றி சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் உலகமானது தனது தொடக்க நிலைப் பண்பான பௌதீக (சடத்) தன்மையைக் கடந்து உயிராகப் பரிணமித்தது. பிறகு அதிலிருந்து மேற்கொண்டு பரிணமித்து மனித ஜீவியினுள் தற்போது (சுய) உணர்வாக வெளிப்பட்டுள்ளது. அடுத்து சுய உணர்வு நிலையிலிருந்து உயர்ந்தெழுந்து முழு உணர்வு நிலையில் தனது பரிணாம இலக்கு நிலையான முழுமையைத் தழுவிவிடுகிறது. அதாவது உலகின் பரிணாம இலக்கானது ஒவ்வொரு மனித ஜீவியின் உள்ளே உணர்வுப் பரிணாமத்தின் வழியே அடையப்படுகிறது.

ஆம், உலகின் முழுமை, இலக்கு என்பது உலகிற்கு வெளியே - வெளி காலத்திற்கு வெளியே அடையப்படுவதாயுள்ளது. அதாவது உலகமானது தன்னைக் கடந்து செல்வதற்கான ஒரு வழியாக ஊடகமாகத் தான் அது மனித ஜீவியாகவும், மனிதனுள் சுய உணர்வாகவும் ஆகியது. ஆக, உணர்வுள்ள மனிதன் தனது

வாழ்க்கையின் அடிப்படையாகவுள்ள பரிணாமத் திட்டத்தை உணர்ந்து தனது சிற்றுணர்வைக் கடந்து முழு உணர்வுநிலையை அடையும் போது மனிதன் தன்னைக் கடந்து விடுபவனாகிறான். மனிதனுடன் இணைந்த உலகமும் தன்னைக் கடந்து விடுதலையாகிவிடுகிறது.

அதாவது, நாம் ஒரு செயற்கைக் கோளை ஒரு குறிப்பிட்ட ஆய்வு நோக்கத்திற்காக விண்ணில் ஓரிடத்தில் பொருத்திட திட்டமிட்டு, ஒரு இராக்கெட்டில் இணைத்து விண்ணில் ஏவுகிறோம். ஒரு முழு நீள இராக்கெட் கட்டம் கட்டமாக எரிபொருளை எரித்து மேலே சென்று செயற்கைக் கோளை அதன் சுற்றுப்பாதையில் செலுத்தியதும் இராக்கெட்டின் மீத பாகங்கள், எரிபொருள் தொட்டி போன்ற யாவும் கைவிடப்படுவதைப் போலவே உலகின் பரிணாம இலக்கு அடையப்பட்டதும் உலகின் மொத்த பௌதீகத் தளமும் (சூரியன், கோள்கள், நட்சத்திரங்கள், கேலக்ஸிகள், காலம், வெளி... யாவும்) கைவிடப்படுகிறது.

அது போலவே, நமது சூரியனும் தனது எரிபொருளை எரித்துத் தீர்த்துவிட்டு இறுதியில் அணைந்து ஒரு கருந்துளையாக மாறிவிடும். இதற்கான காலம் 5000 மில்லியன் ஆண்டுகள் ஆகுமென்றால், அதுவரையில் மனித இனத்திற்கு உலகில் வேலை இல்லை. ஏனெனில், மனித வாழ்க்கையின் இலக்கும் முழுமையும் நீண்ட நெடு காலம் உயிர் வாழ்வதில் அடங்கியிருக்க வில்லை. மாறாக, எத்தகைய அல்லது எவ்வளவு முழுமையான உணர்வுநிலையை எட்டுகிறோம் என்பதிலேயே அடங்கியுள்ளது. ஆக, மனித இனம் அடுத்த ஓரிரு ஆயிரம் ஆண்டுகளுக்குள் எவ்வாறேனும் தனது பரிணாம முழுமையை அடைந்துவிடும் - அல்லது அடைந்தாக வேண்டும்.

தனி மனித ஜீவிகளைப் பொறுத்தவரை ஒவ்வொருவரும் தமது ஆயுட்காலத்திற்குள்ளாகவே (60 ஆண்டுகளோ, 70 அல்லது 80 ஆண்டுகளோ) மரணத்தில் உடல் முழ்ந்து போவதற்கு முன்னேயே தமது முழுமையை அடைந்தாக வேண்டும். இதுவே மிகவும் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமான ஒரே ஆன்மீகப் பணியாகும். மேலும், உலகம் அழியப்போகிறது என்கிற அறிவிப்பின் பின்னால் மறைந்திருக்கும் அசலான செய்தியும் இதுவே.

தமது கட்டுரையின் இறுதியில், உலக அழிவு பற்றி வரும் அபத்தமான, கணிப்புகளை மக்கள் நம்புவது துயரமானது என்பதாக பேராசிரியர் ராவ் கூறியுள்ளார். ஆனால் உலகம் (இப்போதைக்கு) அழியாது என்கிற போலியான

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இத்துடன் வான்வெளி விஞ்ஞானிகள் வான்பொருட்களால் பூமிக்கு ஆபத்து ஏற்படும் போது அந்தப் பொருட்களையே பூமியைத் தாக்கும் முன்பே சிதறடித்து விடக்கூடிய முறைகளையும் உருவாக்கியுள்ளனர். அணு ஆயுதம் அல்லது வேறு தாக்குதல் முறைகள் வழியாக அந்த ஆபத்தை அவர்கள் தவிர்த்துவிடக்கூடிய நிலைமைதான் தற்போது உள்ளது.

நம்முன் உள்ள ஒரே தவிர்க்க இயலாத அபாயம் என்னவெனில் சூரியன், தனது எரிபொருள் அனைத்தையும் இழந்து தீர்ந்துபோவதுதான். இருப்பினும் சூரியன் தொடர்பாக நடத்திய விரிவான ஆய்வுகளின்படி, அது 5000 மில்லியன் ஆண்டுகளுக்கு தொடர்ந்து ஒளிவிட்டுக் கொண்டு தான் இருக்கும் என்பது தெளிவாகியுள்ளது. அதனால் தற்போதைக்கு நமது உலகமோ, கோள் குடும்பமோ எந்த வகையான அழிவு நிலையையும் சந்திக்கும் வாய்ப்போ இல்லை என்றே சொல்லிவிடலாம். அதற்கு இன்னும் நீண்ட காலம் நாம் காத்திருக்க வேண்டும்.

இந்நிலையில் உலக அழிவு பற்றி வரும் அபத்தமான கணிப்புகளை மக்கள் நம்புவது துயரமானது. இதுபோன்ற கணிப்புகளுக்கு முழுமையான விஞ்ஞான அடிப்படையே இல்லை. உலக அழிவு நாள் அல்லது பிரளயம் டிசம்பர் 21ம் தேதி ஏற்படலாம் என்பதும், இதனால் உலகம் அழியும் என்பதும் முழுமையாக பொய்யானது, ஆதாரமற்றது, முட்டாள்தனமானது.

21.12.2012

உலகம் அழியப்போகிறதா?

இக்கட்டுரையின் நோக்கம் உலகம் அழியப்போகிறது என்று சொல்லி வாசகர்களை அதிர்ச்சியடையச் செய்வதல்ல. அதே வேளையில் உலகம் தொடர்ந்து இன்னும் பல கோடி ஆண்டுகள் நிலைத்திருக்கும் - அதற்கு அழிவே கிடையாது என்று சொல்லி புல்லரிக்கச் செய்வதுமல்ல.

மாறாக, மனிதனுக்கும் உலகிற்கும் உள்ள மிகவும் நெருக்கமான ஆழமான தொடர்பை புரிந்து கொள்ள உதவுவதும் முக்கியமாக வாசகர்களை உணர்வுக்கு வரச் செய்வதுமே இக்கட்டுரையின் நோக்கம்.

உலகளாவிய அளவில் மனிதர்கள் இன்னும் தங்களுக்கும் உலகிற்கும் உள்ள தொடர்புறவை சிறிதும் புரிந்துகொண்டிருக்கவில்லை. இன்னும் விஞ்ஞானிகளும் கூட உலகை ஒரு புறப்பொருளாக மனிதனுக்கு அன்னியமானதொரு விஷயமாகவே கண்டும் ஆராய்ந்தும் வருகிறார்கள். மனித ஜீவிகளாகிய நாம் நம் உயிர் வாழ்தலுக்கு உலகைச் சார்ந்துள்ளோம்,

பல்வேறு பரிணாம நிலைகளை அல்லது கட்டங்களை அறிவதும் புரிந்து கொள்வதும் அரியதாகும்.

ஏனெனில், உலகம் என்பது ஒரு மாபெரும் எந்திரம் போன்றதோ, அல்லது பலவகைப்பட்ட பொருட்களும், ஜீவன்களும் விளையாடுகின்றதொரு பரந்த களமோ; இடப் பரப்போ அல்ல. மேலும் உலகம் என்பது இயக்கமற்ற நிலையானதொரு அமைப்போ அல்ல.

மாறாக, உலகம் என்பது ஒரு பரிணாம இயக்கமாகும். உலகம் என்பது சூரியன், சந்திரன், பூமி மற்றுமுள்ள வேறு கிரகங்கள், மற்றும் எண்ணற்ற நட்சத்திரங்கள் மட்டுமல்ல.

நாம் பூமிக்கிரகத்தின் மீது வாழ்கிறோம். பூமியானது சூரியனை மையமாகக் கொண்டு சுற்றிச் சுழலும் ஒன்பது கிரகங்களில் ஒன்றாகும். சூரியனும் ஒன்பது கிரகங்களும் சேர்ந்த அமைப்புதான் சூரிய குடும்பம் என்றழைக்கப்படுகிறது. சூரியன் என்பது இரவில் நாம் காணும் கோடிக்கணக்கான நட்சத்திரங்களைக் கொண்ட பால்வீதி மண்டலம் என்றழைக்கப்படுகிற கேலக்ஸி எனும் அமைப்பில் இடம் பெற்றுள்ள ஒரு நட்சத்திரம் மட்டுமே. பால்வீதிமண்டலம் போல உலகில் கோடிக்கணக்கான கேலக்ஸிகள் (நட்சத்திரக் கொத்துகள் அல்லது மண்டலங்கள்) உள்ளன. இவ்வாறு கோடானு கோடி நட்சத்திரங்களையும், கோடானுகோடி கேலக்ஸிகளையும் உள்ளடக்கியதான இவ்வுலகம் எல்லையற்ற பரந்த வெளியை உடையது என்பதை நம்மால் கற்பனை செய்து காண இயலாத அளவிற்கு எல்லையற்றதாய் உள்ளது. அதோடு, உலகமானது இன்னும் தொடர்ந்து விரிவடைந்து கொண்டும் செல்கிறது.

ஆனால், உலகம் விரிவடைகிறது என்பதும், கிரகங்கள் சூரியன், நட்சத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட சுற்று வட்டப்பாதைகளில் சுற்றிச் சுழன்றும் வருகின்றன என்பதும் வெறும் பௌதிக ரீதியிலான எந்திரகதியில் அமைந்த இயக்கம் மட்டுமே அன்றி, உலகின் உண்மையான இயக்கம் பரிணாம இயக்கமே ஆகும். அதோடு, உலகையும் அதன் பரிணாம இயக்கத்தையும் பிரிக்கவியலாது.

மேலும், பரிணாமம் என்பது இல்லாவிடில் உலகம் இருப்பது பற்றியும் அழிவது பற்றியும் பேசுவதற்கு மனித ஜீவிகளாகிய நாம் தோன்றியிருக்கவும் முடியாது.

ஆனால், முதன்மட்டத்தில் உலகம் ஏன் பரிணமிக்கிறது என்கிற கேள்வியை எழுப்புவதும் அதற்கான பதிலைக் கண்டுபிடிப்பதும் இவ்விடத்தில் மிகவும் முக்கியமாகும். உலகம் தோன்றிய

பொருட்கள் அனைத்தும் காலகட்டத்தில் ஒரு பெரும் வெடிப்பில் பொருளாக அணுக்கூறுகளின் வடிவில் வெளிப்பட்டது. மேலும், பொருள்தன்மை (பௌதிகத் தன்மை) தான் உலகின் அடிப்படை ஆதாரமாக இருந்தது. மேலும், ஆதியில் பெருவெடிப்பு நிகழ்வதற்கு முன்னர் அணுக்கூறுகளோ அல்லது ஒரு அணுவோ எதுவும் இல்லை. பெருவெடிப்பு நிகழ்வின் போதுதான் அணுக்கூறுகளின் வடிவில் உலகம் வெளிப்பட்டது.

ஆனால் அணுக்கூறுகள் என்பது அகண்டவெளியில் ஒரு முடிவான முழுமையான பொருளோ, கனிப்பொருளோ அல்ல. விஞ்ஞானரீதியாகச் சொன்னால் ஒரு அணுக்கூறானது எந்த மெய்ம்மை சிதைக்கப்பட்டதோ அந்த மெய்ம்மையின் ஆதார நிலை அல்லது வடிவமே அணுக்கூறுகள் என்பதாகும். பெருவெடிப்புக்கு முன் இருந்த மூலமெய்ம்மைதான் பெருவெடிப்பின் வழியே தன்னைச் சுருக்கிக் கொண்டு அணுக்கூறாக வெளிப்பட்டுள்ளது. அணுக்கூறுகள் நிலைக்குச் சுருங்கிப் போன மூலமெய்ம்மையானது மீண்டும் தனது அசலான நிலையை அடைய எத்தனை வழிமுறைகளைப் பின்பற்றும் என்பதாகும்.

இவ்விடத்தில் பெருவெடிப்புக்கு முன்னர் என்ன இருந்தது எனும் கேள்வி அதிமுக்கியமானதுதான் என்றாலும் அதற்கான விடையைப் பெறுவதற்கு இக்கட்டுரையில் இடமில்லை. இப்போதைக்கு வித்து இல்லாமல் விருட்சம் இல்லை. ஒன்றுமில்லாததிலிருந்து எதுவும் தோன்றிட முடியாது எனும் தர்க்கத்தின்படி பெருவெடிப்புக்கு முன்னர், சத்திக்கதிர்ப்பெயின்றி எதுவோ ஒரு மெய்ம்மை இருந்திருக்கிறது என்பது மட்டும் நிச்சயம். அதுவே உலக மெய்ம்மை தோன்றுவதற்கு மூலமாக வித்தாக இருந்திருக்கிறது.

வித்து (மறைந்து) விருட்சமாக விரிந்தது. விருட்சம் இறுதியாக கனியைப் பிறப்பிக்கிறது. அதாவது பெருவெடிப்பிற்கு முன் இருந்த மூலமெய்ம்மை மறைந்து அணுக்கூறுகளாலான முதற்கட்ட பௌதிக பிரபஞ்சம் விரிந்தது. அடுத்த கட்டமாக, உலகமானது தனது பொருள் தன்மையை மீறி கடந்து உயிராகப் பரிணமித்தது. மூன்றாவது கட்டமாக தனது பொருள் தன்மையை பெருமளவு கடந்து மனித ஜீவியினுள் சுய உணர்வாக உதயமாகியுள்ளது.

ஆம், மனித உணர்வின் (பிரக்ஞையின்) வழியே உலகம் தன்னை (தனது பொருள் தன்மையைக்) கடந்து செல்கிறது. மனிதன் தன்னை தனது உடலுடன் அடையாளப்படுத்திக் கொண்டு ஒரு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] 1500 [illegible] 1500 [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உள்ள பல பிற உலகையும் உயிர்களையும் அல்லது உலகையும் மனித ஜீவனையும் பிரித்துக் காண முடியாது.

துல்லியமாகச் சொன்னால், உலகமானது பரிணாம வழிமுறையின் வழியாக தனது பௌதீகக் கட்டமைப்புகளைக் கடந்தும் விசேடமாக உயிர்களையும், உயிர்ப்பரிணாமத்தின் உச்சமாக மனித ஜீவியாகவும் உருவாகியுள்ளது. ஆக, மனிதன் உருவாகிய பிறகான (உலகின்) இருத்தல் கட்டத்தை நாம் உலகம் மனிதனாகிய கட்டம் எனக் குறிப்பிடுவது தான் சரியாகவும், மிகப் பொருத்தமாகவும் இருக்கும்.

உலகின் முதல் இரண்டு பரிணாமக் கட்டங்களும் மனிதனின் பங்கேற்பு ஏதுமின்றி நிகழ்ந்தேறியவையாகும். மேலும் அவை பௌதீக உலகின் உள்ளார்ந்த இயற்கையான பரிணாம உந்துதலின் விளைவாக நிகழ்ந்தேறின. ஆனால் உலகின் மூன்றாவது பரிணாமக் கட்டமானது முற்றிலும் வித்தியாசமானதும், மிகவும் முக்கியமானதும், அதிகக் கடினமானதுமாகும்.

முதற்கட்டத்தில் வெறும் உலகமாக [illegible] ஒரு சித்திரம் போல இயங்கி வந்த உலகமானது, இரண்டாவது கட்டத்தில், முதல் உயிரான அமீபாவின் வழியாக உயிர் பெற்று வளர்ந்தது. அந்த இரண்டாம் கட்டத்தின் உச்சமாக உலகமானது மனித ஜீவியாக மாறி மனிதனான காலகட்டமாக உருமாகியுள்ளது. இந்த பரிணாமமானது இயற்கையான உந்துதலின் விளைவாக, உலகாயுதத் தன்மையில் சேர முடியாது.

பரிணாம ரீதியாக உலகமானது உயிர்களும் தற்போது (மனிதனான) சுய உணர்வாகவும் மாறிய பிறகு உலகம் என்று [illegible] அதன் பழைய (முந்தைய) நிலையில் இல்லை என்று சொல்லலாம். உலகம் என்பதை விஞ்ஞானிகளும் சாதாரண மனிதர்களும் காணலாம் போல அதன் பௌதீகத் தன்மையில் கருத்தில் கொள்ள முடியாது. உயிர்த்த ஒரு பௌதீகத்தால் உள்ளது எனவே நாம் பார்க்கவில்லை. அந்த வேளையில், உயிர்த்த உயிர்ப்பால் நாம் எல்லோரும், அதாவது கடந்த உணர்வால் நாம் என்னும் உள்ளது எனவே நாம் இன்னும் கண்டு அறிந்துகொள்ள முடியாது.

மேலும் இவ்விரண்டு தளங்களும் பௌதீக உலகின் முக்கியத்துவம் மேலும் பல்கலைக்கழக [illegible] நிலைகளைக். மாறாக, அவையிரண்டும் உலகின் உயிர் வளர்ச்சிப் படிகளாக இருக்கின்றன.

இருப்பு உணர்வு
உணர்ச்சிகள் தான்
உயிர்கள் தான்
மெய்யீர்க்கள் தான்

உலகமானது ஆதியில் இருந்தே அனுபவத்துக்குள்ளாக வேண்டியதாகப் போகிறது. மனிதனுடைய அனுபவத்தில் உலகின் உண்மை காணப்படுகின்றது. இதனால் அவனின் உலகம் என்பது பிரதானமாக மனிதனுடைய பெறுபேற்றுக்குரிய ஒரு உணர்வே ஆகும். உலகமானது மனித ஜீவியின் தன்மை உணர்வே. இருப்பின் தன்மைக் கூறுகள் வேறுபடும் காலம் பொருத்து அதை அகவயமான பொருள்முதல் வாதமாக அமையப் படுகின்றது. இதுதான் உலகின் பிரதான நிகழ்வு முறையின் அடிப்படையாக அமைகின்றது என்று நிறுவப்படுகிறது.

ஆக, உலகம் மனிதனிடமிருந்து தனித்துவமான உணர்வாக மாறியது. மனிதனுடைய வாழ்க்கையின் அவசியம் ஆதலால் இன்றுதான் உலகம் பிரமாணத்தின் அடி மூலக்கூறும் காரியம் அதிகம் அடிப்படையான மூன்றாவது கட்டமாக மேலெழுகின்றது.

உலகம் மனித ஜீவியாக மாறிய பிறகு பிரமாணம் என்பது முன்னிலும் மிக வேகமாக பரிமாணமடைந்து காலம் செல்லச் செல்ல அது மிகவும் அதிகரிக்கின்றது. உலகம் மனித ஜீவியாக மாறியது அதிலும் கூட உணர்வு ஏனும் மனிதனிலே அது மாற்றமானது என்பது எதைக் குறிக்கிறது? அவ்வது உணர்த்துகிறது என்பதன். இனி பிரமாணத்தை மேற்கொண்டு நடத்திச் செல்லும் கடமையும், பொறுப்பும் மனிதனின் கைகளுக்கு மாறுகிறது என்பதையே குறிக்கிறது. மேலும், உலகம் மனிதனாக ஆகியது என்பதன் அர்த்தம், இனி மனிதன் தான் உலகம் என்பதே. மனிதனே உலகம் என்பது தான் உலகின் மிக முக்கியமான திருப்புமுனையான மூன்றாவது பரிணாமக் கட்டம் ஆகும்.

ஆனால், மிகவும் முக்கியமான திருப்புமுனையான இந்த மூன்றாவது கட்டத்தை ஏன் அதிக கவனமாக எனக் குறிப்பிடுகிறோம் என்றால், இக்கக் கட்டத்திற்குள் உலகம் பிரவேசிக்க வேண்டுமானால் அதற்கு மனித ஜீவியின் - ஒவ்வொரு மனித ஜீவியின் - உணர்வு பூர்வமான பங்கேற்பு மிகவும் அவசியமாகும்.

அதாவது, உலகம் உள்ளது. அது மனிதனுக்குப் புறம்பானது என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளலாம்; ஒப்புக் கொள்ளவும் இயலும். ஆனால், பரிணாம வழிமுறையின் மூலமாக உலகம் தான் மனித ஜீவியாக மாறியுள்ளது என்பதை எல்லோரும்

எளிதாகப் புரிந்து கொள்ள இயலாது. மாறாக சிலரால் இதை ஒரளவிற்கு அறிவு பூர்வமாகவும், தர்க்கரீதியாகவும் அனுமானித்துப் புரிந்துகொள்ள இயலும். எனினும் உலகிற்கும் மனிதனுக்குமான தொடர்புறவு வெறும் தர்க்கரீதியிலான தொடர்புபடுத்துதலினால் ஏற்படுவதல்ல. மாறாக அது சதைக்கும் நகத்திற்கும் உள்ள உறவைப் போல மிக நெருக்கமானதாகும். அதை ஒவ்வொரு மனித ஜீவியும் தன்னுள் நேரடியாக உணர்ந்தறிதல் வேண்டும்.

ஆக, உலகம் தான் மனிதனாகியுள்ளது என்கிற நேரடியான புரிதலின் மறுபக்கம் அல்லது அடுத்த கட்டம் என்னவென்றால் மனிதனே உலகம் என்பது தான். இவ்வுண்மையை நாம் ஒவ்வொருவரும் நம்முள் உணர்ந்தறியவில்லையெனில் உணர்வற்ற விலங்கு ஜீவிகளைப் போல நாமும் உலகில் வெறுமனே உயிர் வாழ்ந்து மரணம் வரும் போது மடிந்து போவோம். அதாவது உலகம் வேறு, நாம் வேறு என்பது போலவும் உலகம் என்பது ஒரு பரந்த இடப்பரப்பு, அது ஏன் எதற்காக இருக்கிறது, அதில் சில காலம் எதற்காக நாம் உயிர் வாழ்கிறோம், உலகிற்கும் நமக்கும் என்ன தொடர்பு என்பதெதையும் அறியாமல் இருளில் வாழ்ந்து மடிவோம்.

உலகம் என்பது ஒரு பரந்த இடப்பரப்போ, புரியாத அண்ட வெளி நிகழ்வுகளின் தொகுப்போ, நிரந்தரமானதோர் மேடையோ அல்லது களமோ அல்ல. மாறாக உலகம் ஓர் பரிணாம நிகழ்வுமுறையாகும். அது வெறுமனே ஒரு மாபெரும் எந்திரம் போல இயங்கிக் கொண்டிருக்கவில்லை. அது தொடர்ந்து வளர்ந்து கொண்டும், பரிணமித்துக் கொண்டும் உள்ளது.

பௌதீக உலகமானது (பிரபஞ்சமானது) அதனுடைய கோடிக்கணக்கான கேலக்சிகளுடனும், கோடிக்கணக்கான நட்சத்திரங்களுடனும், கிரகங்களுடனும் ஒரு மாபெரும் அமைப்பாக ஒரு எந்திரம் போல இயங்கி வருகிறது என்பது நிஜம்தான். மேலும் அது தொடர்ந்து (இட)வெளியில் வளர்ந்து விரிவடைந்து கொண்டும் செல்கிறது என்பதும் நிஜம்தான். ஆனால் ஒரு மரமானது ஓங்கி உயர்ந்து பல கிளைகளைவிட்டு விரிந்து பரந்து வளர்ந்து செல்வதைப் போன்றதே பௌதீக உலகின் வளர்ச்சியும், விரிவடைதலும். அதே வேளையில் ஒரு மரமானது வேறொரு தளத்தில் வளர்ந்து செல்கிறது - உரிய காலத்தில் அது பூக்கிறது, பூக்கள் பிறகு பிஞ்சுகளாக மாறுகின்றன. பிஞ்சுகள் முற்றி காய்களாகி, இறுதியில் கனிகளாக மாறுகின்றன. இவ்வாறானதொரு இலக்கை நோக்கிய வளர்ச்சியின் வழியாக மட்டுமே ஒரு மரமோ, அல்லது உலகமோ தாம் தோன்றியதற்கான

பயனை அல்லது முழுமையை அடைய முடியும். இந்த இலக்கை நோக்கிச் செல்லக் கூடிய வளர்ச்சி முறையையே நாம் பரிணாமம் என்றழைக்கிறோம்.

ஆம், ஒரு மரமானது வேரூன்றி உயர்ந்து வளர்ந்து கிளைகள், பல பரப்பி பரந்து விரிந்து வளர்வதோடு மட்டுமல்லாமல், ஒரு கட்டத்தில் பூத்து, காய்த்து, கனிகளானது போலவே உலகமும் மேன்மேலும் காலவெளியில் பரந்துவிரிவடைவதோடு மட்டுமல்லாமல், அது தனது பௌதிக சடத்தன்மையைக் கடந்து உயிராகி தொடர்ந்து பரிணமித்து தற்போது மனிதனுள் சிந்தனையாக உருவமாகியுள்ளது. மனிதனிடமான இந்த வளர்ச்சியை அல்லது பரிணாமத்தை பற்றிச் சென்றுதான் உலகமானது தனது இலக்கான முழுமையை அடையவிருக்கிறது. இந்த பரிணாம நிகழ்வு முறைதான் உலகின் உண்மையான, அடிப்படையான இயக்கமாகும்.

ஆம், உலகமானது அதன் தொடக்க கால பௌதிக தன்மையிலேயே இன்னும் தங்கியிருக்கவில்லை. பல நூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பே அது உயிர் பெற்றெழுந்து சில லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு அது மனித ஜீவிகளின் வழியே உணர்வின் தளத்தை எட்டியுள்ளது.

ஆம், உலகமானது தனது பரிணாம இலக்கை அடையும் பொருட்டு எண்ணற்ற மனிதர்களாக ஆகியுள்ளது. அது ஒவ்வொரு மனித ஜீவியின் (உணர்வுப் பரிணாமத்தில்) வழியேயும் தன்னைக் கடந்து சென்று தனது இலக்கான முழு உணர்வு எனும் மகத்தான நிலையை அடைய முயற்சிக்கிறது. இவ்வாறு உலகம் தனது பரிணாம இலக்கை அடையும்போது அது தனது முந்தைய பௌதிக சடத்தன்மையை முற்றிலுமாக கடந்துவிட்டிருக்கும்.

ஆம், ஏராளமாய்க் காய்த்துக் குலுங்கும் ஒரு பெரிய மாமரத்தைப் போல உலகம் எனும் விருட்சமும் ஏராளமான மனிதக் காய்களை காய்த்துள்ளது. ஒரு மரத்திற்கும் அதன் காய்களுக்கும் உள்ள தொடர்பைப் போன்றதே உலகிற்கும் மனித ஜீவிகளுக்கும் உள்ள உறவும் ஆகும்.

உலகிற்கும் மனிதனுக்கும் உள்ள உறவு ஒரு மரத்திற்கும் அதன் காய்களுக்கும் உள்ள உறவை ஒத்ததாயுள்ளது எனும் புரிதலை நாம் எட்டியுள்ளோம். ஆனால், முதலிடத்தில் மரம் ஏன் தோன்றியது? பிறகு, அதில் காய்கள் ஏன் உண்டாயின? முதலிடத்தில் உலகம் ஏன் தோன்றியது? பிறகு அதில் மனிதர்கள் ஏன் உண்டாயினர்? என்பதை தெளிவாக அறியாமல் உலகம் அழிவது குறித்தோ, அல்லது உலகம் நிலைத்திருப்பது குறித்தோ

பேசுவதில் ஒரு அர்த்தமும் இருக்க முடியாது. எந்த குறிக்கோளை, இலக்கை அடைவதற்காக உலகம் உருவானது என்பதை அறியாமல் மனித ஜீவிகளாகிய நாம் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ முடியாது.

எப்படியோ உலகம் என்பது இருக்கிறது. எப்படியோ நாமும் அதில் இருக்கிறோம். உலகம் ஏன், எதற்காகத் தோன்றியது என்பதும், அதில் நாம் எதற்காக இருக்கிறோம் என்பதும் தெரியாது என நாம் சொல்வோமேயானால், புழு, பூச்சிகளுக்கும், எலிகள் மற்றும் தவளைகளுக்கும் மனித ஜீவிகளாகிய நமக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்றாகிவிடும். ஆக, எப்படியோ நாம் இருக்கிறோம், தொடர்ந்து உயிர் பிழைத்திருக்க வேண்டுமே என்பதற்காக நாம் உயிர் பிழைத்திருக்கிறோம் - அதாவது வெறுமனே உயிர் வாழ்கிறோம். திடீரென யாராவது நம்மிடம் வந்து உலகம் 2012ல் அழியப்போகிறது என்று சொன்னால் அந்தச் செய்திக்கு ஆதாரம் என்ன இருக்கிறது எனக் கேட்கிறோம், அல்லது அந்தச் செய்தி பொய்யானது வெறும் புரளி, யாரோ சில கிறித்துவ அடிப்படைவாதிகள் கிளப்பிவிட்ட வதந்தி - இது போல பலமுறை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உலகம் அழிந்து போய்விடவில்லை. என்கிற ரீதியில் நாம் சிறிதும் அலட்டிக் கொள்ளாமல் நம் அன்றாட அலுவல்களில் மூழ்கிப் போகிறோம்.

ஆம், நாம் நமது வழக்கமான அன்றாட அலுவல்களில், கவலை மூழ்கித் தொலைந்து போகிறோம். உலகையும் நமது உண்மையான வாழ்க்கையையும் அதன் இலக்கையும் மறந்தே போகிறோம் என்பது கூட அழிவுகரமானதுதான்.

ஆக, வாழ்க்கையின் குறிக்கோள், அர்த்தம், உண்மை, இலக்கு,முழுமை ஆகியவற்றை தொலைத்துவிட்ட நமக்கு உலகம் அழியப்போகிறது எனும் தகவல் அதிர்ச்சியூட்டுவதாக இருப்பதில்லைதான். எனினும் உள்ளூர ஒருவித அச்சம் நம்முள் எழவே செய்கிறது. ஆனால் நமது உடனடியான பிரச்சனையும் ஒட்டுமொத்த பிரச்சனையும், உயிர்வாழ்தல் எனும் மேலோட்டமான விவகாரம் மட்டுமேயாகும். மேலும் அதில் அவ்வளவு தீவிரமாகவும் முனைப்புடனும் நாம் மூழ்கிக் கிடப்பதால் எந்தவொரு திடுக்கிடவைக்கும் அபாயகரமான செய்தியும் நம் காதுகளில் விழுந்தாலும் அது நமது மூளைக்குள் சென்று நம்மைத் தொடுவதில்லை.

உலகம் அழியப் போகிறது என்றால், அதனுடன் சேர்த்து அது நம்மையும் அழித்துவிடக்கூடும்- தொடர்ந்து பூமியில் நாம் உயிர் வாழ முடியாமல் போய்விடும் என்கிற மிக இயல்பான அச்சத்தைத் தவிர, அப்படி எதுவும் நிகழ்ந்தால் எவ்வாறு உயிர்

உயிர்பிழைப்பது என்பது குறிக்க எல்லைகளுக்கு மேலாக வேறு எல்லைகளான எதிர்விளைவும் பொருளாக நம்முன் எழுவதில்லை. ஆனால் (உண்மையான) வாழ்க்கை என்பது தொடர்ந்து உயிர்பிழைக்கிறது பற்றியதல்ல. ஆம், உயிர் வாழ்தல் என்பது உண்மையிலே முழுமையான வாழ்தல் அல்ல - அது வாழ்தலுக்கான ஒரு வெறும் அடிப்படை. வாழ்கிறேன் என்கிற உண்மையை நாம் எப்போது உணரப்போகிறோம் என்பதும், எத்தகைய போராட்டம் அல்லது தோல்வி வந்து நம்மை உலுக்கினால் நாம் உணர்வுக்கு வருவோம் என்பதும், எப்போது வாழ்க்கை என்றால் என்ன? என்கிற மிகவும் அடிப்படையான கேள்வியைக் கேட்டு ஒரு தீவிரமான ஆழமான விசாரணையில் இறங்குவோம் என்பதும் தெரியவில்லை.

உயிர் பிழைக்கிறது என்பதற்கு மேல் வாழ்க்கை என்றால் என்னவென்று தெரியாத அஞ்ஞானநிலையில் நம்மில் கற்பனை வளம் நிறைந்த சில விஞ்ஞானிகள் மிகுந்த தொலைநோக்குப் (?) பார்வையுடன் சிந்தித்து - மனித இனமானது விரைவில் பூமிக்கிரகத்தை விட்டு வெளியேறி வேறு கிரகங்களுக்கு குடிபெயர்ந்துவிடும் எனவும், பிறகு நமது பால்வீதி மண்டலம் முழுவதையும் மனிதர்கள் பரவிச் சென்று காலனிகளை அமைத்துக் கொண்டுவிடுவர் எனவும் சொல்கிறார்கள். எதார்த்தத்திலிருந்து பிழன்று போன சிந்தனைக்கு இதைவிட சரியான எடுத்துக்காட்டு வேறு எதுவும் இருக்க முடியாது.

2012ல் உலகம் அழியப்போகிறதா? எனும் கேள்வி உண்மையில் உலகைப் பற்றியதல்ல. மாறாக அது மனித இனத்தை - ஒவ்வொரு மனித ஜீவியையும் பற்றியதாகும். கடவுள் இறந்துவிட்டார் எனும் நீட்சேயின் அறிவிப்பு கடவுளைப் பற்றியதல்ல மாறாக பரிணாமப் பாதையில் முன்னேறிச் செல்லத் தவறிய மானுடர்களின் தேக்கமுற்ற ஆன்மீக வளர்ச்சி பற்றியதாகும். 2012 அல்லது 2022 எதுவாயினும் உலகம் அழியப்போவதில்லை. ஏனெனில் அழிவதற்காகத் தோன்றியதல்ல உலகம்.

ஐசக் நியூட்டனும், ஆல்பர்ட் ஐன்ஸ்டீனும் கண்டறிந்து சொல்லிடாத மிக முக்கியமான பிரபஞ்சவிதிகள் சிலவற்றை வாசகர்கள் முதன் முறையாக இக்கட்டுரையில் காணலாம்.

முதல் விதி என்னவென்றால், உலகின் (பிரபஞ்சத்தின்) ஆரம்பம் என்பது ஒரு படைப்புப்பூர்வ நிகழ்வு என்றால், அதன் முடிவு என்பதும ஒரு படைப்புப்பூர்வ நிகழ்வாகத்தான் இருக்க முடியும்.

இம்முதல் விதியின் உப-விதி என்னவென்றால் உலகிற்கு அழிவு என்பது கிடையாது என்பதுதான்.

இரண்டாவது விதி என்னவென்றால், உலகம் உருவானதற்கு ஒரு குறிக்கோள், அல்லது இலக்கு என்பது இருக்குமானால், அந்த குறிக்கோளை இலக்கை அடைந்ததும் உலகம் முடிவிற்கு வந்துவிடும்.

இந்த விதியின் உப-விதி என்னவென்றால் உலகின் முடிவு என்பது, அது அடையக்கூடிய முழுமை நிலையைக் குறிப்பதாகும். உலகிற்கு அழிவில்லை. ஆனால் முடிவு உண்டு. உலகின் முடிவு என்பது உலகின் முழுமையே ஆகும்.

மூன்றாவது விதி உலகமும் பரிணாம நிகழ்வு முறையும் பிரிக்க முடியாதது. உலகம் என்பது ஒரு இலக்கு நோக்கி வளர்ந்து (பரிணமித்துக்)கொண்டிருக்கும் ஒரு நிகழ்வுமுறையாகும். அது வெறும் பௌதிகப் பொருட்களின் தொகுப்போ, அல்லது ஒரு குறிப்பிட்ட பண்பு நிலையில் நிலைகொண்டுவிட்ட ஒன்றோ அல்ல. உலகம் தோன்றியதிலிருந்து அது நான்கு முக்கிய பரிணாமக் கட்டங்களை நிலைகளைக் கடந்துவந்துள்ளது. இவை குறித்து ஏற்கனவே நாம் விரிவாகப் பார்த்துள்ளோம்.

உலகமானது தற்போது மிகத் தெளிவாக உருப்பெற்ற மூன்று தளங்களைக் கொண்டதாக உள்ளது. ஏறு வரிசையில், கீழிருந்து மேலாக முதலாவது பௌதிக தளம், இரண்டாவது உயிரியல் தளம், மூன்றாவது உணர்வியல் தளம் உலகின் நான்காவது தளம் இன்னம் முழுமையாக உருப்பெறாமல் உள்ளது. இந்த நான்காவது தளம் தான் உலகின் முழுமையைக் குறிக்கும் முழு - உணர்வு எனும் நிலையாகும்.

உலகின் ஒவ்வொரு தளத்தையும் பண்புரீதியாக அமைந்த வெவ்வேறு அம்சங்கள் பிரதிநிதித்துவம் செய்வதாயுள்ளன. பௌதிகத் தளத்தைப் பொறுத்தவரையில் கிரகங்கள், நட்சத்திரங்கள், கேலக்சிகள் மற்றும் பிற அண்டவெளிப் பொருட்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றன. உயிரியல் தளத்தை தாவர விலங்கு ஜீவிகளும், உணர்வியல் தளத்தை மனித ஜீவிகளும் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

இம்மூன்று வகைப்பட்ட பிரதிநிதித்துவ படிமுறையில் மனித ஜீவிகள் - குறிப்பாக - ஒவ்வொரு மனித ஜீவியும் தான் உலகை முழுமையாகப் பிரதிநிதித்துவம் செய்கிற அம்சமாக உள்ளான். உண்மையில் ஒரு மனித ஜீவி என்பவன் தன்னளவில் ஒரு நறும் - பிரபஞ்சமாகவே திகழ்கிறான். உலகம் எவ்வாறு மூன்று தளங்களைக் கொண்டுள்ளதோ அவ்வாறே மனித ஜீவியும் மூன்று

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] 2002 [illegible] 65 [illegible]

உருவாயின. அப்போது பல மில்லியன் ஆண்டுகளாக விண்கற்களும், வால் நட்சத்திரங்களும் புவியின் மீது மழை பொழிவது போல வீழ்ந்த வண்ணம் இருந்தன எனப்படுகிறது. மேலும் புவியானது தொடர்ந்து புகைமண்டலங்களால் அதிர்ந்து கொண்டே யிருந்தது. ஆகாயமே எரிமலைகள் வெடித்துச் சிதறி நெருப்புக் குழம்பையும், பிற வாயுக்களையும் வெளிப்படுத்திய வண்ணம் இருந்தன

ஆனால், இவையாவும் [illegible] காலத்திற்கு ஒரு முடிவு எரிமலை வெடிப்புகளும், [illegible] 1400 [illegible] ஆண்டு புகைமண்டலமும் புவியை உருக்குலைத்தமை உண்மை. வால் நட்சத்திரங்களும் ஒரு முக்கியமான செய்தி [illegible]. புவியின் மீது முதல் உயிர் தோன்றுவதற்குத் தேவையான நீர் அப்போது அவைகளை வால் நட்சத்திரங்களே புவிக்குக் கொண்டுதந்தன என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். மேலும், புவியில் உயிர்களை உருவாக்கிய [illegible] விசைகளை வழங்கியது வால் நட்சத்திரங்களின் [illegible] குறைந்து போயின. இவ்வாறு காலகட்டங்களில் ஒரு 100 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது இரண்டு (பெரிய அளவு) விண்கற்களுடன் 26 கிருந்து 30 மில்லியன் ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு வால் நட்சத்திரமும் புவியின் மீது விழுவதாக விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

ஆக, புவிக்கும், புவியின் மீது நிலவும் பரிணாம நிலைமைகளுக்கும், தொலைதூர அண்ட வெளிக்கும் நெருங்கிய தொடர்பும், செய்திப் பரிமாற்றமும் உள்ளது எனலாம் தெளிவாகிறது

அப்படியானால், இந்த [illegible] முறைமைக்கென்று புதிய கோட்பாடு மிகச் சரியாகவே இருக்கும் என நாம் கொள்ளலாம். அதாவது, அண்டவெளியிலிருந்து வரும் [illegible] [illegible] போல. வித்து புரதங்களைப்போல. அல்ல [illegible] புவியின் மீதுள்ள [illegible] பரிணாம [illegible] [illegible] [illegible] அண்டவெளியிலிருந்து விண்கற்கள் அல்லது வால் நட்சத்திரங்கள் [illegible].

புவியில் ஏற்பட்ட பரிணாமத் தேக்கத்தை நிராகரித்து தொடர்ந்து [illegible] உரையாடல் எனலாம். எவ்வாறெனில், உலக பொருள் இயக்கமும், உளவியல் பரிணாம இயக்கமும் ஒன்றுக்கொன்று இயங்குமாறுள்ளது பொருள் இயக்கத்தின் தோற்றமும், இயக்கம் பரிணாம இயக்கத்திற்கு உதவும் ஒரு காரணமாகவும், ஒரு

முக்கியமாக, மனித இனம் தமக்குத் தாமே உருவாக்கியுள்ள மக்கள் தொகைப் பெருக்கம், சூழற்கொலை, புவிக்கோளம், சூடேறுதல், இயற்கை வளம் சுரண்டல், பல்லுயிர் வளம் அழிப்பு, அணு ஆயுதங்கள், ரசாயனம் மற்றும் உயிரியல் ஆயுதங்கள் விபரீத தொழில்நுட்பங்கள், மத வெறி, தீவிரவாதப் போக்குகளை ஆகிய பல்வேறு அபாயகரமான அழிவுகரமான விளைவுகளுக்கும், பிரச்சனைகளுக்கும் அடிநாதமாக விளங்குவது மனித இனத்தின் உணர்வற்ற தன்மையே ஆகும்.

உணர்வற்ற தன்மையிலிருந்து சிந்தனையற்ற செயல்பாடுகளும், போக்குகளும் பிறக்கின்றன. ஆம், மனிதர்கள் உண்மையிலேயே சிந்திப்பதில்லை. அவர்களிடம் யாதொரு உருப்படியான உலகப் பார்வையும், வாழ்க்கைப் பார்வையும் கிடையாது.

முக்கியமாக, மனிதர்கள் இன்னும் உணர்வுக்கு வரவில்லை என்பது மிகவும் வருத்தத்துக்குரிய கவலைக்கிடமான நிலைமையாகும். நாம் இருக்கிறோம், என்பதை அறிவதற்கு மேலாக, மனிதர்களுக்கு நாம் ஏன் இருக்கிறோம்? எதற்காக இந்த இருப்பு அல்லது வாழ்க்கை கொடுக்கப்பட்டிருக்கிறது? நாம் எங்கிருந்து வந்தோம், எங்கே செல்கிறோம்? என்கிற கேள்வியும் அவர்களிடம் எழவில்லை, அதற்கான பதிலும் தெரியாது.

நாம் எல்லோரும் சிந்திப்பதாக நினைத்துக்கொள்கிறோம். ஒரு வகையில் ஏராளமாய்ச் சிந்திக்கவும் செய்கிறோம். ஆனால், எதை பற்றியதாக நமது சிந்தனை உள்ளது? அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான மேற்புறத்துப் பொருட்களைப் பற்றியதாகவே நமது சிந்தனை, அறிவு யாவும் உள்ளன. வாழ்க்கையின் உட்பொருளைப் பற்றி - அர்த்தம், உண்மை, குறிக்கோள், மற்றும் இலக்கு, முழுமை பற்றியெல்லாம் நாம் சிந்திப்பதில்லை. இவற்றைப் பற்றி சிந்திப்பதன் தேவையையும் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் உணரும் அளவிற்கு இன்னும நாம் உணர்வு பெறவில்லை.

ஆம், தேவைகளால் செலுத்தப்படும் பிராணிகளைப் போலவே நாம் உள்ளோம். தேவைகள் தான் நம்மை விரட்டிச் செலுத்துகின்றன. மேலும், தேவைகள் தான் (அத்தேவைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது குறித்து) சிந்திக்கவும் வைக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால், தேவைகளின் வாழ்க்கையை (தேவைகள் எடுத்துச் சொல்லும் வாழ்க்கையை)த் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவைகளைக் கடந்து வாழ்க்கையை ஒருமுறைகூட நாம் தரிசித்தது கிடையாது.

[illegible]

முனைப்பாக, முழுமையாக ஈடுபடுகின்றதன் வழியே உண்மையான வாழ்க்கையையும், மரணத்தையும் மறந்துவிடுகின்றனர்.

வாழ்க்கை என்றால் என்னவென்று ஆழமாக தேடியிருக்கும் மரணத்தைப் பற்றிப் அவர்கள் நிச்சயம் தேடியிருப்பார்கள். ஆனால், வாழ்க்கையைப் பற்றி அவர்கள் தேடிக்கவும் தேவையில்லை. அந்த அளவிற்கு அவர்கள் மேலோட்டமான நிலைக்கல் விவகாரங்களிலும், நிலைக்களை அலங்கரிக்கிறதில் ஆடம்பரத் தேவைகளைக் குவித்துச் செல்வதிலும் ஈடுபடுகின்றனர்.

ஒரு வகையில் - மரணம், உடல் அழிவு ஆகியவை பற்றி எண்ணாமலும், சிந்திக்காமலும், பேசாமலும் அவைகளை மறந்துவிடுகின்றனர். ஏதோ தாங்கள் ஒரு நாளும் இறக்கப்போவதில்லை என்பதாக முற்றிலும் உணர்வற்ற நிலையில் வாழ்ந்து சென்று திடீரென ஒரு நாள் மரணத்தில் முடிந்து போகின்றனர்.

வேறு ஒரு வகையில் - மரணம் என்பது தவிர்க்க முடியாதது - பிறந்தவர்கள் யாவரும் ஒரு நாள் இறந்தாக வேண்டும். என்கிற தர்க்கத்தின்படி மரணத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டுவிடுகின்றனர். இவ்வாறு ஏற்றுக்கொள்வதன் வழியே மரணத்தைப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியத்திலிருந்து சாதுர்யமாக தங்களை விலக்கிக் கொண்டுவிடுகின்றனர். இவ்வாறு எல்லா வகைகளிலும் மனிதர்கள் மிகவும் மேலோட்டமானதொரு பார்வையைக் கொண்டு மிகவும் ஆழமற்றதொரு பார்வையைக் கொண்டு மிகவும் ஆழமற்றதொரு வாழ்க்கையை வாழ்ந்து செல்கின்றனர்.

ஆனால், மரணம் என்பது தர்க்க ரீதியானதொரு நிகழ்வல்ல - அதை தர்க்க ரீதியாக மறுக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாது. இவ்வழியில் மரணத்தின் ஆழமிக்க உணர்த்துதல்களையும், அதன் மாற்றமுறச் செய்திடும் ஆற்றலையும் நாம் தவறவிட்டுவிடுவோம். ஆம், வாழ்க்கை என்றால் என்னவென்று தெரியாமலேயே வாழ்ந்து செல்வதும், மரணம் என்றால் என்னவென்று தெரியாமலேயே மடிந்து மண்ணுக்குள் போவதும் விலங்கினத்துக்குரிய விதியாகும்.

வாழ்க்கையை ஆழமாகச் சென்று புரிந்து கொள்ளும் அணுகுமுறை மற்றும் வழிமுறையில் மரணத்தின் கேள்வியையும் அதன் மாற்றமுறச் செய்திடும் தாக்கத்தையும் ஒருவர் தவறவிட முடியாது. உண்மையிலேயே வாழ்க்கையை நெருங்கிச் சென்று புரிந்து கொள்வோமெனில் மரணத்தைப் பற்றியும், உலகின் முடிவு பற்றியும் சிந்திக்காமலும் தியானிக்காமலும் இருக்க

முடியாது. முதலில் ஒருவர் வாழ்க்கை என்றால் என்னவென்று பிரத்யேகமாக உணர்ந்தறிதல் முக்கியமாகும். வாழ்க்கையின் அர்த்தம் யாது? வாழ்க்கை ஏன் நமக்களிக்கப்பட்டுள்ளது? அது எங்கே தொடங்கியது எங்கு முடிகிறது? என்பதையெல்லாம் அறிவது அவசியமாகும்.

ஏதோ யாரோ, 2012ல் உலகம் அழியப்போகிறது என்று சொல்லியதைக் கேட்டு பயந்து போய் உலகின் அழிவு பற்றி இங்கு நாம் பேசிக்கொண்டிருக்கவில்லை. மாறாக ஆரம்பம், முடிவு பற்றியெல்லாம் சிந்திக்கவும் பேசவும் வேண்டிய முக்கியத்துவம் உணர்ந்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம்.

இது மிகவும் புதிய வகையிலான உரையாடல் ஆகும். இதன் வழியே முடிவில் நாம் எட்டக்கூடிய தீர்வு வழக்கத்திற்கு மாறானது. அது உலகின் ஆரம்பம் மற்றும் முடிவு ஆகியவைகளுக்கு அப்பால் நாம் எட்டக் கூடிய புரிதலை இலக்காகக் கொண்டது.

உலகின் அழிவு பற்றி பலரிடம் கேட்டபோது பரவலாக பலர் உலகம் ஒன்றும் அழியாது என்பதாக உடனடியாக பதிலளித்தனர். சிலர் எப்படி, எதனால், எப்போது அழியப் போகிறது. உலகம் முற்றிலும் அழியுமா அல்லது ஒரு பகுதி மட்டும் அழியுமா? எனக் கேட்டனர். ஒரு வகையில் உலகின் அழிவு பற்றிய செய்தியானது எல்லோருக்குள்ளும் ஒருவித அச்சத்தையும் கலக்கத்தையும் உருவாக்கியிருக்கிறது என்றாலும், சில வினாடிகளே அது நீடிக்கிறது. ஏனெனில் அதற்கு மேலாக அவர்களால் அந்த செய்தி குறித்து (வேறு எந்த செய்தியானாலும் இதே நிலை தான்) கவனம் குவித்து சிந்திக்க முடிவதில்லை. பெரும்பாலோரின் நிலை, இது குறித்து என்ன சொல்வது என்றே தெரியாமல் திகைத்து நிற்கிறார்கள். ஆனால், எவருமே உலகம், மனிதன், வாழ்க்கை, மரணம், முடிவு, அழிவு ஆகியவைகளுக்குள்ள ஆழமான தொடர்பு பற்றிய உணர்வுக்கு (சட்டென) விழித்தெழுபவராக இல்லை. எல்லோருமே ஒரு வித மயக்கத்தில், அல்லது ஆழ்ந்த அந்நோன உறக்கத்தில் ஸாம்பி எனப்படும் நடைப்பிணங்களைப் போலவே இருக்கிறார்கள். எல்லோருமே ஏதோ இருக்கிறார்களே தவிர உண்மையில் இருக்கவில்லை.

ஏதோ உலகம் அழியுமா அல்லது அழியாதா? என்கிற தலைப்பில் பட்டி மன்றம் நிகழ்த்தப்படுவது போல இப்படியும் அப்படியுமான தங்கள் மேலோட்டமான அபிப்பிராயங்களையும், தங்களுக்குத் தெரிந்த படித்தறிந்த விபர அறிவையும் தான் வெளிப்படுத்துகிறார்கள்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அதன் மீது நிறுவிக் காண முயற்சிப்பது அபத்தமான செய்கையாகும்.

உலகம் இருக்கிறது என்பது குறித்து எவருக்கும் சந்தேகமோ, மாறுபட்ட கருத்தோ கிடையாது. உலகம் ஒரு மாயை என்று சொல்பவர்கள் கூட முதலில் உலகம் இருப்பதைக் காண்பதாலும், ஏற்று அங்கீகரிப்பதாலும் தான் உலகைப் பற்றி அவர்களால் தங்களது கருத்தைச் சொல்ல முடிகிறது. உலகம் மாயை என்பது உலகை மறுப்பதாக ஆகாது. மாறாக உலகம் என்பது அதனளவில் ஒரு தனி நிஜமோ, நிரந்தர நிஜமோ அல்ல என்பதைத் தான் அவர்கள் உலகம் ஒரு மாயை என்ற சொற்களில் குறிப்பிடுகிறார்கள்.

உலகம் நிரந்தரமானதல்ல, அது மாறிக்கொண்டும் வளர்ந்து கொண்டும் உள்ளது. அது வெறுமனே பொருள் முதல்வாதிகள் சொல்வது போல ஒரு எந்திரம் போல இயங்கிக் கொண்டு மட்டும் இருக்கவில்லை. உலகம் பரிணமித்துக் கொண்டிருக்கிறது.

உலகம் என்பது முடிவான (முழுமையான) இறுதியானதோர் நிஜமல்ல - அதன் மீது மனித ஜீவிகளாகிய நாம் நிரந்தரமாகச் சார்ந்திருப்பதற்கு. எனவே தான் உலகம் மாயை என இங்கே இந்தியாவின் புராதன கால ஆன்மீக வாதிகள் கூறினர்.

உலகம் மாயை - நிரந்தரமற்றது - என்றால் மனித வாழ்க்கையும், மனிதனும் மாயை தான் - நிரந்தரமற்ற நிஜம் தான். இக்கூற்று உணர்த்துவது என்னவெனில் நிரந்தரமற்ற இந்த உலகில் நிரந்தரமற்ற ஒரு வாழ்க்கையை, இருப்பைச் சார்ந்திராமல் நிரந்தர நிஜம் பற்றிய தேடலில் தீவிரமாக ஈடுபட்டு மரணம் வந்து மனித ஜீவியை முடிப்பதற்குள் உலகம், வாழ்க்கை மனிதன் எனும் இந்த முப்புதிரை விடுவித்து விடுதலை பெறுவது அவசியமாகும்.

உலகம், மனிதன், வாழ்க்கை இம்மூன்றும் நிரந்தரமற்றவை. மேலும் இம்மூன்றும் தனித்தனி அம்சங்களாக, நிஜங்களாகத் தெரிந்தாலும் அவை முழுமையடைதல் என்கிற இலக்கைப் பொறுத்தவரையில், வெவ்வேறு வகைகளில் ஒன்றையொன்று சார்ந்துள்ள நிஜங்களாகும். அதோடு, அவை வெவ்வேறு தன்மையிலமைந்தவையாக இருப்பினும் உண்மையில் அவை ஒரே நிகழ்வுமுறையின் மூன்றுவித நிலைகளேயாகும். அடுத்து அவை தனித்தனியே பிரிந்து இயங்குவதாயிருக்கும் வரையில் முழுமையடைதல் என்பது சாத்தியமில்லை. மாறாக இம்மூன்றும் ஒன்றாகும் போது மட்டுமே முழுமை எட்டப்பட முடியும்.

உலகின் முழுமை மனித ஜீவியின் முழுமையில் அடங்கியுள்ளபடியால் வாழ்க்கையின் அல்லது ஒட்டுமொத்த

இருப்பின் முழுமையும் மனித ஜீவியின் முழுமையை எதிர்நோக்கியே உள்ளது.

எவ்வாறு ஒரு மரமானது தனது முழுமைக்காக தனது காய்களைச் சார்ந்திருக்கிறதோ, அவ்வாறே உலகமானது மனித ஜீவிகளைச் சார்ந்துள்ளது. மரத்தின் முழுமையும், உய்வும், நிறைவும், விதிகளையும் அதன் கனிகளின் வழியே தான் எட்டப்படுகிறது. உலகின் நிறைவும், முழுமையும் மனித ஜீவிகளின் வழியே தான் எட்டப்பட இருக்கிறது. மரமானது காய்களை உருவாக்கியதுடன் அதனுடைய பணி கிட்டத்தட்ட முடிந்துவிட்டது எனலாம். மரமானது காய்களை உருவாக்குகிறது என்று காண்பதைவிட மரமே காய்களாக உருமாறிவிடுகிறது என்று காண்பதுதான் சரியான, பரிணாம பூர்வமான பார்வையும், புரிதலும் ஆகும். மரம் காய்களாக மாறியதும் கிட்டத்தட்ட மரம் என்பது மறைந்துவிடுகிறது அல்லது இல்லாமல் போய்விடுகிறது எனலாம். அவ்வாறே உலகம் மனித ஜீவிகளாக மாறியதும் உலகம் மறைந்து விடுகிறது. மரத்திற்கும் காய்களுக்கும் உள்ள உறவு குறுகிய காலத்தைக் கொண்டதே - எனினும் அது மிகவும் சூட்சுமமானது. காய்கள் என்பவை மரம் தன்னைத் தானே கடந்து செல்வதற்கான வழியும் யுக்தியுமாகும்.

மரத்தின் முழுமை ஒவ்வொரு காயிலும் வித்தாக உள்ளடங்கி விடுகிறது. காய்கள் காய்த்த பிறகும் மரம் இருக்கவே செய்கிறது. அது போலவே மனித ஜீவிகள் தோன்றிய பிறகும் உலகமும் இருக்கிறது. மரமும் உள்ளது அதில் நிறைய காய்களும் உள்ளன. ஒவ்வொரு காயினுள்ளும் வித்தாக மரம் உள்ளடங்கியுள்ளது என்பதைப் போலவே உலகமும் உள்ளது. எண்ணற்ற மனித ஜீவிகளும் உள்ளனர். ஒவ்வொரு மனித ஜீவியினுள்ளும் உலகம் உள்ளடங்கியுள்ளது.

இப்போது நாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கட்டத்திற்கு வருகிறோம். ஆம், காய்களுக்கும் மரத்திற்கும் உள்ள தொடர்பு காய்கள் கனிகளாகும் வரை மட்டுமே- காய் முற்றி கனியாகும் வரை அது மரத்தைச் சார்ந்திருப்பது அவசியமே. ஏனெனில் மரத்தின் முழுமை காய்ப்பதுடன் எட்டப்படுவதில்லை மாறாக, காய் கனியாவதிலேயே மரத்தின் முழுமையும் இலக்கும் முழுமையாக எட்டப்படுகிறது.

இவ்விடத்தில் நாம் புரிந்துகொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான விஷயம், காய் முற்றிக் கனியாகும் வரைதான் அது மரத்தின் பகுதி. கனியாகிய பிறகு அது மரத்தைச் சார்ந்ததல்ல. இனி அது தனி முழுமை, ஆம், கனி தன்னுள் முழு மரத்தையே

(வித்தாக)கொண்டுள்ளது. மரத்தின் முழுமை ஒவ்வொரு கனியிலும் அடங்கியுள்ளது. காய் கனியாகிய பிறகு அதற்கும் மரத்திற்குமான தொடர்புறவு முடிந்துவிடுகிறது.

மரம் கனியின் வழியே தன்னைக் கடந்துவிடுகிறது. அதன் பிறகு மரம் இருந்தாலும் விழுந்தாலும் கவலையில்லை. மனிதன் உணர்வு பெற்று முற்றி முழு உணர்வாய்க் கனிந்து ஞானி யாகிய பிறகு தன்னையும் உலகையும் கடந்தவனாகிறான். உலகம் ஞானியின் வழியே (முழுமை பெற்று) தன்னைக் கடந்து சென்றுவிடுகிறது.

உலகம், பிரபஞ்சம் என்பது தற்போது நன்கு வளர்ந்த, முதிர்ந்த - பல ஈடுகள் காய்களைக் காய்த்து இப்போதும் நிறைய காய்களைக் காய்த்து குலுங்கும் - ஒரு மாமரத்தைப் போலுள்ளது எனலாம். ஆம், உலகம் தனது மத்திய வயதுப் பருவத்தை கடந்துவிட்ட நிலையில் தனது கடைசிக் கட்டத்தில் உள்ளது. விஞ்ஞானிகளின் கணக்குப்படி அது இன்னும் ஐந்தாறு பில்லியன் ஆண்டுகள் நிலைத்திருக்கும். அதன் பிறகு ஒட்டுமொத்த உலகமும் தனது இறுதி முடிவைத் தழுவி மறைந்துவிடும். ஆனால், அதற்கு முன்னரே, கிட்டத்தட்ட ஒரு பில்லியன் ஆண்டுகளுக்குள் நாம் சார்ந்திருக்கும் சூரியன் தனது எரிபொருளைத் எரித்துத் தீர்த்து விட்டு, ஒரு சிகப்புக் கோளமாகவோ, அல்லது கருந்துளையாகவோ மாறி மடிந்துவிடும். ஆக, மனித இனத்தின் முடிவு என்பது நிச்சயம் - அது சில மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகாயினும், அல்லது சில ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகாயினும் முடிவிற்கு வருதல் எனும் கதவின் வழியே மனித குலம் சென்றேயாக வேண்டும்.

அதே போது, தனி மனித ஜீவிகளைப் பொறுத்த வரையில் ஆயிரம், மில்லியன், பில்லியன் ஆண்டுகள் எனக் காத்திருக்கத் தேவையில்லை. மாறாக ஒவ்வொரு மனிதனின் சொந்த ஆயுட்காலத்தின் இறுதியில் 50 வயதிலோ, 60 அல்லது 70 அல்லது அதிகபட்சம் 100 வயதிலோ முடிவிற்கு வருதல் எனும் திரைமூடல் தருணத்தைச் சந்திப்பதென்பது நிச்சயமாகும்.

தனிமனித ஜீவிகள் ஒவ்வொருவரும் உணர்வற்ற ஒரு விலங்கு போல வாழ்ந்து மரணத்தில் முடிந்து போவதும் அல்லது உணர்வுக்கு விழித்து மரணத்திற்கு முன்னேயே முழுமையைச் சேர்வதும் அவரவர்களின் தெரிவைப் பொறுத்ததாகும். ஒவ்வொரு தனிமனிதனையும் பொறுத்த வரையிலும் அவனது முழுமையுடன் உலகமும் மறைந்துவிடுகிறது. ஏனெனில் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னளவில் ஒரு கூறும் - உலகமே ஆவான். ஆகவே மனிதர்கள் யாரும் உலகின் அழிவைப் பற்றிக் கவலைப்படவோ, பயப்படவோ

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

எற்படும் போதும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அப்போதைய நிலைமைகள் நமக்கு எடுத்துச் சொல்லும். நம் உயிரையும், நம்மைச் சார்ந்தவர்களின் உயிரையும் காப்பாற்றிக் கொள்வது என்பதுதான் நாம் இயல்பாகச் செய்யக் கூடியதாகும்.

ஆனால், நம் உயிரைக் காப்பாற்றிக் கொண்ட பிறகு நாம் என்ன செய்வோம்? நெருக்கடிகள், இடர்களும், பிரச்சனைகளும் ஏற்படுவதற்கு முன்னர் என்ன செய்து கொண்டிருந்தோமோ அந்நிலைக்குத் திரும்பச் செல்கிறோம். பிறகு (இருக்கவே இருக்கிறது) வழக்கமான, அன்றாட வாழ்க்கை விவகாரங்கள், சுற்றுகள், அலுவல்கள்... அவ்வளவுதானே?

பேரிடர்களும், பெரும் நெருக்கடிகளும் சில வேளைகளில் எண்ணற்ற மனிதர்களின் உயிரைப் பாதித்துவிடுகின்றது. அதோடு பெரும பொருள் மற்றும் உடைமைச் சேதத்தையும் விளைவித்துவிடுகிறது. சுருக்கமாகச் சொன்னால், மனிதர்களின் அன்றாட உயிர் வாழ்தல் குலைக்கப்படுகிறது, தலைகீழாகப் புரட்டிப் போடப்படுகிறது. ஆனால், மீண்டும், மீண்டும் மனித ஜீவிகள் தங்களது உயிர் வாழ்தலை மீட்டுக்கொண்டு தொடர்கின்றனர். அதற்கு மேலாக பேரிடர்களும், பெரும் நெருக்கடிகளும் வேறு எந்த மாற்றத்தையும் மனிதர்களிடம் ஏற்படுத்துவதில்லை என்பது மிகவும் துரதிருஷ்டவசமானது.

அதாவது, மனிதர்களை உணர்வுக்கு வரச்செய்யும் இயற்கையுலகின் எல்லா அதிரடி முயற்சிகளும், பிரயத்தனங்களும் தோல்வியைத் தழுவிடுகின்றன. வெறும் உயிர் வாழ்தலைத் தாண்டி வாழ்க்கையைக் காண வேண்டியதன் அவசியத்தை மனித ஜீவிகள் உணருவதேயில்லை. எவ்வளவுதான் உலுக்கப்பட்டாலும், பூமியே இரண்டாகப் பிளந்து கொண்டாலும், முதலில் சற்று அதிர்ந்து போனாலும், விரையில் இடையே ஒரு பாலத்தைக் கட்டி தங்களது அன்றாட உயிர் வாழ்தலை தொடர்ந்து நடத்திச் சென்றிடுவர்.

ஊர்ந்து செல்லும் ஒரு புழுவின் முன்னே ஒரு தடையை எற்படுத்தினால், அப்புழு அத்தடையின் மீது எறிச் சென்றிட முயற்சிக்கும், முடியவில்லையெனில் பக்கவாட்டில் சென்று ஒருவாறு அத்தடையைக் கடந்த பிறகு மீண்டும் தழைகளைத் தேடித் திண்பதில் அது அழ்ந்துவிடுவதைப் போலவே மனிதர்களும் என்ன நிகழ்ந்தாலும், நேரிட்டாலும் மீண்டும் தங்கள் அன்றாடச் சுற்றில் ஆழ்ந்துவிடுவர். புழுவைப் பொறுத்தவரையில் அதற்கு நேரிடும் தடைகளையும், பிரச்சனைகளையும் பற்றி அதற்கு யாதொரு கருத்தும், கோட்பாடும் கிடையாது. மனிதர்களுக்கும் அப்படித்தான். பேரிடர்களையும் நெருக்கடிகளையும் தங்களது

வழக்கமான வாழ்க்கைச் சுற்றைக் குலைக்கும் இடைஞ்சல்களாக காண்பதற்கு மேல் அவற்றைப் பற்றி வேறு பிரத்யேக கருத்து, கோட்பாடு எதுவும் கிடையாது.

மனிதர்களும் புழுக்களைப் போலத்தான் - ஆனால் சற்று வித்தியாசமான புழுக்கள். ஆம், மனிதர்கள் பேசும், சிந்திக்கும் புழுக்கள். எந்தவொரு விஷயமாயினும் அதன் மையத்தை, கருவைத் தொடாமலேயே அது பற்றி ஏராளமாய்ச் சிந்திக்கவும் பேசவும் செய்கிற புழுக்கள்.

பேரிடர் நிகழ்ந்தாலும், நிலைமை சாதாரணமாய் இருந்தாலும் இரண்டுவித அணுகுமுறைகள் மட்டுமேயுள்ளன. ஒன்று உணர்வற்ற அணுகுமுறை. இரண்டாவது, உணர்வுற்ற அணுகுமுறை. உணர்வுள்ள ஜீவிகள் என்கிற வகையில் மனிதர்கள் என்ன நிகழ்ந்தாலும் நிகழாவிட்டாலும் எந்தவொரு குறிப்பிட்ட (கொடுக்கப்பட்ட) கணத்திலும், இருப்பிற்கு (வாழ்க்கைக்கு) முழுமையாக பதிலளித்தல் - அதாவது, முழு உணர்வோடிருத்தல் என்பது மட்டுமே பொருத்தமானதாகும்.

வாழ்க்கையைத் தீர்க்கமாக உணர்வதற்கு (வாழ்வதற்கு) அர்ச்சுனனைப் போல நெருக்கடி மிக்க போர் முனையில் நிற்க வேண்டிய தேவையில்லை. அல்லது பேரழிவின் விளிம்பில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை.

உணர்வற்று கழியும் ஒவ்வொரு கணமும் மரணம் தான், பேரழிவு தான்.

எவ்வித அசம்பாவிதமும் அற்ற சாதாரண நாட்களில் மனிதர்கள் அதிக உணர்வுடன் வாழ்வதில்லை. மாறாக, உணர்வற்ற தன்மை என்னும் அசம்பாவிதத்தில் மனிதர்கள் வீழ்ந்து விடுகின்றனர். மனிதர்களின் பெரும் பிரச்சனை அவர்களது அரை - உணர்வுதான். இந்த அஞ்ஞான உறக்கத்தைக் கலைக்கும் விதமாக இயற்கையுலகமானது அவ்வப்போது அசம்பாவிதங்களைக் கட்டவிழ்த்து விடுகிறது. அவைகளை விஞ்ஞான ரீதியாக தடுத்து நிறுத்திட முடியாது. மெய்ஞானம் சொல்கிறது.

ஒரே பாதுகாப்பான இடம்
முழு உணர்வு
ஒரே பாதுகாப்பான காலம்
காலம் கடந்த நித்தியம்

மேலும் கருத்து பரிமாற்றத்திற்கு
93456 17754, 9488194381
மா. கணேசன், 25.02.2012, நெய்வேலி.

றியாஸ் குரானா

நேரம் அதிகாலை 6.30
இதற்குப் பிறகு
யாரும் அவளைச் சந்தித்திருக்கவில்லை

காணாமல் போய்விட்டதாக
இப்போது அறிவித்திருக்கிறார்கள்

வயது ஐம்பது

காணாமல் போன அன்று
நீல நிறச் சேலை அணிந்திருந்தாள்
இப்படி, இன்னும் சில அடையாளங்கள்
அறிவிக்கப்பட்டிருக்கின்றன

ஐந்து மணியளவில்,
பூமரங்களுக்கிடையே
பாதையொன்றை உருவாக்கி
அவள் நடந்து வந்ததாகவும்

நான்கு மணியளவில்,
சப்தமற்றுக் கிடந்த ஆற்றில்
கால்களை அடித்து கடந்து வந்ததாகவும்

மூன்று மணியளவில்,
கிடுகு மற்றும் முள்வேலியை விலக்கி
வாசலைக் கடந்துவிட்டதாகவும்

ஒரு மணியளவில்
அவளது அறையில்
குறட்டைவிட்டு நிம்மதியாக
தூங்கிக் கொண்டிருந்ததாகவும்

தகவல்கள் கிடைத்திருக்கின்றன

இரண்டு மணியளவில்
நடந்தது பற்றிய தகவல்கள்

கிடைக்காமையினால்,
அப்போதுதான்
வீட்டை விட்டு வெளியேறிவிட
அவள் முடிவெடுத்திருக்கலாம் எனச் சிலரும்

பேய் பிசாசு
கூட்டிப் போயிருக்கலாம் எனச் சிலரும்
சந்தேகிக்கின்றனர்

நள்ளிரவு 12 மணியளவில்
முதலாவது சொல்லை நான் எழுதும் போது
என் நினைவின் வழியே
அவள் பயணிக்கத் தொடங்கினாள்

இறுதிச் சொல்லை
சாதாரணமான புன்னகையோடு கடந்த பிறகு
நான் அவளைப் பின்தொடரவில்லை

காணாமல் போய்விடுவாள் என்பதும்
அப்போது எனக்குத் தெரியாது
இதுதான் எனது நீதிமன்ற சாட்சியமாகும்

அவளின் குடும்பநிலை பொறுக்காமல்
வெளியூர்களுக்குச் சென்று
பிச்சை எடுக்கும்படி
நான் ஆலோசனை வழங்கியிருக்கிறேன் என
தேர்ந்த வாசகர்களுக்கு
இந்நேரம் விளங்கியிருக்கக் கூடும்

எப்படித் தலைகீழாக வாசித்தாலும்
என்னைக் காட்டிக்கொடுக்க நினைப்பவர்களுக்கு
இது ஒருபோதும் புரிந்துவிடாது.

தகவல்களை வைத்து
துப்பறிந்து செல்பவர்களுக்கு
தொடர்ந்து நகரமுடியாமல் இருப்பது,
ஒரு கட்டத்திற்கு மேல்
அவள் ஆணாக மாறுவதுதான்.

அறிவழகன்

[illegible]

[illegible]

கேரளாவையும், நீலகிரியையும் நினைக்கும்போதெல்லாம் அதன் வளைந்து நெளிந்து செல்லும் மலைப் பாதைகளோடு, குளிரும், தேயிலை செடியும் அதன் இலைகளை பறித்து முதுகில் சுமந்து கொண்டு போகும் பெண்மணிகளும் நினைவுக்கு வருவதை தவிர்க்க முடிவதில்லை. வரிசை வீடுகளில் தமிழோ, மலையாளமோ பேசுபவர்கள் அவர்கள்தான் அதன் மக்கள் என்று மனப்பூர்வமாக நம்பியிருந்தேன். அந்த மண்ணின் பரிச்சயம் இருந்தாலும் உறவுகளின் நீண்ட தொடர்ச்சி அங்கிருந்தாலும் அந்த மலைகளின் வரலாறோ அதன் பூர்வீக மக்களைப் பற்றியோ கொஞ்சமும் நான் அப்போது அறிந்திருக்கவில்லை.

இடையில் மூலிகை வைத்துச் செல்லும் பெண்களும் தேன்சேகரிக்கும் சுரைப்புரடையுடனும் தாடிவளர்த்த ஆண்களும் இளசுகளும் இருபங்கொட்டைகளை சேகரித்துக் கொண்டிருக்கும் பொடிசுகளும் மலைப்பகுதிகளின் குறுக்கிலும் நெடுக்கிலும் நடந்து பார்த்ததுண்டு. நண்பனின் மாமா இவர்கள் மலசர்கள் ரொம்ப ஆபத்தானவர்கள் என்று அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

எப்படி ஆபத்தானவர்கள் என்பது பற்றி என்னால் அப்போது கேள்வி எழுப்ப முடியவில்லை. ஆனால் இப்போது நாளி எனது நண்பனின் மாமாவின் கல்லறையை தோண்டியாவது ஒரு நாளு கேள்வி கேக்க வேண்டும் என்ற ஆவேசத்தை வழங்கியிருக்கிறது.

இந்த கல்விமுறை எப்படி நமக்கு உள்ளூர் மக்களின் அடித்தள வரலாற்றை சொல்லித் தரவில்லையோ அதுபோல்தானே நண்பனின் மாமாவுக்கும் சொல்லித் தந்திருக்காது என்று சமாதானம் செய்து கொண்டாலும் நாளியின் விச்சால் மனசு தகிப்பதை நிறுத்திக்கொள்ள முடியவில்லை.

ஒரு தனிமனிதனை, ஒரு இனத்தை, ஒரு மொழியை, ஒரு நாட்டை செழுமைப்படுத்த முழுமைப்படுத்த முக்கியமானது அதன் பூர்வீக வரலாறுதான். அப்படித்தான் மலைகளின், காடுகளின், அதன் பூர்வீக மக்களை அவர்களின் மீது சுமத்தப்படும் அடிமைத்தனத்தையும், சுரண்டலையும் வரலாற்று ஆய்வோடு அந்த மக்களின் பக்கம் நின்று எடுத்து நம் முன்வைக்கிறது நாளி ஆவணப்படம்.

ஒவ்வொரு அரசும் மலைகளுக்குள் ஊடுருவியது எதற்கு என்பதில் தொடங்கி பல்வேறு நூற்றாண்டுகளாக நடந்துகொண்டிருக்கிற சுரண்டல்களை வழக்கமான ஆவணப்படங்களைப்போல கண்ணீரும் கம்பலையுமில்லாமல் அதே சமயம் வாயடைத்துப் போகவைக்கிற வரலாற்றுச் சான்றுகளை முன்வைத்து இந்தப் போரை நாளி தொடங்குகிறது.

பழங்குடிகள் காடுகளின் ஓர் அங்கம். அவர்களை விட்டுவிட்டு புலிகளையும், மரங்களையும் புல்லையும் பார்ப்பது எவ்வளவு மடத்தனமானது என்று பிடரியில் ஓங்கி அறைகிறது நமக்குள் ஊடுருவி நம்மைச் சிந்திக்க வைக்கிறது. வெட்கி தலைகுனியவைக்கிறது.

கருப்பு தங்கம் என அழைக்கப்படும் மிளகும் தந்தமும் அம்மக்களின் சுதந்திர வாழ்வை எப்படியெல்லாம் அழிக்க ஆரம்பிக்கிறது என்பதையும் அதற்கு அந்த அரசுகள் சைவத்தையும், சமணத்தையும், வைணவத்தையும் எப்படியெல்லாம் கைவாளாக கொண்டு அவர்களை அடிமைப்படுத்தியது என்பதையும் ஆய்வோடு நமக்குத் தருகிறது.

மொழி பண்பாடுகளின் மேல் நடந்த தாக்குதல்களையும் எப்படி சமவெளிகளின் விளக்குகள் ஆதிக்குடிகளின் குருதியில் ஒளிர்கிறது? யார் அரசு. இது யாருக்கான அரசு என்பதற்கான கேள்வியை படம் முழுக்க காலக்கிரமவரிசைப்படி உணர்த்திக்கொண்டே செல்கிறது.

பலர் சொல்வதைப் போல் இதன் நீளம் எனக்கொன்றும் பெரிதாகப்படவில்லை நாம். நீளமான ஆவணப்படங்களை பார்த்து பழக்கப்படவில்லையென்பதால் இதன் நீளம் குறித்து கேள்விகள் எழும்புவதை தவிர்க்கமுடிவதில்லை.

தங்கள் வாழ்வாதாரத்தை தொலைத்து, சொந்த நிலங்களிலே அகதிகளாய் அடிமைகளாய் ஆக்கப்பட்ட பழங்குடி மக்களின் வாழ்வை, மலைக்காடுகளின் சீரழிவை, வரலாற்று ஆய்வாக அக்கறையோடு ஆவணப்படுத்திய தோழர்கள் இரா.முருகவேள், ஒடியன் இலட்சுமணன் ஆகியோர் தொடர்ந்து இயங்குவது நமக்கும் சமூகத்துக்கும் நிறைய பங்களிப்புகளை கொடுக்க முடியும்.

இப்படத்தை இன்னும் சிறப்பாக்க கீழ்க்கண்ட விசயங்கள் என்னால் சுட்ட முடிகிறது.

1. சில இடங்களில் ஆவணப்பட இயக்குநர்களே முடிவுகளை சொல்லாமல் பட்டறிவாளர்களின் பேட்டிகளின் மூலமே நகர்த்தியிருக்கலாம்.
2. பழங்குடிகளின் இசைக்கோர்வைகளை அங்கங்கே இணைத்திருக்கலாம்.
3. குரலில் என்ன வருகிறதோ அதையே காட்டவேண்டும் என அவசியமில்லை. பழங்குடிகளின் பல்வேறு அசைவுகளை இணைத்திருக்கலாம்.

4. படக்கோர்வை நன்றாக இருந்த போதும் காட்சிகளை தேர்ந்தெடுப்பதில் இன்னும் கவனம் எடுத்திருக்கலாம்.

5. குரலில் சில இடங்களில் தடுமாற்றம் தெரிகிறது அதை மீண்டும் ரீடேக் பதிவு செய்து மாற்றியிருக்கலாம்.

இவை தவிர்த்து எந்த விடயத்தையும் இப்படத்தை நோக்கி என்னால் குறையாக சொல்லமுடியவில்லை.

1. வனத்தைச் சார்ந்து வாழும் பிற உழைக்கும் மக்களுக்கும் பழங்குடிகளுக்குமிடையே பிளவு ஏற்படுத்தக்கூடாது என்கிற நோக்கில் சில சமூகங்களின் பெயர்களை தவிர்த்திருப்பதும்

2. முழுக்க முழுக்க அப்பட்டமாக பழங்குடிகளுக்கு எதிராக இயங்கும் குரூரமான அரசியலையும் வனச்சட்டங்களையும் தயக்கமின்றி தோலுரித்திருப்பதும்

3. எந்த விசயத்தையும் துண்டு துண்டாக பார்க்காமல் ஒன்று இன்னொன்றின் தொடர்ச்சியாக வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு அணுகியிருப்பதும்.

4. படத்தயாரிப்புக்கு முன்னே பெரும்காலத்தை அதன் ஆய்வுக்கு ஒதுக்கியிருப்பதும்

5. மிக மிக பொருத்தமான குரலை தேர்வு செய்திருப்பதும்

சிறப்புகளாக நாளியில் சொல்ல முடிகிறது. நாம் அடுத்த தலைமுறைக்கு ஆவணப்படத்துக்கு நாளியை தைரியத்தோடும் கொஞ்சம் கர்வத்தோடும் பக்கத்து மொழிகளுக்கும் கூட சுட்டிக்காட்ட முடியும்.

ரமேஷ் பிரேதன்

சிறுவருக்கான கவிதைகள்

பேச்சு மறுபேச்சு

செங்குத்தாக விழும் அருவி
கிடைக்கோட்டில் ஓடும்போது
ஆறு என பெயர் மாறுகிறதே
இது எப்படி?

கடவுளுக்கு ஆயிரம் பெயர்கள்
நீருக்கும் அப்படித்தான்.

வெளியில் ஆரவாரமாக
மழை பொழிகிறதே
அதன் வடிவம் என்ன?

மகளே என் அருமைப் பன்றிக்குட்டி
என்னைத் தூங்கவிடு
நாளை காலை நான் பள்ளிக்கூடம்
போகவேண்டும் - அப்பாவை வகுப்பறையில்
தூங்கவைத்து ஆசிரியையிடம்
திட்டுவாங்குவதைக் காண
ஆசையா உனக்கு?

அப்பா
என்னம்மா?
அம்மா எங்கேப்பா?
வெளியில் ஆர்ப்பாட்டமாக மழை பெய்கிறதே
அதுதான் அம்மா
போ உன் பேச்சி கா.

பின்நவீனத்துவ மானுடவியல்

செத்துப்போனவர்களைப் பற்றி
நாம் நிறைய பேசிக்கொண்டிருக்கிறோம்
வரலாறு முழுக்க

வரலாறு சாவதில்லை

வரலாற்றுக் கடமை என பேசும்
தேசத் தலைவர்களின் வாயில்
மூத்திரம் பீய்ச்சு

ஈழத்தை இழந்த பிறகு
எப்படி காதல் கவிதை எழுதுவது

கடலைப் பார்க்க பயமாக இருக்கிறது மகளே
நீ என்னுடன் இருக்கிறாய்
ஆறுதலாக இருக்கிறது

கடன் மீன்கள்
புலிகளாய்ப் பரிணமிக்கும்
மாயம் செய்வாயோ நீ

ஈழ அழிவு என்பது
பின்நவீனத்துவ அரசியல் அசிங்கம் என்று
வரலாறு சொல்கிறது

புத்தனின் மேல் உதட்டில்
ஹிட்லர் மீசையை ஒட்டாதே மகளே

இது சார்லி சாப்ளின்
மீசை அப்பா.

[illegible]

மகன்: அப்பா
[illegible]
[illegible]

அப்பா: [illegible]
[illegible]
[illegible]

மகன்: என்ன குழப்பமிது
[illegible]

அப்பா: இல்லை மகனே
[illegible]

[illegible]

எங்களை கன்றுகளை [illegible]
[illegible] அப்பா

அப்பா! [illegible]
[illegible]

[illegible] நம்மைப் போலவே
[illegible] அப்பா

இல்லை மகனே
நாம் அகதிகள் இல்லை

நான் கொன்ற மகளுக்கும் ஈன்ற மகளுக்கும்
சொல்லிக் கொள்வது

மகாத்மாக்களைக் கொல்வது போல
மிக எளியதானது
மகாகவிகளைக் கொல்வதும்.

தமிழ் போழ் வெள்ளையும்.
நீல வெள்ளையும்.
புற்றாக எழுத்து வெள்ளை
வீசு பொழுது வேண்டுமா
புறப்பிறந்து

தனித்து நிற்கும்.
ஒற்றைக் குயிலின் நாளை
காரிருளின் எச்சம்.
புரியவில்லை மகளே எனக்கு
தெரியும் தனைச் சொல்ல வேண்டும்.

தெரியவில்லை மகளே எனக்கு
உன் மார்பில் துளைக்க ஒன்று
தோட்டாக்களின் முனைகளைப் புரிந்துகொள்ள

மகளே செல்ல மகளே
நீர் முக்கை முகுல்வோர்
மகளே

எல்லாம் முடிந்துவிட்டது மகளே
மீண்டும் பிறந்து நடனம்
தொடங்க உயிர்த்தெழ வேண்டும்
மகளே

ஒரு கவிதையால்
நமக்கான தெருக்களை நான் உருவாக்கவேண்டும்
மகளே உனக்கும் உன் தலைமுறைகளுக்கும்
புல்களுக்கும் நிலவையாயும்.
பூனைகளுக்கும் மதங்களுக்கும்.

ஆனால்
ஆம்
மகாகவிகளைக் கொல்வது எளிது
மகாத்மாவை போல
மிக எளியது.

மூன்று கவிஞர்களின் முதல் தொகுப்புகள்

[illegible] அன்பின் [illegible]

20 கவிதைகளை [illegible] தொகுதி [illegible] வெளிவந்துள்ள [illegible] அன்பின் [illegible] [illegible] கவிதைகளை [illegible] தொகுப்பின் [illegible] கவிதைகளில் ஒன்றெனலாம்.



ஒளிக்கவி என்ற உருவகம் ந. பிச்சமூர்த்தி காலத்திய உருவகம் என்றும் இக்கவிஞரின் ஒளியின் கவிதையும் [illegible] இணைதலில் புதுமையாகிவிடுகிறது. மொழியை இக்கவி [illegible] இன்று காண்பது மிக அரிதாகவே உள்ளது. [illegible] திரும்ப முடியாத காட்டின் ராஜா கவிதையை [illegible] வெளிப்படுத்தும் போது [illegible] பற்றிய கவிதைகள் [illegible] கவிதைகள் கொண்ட தொகுதியை [illegible]

வே. பாபுவின் மதுக்குவளை மலர்

வே.பாபுவின் மதுக்குவளை மலர் எனும் இந்தத் தொகுதியும் அவரது சொந்த பதிப்பகமான தக்கையின் வெளியீடே. தொண்ணூறுகளின் இறுதியிலேயே எழுதத் தொடங்கிய இவரது கவிதைகள் இப்போதுதான் இவரது முதல் கவிதைத் தொகுப்பாக வெளிவருகிறது. இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் அகம் - புறம் என்று இருகூறாகப் பகுத்துவிடக்கூடிய தன்மையைப் பெற்றுள்ளன. சமூகப் பார்வையுடன் கூடிய புறக் கவிதைகளைத் தொடக்கக் காலக் கவிதைகளாகவும், தன்னுணர்ச்சி மிக்க உளம் சார்ந்த கவிதைகளை சமீபத்திய அகக் கவிதைகளாகவும் கொள்ளலாம்.

இத்தொகுதி என் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் பிணைந்து கொண்டிருக்கும் **அம்மு எனும் குள்ளிக்கு** என சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலும் சமர்ப்பணம் நூலோடு சம்பந்தப்படுகின்ற ஒன்றுதான். ஆனால் இங்கு கவிதைகளோடும் சம்பந்தப்பட்டிருப்பதால் இவ்விடத்தில் குறிப்பிடப்படுகின்றது. சமர்ப்பணம், முன்னுரை, கவிதைகள் என நீக்கமற அம்மு என்ற சொல் நிறைந்திருப்பதைக் கூற வேண்டும். ஒருவகையில் நூலின் தலைப்பு உருவகிக்கும் பொருள் கூட அம்முதான். இதை தொகுப்பின் முதல் கவிதை உறுதி செய்கிறது. (இக்கவிதை ஏற்படுத்தும் கவித்துவ அதிர்வு தொகுப்பின் பல கவிதைகளின் ஊடாகவும் பயணப்படுகிறது) ஒரு வகையில் இத்தொகுப்பையே ஒரு மதுக்குவளையாகவும் அதில் நிறைந்து நிற்கும் மலராக அம்முவையும் கொள்ளலாம்.

கவிஞருக்கும் இச்சொல்லுக்கும் (அ) சொல்லுக்குரியவருக்கான உணர்ச்சி மிகு உறவே கவிதைகள் பலவற்றின் மையப்பொருளாகியுள்ளது. மிகையான கற்பனைகளோ, அசட்டு உணர்ச்சிகளோ இன்றி எளியதொரு வடிவில், மொழியில் இவை சாத்தியப்பட்டிருப்பதால் இன்றைய நவீன வாசகனுக்கு அணுக்கமானவையாக இக்கவிதைகள் உள்ளன. இவை காதல் கவிதைகளா எனில் அதற்குள் அடங்காதவை எனலாம். அதனால் இக்கவிதைகளுக்கான ஊக்கம் காதலிலிருந்தே பெறப்பட்டதாக நம்பலாம். அம்முவைப் பற்றிய கவிதைகள்,

அம்மு இடம்பெறும் கவிதைகள், அவள், நீ - உன் என விளித்து எழுதப்பட்டவை. அம்முவைக் குறியீடாகக் கொண்டவை பல பலவகைப்பட்டவையாக இக்கவிதைகள் இயங்குகின்றன. முதல் கவிதையில் மதுவிடுதியின் மாடியிலிருந்து மதுக்கோப்பையினுள் வந்து விழும் சின்னஞ்சிறு பூவை கவிஞர் அம்முவாக நமக்குக் காட்டித் தருவதால் தொகுப்பின் பிற கவிதைகளில் இடம்பெறும் சின்னஞ்சிறு இலை, அழகியமலர், குழந்தை, பறவை, தேவதை, என் ஒரு கவிதையில் வரும் அம்மாவைக் கூட நாம் அம்முவாகக் கொண்டு வாசிக்கும் சுவாரஸ்யத்தைப் பெறுகிறோம். இத்தொகுப்பின் பெரும்பான்மையான கவிதைகள் இதன் பாற்பட்டவையேயாகும். கவிஞரின் சமூகப்பார்வையிலான பிற கவிதைகள் இத்தொகுப்புக்கும் இக்காலத்திற்கும் பொருத்தமாக அலைவரிசையில் அமைந்துள்ளன. இவற்றைத்தான் இசை. ஒரு கிழட்டுத்தாயின் முகச் சுருக்கங்கள், எனப் பரிவுடன் ஏற்றுக் கொண்டாரோ போலும். இவை சமூகப் பார்வை, வர்க்கப் பார்வை, பெண்ணியப் பார்வை, சூழலியல் பார்வை, தேசியப் பார்வை, தத்துவப்பார்வை என வகைக் கொன்றாக தொகுப்பில் விரவி வந்துள்ளன. (இவற்றில் ஈழம் குறித்த ஒரு தற்சமய அரசியல் கவிதை குறிப்பிடும்படியான தகுதியைக் கொண்டுள்ளது) இக்கவிதைகளின் தரம் குறித்த ஒரு சந்தேகம் பாபுவுக்கே இருந்ததால்தான் இத்தொகுப்பு வெளியாக இத்தனை ஆண்டுகள் எடுத்துக்கொண்டதோ எனத் தோன்றுகிறது. நல்லவேளை கவிதையுள் நிகழ்ந்த அம்முவின் வருகையால்தான் தரமான கவிதைகள் சிலவும் இத்தொகுப்பும் இப்போதாவது நமக்குக் கிடைத்திருக்கிறது.

பன். இறையின் பருந்துகளைப் போலான தேன்சிட்டுகள்

பருந்துகளைப் போலான தேன்சிட்டுகள் சமீபத்தில் (மார்ச் 2012, கடல்குதிரை வெளியீடு, கோவை) வெளிவந்திருக்கும் ஒரு கவிதைத் தொகுப்பு. கவிஞர் பன். இறையின் முதல் தொகுப்பு. சிற்றிதழ் வாசகர்களுக்கு அதிகம் தெரிய வராதவர். நூலில் கவிதைகளின் பிரசுர விவரம் எதும் இல்லை. பாலை நிலவன் இவரை இவ்வளவு காலம் எப்படி வாசிக்காமல் போனோம் என வியந்து எழுதியிருக்கும் அறிமுக உரை இத்தொகுப்பை நம் கவனத்துக்குக் கொண்டு வருகிறது.

பன். இறை தம் கவிதை வெளிப்பாட்டில் நேரெதிரான இரு போக்குகளைக் கையாள்கிறார். 1. எளிமையான உரைநடைக் தன்மையானவை, 2. விநோதமான படிம மொழியால் நிரம்பியவை. எளிமையான வெளிப்பாட்டில் அவர் தரும் கனமாக கவிப்பொருள் முழுக்கவிதையும் ஒரு படிமமாக நமக்குள் செயல்பட வழிவகுக்கிறது. அதே சமயம் பல படிமங்களால் பின்னல் வாள்,

கனா விழுதுகள், பிம்பப் பெருவெளி போன்ற காலாவதியான உருவக மொழியால் தொடக்கக் கால கவிஞனின் அவர் மிகுதியான விநோத மொழியைக் கைவிட முடியாத தன்மையையும் காண்கிறோம். இவ்விரண் போக்குகளுக்கிடையிலான ஊடாடத்தைத் தொகுப்பு முழுமைக்கும் காணலாம். எளிமையான மொழிதலில் உருவான தொகுப்பின் சிறந்த கவிதைகளில் ஒன்றாக நகரும் இருப்பை கூறலாம். ஒரு கவிதையில் பெரிதாக எதிர்ப்பார்ப்பவர்களுக்கு எதையுமே தராததாய், எனக்கு இன்று ஒருவேலையுமில்லை / போவதற்கென்று ஒரு இடமுமில்லை என்பது போன்ற சாதாரண வரிகளாலான கவிதை, வீட்டுக்குத் திரும்புகிறேன் / வீடு இருந்த இடத்திலிருந்து சற்று நகர்ந்திருந்தது என முடியும் போது கவிதையும் வேறொரு தளத்திற்கு நகர்ந்து விடுவதை உணர்கிறோம். இரண்டு வாசிப்புகளுக்குப் பின்பு மனதில் தங்கி கவிதைகளை நினைவு கூர்கையில் சில தொகுப்புகளில் சிற்சில கவிதைகளே எஞ்சும் இத்தொகுப்பில் நகர்வு, யானைக்கட்டி மண்டபம், ஆடுகளின் ராஜ்யம் குளத்தில் விழுந்த விறகு, வீட்டை ஏற்றிக் கொண்டு, புறநோக்கி, பகல் மலைக்கும் இரவு மலைக்கும் நடுவில், தீராத இரவு என பல கவிதைகள் அவற்றின் பொருண்மைக்கும் மொழிதலுக்கும் அப்பாற்பட்டு மனதில் பாய்ந்துள்ளன. இவற்றுக்கிடையிலான ஒரு பொதுத்தன்மையை யோசிக்கையில் இவை ஒரு சம்பவமாக, நினைவு கூர்தலாக, புரிதலில் தடையெதையும் நிகழ்த்தாத கவித்துவத்தாலானவையாக இருப்பதாக உணர்கிறோம். இன்றைய நவீன கவிதைகளின் தன்மையோடு இவ்விதத்தில் இவை ஒத்துள்ளதைக் கூற வேண்டும். ஒரு இனம் / வேலிக்குள் அடைக்கப்படுவதை / காணும் காலத்தில் நாம் வாழ்கிறோம் / யானைகள் புத்துணர்வுக்காக வனத்திற்குள் / விடப்படுகின்றன போன்ற பதிவாகட்டும். எவ்வளவோ பேர் வாரி இறைத்தாலும் / குழந்தையை ஒரு நதியென ஓடிக் கொண்டிருந்தது. உன் தெருக்களின் பெயர் பலகைகள் மீது உதிரத்தைத் தெளித்தேன் போன்ற வரிகளாகட்டும் இன்றைய நவீன வாசகனுக்கு நெருக்கமான உணர்வை ஏற்படுத்தி மேலும் இவரது கவிதைகளை எதிர்நோக்கிக் காத்திருக்கவே செய்யும்.

அஞ்சலி

விடியல் சிவா [illegible]

சிவாவின் உடலின் அருகில் ஒரு நீண்ட அஞ்சலிக்கூட்டம் அன்று நடைபெற்றது. பலர் தங்களின் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர். இடதுசாரிகள், சனநாயக சக்திகள் பலர் அதில் பங்கெடுத்திருந்தனர். நானும் பேச அங்கு அழைக்கப்பட்டேன்.

1986ஆம் ஆண்டுகளில் சட்டக்கல்லூரியில் சேர்ந்த சமயம் புரட்சிகர இயக்கத்தினர் மார்க்சிய லெனினிய சிந்தனையோட்டமுள்ள இளைஞர்களை தங்களின் இயக்கங்களின்பால் இணைக்க அரசியல் விவாதங்களை தொடுத்துக் கொண்டிருந்த நேரமது. எங்கள் கல்லூரி ஒரு பழைய பங்களாவில் கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியிலிருந்து எங்களைச் சந்தித்து அரசியல் ஏடுகள், துண்டறிக்கைகளைத் தர சைக்கிளில் வரும் வெற்றிலை பாக்கு சுவைத்துக் கொண்டிருக்கும் ஒரு மில்தொழிலாளியாகவே அவரைத் தெரியும். அவர் ஒரு நக்சல்பாரி என்பதும் பலமுறை சிறை சென்றார் என்றெல்லாம் அவரைப்பற்றிய படிமங்கள் எனக்குள்ளிருந்தது.

ஒன்றுபட்ட மக்கள் யுத்த இயக்கம் பின் அதிலிருந்து பிரிந்த மக்கள் சனநாயக இளைஞர் கழகம் என சிவாவின் அரசியல் இயக்க சார்பிருந்தது. எண்பதுகளில் கோவையில் இயங்கிய புரட்சிகர இயக்கங்களின் முழுநேரப் பணியாக சுவர் எழுத்து எழுதுவது, போஸ்டர் ஒட்டுவது, துண்டறிக்கை விநியோகம், விவாதங்களை முன்னெடுப்பது என்ற ஒரு சனநாயக அரசியல் பணியாக மட்டுமே இருந்தது. மில் தொழிலாளியான படிப்பறிவு என்பது அவருக்கு குறைந்திருந்த நிலையில் எழுத்துக்களை எழுத அவர் சிரமப்படுவார் என்பதால் சுவருக்கு வெள்ளை அடிப்பதை அவர் தேர்வு செய்திருந்தார். அவர் வெள்ளையடித்து விட்டு வேறு பகுதிக்கு சென்றதும் எழுத்து நன்றாக எழுதக் கூடியவர் புரட்சிகர வாசகங்களை சுவரெழுத்தில் எழுதியிருப்பார்கள். சிவா அரசியல் ரீதியான சில வார்த்தைகளில் அலாதியான பிரியமானவர் அவரின் வாழ்வின் கடைசிவரை அந்த வார்த்தைகளான விவாதிப்போம் என்பது அவர் பேச்சில் வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தது.

புரட்சிகரமான வேலைகளை செய்வதில் அவர் எந்த தயக்கமும் யோசனையும் செய்ததில்லை. ராஜீவ்காந்தி இறந்த சமயம் காவல்துறையின் கெடுபிடிகளுக்கு கோவை மாநகரம் ஆளாகியிருந்த போது தனுவுக்கும் சிவராஜனுக்கும் வீர வணக்கம் என்று ஒரு போஸ்டரை ஒட்டிக்காட்டிவராக அவரிருந்தார். பின்னர் இதற்காக அவர் சிறைபடுத்தப்பட்டார். சட்டக்கல்லூரி மாணவர்களான நானும் அரசு கலைக்கல்லூரியில் படித்து வந்த இரா.முருகவேள் (ஹோமியோ) டாக்டர் சிவகுமார் ஆகியோரும்

ஒரு அணியாக இயங்கினோம். அச்சமயங்களில் சிவாவுடன் சேர்ந்து கூட்டு இயக்கங்களை நடத்தினோம். ஆந்திர புரட்சிகர கலைஞர்களுக்கான நிகழ்ச்சியை கோவையில் சிவா முன்னின்று நடத்த உதவியாக இருந்தார்.

பின் ஒரு சமயம் புரட்சிகரமான வாசகங்களுடன் அரசை விமர்சிக்கும் போஸ்டர் ஒன்று ஒட்ட விடியல் சிவாவின் கட்டுப்பாட்டுக்கு நாங்கள் உடன்பட்டிருந்தோம். அன்றைய சூழலில் அது ஆபத்தானதாயிருந்தது. காவல்துறை வழக்கு போடும் நிலை இருந்தது. ஸ்கிரீன் செய்து போடப்பட்ட போஸ்டரை இரவு கோவையில் ஒட்டுவதென எங்கள் திட்டம். ஸ்கிரீன் போஸ்டர் தயாராக காலைக்குள் அதிகாலையில் ஒட்டி விடலாம் என முடிவு செய்திருந்தார் சிவா. ஆனால் 7 மணிக்கு வந்து எங்கள் போஸ்டரை ஒட்டக் கூப்பிட்டார். அதுவும் காந்திபுரம் டவுன் பேருந்து நிலையத்தில் பக்கத்து ட்ராக்கில் காவல்நிலையம். பின்வாங்குவது இயலாது. சுயமரியாதைக்கு இழுக்கு என்ற நிலை. மனதுக்குள் ஒவ்வொரு வினாடியும் அச்சம் நானும் முருகவேள் போஸ்டர் ஒட்டுவோம். சிவகுமார் பசைப்போட்டுத் தருவார். அது போல விடியல் சிவாவும் தண்டபாணியும் அவர்கள் அணியில் போஸ்டர் ஒட்டினர். திடீரென ஒரு போலீஸ்காரர் ஒட்டப்பட்ட போஸ்டரைப் பார்த்தார். பின்னர் அவர் போய்விட்டார். விடியல் சிவா எச்சரிக்கையாக இருக்கும்படி கூறினார். பத்து நிமிடங்களில் போலீஸ் வேன் ஒன்று வந்தது. போஸ்டர் ஒட்டியவர்களை

தேடிப்பார்த்தார்கள். சிவாவையும் தண்டபாணியும் எங்கோ தெரியவில்லை. நண்பன் சிவகுமார் பசை சட்டியுடன் இருந்தவனை தேடினேன். காணவில்லை. சட்டக்கல்லூரி மாணவன் என்று கூறி சமாளித்துக்கொள்ளலாம் என்று ஒரு தைரியம் மனதுக்குள். முருகவேள் தள்ளி நின்று கொண்டார். சிவகுமாரைத் தேடினேன். கோவை டவுன் பஸ் நிலையத்தில் பிச்சைக்காரர்களின் கூட்டத்திற்கு உள்ளே ஒரு தெரிந்த முகம் போல ஒன்று லேசாக தட்டுப்பட்டது. சிவகுமார் மக்களோடு மக்களாய் ஒன்றிணைந்திருந்தான். சற்று நேரத்திற்கு பின் போலீஸ் போய்விட்டது. தப்பித்தோம் என நாங்கள் பதட்டத்துடன் அங்கிருந்து நகர முயன்ற போது எங்கே போகின்றீர்கள் தோழர்? இன்னும் போஸ்டர் உள்ளது ஒட்டிவிட்டு போகலாம் என்றார் விடியல் சிவா. அவர் அதனை ஒட்டவும் துவங்கினார். எனது போஸ்டரிலும் பசை விழுந்தது. ஒரு புரட்சிகர அரசியல் செயல்பாட்டாளராய் சிவாவின் அஞ்சாமை பிரமிக்கத்தக்கது.

அச்சமயம் மார்க்சிய முன்னோடுகளின் சிறு நூல்களை அவர் பதிப்பித்து வந்ததுண்டு. மக்கள் சனநாயக இளைஞர் கழகத்திலிருந்து அவர் வெளியேறிய பின்பு பெரியாரிய அம்பேத்கரிய அரசியல் மீது அதிகம் கவனம் செலுத்தினார். பார்ப்பனியத்தின் வெற்றி என்ற நூல் விடியல் பதிப்பகத்தின் அறியப்பட்ட நூலாக வெளிவந்தது. அதன்பின்பு பல மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டார். அவருடன் இருந்த கோவிந்தசாமி சிவாவை போல ஒரு மில் தொழிலாளி தனது விடா முயற்சியில் ஆங்கிலம் மொழிபெயர்ப்பு செய்ய தன்னை தகவமைத்துக் கொண்டவர். இந்த கூட்டு விடியல் பதிப்பகம் பல மொழி பெயர்ப்புகளை வெளியிட தூண்டியது. விடியல் சிவாவின் உற்ற நண்பராயிருந்த மறைந்த தண்டபாணி மரணமடையும் வரை விடியல் சிவாவின் நிழல் போல இருந்தார். அவரைப் போலவே தண்டபாணியின் மனைவியான தோழர் கல்யாணி சிவாவினை பராமரித்து வந்தார். நோய் வாய்ப்பட்டு இருந்த காலங்களில் கல்யாணியின் உதவி அளப்பரியது.

தோழர் சிவாவின் விடியல் பதிப்பகம் என்பது சிவாவின் முயற்சியினால் ஒரு ஆலமரம் போல வளர்ச்சி பெற்றது. சிவாவிற்கு ஆழமான நூல் வாசிப்பு இல்லை என்பதே எனது கருத்து. அவர் தன்னைச் சுற்றி ஒரு அறிவு ஜீவு நண்பர்களின் வட்டத்தை உருவாக்கியிருந்தார். அவர்கள் நூல்களைப் பற்றி கூறும் தகவல்களிலிருந்தே மொழிபெயர்க்க முயற்சி எடுத்தார். ஆனால் புதிய படைப்பிலக்கியங்கள் பற்றிய அவரின் பார்வை

கொண்டு வருவதற்கான இருந்திருக்கவில்லை. டைப்பிங்கில் நல்ல முறையில் விதம் ஆனால் பொருளாதாரம் அவ்வாறு செய்யாது என பெருமையாகக் கொண்டார் இக்காலகட்டமானலோ விடியல் வெளியிடாக்கிழ டைப்டி இலக்கியவாதிகள் தேடு அசிராக்கலைக்கு. நான் எழுதிய கொண்ட் கொட்ட பிரதிகளை விடியல் கொடுக்கு கொடுத்திருந்தேன். அவரிடமிருந்து ஒரு பாகத்திலும் பேசி பதிலில்லை. ஒரு சமயம் நானே அவரிடம் சென்று கேட்டேன். அவர் எனது நாவல் கட்டுரையைப் போல உள்ளதாக ஏக்க குறைகூறினார். பைடப்ளான் என்ற முறையில் நான அவரிடம் விவாதிக்க தயாராகவில்லை. எந்த இடம் கட்டுரை என்றேன். அவர் அது நீண்ட நேரம் விவாதிக்க வேண்டுமென்று பேச்சைத் தவிர்த்தார். நானே வெளியிடுகின்றேன் என பிரதியைக் கேட்டேன். சில நாட்கள் கழித்து எனக்குக் கொடுத்தார். உண்மையில் எனது நாவலின் ஒரு பக்கத்தைக் கூட விடியல் சிவா படித்திருக்கவில்லை. பின்னர் நாங்களே அதை வெளியிட முடிவு செய்த போது சிவா புத்தகம் அச்சிடுவதில் உள்ள சுகவல் குறித்தும் ஆலோசனை வழங்கினார். எனது நாவல் வந்த பதிப்புகளை தானும் பின்னர் ஆராய்ந்து சிவா மேலாகச் சொல்வதில்லை விடியல் வெளியிடாக வெளியிட்டார். தனிப்பட்ட முறையில் பெரிய சிகோரயார்க்கும் தனம் அவரிடம் இருக்கவில்லை. Red Tea என்ற நூலினை இரா. முருகவேள் தமிழில் மொழி பெயர்க்க முனைந்த போது எங்களிடம் அதன் அச்சுக வடிவத்தை மறுத்துவர் டெ. ஸ்ரீவானந்தம் சென்றிருந்ததை அவருக்கு நான் நினைவூட்டினேன். எனவே மொழி பெயர்ப்பு எழுவுவதைக் தானும் தமிழில் எழுதப்பட்ட ஒரு அசல் நாவல் போல எரியும் பனிக்காடு என்ற பெயரில் மொழிபெயர்த்திருந்தார் இரா. முருகவேள். இதனை விடியல் பதிப்பகம் வெளியிட்டது.

அந்த உழைப்பின் வெளிப்பாடாய் ஒரு வெளியீட்டு விழா நடத்த வேண்டும் என நாங்கள் விரும்பினோம். ஆனால் விடியல் நூல் எதற்கும் வெளியீட்டு விழா நடத்தியதில்லை. அதனால் இதற்கும் நடத்த முடியாது என உறுதியாக மறுத்துவிட்டார் சிவா. இறுதியில் கம்யூனிச தோழர்கள் முன்முயற்சியில் அன்றைய மாவட்ட ஆட்சியர் உதயசந்திரன் இந்நூலினை வெளியிடும் விழா நிகழ்ந்தது. ஆனால் அதன் பின்பு இரா. முருகவேளுடனிருந்த நெருக்கமான நட்பை அவர் வெளிப்படுத்தியதுண்டு. தோழர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளில் துவங்கி வீடு கட்டும் ஆலோசனைகள் வரை

அனைத்தையும் அவர் விமர்சித்தார். பதிப்பாளராக மொழி பெயர்ப்பாளர், எழுத்தாளருக்கு முறையாக பணம் தந்து விடும் நேர்மை அவரிடமிருந்தது.

புத்தகங்களின் பாதிப்பை அறிந்த போதும் அவர் அதனால் அதனை எதிர்கொள்ள முயன்றார். வாசிப்பின் ஆழமும் அதிகரித்த நூல்களில் உள்ள உண்மையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவருடைய அவா சிந்திக்கத் தூண்டி உதவியது.

தத்துவங்கள் ஆரோக்கியமாக வாழ முடியும் என நம்பியவராகவுமிருந்தார். மக்களின் அதிகாரங்கள் பற்றியும், தாழ்த்தப்பட்ட சாதிகள் எப்போதும் அடிமை நிலையிலேயே இருந்திருக்கவில்லை எனவும் அவர்கள் சில சமயம் ஆதிக்கக் கூறுகளுடனும் இருந்தனர் என்பது போன்ற ஒரு ஆய்வை அவர் வெளியிட்டிருந்தார். பல உதாரணங்களை தரவுகளுடன் பரிமாறிக் கொண்டிருந்தார்.

தோழர் சிவஞானம் மார்க்சிய லெனினிய இயக்கம் சார்ந்த அரசியலை நம்பியவர். தன் வாழ்க்கை முழுவதும் அதற்காக இயங்கியவர்.

பல சமயம் பல வகையான போராட்டங்களில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு செயல்பட்டவர். அவர் சார்ந்த அரசியலை வெளிப்படுத்தும் சாதனமாகவே அவர் துவங்கிய பதிப்பகத்தை அவர் பயன்படுத்தினார். மரணம் என்பது தவிர்க்க இயலாத ஒன்று மரணமற்ற வாழ்வு என்பது மனங்களில் வாழும் வாழ்வு மட்டுமே, சிவஞானம் (அ) விடியல் சிவா அப்பதிப்பகத்தின் புத்தகங்களில் ஒவ்வொரு பிரதியாகவும் வாழ்கின்றார். அது மரணமில்லா பெருவாழ்வு செவ்வணக்கம் சிவா!

ச. பாலமுருகன்

ISSN 2249-5177

9 772249 517007

அனைத்து தொடர்புகளுக்கும்

புது எழுத்து

2/205, அண்ணா நகர்

காவேரிப்பட்டிணம்-635 112 ● கிருஷ்ணகிரி மாவட்டம்

90421 58667 ● pudhuezuthu@gmail.com

புது எழுத்து

நன்கொடை மற்றும் சந்தா ஆகியவற்றை கீழ்க்கண்ட வங்கி கணக்கு எண்ணிற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

A/c No. 867 999 265
Indian Bank,
Kaveripattinam Branch (K-212)

முலைப் போர்

எனக்கும் உனக்கும் முலைப்போர் இல்லை
[illegible] நீ [illegible] காதல்

[illegible]

இனி [illegible] தாயை [illegible] முலைகளுக்கு
[illegible]
[illegible] விழி தூக்கியெறியும்
உன் இருந்தோப்புகள் [illegible]

சொல்லிக்கொள்ளாத நம் போகம்
பனை ஆத்திரைகள்
உடைபடாத நம் கனைகள்
அவை நம் வசமிருக்கின்றன

பிறந்தும் மறந்தும் ஒன்றிணைந்த முகைகள்

ஒப்புக் கொண்டு உடைகள் [illegible],
ஒருவரைக்கொருவர் கூந்தலைப்
பற்றுக் கொள்வோம்

இறுதிய இதழ்கள் வெட்டிப் பறிக்கின்ற
வழி வருகிறது

நனைந்த பள்ளத்தாக்காய் தளும்பியது நம் பிரதேசம்

அம்மா
உன் பால் வற்றிய முலைகளை
எனக்கு அருந்த தருவாயா
வறண்ட சருமத்தின் வரிகளில்
நரம்பின் பச்சை அரும்ப அரும்ப
முத்தமிட விரும்புகிறேன்

உன் கருவறை சுவர்களில்
மோதி குழிந்த என் தலை சுழிகளை
தடவிக் கொடுப்பாயா

அம்மா
எனக்காக மீண்டுமொருமுறை
பனிக்குடத்தை உடைத்துவிடு
யோனி பாறையில் சறுக்கி விழ ஆசை

உன் தூமையை வாரி பூசிக்கொள்வேன் அம்மா

என் உன்மத்தம் நீ தான் என்றால் நம்புவாயா?

ஈர சொப்பனங்கள்

என் விரல்களிலிருந்து
அவளுடையது
வேறொன்றாய் தானிருக்கின்றன

அவை வருடும்போதெல்லாம்
மூச்சுக்குழல்கள்
மர்மமாய் இரைகின்றன
எண்கள் குழறு கின்றன
நடுங்கி இறுகும் தசைகளில்
தேங்கிவிடும் குருதி
சிவப்பை இழக்கிறது
இசை பெறும் உடல்
கசிந்து பெருகுகிறது

ஆதிக் கிணறாய் என்னை மாற்றிவிடும்
உயிர்குமிழி கோல்களுக்கு
வெறும் விரல்கள் என
யாரடி பெயர் வைத்தது?

அது ஒரு காதல் காலம்

அவள் இறந்து தான் போனாள்

இரவு முழுக்க
அணைத்தே தான் இருந்தேன்

ஒரு பொம்மையைப் போல
உயிர்ப்பிழந்த அவள்
இமைகளை நாசியை கன்னங்களை முலைகளை தொடைகளை
பாதங்களை
அவளைப் போலவே சுவைத்தேன்

பெருகும் கண்ணீரில் அவள் பிம்பம் தொலைகிறது

கலையும் வண்ணங்கள் அவள் சுண்ணத்தைப் போல
பாலாய் வெளிறுகின்றன

உள்ளங்கைகளின் ரேகைகள்
துடித்துவிடாத என வன்மம் கூடி
வெறித்தபடி இருந்தது
நாங்கள் சுகித்திருந்த காலம்





இன்மை - அனுபூதி - இலக்கியம்

எழுத்தாளர் மா. அரங்கநாதனின் நீண்ட பேட்டி

நேர்காணல் - எஸ். சண்முகம்

தொன்மை, நவீனம், இலக்கியம், மொழி, படைப்பு, சித்தாந்தம் பற்றி, தமிழ்ப் படைப்புலகின் மிகுந்த தனித்துவமும் கலைத்துவமும் கொண்ட எழுத்தாளர் மா. அரங்கநாதன், தமது வாழ்வனுபவத்தையும் தத்துவார்த்தத்தையும் உள்ளடக்கி படைப்பின் பெருவெளியாகத் தரும் பேட்டி...

வாழ்வின் போக்குகளை - அதன் வர்ண ஜாலங்களை - வார்த்தைகளுக்கு அகப்படாத் தன்மைகளை - தமிழ்மொழியின் இன்னுமொரு ஆற்றலாக வடிவெடுத்திருக்கும் சொல்லாடல் - தமிழின் ஆகச் சிறந்த புதியதொரு படைப்பு.

வெளியீடு

புது எழுத்து,

2/205, அண்ணா நகர், காவேரிப்பட்டினம் - 635 112,

கிருஷ்ணகிரி மாவட்டம்.

செல்:90421 58667, மின்னஞ்சல்:pudhuezuthu@gmail.com

சா. தேவதாஸ்
வெளி ரெங்கராஜன்
எஸ். சண்முகம்
பா. வெங்கடேசன்
ராணிதிலக்
ரவி சுப்ரமணியன்
சுஜாதா
பாலசுப்ரமணியம் பொன்ராஜ்

ISSN 2249-5377

புது எழுத்து
தனிச்சுற்றுக்கு மட்டும்